# M.A. HISTORY – I YEAR

## *DKH14* : CONSTITUTIONAL DEVELOPMENT AND FREEDOM STRUGGLE IN INDIA (1773 - 1947)

## SYLLABUS

## இந்தியாவில் விடுதலைப் போராட்ட வரலாறு (1773 முதல் 1947 வரை)

**அலகு I**

கிழக்கிந்திய கம்பெனி – வங்காளத்தில் இரட்டையாட்சி 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச்சட்டம் - 1784 ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் - 1793, 1813, 1833 மற்றும் 1853 ஆம் வருட பட்டயச்சட்டம் - 1857 சிப்பாய் கலகம் - காரணங்கள் - விளைவுகள் - மகாராணியின் பேரறிவிப்பு – 1861, 1892 ஆம் வருட இந்திய கவுன்சில் சட்டம் - மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள், 1909 – 1919 ஆம் அண்டு சட்டத்தின் மத்திய, மாநில அரசுகள்.

**அலகு – II**

சைமன் குழுவின் அறிக்கை – வட்டமேஜை மாநாடுகளும் இந்தியாவின் எதிர்ப்பும் - 1935ன் மத்திய அரசாங்கம் - 1935ன் மாநில அரசாங்கங்கள் - ஆகஸ்ட் நன்கொடை கிரிப்ஸ் தூதுக்குழுவிலிருந்து, மவுண்ட் பேட்டன் திட்டம் வரை - இந்திய சுதந்திர சட்டம் 1947 - இந்திய அரசியலமைப்பின் சிறப்புத்தன்மைகள் - அரசியல் அமைப்பு திருத்தங்கள்.

**அலகு – III**

ஆங்கிலேய கம்பெனிக்கு எதிரான தென்னிந்தியக் கிளர்ச்சி – வேலூர்க் கிளர்ச்சி – சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள் - இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் - 1885ல் காங்கிரசில் தீவிரவாத இயக்கங்கள் - 1905 ஆம் ஆண்டு வங்கப் பிரிவினை – வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டம் - முதலாம் உலகப்போரும், சுயாட்சி இயக்கமும் - லக்னோ உடன்பாடு – மாண்ட் போர்டு சீர்திருத்தங்களும், இரட்டை ஆட்சியும் – ரௌலட் சட்டம் - ஜாலியன் வாலாபாக் படுகொலை - கிலாபாத் இயக்கம்.

**அலகு – IV**

ஒத்துழையாமை இயக்கம் - சுயராஜ்யக் கட்சி – சைமன் குழு புறக்கணிப்பு, சைமன் குழு அறிக்கை – நேரு அறிக்கை, ஜின்னாவின் 14 அம்சத் திட்டங்கள் - சட்ட மறுப்பு இயக்கம், அரசின் அடக்குமுறை – வட்ட மேஜை மாநாடுகள் - மீண்டும் போராட்டம் - வகுப்புவாரித் தீர்வு – பூனா உடன்பாடு.

**அலகு – V**

இரண்டாம் உலகப்போரும், இந்தியாவும் - தனிநபர் சத்தியகிரகம் - கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கை – 1942ல் மக்களின் எழுச்சி – சுபாஸ் சந்திரபோஸ் - சி.ஆர்.பார்முலா – வேவல் திட்டம் - சிம்லா மாநகாடு –

அட்லியின் அறிக்கைகள் - அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் - இடைக்கால அரசு அமைத்தல் - மவுண்ட் பேட்டன் திட்டம் 1947 - இந்தியா விடுதலை பெற இருந்த காரணங்கள் - சுதந்திரப் போராட்டத்தில் சில தலைவர்கள்.

**பொருளடக்கம்**


| அலகு எண் | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| I | கிழக்கிந்திய கம்பெனி | 1 |
| | வங்காளத்தில் இரட்டையாட்சி | 1 |
| | 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச்சட்டம் | 2 |
| | 1784 ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் | 9 |
| | 1793, 1813, 1833 மற்றும் 1853 ஆம் வருட பட்டயச்சட்டம். | 12 |
| | 1857 சிப்பாய் கலகம், காரணங்கள், விளைவுகள் | 21 |
| | மகாராணியின் பேரறிவிப்பு | 25 |
| | 1861, 1892 ஆம் வருட இந்திய கவுன்சில் சட்டம் | 26 |
| | மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள் 1909 | 32 |
| | 1919 ஆம் அண்டு சட்டத்தின் மத்திய, மாநில அரசுகள் | 37 |
| II | சைமன் குழுவின் அறிக்கை | 45 |
| | வட்டமேஜை மாநாடுகளும் இந்தியாவின் எதிர்ப்பும் | 46 |
| | 1935ன் மத்திய அரசாங்கம், 1935ன் மாநில அரசாங்கங்கள் | 51 |
| | ஆகஸ்ட் நன்கொடை | 60 |
| | கிரிப்ஸ் தூதுக்குழுவிலிருந்து, மவுண்ட் பேட்டன் திட்டம் வரை | 62 |
| | இந்திய சுதந்திர சட்டம் 1947 | 63 |
| | இந்திய அரசியலமைப்பின் சிறப்புத்தன்மைகள் | 65 |
| | அரசியல் அமைப்பு திருத்தங்கள் | 68 |
| III | ஆங்கிலேய கம்பெனிக்கு எதிரான தென்னிந்தியக் கிளர்ச்சி | 76 |
| | வேலூர்க் கிளர்ச்சி | 81 |
| | சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள் | 85 |
| | இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் | 94 |
| | 1885ல் காங்கிரசில் தீவிரவாத இயக்கங்கள் | 102 |
| | 1905 ஆம் ஆண்டு வங்கப் பிரிவினை | 107 |
| | வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டம் | 108 |
| | முதலாம் உலகப்போரும், சுயாட்சி இயக்கமும் | 111 |
| | லக்னோ உடன்பாடு | 115 |
| | மாண்ட் போர்டு சீர்திருத்தங்களும், இரட்டை ஆட்சியும் | 116 |
| | ரௌலட் சட்டம் | 119 |

| | | |
|---|---|---|
| | ஜாலியன் வாலாபாக் படுகொலை | 121 |
| | கிலாபாத் இயக்கம் | 124 |
| IV | ஒத்துழையாமை இயக்கம் | 129 |
| | சுயராஜ்யக் கட்சி | 134 |
| | சைமன் குழு புறக்கணிப்பு, சைமன் குழு அறிக்கை | 136 |
| | நேரு அறிக்கை | 138 |
| | ஜின்னாவின் 14 அம்சத் திட்டங்கள் | 139 |
| | சட்ட மறுப்பு இயக்கம், அரசின் அடக்குமுறை | 140 |
| | வட்ட மேஜை மாநாடுகள் | 141 |
| | மீண்டும் போராட்டம் | 142 |
| | வகுப்புவாரித் தீர்வு | 143 |
| | பூனா உடன்பாடு | 144 |
| V | இரண்டாம் உலகப்போரும், இந்தியாவும் | 145 |
| | தனிநபர் சத்தியகிரகம் | 146 |
| | கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கை | 147 |
| | 1942ல் மக்களின் எழுச்சி | 148 |
| | சுபாஸ் சந்திரபோஸ் | 150 |
| | சி.ஆர்.பார்முலா | 151 |
| | வேவல் திட்டம் | 152 |
| | சிம்லா மாநாடு | 152 |
| | அட்லியின் அறிக்கைகள் | 153 |
| | அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் | 154 |
| | இடைக்கால அரசு அமைத்தல் | 156 |
| | மவுண்ட் பேட்டன் திட்டம் 1947 | 157 |
| | இந்தியா விடுதலை பெற இருந்த காரணங்கள் | 159 |
| | சுதந்திரப் போராட்டத்தில் சில தலைவர்கள் | 161 |

## அலகு - I

## ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய கம்பெனி

1600 டிசம்பர் 31ம் நாள் 215 'வாணிப வீரர்கள்' எலிசபெத் ராணி (1558-1603)யிடமிருந்து கீழை நாடுகளுடன் வாணிபம் செய்வதற்காக 'ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி'யைத் துவக்க அனுமதி பெற்றனர். முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில், 1613ம் ஆண்டு ஆங்கிலேயர் முகலாய மன்னர் ஜகாங்கீரின் அனுமதியோடு, சூரத்தில் வர்த்தகக் கிடங்கைக் கட்டினர். பின்னர் ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய இடங்களில் வர்த்தகக் கிடங்குகளை நிறுவினர். 1661ல் இங்கிலாந்து பம்பாயைப் போர்த்துக்கீசியரிடமிருந்து இரண்டாம் சார்லசுக்கு சீதனமாகப் பெற்று இந்தியக் கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுத்தது (1668). 17ம் நூற்றாண்டின் இறுதியில் இக்கம்பெனி சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களை வர்த்தக மையங்களாகக் கொண்டு, இந்திய உள்நாட்டுப் போர்களில் தலையிட்டு, தங்களது ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

**வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்:-**

1707ல் முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் இறந்தவுடன் முகலாயப் பேரரசு சரிந்து சிதறுண்டு போயிற்று. வாரிசுரிமைச் சண்டைகள் பேரரசில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியது. அலிவர்திகான் வங்காளத்தை முகலாயப் பேரரசிலிருந்து பிரித்துத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். ஆங்கிலேயர் அச்சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு சண்டையிட்டோரின் ஒரு சாராரோடு சேர்ந்து தங்களது ஆதிக்க விரிவாக்கத்தில் ஈடுபட்டனர். பிளாசிப்போர் (1757) மற்றும் பக்சார்போர் (1764) ஆகியவற்றில் ஆங்கிலேயர் பங்கேற்று முன்னமே பெற்ற வெற்றிகளை நிரந்தரமாக்கிக் கொண்டனர்.

**ஆங்கிலேயரின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்:-**

**கிளைவின் இரட்டை ஆட்சி:-**

இருமுறை வங்காள கவர்னராக இருந்த இராபர்ட் கிளைவ் 1765ல் வங்காளத்தில் 'இரட்டை ஆட்சி' (Dual Government or Dyarchy) முறையை அறிமுகப்படுத்தினர். அதன்படி வருவாய் சம்பந்தப்பட்ட 'திவானி' அதிகாரத்தை ஆங்கிலேயர் பெற்றனர். இராணுவம், பாதுகாப்பு, காவல், ஆட்சி போன்ற 'நிசாமத்' அதிகாரத்தை வங்காள நவாபிடம் கொடுத்தனர். அதாவது, ஆங்கிலேயர் தடையின்றி வருவாயைப் பெற நவாப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்! இந்த சூழ்ச்சித் திறமிக்க இரட்டை ஆட்சி வங்காளத்தில் அதிகாரமற்ற பொறுப்பையும், பொறுப்பற்ற அதிகாரத்தையும் கொண்ட முரண்பட்ட இரட்டை நிர்வாகத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக, அங்கு ஆட்சி சீர்குலைந்தது. இந்திய வாணிபம் நசிந்தது. அதிகாரவர்க்க அடக்குமுறை அதிகரித்தது. சமுதாய சமநிலை பிறழ்ந்தது. மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டது. வளமான வங்காளம் வறுமைப் பிடியில் சிக்கியது.

1) கிழக்கு இந்திய கம்பெனி இந்தியாவில் எவ்வாறு நிறுவப்பட்டது?

## ஒழுங்குபடுத்தும் சட்டம், 1773

## (Regulating Act, 1773)

ஆங்கில கிழக்கிந்திய வாணிகக் கம்பெனி வங்காளத்திலும் இந்தியாவின் பிற பாகங்களிலும் சுதேச அரசுகளின் ஆதரவைப் பெற்று வியாபாரத்தை வளர்த்து வந்தது. சில இடங்களில் சுதேச அரசர்களை வென்று அப்பகுதிகளில் ஆட்சி முறையையும் கவனித்து வந்தது. பதினேழாம் நூற்றாண்டில் இறுதிவரை கம்பெனியின் அதிகார வளர்ச்சி மன்னரின் விருப்பத்தைப் பொருத்ததாகவே இருந்தது. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து பாராளுமன்றம் கம்பெனியின் விவகாரங்களில் மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி தனது அதிகாரத்தை நிலை நாட்டியது. அப்படி கம்பெனியின் விவகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட முதலாவது சட்டடே ஒழுங்குபடுத்தும் சட்டம் ஆகும்.

கம்பெனி நிர்வாகத்தில் காணப்பட்ட பல குறைபாடுகள் நீக்கப்பட்டன. மேலும் இச்சட்டமே இந்திய ஆட்சி முறையின் வளர்ச்சியில் முதல் படியாகும். இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சிக்கான அடிக்கல் ஆகும்.

**ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள்:-**

**1) கம்பெனி ஊழியர்களின் ஆடம்பர வாழ்க்கை:-**

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிவிட்டு இங்கிலாந்து திரும்பிய ஊழியர்களின் ஆடம்பர வாழ்க்கை இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த ஆங்கில மக்களை ஆச்சரியப்பட வைத்தது. ராபர்ட் கிளைவ் இங்கிலாந்து திரும்பிய சமயத்தில் அவருடைய ஆடம்பர வாழ்க்கையையும், ஆடைகளையும் கண்ட மக்கள் அவரை, நவாப் ராபர்ட் கிளைவ் என்று அழைத்தனர்.

மேலும் பல கம்பெனி ஊழியர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பும் போது அதிகமான செல்வத்தைக் கொண்டு சென்றனர். அவர்கள் தங்களது புதிய செல்வத்தின் காரணமாக ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர். இவர் நசித்துப் போன பரோக்கள் (Rotton boroughs) என்ற தேர்தல் தொகுதிகளை விலைக்கு வாங்கி பாராளுமன்ற உறுப்பினர் ஆயினர். எனவே ஆங்கில மக்கள், இந்த கம்பெனி ஊழியர்கள் ஆதரவற்ற இந்திய மக்களை ஏமாற்றியே பொருள் சேர்த்திருக்க வேண்டும் என்று எண்ணினர். மேலும் இது அவர்களிடம் பொறாமையையும் ஏற்படுத்தியது. இதனால் கம்பெனி நிர்வாகத்தில் பாராளுமன்றம் தலையிட வேண்டும் என்பது பொது மக்கள் கருத்தாக அமைந்தது.

**2) இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்து:-**

ராபர்ட் கிளைவின் வெற்றிகளால் கம்பெனியின் அரசியல் அதிகாரத்திலும் வாணிப வளர்ச்சியிலும் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டது. எனவே கம்பெனியின் லாபத்தையும் லாபப் பங்கீட்டையுமே பெரிதாகக் கொண்டு, கம்பெனியின் முன்னேற்றத்திற்கான காரியங்களிலேயே அக்கரையோடு பாடுபடும் அலுவலர்களிடம் லட்சக்கணக்கான இந்திய மக்களை ஆட்சி புரியும் பொறுப்பை ஒப்படைப்பது சரியல்ல என்று பாராளுமன்ற உறுப்பினா கருதினர். மேலும் வங்காளம் போன்ற பகுதிகளை ஆளும் பொறுப்பை இங்கிலாந்து அரசு ஏற்றால் அச்செயல் அரசுக்கு நற்பெயரைத் தேடி தந்து குடியேற்ற நாடுகளை அதிகப்படுத்துவதற்கு அநுகூலமாக அமையும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கருதினர்.

### 3) தடையிலா வாணிபக் கொள்கை (Policy of Free Trade):-

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ‘தடையிலா வாணிபக் கொள்கை’ (Laissez-faire) பற்றி தேசிய அளவில் விவாதங்கள் நடைபெற்று வந்தன. இதன் விளைவாக இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மட்டும் பெற்றிருந்த முற்றுரிமை (monopolistic right)க்கு எதிராக குரல் எழுந்தது. கம்பெனி விவகாரத்தில் பாராளுமன்றம் தலையிட இதுவும் காரணமாகும்.

### 4) வங்காள மக்களின் மிக மோசமான நிலை:-

வங்காளத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சியின் விளைவாக பல சீர்கேடுகள் காணப்பட்டது. மக்களின் நலன்களைக் கவனிப்பார் யாரும் இல்லை. நவாபிடம் முறையிட்டால் உண்மையான அதிகாரம் கம்பெனியிடமே உள்ளது என்று கூறினர். கம்பெனியிடம் முறையிட்டால் நிர்வாக அதிகாரம் நவாபிடமே உள்ளது என்றனர். எனவே தான் 1770-ல் வங்காளத்தில் தோன்றிய பெரும் பஞ்சத்தின் விளைவாக மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களைப் போக்க யாரும் முன்வரவில்லை. ஐந்தில் ஒரு பகுதி மக்கள் இறந்தனர். மேலும் கம்பெனி ஊழியர்களே இந்த பஞ்சத்தைப் பயன்படுத்தி பொருட்களின் விலைகளை உயர்த்திக் கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இந்த நிலை இங்கிலாந்து மக்களை இந்தியர்கள் மீது இரக்கப்பட வைத்தது. கம்பெனி நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற கருத்து வலுவடைந்தது.

### 5) கம்பெனியின் தோல்வி:-

1764-ல் நடைபெற்ற மைசூர் போரில் கம்பெனியின் படைகள் ஹைதர் அலியிடம் படுதோல்வியடைந்தன. இந்த செய்தி இங்கிலாந்து சென்றடைந்த போது அரசாங்கமும், மக்களும் அதிர்ச்சியடைந்தனர். இத்தோல்வி இங்கிலாந்தின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமையவே கம்பெனி விவகாரத்தில் அரசாங்கம் தலையிட முற்பட்டது.

### 6) கம்பெனியின் மோசமான நிதிநிலைமை:-

1765-ம் ஆண்டு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பிரதேசங்களில் திவானி உரிமையை கம்பெனி பெற்ற போது, கம்பெனிக்கு வருடத்திற்கு 16 லட்சம் பவுன் நிகர லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. எனவே கம்பெனியின் பங்கு தொகையின் மதிப்பு உயர்ந்தது. பங்குதாரர்களுக்கு கொடுக்கப்பட்ட லாபப் பங்கீடு 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக உயர்ந்தது. ஆனால் 1772-ல் கம்பெனியின் நிதிநிலை மோசமாகி திவாலா ஆகப்போகிறது என்ற வதநதி பரவியது. இதனால் பங்குகளின் விலை சரிந்தது. எனவே கம்பெனி பங்குதாரர்கள் தங்களின் நலன்கள் காக்கப்பட பாராளுமன்றம் உடனடியாக கம்பெனி விவகாரத்தில் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

### 7) கம்பெனி இங்கிலாந்து அரசாங்கத்திடம் கேட்ட கடன்:-

கம்பெனியின் வாணிபம் செழிப்பாக நடந்து வந்தபோது அரசாங்கத்திற்கு தனக்கு வழங்கப்பட்ட முறறுரிமைக்காக வருடத்திற்கு நான்கு லட்சம் பவுன் ஒழுங்காக செலுத்தி வந்தது. 1767 முதல் 1772 வரை ஒழுங்காகச் செலுத்தி வந்த கம்பெனி, நிதி நெருக்கடியின் காரணமாக நான்கு லட்சம் பவுனை தொடர்ந்து செலுத்த முடியவில்லை. அதுமட்டுமல்லாது ‘பாராளுமன்றம் கடன்

கொடுத்தாலன்றி கம்பெனி தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது'. கம்பெனி நிர்வாகக் குழுவினர் பத்து லட்சம் பவுன் கடன் கேட்டு பாராளுமன்றத்தை அணுகினர். எனவே தான் கம்பெனியை ஒழுங்குபடுத்த பாராளுமன்றம் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டது.

**8) நார்த் பிரவுவின் மசோதா:- 1773 மே 18ம் தேதி:-**

கம்பெனியின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த பாராளுமன்றம் 'பொறுக்கு குழு' ஒன்றையம், 'ரகசியக் குழு' (Select Committee Secret Committee) ஒன்றையும் நியமித்தது. இந்த குழுக்களின் விசாரணையில் 1757லிருந்து 1766க்குள் கம்பெனி ஊழியர்கள் இருபது லட்சம் பவுனுக்கு மேல் நன்கொடையாகப் பெற்றது நிரூபிக்கப்பட்டது. மேலும் இந்த குழுவின் அறிக்கை கம்பெனியின் மோசமான நிர்வாகத்தைக் கடுமையாக கண்டித்தது.

இந்த குழுக்களின் அறிக்கையின் அடிப்படையிலே நார்த் பிரிவு 1773 மே 18ம் தேதி பாராளுமன்றத்தில் 'ஒழுங்குபடுத்தும் மசோதா' ஒன்றை அறிமுகப்படுத்தினார். மசோதா பற்றிய விவாதம் நடைபெற்றது. மசோதாவுக்கு எதிராக கம்பெனி நிர்வாகம் அனுப்பிய எல்லா விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்து, மசோதா நிறைவேற்றப்பட்டது. இதுவே 'ஒழுங்குபடுத்தும் சட்டம்' என்ற பெயரை பெற்றது.

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஷரத்துக்கள்:-**

ஒழுங்குபடுத்தும் சட்டம் கம்பெனியின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கம்பெனியின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் உரிமையைப் பெற்றது பாராளுமன்றம். கம்பெனியின் அமைப்பு முறையில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. இதனால் கம்பெனிக்கு ஒரு புதிய அரசியலமைப்பு உருவானது.

**1) கம்பெனி நிர்வாக அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள்:-**

ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்படும் முன்பாக கம்பெனி 24 இயக்குநர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபையால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்த இயக்கநர்களை கம்பெனியில் 500பவுண்ட் முதலீடு செய்த பங்குதாரர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இந்த பங்குதாரர்களைக் கொண்ட 'உரிமையாளர் மன்றமும்' (Court of propritors) செயல்பட்டு வந்தது.

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி இனிமேல் 1000 பவுண்ட் முதலீடு செய்துள்ள பங்குதாரர்களுக்கே இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த இயக்குநர்கள் இனி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் (அதாவது 6 பேர்) ஆண்டுதோறும் பதவி விலக வேண்டும். புதிய இயக்குநர்கள் அவர்களுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**2) கம்பெனி நிர்வாகத்தின் மீது பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு:-**

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி கம்பெனி நிர்வாகத்தின் மீது பாராளுமன்றம் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது. கம்பெனியின் வரவு செலவு கணக்குள் இங்கிலாந்து அமைச்சரவை முன் வைக்கப்பட வேண்டும். மேலும் நிலவரி சம்பந்தமாக இந்தியாவிலிருந்து வரும் எல்லா கடிதங்களும் கருவூலத்

துறையிலும், சிவில் ராணுவ கடிதப் போக்குவரத்துக்களை இங்கிலாந்தில் வெளிஉறவுச் செயலரிடமும் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு கம்பெனியின் சிவில் வாணிப நடவடிக்கைகளில் தலையிடும் உரிமை பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல் இருபது ஆண்டிற்கு ஒருமுறை கிழக்கிந்தியக் கம்பெனி தொடர்ந்து இயங்க வேண்டுமா, வேண்டாமா? என்பதை நிர்ணயிக்கும் உரிமையை பாராளுமன்றத்திற்கு இச்சட்டம் வழங்கியது. எனவே இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை கம்பெனியில் காணப்படும் குறைபாடுகளை நீக்க பாராளுமன்றத்திற்கு வாய்ப்புக் கிடைத்தது. இதன் காரணமாகத்தான் 1793, 1813, 1833, 1853ம் வருட பட்டய சட்டங்கள் இயற்றப்பட்டன.

**3) கவர்னர் ஜெனரல்:-**

வங்காளத்தின் கவர்னர் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி 'வில்லியம்கோட்டையின் கவர்னர் ஜெனரல்' என்று அழைக்கப்பட்டார். அவரது வருட சம்பளம் 25,000 பவுன் ஆகும். இவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும. இவர் சென்னை, பம்பாய் கவர்னர்களைவிட அதிக அதிகாரம் படைத்தவர். இவரை கலந்து ஆலோசித்த பின்பே இதர மாநில கவர்னர்கள் சுதேச அரசர்களுடன் போர் புரிதலோ, சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளவோ வேண்டும்.

**4) கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபை:-**

## (Governor General – in – Council):-

நிர்வாகத்தில் கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனை சபை அமைக்கப்பட்டது. இந்த நான்கு உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு: கிளாவரிங், பிரான்சிஸ், மான்சன், பார்வல் (Clavering, Francis, Monson, Barwell) இவர்களும் ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பர். இந்த சபையின் பெரும்பான்மை வாக்குப்படியே (Majority Vote) கவர்னர் ஜெனரல் ஆட்சி நடத்த வேண்டும். வாக்குகள் சம நிலையாக இருக்கும் போது 'முடிவு செய்யும் வாக்கு' (Casting Vote) கவர்னர் ஜெனரலுக்கு வழங்கப்பட்டது. கவர்னர் ஜெனரலும் ஆலோசனைக் குழுவினரும் இந்தியாவின் நிர்வாகத்திற்குத் தேவையான சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம்.

**5) தலைமை நீதிமன்றம்:-**

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி ஒரு தலைமை நீதிபதியும், மூன்று நீதிபதிகளும் அடங்கிய ஒரு தலைமை நீதிமன்றம் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. இது கவர்னர் ஜெனரலுக்கு கட்டுப்படாதது. தலைமை நீதிபி மற்றும் பிறநீதிபதிகள் அரசராலேயே நியமிக்கப்பட வேண்டும். தலைமை நீதிமன்றம் சிவில், கிரிமினல் அலுவல்களையும், கடற்படை மற்றும் மதசம்பந்தமான வழக்குகளையும் விசாரிக்கும் உரிமை பெற்றிருந்தது. இந்த நீதிமன்றத்தின் அதிகாரம் வங்காளம், பீகார், ஒரிசா, மாகாணங்களில் ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட குடிகள் மீது பரவியிருந்தது. தலைமை நீதிபதியாக சர் எலிஜா இம்பே (Sir Elijah Impey) என்பவரும் சேம்பர்ஸ், லெமாய்சர், ஹைட் (Chambers, Lamaistre, Hyde) ஆகியோர் பிற நீதிபதிகளாகவும் நியமிக்கப்பட்டனர். தலைமை நீதிபதி வருடத்திற்கு 8000 பவுண்டும், பிற நீதிபதிகள் 6000 பவுண்டும் ஊதியம் பெற்றார்கள்.

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் நன்மைகள்:-**

1) ஒழுங்குபடுத்தும் சட்டமே இந்தியாவை ஆங்கிலப் பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்குள் கொண்டு வந்த முதல் சட்டமாகும். கம்னெி ஊழியர்கள் தங்கள் நாட்டு அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாமல் இருந்ததால் இந்திய மக்களை தங்க்ள மனம் போனபடி கொள்ளையடித்து வந்தனர். ஆனால் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் மூலமாகவே கம்பெனியின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு இங்கிலாந்துக்கு ஏற்பட்ட அவப்பெயர் நீங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2) கம்பெனி அலுவலர்களிடம் காணப்பட்ட ஊழல்களையும் ஒழுங்கீனங்களையும் அதிகார துஷ்பிரயோகத்தை அகற்றவும் இச்சட்டம் உதவியது. இச்சட்டத்தின்படிதான் உதவியது. இச்சட்டத்தின்படிதான் கவர்னர் ஜெனரலாக பணிபுரிந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் பின்னர் பாராளுமன்றத்தால் துரோக குற்ற விசாரணை செய்யப்பட்டார்.

3) வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த இரட்டை ஆட்சி முறையின் சீர்கேடான நிலை மாறுவதற்கு இச்சட்டம் உதவி செய்தது. இந்திய மக்களும் நன்மை பெற்றனர்.

4) கம்பெனி ஊழியர்கள் சுயநலனுக்காக செய்து வந்த தனி வாணிபம் அகற்றப்பட்டதால் கம்பெனிக்கு அதிக லாபம் கிடைத்தது. இந்திய வாணிபம் வளர்ந்தது.

5) ஐநூறு பவுண்ட் முதலீடு செய்தவர்களின் வாக்குரிமை ரத்து செய்யப்பட்டதால், வசதி படைத்தவர்களும் இயல்பாகவே தகுதி வாய்ந்தவர்களுமே பங்குதாரர் சபையில் இடம் பெற்றனர். இதனால் தகுதி வாய்ந்த இயக்குநர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

6) இயக்குநர்களின் பதவிக்காலம் ஒரு ஆண்டாக இருந்த போது அவர்களால் உருப்படியாக எந்த காரியமும் செய்ய இயலவில்லை. இச்சட்டப்படி பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆக்கப்பட்டதால் இயக்குநர்களால் முழுமையாக பணிகளை ஆற்ற முடிந்தது.

**ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் குறைபாடுகள்:-**

"ஒழுங்குபடுத்தும் சட்டம் கம்பெனி பதிவுச் சட்டத்திற்கு விரோதமானதும் தனிநபர் உரிமையைப் பறிப்பதும் ஆகும்", என்று எட்மண்ட்பர்க் கூறுகிறார்.

"ஒழுங்குபடுத்தும் சட்டம் தெளிவற்ற ஓர் அறைகுறையான சட்டம்" என்று P.E. ராபர்ட்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்.

ஒழுங்குபடுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடனேயே அதன் குறைபாடுகள் தெரிய ஆரம்பித்தன. இச்சமட்டத்தால் கம்பெனியில் ஒழுங்கு ஏற்படுவதற்குப் பதிலாக ஒழுங்கீனங்களே ஏற்பட்டன.

**1) கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனைக் குழுவினருக்கும் பகைமை:-**

ஒழுங்குபடுத்தும் சட்டம் கவர்னர் ஜெனரலுக்கும் ஆலோசனைக் குழுவினருக்குமிடையே பகைமை ஏற்படக் காரணமானது. கவர்னர் ஜெனரல் ஆலோசனை சபையின் பெரும்பான்மை வாக்கிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற நிலையிருந்ததால் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. ஆலோசனைக்

குழுவினரில் பார்வெல் தவிர மற்றவர்களுக்கு இந்தியா புதியது. இந்திய நிர்வாகமும் புதியது. பழக்க வழக்கங்களும் புதியது.

மேலும் பார்வல் தவிர மற்ற மூன்று பேரும் கவர்னர் ஜெனரலாக பதவியேற்ற வாரன் ஹேஸ்டிங்சிற்கு அதிக தொந்தரவு கொடுத்தனர். பிரான்ஸிஸ் என்பவர் கவர்னர் ஜெனரலின் பதவியைக் கைப்பற்ற முனைந்தார். ஆகவே வாரன் ஹேஸ்டிங்ஸ் செயலற்ற நிலையில் இருந்தார். மேலும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் ஆலோசனைக் குழுவினரின் அதிகாரங்களும் கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களும் தனித்தனியே பிரித்துக் கூறப்படவில்லை.

**2) மாநிலங்களின் மீது கவர்னர் ஜெனரல் முழுமையாக அதிகாரம் செலுத்த முடியவில்லை:-**

ஒழுங்குபடுத்தும் சட்டப்படி வங்காள அரசு சென்னை, பம்பாய் ஆகிய மாநில அரசுகள் மீது அதிகாரம் செலுத்த வேண்டும். இந்த மாநில அரசுகள் வங்காள அரசுக்கு கட்டுப்பட வேண்டும். ஆனால் 'அவசர காலத்தில் சுதந்திரமாக இயங்கிக் கொள்ளலாம்' என்ற ஒரு விதி காணப்பட்டதால், அதைப் பயன்படுத்திக் கொண்டு மாநில அரசுகள் கவர்னர் ஜெனரலுக்கு கட்டுப்படாமல் இயங்கின. பம்பாய் கவர்னர் மராட்டியப் போரிலும், சென்னை கவர்னர் கர்நாடக நவாபுடனும் தங்கள் விருப்பப்படி நடந்து கொண்டனர். மேலும் கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களும், பிற கவர்னர்களின் அதிகாரங்களும் பிரித்துக் கூறப்படவில்லை.

**3) நீதித்துறையில் காணப்பட்ட குறைகள்:-**

a) ஆலோசனைக் குழுவினருக்கும் தலைமை நீதிமன்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பும், சபையினரின் அதிகாரங்களும் நீதித்துறையினரின் அதிகாரங்களும் வரையறுத்துக் கூறப்படாததால் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன.

b) நீதிபதிகள் நேரடியாக இங்கிலாந்து அரசர்களால் நியமிக்கப்பட்டவர்கள். ஆதலால் அவர்கள் கவர்னர் ஜெனரலுக்குக் கீழ்படிய மறுத்தனர். இந்தியாவில் யாருக்கும் தாங்கள் கட்டுப்பட வேண்டியதில்லை என்று கருதினர்.

c) சென்னை, பம்பாய் மாநில நீதிமன்றங்களுக்கும் கல்கத்தா உயர்நீதிமன்றத்திற்கும் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும் என்பதும் விளக்கப்படவில்லை.

d) மேலும் தலைமை நீதிமன்றம் இந்தியக்குடிமக்கள் அனைவர் மீதும் அதிகாரம் செலுத்துவதா அல்லது கம்பெனியின் கீழ் பணியிலமர்ந்த இந்தியர்கள் மீது மட்டும் அதிகாரம் செலுத்துவதா என்ற செய்தி தெளிவாகக் கூறப்படவில்லை. மேலும் யார் யார் பிரிட்டிஷ் குடிகள், யார் யார் கம்பெனியின் பணியாட்கள் என்பதும் தெளிவாகக் கூறப்படவில்லை.

e) ஒழுங்குபடுத்தும் சட்டம் உயர்நீதிமன்றத்தில் எந்தச் சட்டம் பின்பற்றப்பட வேண்டும் என்றும் கூறவில்லை. அப்போது இந்தியாவில் இந்து சட்டம், முஸ்லீம் சட்டம், ஆங்கிலச் சட்டம் ஆகியவை நடைமுறையிலிருந்தன. ஆங்கிலச் சட்டங்கள் இங்கிலாந்து நாட்டின் சூழ்நிலைக்கேற்ப உருவானவை. எனவே அடிப்படை வேறுபாடுகள் கொண்ட இந்தியாவில் இந்த சட்டப் பிரச்சனை குழப்பத்தை ஏற்படுத்தியது.

f) கம்பெனி அதிகாரிகளை தலைமை நீதிமன்றம் கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்பட்டதால் இரசாரருக்குமிடையே போராட்டம் ஏற்பட்டது.

g) ஆங்கில மொழியில் தான் நீதிமன்றம் செயலாற்ற வேண்டியிருந்ததால் இந்தியர்களுக்கு நன்மை ஏற்படவில்லை.

**4) கம்பெனியின் மீது பாராளுமன்றம் முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியவில்லை:-**

ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி கம்பெனியின் கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்தும் இங்கிலாந்தின் வெளிஉறவுக் செயலரிடம் சமர்ப்பிக்கபட வேண்டும். ஆனால் அந்த கடிதங்களை ஆராயவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்திய விவகாரங்களில் திறமை பெற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. எனவே கம்பெனியின் மீது பாராளுமன்றம் முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியவில்லை.

**5) நிர்வாகக் குழப்பம்:-**

நாட்டில் பலவகையான நிர்வாகம் நடைபெற்றதால் யாருக்குக் கட்டுப்படுவது என்று புரியாமல் மக்கள் குழம்பினர். ஒரு ஆட்சியாளர் என்ற நிலை இல்லாமல், நவாபுகள் ஆட்சி, கவர்னர் ஜெனரலின் ஆட்சி, இயக்குநர்கள் குழு, உரிமையாளர் குழு, தலைமை நீதிமன்றம், மாநில கவர்னர் ஆட்சி என்ற பல வகையான ஆட்சியில் மக்கள் சிக்கித் தவித்தனர்.

**6) இயக்குநர் குழுவின் அதிகாரம் வரையறுக்கப்படவில்லை:-**

கம்பெனி இயக்குநர் குழுவும், உரிமையாளர் குழுவும் ஒன்றுக்கொன்று கட்டுப்படாமல் இயங்கியது. எனவே கம்பெனி பணியாளர்கள் யாருக்கும் கட்டுப்படவில்லை. அப்படி கட்டுப்படாதவர்கள் மீது என்ன நடவடிக்கை என்பதும் கூறப்படவில்லை. கம்பெனிக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் இங்கிலாந்துக்கே தொடர்பு கொள்ள வேண்டிய நிலை இருந்தது.

மொத்தத்தில் கம்பெனியின் மீது அரசாங்கத்திற்காவது, ஊழியர்களின் மீது மேலதிகாரிகளுக்காவது, ஆலோசனை சபையின் மீது கவர்னர் ஜெனரலுக்காவது, சென்னை பம்பாய் மாநிலங்கள் மீது கல்கத்தா மாநிலத்திற்காவது தெளிவான அதிகாரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் கொடுக்கவில்லை.

1) ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் மூலம் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டது?
2) ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஷரத்துக்கள் யாவை?

## பிட் இந்தியச் சட்டம் 1784

## (Pitt's India Act, 1784)

### ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் குறைபாடுகள் நிவாத்திக்கப்படல்

ஒழுங்குபடுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது அதன் குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரியலாயின. எனவே அந்த குறைபாடுகளை நீக்குவதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக கம்பெனியின்

செயல்களைச் சீர்திருத்த பாராளுமன்றம் பல சட்டங்களை இயற்றியது. அவைகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்தன. அந்த சட்டங்கள் பின்வருமாறு:

### 1. வங்காள நீதிபரிபாலன சட்டம் (Bengal Judicature Act) 1781:-

1781-ல் பாராளுமன்றம் இரண்டு குழுக்களை நியமித்தது. எட்மண்ட் பர்க் என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இந்தியாவில் உள்ள நீதிபரிபாலனத்தை பரிசீலனை செய்தது. ஹென்றி டண்டாஸ் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட ரகசியகுழு மைசூர் போர் உட்பட இந்திய விவகாரங்களைப் பற்றி பரிசீலனை செய்தது. இந்த இரண்டு குழுவினரின் அறிக்கையின் அடிப்படையில் 1781-ல் வங்காள நீதிபரிபாலன சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் நீதித்துறை சம்பந்தப்பட்ட குறைபாடுகளை நீக்கியது.

**முக்கிய ஷரத்துக்கள்:-**

1) கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் வங்காள தலைமை நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல.

2) கம்பெனியின் வரிவசூல் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் இந்த நீதிமன்றத்திற்குக் கிடையாது.

3) ஆங்கிலேயர்கள் சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளும் இந்த நீதிமன்றத்தில் தான் விசாரிக்கப்பட வேண்டும்.

4) கல்கத்தாவில் வசிக்கும் மக்கள் யாவரும் தலைமை நீதிமன்ற அதிகாரத்திற்கு உட்பட்டவர் ஆவர். ஆனால் இந்துக்களும், முஸ்லீம்களும் வாரிசுரிமை முதலிய செய்திகளில் அவரவர் சட்டங்களின் படியே தீர்ப்பு கூறப்படுவர்.

### 2. டண்டாஸ் ம்றும் ஃபாக்ஸ் இந்திய வரைவு: (Dunda's and Fox India Bill):-

பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவரான ஹென்றி டண்டாஸ் என்பவர் 1782-ல் ஆங்கில இந்திய ஆட்சி முறையைக் கண்டிக்கும் 45 தீர்மானங்களைக் கொண்டு வந்தார். முக்கியமாக கவர்னர் ஜெனரலின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் விதமாகவும், வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆட்சிமுறையில் அல்லல்பட்ட ஜமீன்தாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற விதமுமாக அத்தீர்மானங்கள் அமைந்தன. ஆனால் அந்த தீர்மானங்களுக்கு சபையில் போதிய ஆதரவு கிடைக்காமல் போய் விட்டதால் அந்த தீர்மானங்கள் தோல்வியடைந்தன.

1783-ல் நிதி உதவிக்காக மறுபடியும் கம்பெனி பாராளுமன்றத்தை அணுகிய போது மீண்டும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தைத் திருத்த ஒரு வாய்ப்பு கிடைத்தது. அப்போது ஃபாக்ஸ், நார்த் பிரபு ஆகியோரின் கூட்டு மந்திரிசபை 1783 நவம்பர் 18-ல் ஒரு மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்டுத்தியது. அதுவே ஃபாக்ஸ் இந்திய வரைவு எனப்படுகிறது.

### 3. பிட் இந்தியச் சட்டம் (Pitt's India Act 1784):-

இங்கிலாந்து பிரதமர் வில்லியம் பிட் என்பவர் 1784, ஜனவரியில் பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தினார். அது ஆகஸ்டு 1781-

ல் நிறைவேற்றப்பட்டு ‘பிட் இந்தியச் சட்டம்’ என்ற பெயர் பெற்றது. பிட் இந்தியச் சட்டம் ஒழுங்குபடுத்தும் சட்டத்திலுள்ள மேலும் பல குறைபாடுகளை நீக்கியது.

**முக்கிய ஷரத்துக்கள்:-**

**1. கட்டுப்பாட்டு வாரியம் (Board of Control):-**

பிட் இந்தியச் சட்டப்படி இந்தியா சம்பந்தப்பட்ட அரசியல் நிர்வாக காரியங்களைக் கவனிப்பதற்கு புதிய சபை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு கட்டுப்பாட்டு வாரியம் என்று பெயர். இதில் அரசரால் நியமிக்கப்பட்ட ஆறு ஆணையர்கள் இடம் பெறுவர். அவர்கள் கருவூலத்தலைவர், அரசாங்க செயலர் ஒருவர் மற்றும் பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள் நான்கு பேர் ஆவர். இந்த வாரியம் கம்பெனி இயக்குநர் குழு, உரிமையாளர் மன்றம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றது.

**2. கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள்:-**

கட்டுப்பாட்டு வாரியமே இந்தியாவிற்கான ஆங்கிலக் கொள்கையை வகுக்கும் அதிகாரம் கொண்டது. எல்லா சிவில், ராணுவ, வருமான அதிகாரங்களை இந்த வாரியமே மேற்பார்வையிடும். இந்த வாரியத்தின் அனுமதி இன்றி கம்பெனி இயக்குநர் குழுவினர் எந்த உத்தரவையும் பிறப்பித்தல் கூடாது. இந்தியாவிலிருந்து வரும் எல்லாக் கடிதங்களையும் கட்டுப்பாட்டு வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இயக்குநர்கள் இந்தியாவுக்கு அனுப்பும் பதிலையும் திருத்த கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அதிகாரம் உண்டு.

**3. ரகசியக் குழு ஒன்று அமைப்பு (Committee of Secracy):-**

பிட் இந்தியச் சட்டத்தின்படி கம்பெனியின் குழுவில் உள்ள 24 உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ரகசியக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கட்டுபபாட்டு வாரியத்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படும் ரகசிய ஆணைகள் இந்த ரகசியக்குழு மூலமாகவே செல்லும். இந்த ரகசியக் குழு உறுப்பினர்கள் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு துணை நிற்பர்கள். இதன் விளைவாக கம்பெனி நிர்வாகம் பற்றி எடுக்கும் முக்கிய முடிவுகளின் மீது 21 இயக்குநர்கள் விலக்கப்பட்டனர்.

**4. கவர்னர் ஜெனரலின் அதிகாரம் தெளிவாக்கப்பட்டது:-**

பிட் இந்தியச் சட்டத்தின்படி சென்னை, பம்பாய் மாநிலங்கள் மீதான கவர்னர் ஜெனரலின் மேலதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. அதாவது, கவர்னர் ஜெனரலின் மேற்பார்வை செய்யும் வழிநடத்தும், கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆகியவை தெளிவாக வரையறுக்கப்பட்டது.

**5. இயக்குநர் குழுவின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன:-**

பிட் இந்தியச் சட்டப்படி கம்பெனி இயக்குநர்கள் இனி வாணிபம் சம்பந்தப்பட்ட அலுவல்களை மட்டுமே கவனிப்பர். அரசியல் அலுவல்களை கட்டுப்பாட்டு வாரியமே எடுத்துக் கொண்டது. தங்கள் பணியாளர்களை நியமிப்பது அல்லது நீக்குவது மட்டுமே இயக்குநர் குழுவின் அதிகாரங்களாக இருந்தது.

**பிட் இந்தியச் சட்டத்தின் சிறப்பு:-**

பிட் இந்தியச் சட்டத்தால் ஆங்கிலக் கம்பெனி பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு உட்பட்ட அரசாங்க இலாக்காக்களில் ஒன்று போல் ஆகிவிட்டது எனலாம். இதுவரை தனது அலுவல்களில் அனுபவித்து வந்த எதேச்சதிகாரத்தை கம்பெனி இழந்துவிட்டது. இந்தியாவில் கம்பெனிக்குச் சொந்தமான பிரதேசங்க்ள இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பொறுப்பாயிற்று.

வில்லியம் பிட் இயன்ற அளவிற்கு கம்பெனியின் பழைய அமைப்பை மாற்றாதிருக்க முயன்றார். இதனால் இயக்குநர்களும் கம்பெனி அதிகாரிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் பிட் இந்தியச் சட்டம் மற்றொரு இரட்டை ஆட்சி முறையைத் தோற்றுவித்தது.

ஒழுங்குபடுத்தும் சட்டத்திலிருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு கம்பெனியின் கையிலிருந்த அதிகாரங்கள் கவர்னர் ஜெனரலின் கைக்கு மாறியது.

## 1793-ம் வருட பட்டயச் சட்டம் (Charter Act of 1793)

1793-ம் வருட ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் படி கம்பெனி வியாபாரம் செய்வதற்கான முற்றுரிமை இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அதன்படி கம்பெனிக்கு அளிக்கப்பட்ட பட்டயம் (Charter) 1793-ம் ஆண்டு முடிவடையவே கம்பெனி நிர்வாகக்குழுவினர் பாராளுமன்றத்திடம் விண்ணப்பம் செய்தனர். அப்போது இங்கிலாந்து அரசியலிலும், பாராளுமன்றத்திலும் கம்பெனிக்குச் சாதகமான சூழ்நிலையே காணப்பட்டது.

கம்பெனிக்கு மேலும் 20 இருபது ஆண்டுகள் உரிமை அளிக்கும் 1793. வருட பட்டயச்சட்டம் மிக எளிதாக பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

**1798-ம் வருட பட்டய சட்டத்தின் ஷரத்துக்கள்:-**

1) கம்பெனியின் வியாபார முற்றுரிமை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

2) கவர்னர் ஜெனரலுக்கு சென்னை, பம்பாய் மாநிலங்களின் மீதுள்ள சிவில் மற்றும் ராணுவ அதிகாரங்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்திய அரசுகளுடன் போர் அல்லது சமாதானம் செய்து கொள்வது பற்றி கவர்னர் ஜெனரலை மாநில கவர்னர்கள் கட்டாயம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

3) ஆலோசனைக் குழுவினர்களின் பெரும்பான்மை முடிவை மீறிச் செயல்படும் அதிகாரம் மாநில கவர்னர்களுக்கு வழங்கப்பட்டது.

4) இந்த சட்டம் ஒரு வலிமையான மைய அரசாங்கம் அமைவதற்கு வழிவகுத்துக் கொடுத்தது. இதன்படி கவர்னர் ஜெனரல் மாநிலங்களில் உள்ள கம்பெனி ஊழியர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கலாம். மாநிலங்களுக்கு விஜயம் செய்யும் போது அங்குள்ள ஆலோசனைக் குழு கூட்டத்திற்குத் தலைமை வகிக்க உரிமை உண்டு. தான் வங்காளத்தில் இல்லாத காலங்களில் சபை கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஒரு உபதலைவரை கவர்னர் ஜெனரல் நியமித்துக் கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டது.

5) கவர்னர் ஜெனரல், மாநில கவர்னர்கள், படைத்தளபதிகள் ஆகியோர் தங்கள் பதவிக்காலத்தின் போது இந்தியாவைவிட்டு வெளியே போகத் தடைவிதிக்கப்பட்டது.

6) இந்தியாவில் பிரிட்டிஷ் நிலப்பரப்பை விஸ்தரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்று மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டது. மேலும் கம்பெனி அலுவலர்கள் பரிசுகள், அன்பளிப்புகள் பெறுவதும், லஞ்சம் பெறுவதும் குற்றம் என்று வலியுறுத்தப்பட்டது.

7) கவர்னர் ஜெனரலின் ஆலோசனைச் சபை உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் இனிமேல் குறைந்தது பன்னிரெண்டு ஆண்டுகளாவது இந்திய நிர்வாகத்தில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

8) இச்சட்டப்படி கவர்னர் ஜெனரலுக்கு மாநிலங்களில் ‘அமைதி காண் நீதிபதி’ (Justice of peace) நியமிக்க உரிமை கொடுக்கப்பட்டது.

9) ஸ்தல அரசாங்கங்களுக்கு மதுபான உரிமம் வழங்கவும், பொது சுகாதாரம் சம்பந்தப்பட்ட முடிவு எடுக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது.

10) கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆணையர்கள் எண்ணிக்கை ஆறிலிருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டது. இதில் கடைசி இரண்டு உறுப்பினர்கள் பிரிவு கவுன்சில் உறுப்பினர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மதிப்பீடு:-**

மேற்கண்ட ஷரத்துக்களை ஆராயும் போது, அவை ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் பிட் இந்தியச் சட்டம் ஆகியவைகளில் காணப்பட்ட கருத்துக்களை மீண்டும் வலியுறுத்துவதற்காகவே அமைந்துள்ளதை அறியலாம். குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதையும் இச்சட்டம் ஏற்படுத்தவில்லை. ஒரே ஒரு விரும்பத்தகாத மாற்றம் என்னவென்றால் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ஆகும் செலவுகளை இந்திய வருமானத்திலிருந்தே கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதேயாகும். இந்நிலை 1919-ம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் இயற்றப்படும் வரை நீடித்தது.

## 1813-ம் வருட பட்டயச் சட்டம் (Charter Act of 1813)

1793-ம் வருட பட்டய சட்டப்படி கம்பெனிக்கு இருபது வருட காலத்திற்கு வழங்கப்பட்ட வியாபார முற்றுரிமைக் காலம் முடிவடையவே கம்பெனி நிர்வாகத்தினர் அந்த சாசனத்தைப் புதுப்பிப்பதற்காக பாராளுமன்றத்திடம் விண்ணப்பித்தினர். எனவே பாராளுமன்றம் கம்பெனியின் விவகாரங்களை அலசி ஆராய முற்பட்டது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கம்பெனியின் முற்றுரிமையை ஒழித்துக் கட்ட விரும்பினர். நீண்ட விவாதத்திற்குப் பிறகு பாராளுமன்றம் 1813-ல் பதிமூன்று தீர்மானங்களை நிறைவேற்றியது. அந்த தீர்மானங்களின் அடிப்படையிலேயே 1813-ம் வருட பட்டய சட்டம் இயற்றப்பபடடது. இந்தச் சட்டமானது கம்பெனிக்கு இந்திய வாணிபத்தில் இருந்த முற்றுரிமையை (monopoly)யை நீக்கிவிட்டது. மேலும் கம்பெனியின் உடமைகளின் மீது சந்தேகத்திற்கு இடமில்லாமல் மன்னரின் ஆதிபத்திய உரிமையை இச்சட்டம் உறுதிபடுத்தியது.

**1813-ம் வருட பட்டயச் சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலை:-**

1) கம்பெனியின் நிதிநிலை மிக மோசமடைந்தது. அதன் பொதுக்கடன் அதிகரித்தது. வெல்லஸ்லி பிரபுவின் கொள்கைகளின் காரணமாகவே கம்பெனிக்கு பல இடையூறுகள் ஏற்பட்டன. எனவே பாராளுமன்றத்திடம் கடன் கேட்டு கம்பெனி விண்ணப்பித்தது.

2) கம்பெனிக்கு வழங்கப்படும் சாசனத்தைப்பற்றி விவாதம் பாராளுமன்றத்தில் வந்தபோது, இங்கிலாந்திலுள்ள பெரிய வாணிபர்கள், உற்பத்தியாள்கள், கப்பற் சொந்தக்காரர்கள் கம்பெனியின் முற்றுரிமையை மேலும் நீட்டிக்கக்கூடாது என்று விண்ணப்பம் அளித்தனர். இந்தியா மற்றும் சீனாவுடனான வியாபாரம் செய்யும் உரிமை எல்லா ஆங்கில மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

3) புரட்டஸ்தாந்து மிஷினரிமார்கள் தாங்கள் இந்தியாவிற்குச் சென்று மதப்பிரச்சாரம் செய்ய அனுமதியளிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் முறையிட்டனர்.

மேற்கண்ட சூழ்நிலையில் கம்பெனியின் சாசனம் பற்றிய விவாதம் நடைபெற்றது. வியாபார முற்றுரிமையை நீட்டிக்க வேண்டும் என்றும், கிறிஸ்துவ மதப்பிரச்சாரர்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும் கம்பெனி நிர்வாகத்தினர் வாதிட்டனர். இதனால் காமன்ஸ் சபை இந்திய செய்திகளைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு பொறுக்கு குழுவை (Select Committee) அமைத்தது. அக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் 1813-ம் வருட பட்டயச்சட்டம் இயற்றப்பட்டது.

**1813-ம் வருடம் பட்டயச் சட்டத்தின் ஷரத்துக்கள்:-**

**1) கம்பெனியின் வாணிப முற்றுரிமை ஒழிக்கப்பட்டது:-**

1813-ம் வருட பட்டயச்சட்டம் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் உரிமையை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டித்தது. ஆனால் இந்திய வாணிபத்தில் கம்பெனிக்கு இருந்த முற்றுரிமை நீக்கப்பட்டது. இங்கிலாந்து மக்கள் அனைவருக்கும் இந்தியாவுடன் வாணிபம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் தேயிலை, கஞ்சா முதலிய பொருட்களை சீனாவுக்கு விற்பதில் கம்பெனி பெற்றிருந்த முற்றுரிமை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. இந்தியாவுடன் வியாபாரம் செய்ய லைசென்ஸ் வழங்குவதில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**2) கிறிஸ்தவ மிஷினரிமார்களுக்கு இந்தியா செல்ல அனுமதி:-**

இச்சட்டப்படி கிறிஸ்தவ மிஷினரிமார்கள் இந்தியாவுக்கு சென்று கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப அனுமதிக்கப்பட்டது. இது இந்தப் பட்டய சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். சமய நிர்வாகத்தைக் கவனிக்க தனியாக துறை ஒன்று அமைக்குமாறு கம்பெனி கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்திய மக்களுக்கு சமய வழிபாட்டுரிமை வழங்கவே இவ்வாறு மதப்பிரச்சாரம் செய்ய அனுமதியளிப்பதாக சட்டத்தில் கூறப்பட்டது.

**3) மேற்கத்திய கல்வி முறையைப் பரப்ப பண ஒதுக்கீடு:-**

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளில் வாழும் மக்களின் கல்வி, பண்பாட்டு, அறிவில் வளர்ச்சிக்கு கம்பெனியின் லாபத்திலிருந்து ஆண்டுக்கு ஒரு

லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இவ்வாறு இச்சட்டப்படி முதன் முதலாக இந்தியக் கல்வி வளர்ச்சிக்கான பொறுப்பை கம்பெனி ஏற்கும்படி நேர்ந்தது. இது 1813ம் வருட பட்டய சட்டத்தின் முக்கியப்பகுதியாகும்.

**4) கம்பெனியின் நிதி நிர்வாக சீரமைப்பு:-**

இச்சட்டப்படி கம்பெனி தனது வாணிபம் சம்பந்தப்பட்ட வரவு செலவுகளைத் தனியாகவும், நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரவு செலவுகளைத் தனியாகவும் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் செலவீனங்களுக்கு முக்கியத்துவத்தின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

**5) கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகார விரிவாக்கம்:-**

இச்சட்டப்படி இந்தியாவில் கம்பெனியின் ஆட்சிக்குரிய பகுதிகளில் மன்னரின் ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. கம்பெனி இயக்குநர்களுக்கு இனிமேல் கவர்னர் ஜெனரல், கவர்னர்கள், படைத்தளபதிகள் ஆகியோரை மட்டுமே நியமனம் செய்ய உரிமை உண்டு. ஆனால் இந்த நியமனங்களுக்கும் கட்டுப்பாட்டு வாரியத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.

**6) சிவில், ராணுவ ஊழியர்களுக்கு பயிற்சி நிலையங்கள் அமைப்பு:-**

இந்தியாவில் கம்பெனி சிவில் மற்றும் ராணுவத் துறையில் நியமனம் செய்யப்படும் ஊழியர்களுக்கு தக்க பயிற்சி அளிக்க வேண்டும் என்று இச்சட்டம் கூறியது. அதற்காக சிவில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க ஹெயிலிபரி (Hailey bury)யில் ஒரு பயிற்சி நிலையமும், ராணுவ ஊழியர்களுக்கு அடிஸ்கோம்ப் (Aids Comb) என்ற இடத்தில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

**7) ஸ்தலசுயாட்சி நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம்:-**

இச்சட்டப்படி தலசுயாட்சி நிறுவனங்களுக்கு மேலும் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மக்கள் மீது வரி விதிக்கவும், வரி செலுத்தாதவர்களைத் தண்டிக்கவும் உரிமை வழங்கப்பட்டது.

**8) இந்தியாவில் ஆங்கிலப்படை:-**

கம்பெனி ஆட்சிப் பகுதிகள் மன்னருக்குட்பட்டவை ஆகிவிட்டதால் அப்பகுதிகளின் பாதுகாப்பிற்காக இருபதாயிரம் பிரிட்டிஷ் ராயல் படைகளை அங்கு நிறுத்தி வைக்க அனுமதிக்கப்பட்டது. அந்த படைகளுக்கான பராமரிப்புச் செலவுகளை கம்பெனியே ஏற்றுக் கொள்ள வேண்டும. இது தவிர கம்பெனி இந்திய படை ஒன்றையும் அமைத்துக் கொள்ளலாம்.

**9) பிஷப் நியமனம்:-**

இச்சட்டப்படி கல்கத்தாவில் உள்ள ஐரோப்பியர்களின் நலன்களுக்காக ஒரு பிஷப்பும் அவருக்கு உதவி செய்வதற்காக மூன்று துணை அலுவலர்களும் நியமிக்கப்பட்டார்கள். இந்த பிஷப்பின் நியமனம் இந்தியாவில் திருச்சபை வரலாற்றின் தொடக்கமாக அமைகிறது.

**1813-ம் வருடப் பட்டயச் சட்டத்தின் முக்கியத்துவம்:-**

1813-ம் வருடப் பட்டயச் சட்டமானது கீழ்க்கண்ட பல காரியங்களில் முக்கியத்துவம் பெறுகிறது.

1) முதலாவதாக, இச்சட்டமானது ‘தடையில்லா வாணிபக் கொள்கை’க்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. காரணம் கம்பெனியின் வியாபார முற்றுரிமை ஒழிக்கப்பட்டு இந்திய வியாபாரம் பொதுவாக்கப்பட்டது. ஆனால் வணிக முற்றுரிமை நீக்கப்பட்டதால் ஐரோப்பியப் பொருட்கள் இந்தியாவில் வந்து குவிந்தன. இதனால் இந்தியத் தொழில்கள் பாதிக்கப்பட்டு கடைசியில் அழிந்தே போயின என்ற குற்றச்சாட்டிற்கும் இச்சம் இடம் தருகிறது.

2) இரண்டாவதாக, இச்சட்டத்தின்படி கல்வி வளர்ச்சிக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்திய வரலாற்றில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்தியர்கள் ஆங்கிலக் கல்வியை படிக்க ஆரம்பித்ததால் கம்பெனி நிர்வாகத்தில் வேலைக்கு குறைந்த சம்பளத்தில் அதிக இந்தியர்கள் கிடைத்தார்கள். மேற்கத்தியக் கல்வி முறை இந்தியாவில் வேகமாக வளர்ச்சியடைந்தது.

3) மூன்றாவதாக, இச்சட்டத்தின்படி இந்தியாவிற்கு வந்த கிறிஸ்துவ சமயப்பரப்பாளர்ள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முழு மூச்சுடன் ஈடுபட்டனர். இதற்காக பல தேவாலயங்கள் கட்டப்பட்டன. மருத்துவமனைகள், மிஷினரி பள்ளிக்கூடங்களை நிறுவினர். இதனால் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். இது இந்திய வரலாற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இவ்வாறு பலவகைகளில் 1813-ம் வருடப் பட்டயச் சட்டம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

## 1833-ம் வருட பட்டயச் சட்டம் (Charter Act of 1833)

1813-ம் வருட பட்டயச் சட்டப்படி கம்பெனிக்கு மேலும் இருபது வருட காலத்திற்கு வழங்கப்பட்ட சாசனம் முடிவடையும் நேரத்தில் கம்பெனி நிர்வாகக் குழுவினர் சாசனத்தைப் புதுப்பிக்கும்படியாக பாராளுமன்றத்திடம் விண்ணப்பித்தனர். பாராளுமன்றம் உடனே இந்திய நிர்வாகம் பற்றி ஆராய ஒரு ‘பொறுக்கு குழு’ (Select Committee)வை அமைத்தது. அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் 1833-ம் வருட பட்டயச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இங்கிலாந்தில் 1830 முதல் 1834ம் வருடம் வரை பிரதமராக இருந்த ‘கிரே கோமகன்’ (Early Grey) காலத்தில் இயற்றப்பட்டது. அப்போது அந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் வில்லியம் பெண்டிங் பிரபு ஆவார். இந்த சட்டத்தில் விக்கட்சியினரின் தாராள கொள்கைகளின் பிரதிபலிப்பையும், சிறந்த கற்றறிவாளரான மெக்காலே பிரபு, பொருளாதார மேதை ஜேம்ஸ் மில் ஆகியோரின் கருத்துக்களையும் நாம் காணமுடிகிறது.

**1833-ம் வருட பட்டய சட்டத்தின் ஷரத்துக்கள்:-**

**1) கம்பெனியின் வியாபார நடவடிக்கைகளின் முடிவு:-**

இச்சட்டப்படி கம்பெனியின் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுக்கு வந்தன. இனிமேல் கம்பெனி இங்கிலாந்து அரசரின் சார்பாக நிர்வாகத்தை மட்டுமே நடத்தி வர வேண்டும். கம்பெனியின் வியாபார

நடவடிக்கைகளை நிறுத்துவிட்டதற்கு இழப்பீடாக 90 மில்லியன் பவுண்ட்கள் இந்திய வருமானத்திலிருந்து கொடுக்கப்பட முடிவு செய்யப்பட்டது. மேலும் இச்சட்டம் சீனாவுடன் கம்பெனிக்கு இருந்த முற்றுரிமையையும் நீக்கிவிட்டது. எனவே கம்பெனி தனது வாணிப உரிமைகளையெல்லாம் இழந்துவிட்டது.

**2) கவர்னர் ஜெனரலின் அதிகார விரிவாக்கம்:-**

1833-ம் வருட பட்டயச் சட்டம் மாகாண அரசாங்கங்களின் மீது மைய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தியது. ‘வில்லியம் கோட்டையின் கவர்னர் ஜெனரல்’ என்பது இனிமேல் ‘இந்தியாவின் கவர்னர் ஜெனரல்’ என்று அழைக்கப்பட வேண்டும். இவரே வங்காளத்தின் கவர்னராகவும் இருப்பார். கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனை சபையும் தங்கள் ஆட்சியின் கீழ் இருக்கும் மாகாணங்கள் மீது மேற்பார்வையிடுதல், கட்டளையிடுதல், கட்டுப்பாடு செய்தல் போன்ற அதிகாரங்களைப் பெற்றார்கள்.

இச்சட்டம் இந்தியாவில் ஒரு மைய ஆட்சிமுறை அமைய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாகாண கவர்னர்கள் கவர்னர் ஜெனரலின் கட்டளைக்குக் கீழ்படிய வேண்டும். கவர்னர் ஜெனரலின் அனுமதியின் பேரிலேயே வருமானத்தைப் பெருக்கவும், செலவு செய்யவும் வேண்டும். இந்தியா முழுமைக்குமான ‘ஒரே வரவு செலவு திட்டம்’ கவர்னர் ஜெனரலினால் தயாரிக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறியது.

**3) மைய அரசின் சட்டம் இயற்றும் அதிகாரம்:-**

1833-ம் வருடப் பட்டயச் சட்டத்தின் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்பு ஒரே மாதிரியான சட்டம் இயற்றும் முறை இல்லை. நடைமுறையில் பட்டய சட்டங்கள், பாராளுமன்றச் சட்டங்கள், கவர்னர் ஜெனரலின் ஆணைகள், நீதிமன்ற தீர்ப்புகள் போன்ற பலவகையான சட்டங்கள் காணப்பட்டன. எனவே 1833-ம் வருடச சட்டமானது இந்தியர்கள் அல்லது ஆங்கிலேயர்கள் ஆகிய எல்லோருக்கும் அரசரின் பட்டயப் படியோ அல்லது வேறுவகையிலோ உருவாக்கப்பட்ட எல்லாவித நீதிமன்றங்களுக்கும் உரிய சட்டங்களையும், ஒழுங்கு முறை விதிகளையும், கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனை சபையும் இயற்றும். அதிகாரம் கொடுக்கப்பட்டது.

**4) கவர்னர் மற்றும் கவர்னர் ஜெனரலின் ரத்து ஆணை அதிகாரம்:-**

இச்சட்டம் கவர்னர், மற்றும் கவர்னர் ஜெனரலின் ரத்து ஆணை அதிகாரம் பற்றிய தெளிவான விளக்கத்தைக் கூறியது. தங்கள் ஆலோசனை சபை நிறைவேற்றிய முடிவுகளை நிறுத்தி வைக்க ரத்து ஆணையை (Veto power) உபயோகிக்கும் போது அதற்கான காரணத்தை தெளிவுபடக்கூற வேண்டும். மேலும் இந்த ‘ரத்து ஆணை அதிகாரத்தை’ அடிக்க உபயோகிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

**5) ஆலோசனை சபையில் சட்ட உறுப்பினர் சேர்க்கப்படுதல்:-**

கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபை சட்டம் இயற்றும் செயல்களைத் திறமையாகச் செய்யும் பொருட்டு சட்ட வல்லுநர் ஒருவர் நான்காவது உறுப்பினராக ஆலோசனை சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்தச் சட்ட உறுப்பினர் கம்பெனியின் பணியாளராக இருக்கக்கூடாது. ஆலோசனை சபை சட்டம் சம்பந்தப்பட்ட செயலில் ஈடுபடும் போது மட்டுமே இந்த சட்ட உறுப்பினர்

அதன் விவாதங்களில் பங்கு கொண்டு தம் வாக்கை அளிக்கும் உரிமை பெற்றிருந்தார். மெக்காலே பிரபு முதல் சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**6) இந்தியர்களுக்கு எதிரான வேற்றுமை ஒழிக்கப்பட்டது:-**

இச்சட்டம் இந்தியர்களுக்கு எதிரான வேற்றுமையை ஒழித்தது. 'எந்த இந்தியனும் சமயம், சாதி, நிற வேறுபாட்டால் வேலை பெறும் வாய்ப்பை இழக்கக்கூடாது' என்று இச்சட்டம் கூறியது. திறமை மட்டுமே அரசாங்க வேலையில் சேரத் தகுதியாகும் என்று கூறப்பட்டது. இதனால் இந்தியர் கம்பெனியின் குடிமக்கள் என்ற உரிமை முதன்முதலாக ஏட்டளவிலாவது ஒப்புக் கொள்ளப்பட்டது எனலாம்.

**7) ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வர இருந்த தடை நீக்கம்:-**

இச்சட்டப்படி ஆங்கில பிரஜைகள் தங்கள் வியாபாரம், மத சம்பந்தப்பட்ட வேலை மற்றும் சட்டப்படியான பிற காரியங்களுக்கு இந்தியாவிற்கு வருவதற்கு இருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. ஆங்கிலேயர்கள் இனி இந்தியாவிற்கு வந்து நிலம் வாங்கி எந்த இடத்திலும் குடியேறலாம். ஆனால் ஆங்கிலேயர்கள் மூலம் இந்தியர்களுக்கு அவமரியாதை ஏற்படாதவாறு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**8) இந்தியர்கள் நலன்கள் காக்கப்படுதல்:-**

இச்சட்டமானது இந்திய மக்களின் நலன்களைப் பேணுவதற்கான சட்டங்களை இயற்ற கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கியது. இதன் அடிப்படையில் தான் இந்தியாவில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. பல சமுதாய சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

**9) கம்பெனிக்கு இழப்பீடு:-**

கம்பெனியின் வியாபார உரிமைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதால் கம்பெனி கொடுக்க வேண்டிய கடன் முழுவதும் இந்திய வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்று இச்சட்டம் கூறியது. கம்பெனி பங்குதாரர்களுக்கு வருடத்திற்கு 10.30 சதவீதம் லாபப் பங்கீட்டை ஐம்பது ஆண்டுகளுக்கு கொடுக்க உறுதியளிக்கப்பட்டது.

## 1853-ம் வருட பட்டய சட்டம் (Charter Act of 1853)

1853-ம் வருட பட்டய சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றிய பட்டய சட்டங்களில் இறுதியானது ஆகும். 1833-ம் வருட சட்டப்படி கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட இருபது வருட கால சாசனம் 1853-ல் முடிவடையவே, சாசனத்தை மேலும் இருபது ஆண்டுகளுக்கு புதுப்பிக்குமாறு பாராளுமன்றத்திடம் கம்பெனி நிர்வாகத்தினர் விண்ணப்பித்தனர். அப்போது பம்பாய், சென்னை, வங்காள மக்கள் இங்கிலாந்து அரசாங்கத்திடம் பல விண்ணப்பங்களை அளித்தனர். அதில் தற்போது நடைமுறையிலுள்ள இரட்டை நிர்வாக முறையை ஒழிக்க வேண்டும் என்றும், அரசாங்க உயர் பதவிகளில் இந்தியர்களையும், நியமிக்க வேண்டும் என்றும், பிரதிநிதித்துவ ஆட்சிமுறை அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இவை பற்றி ஆராய பாராளுமன்றம் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் 1853-ம் வருட பட்டய சட்டம் இயற்றப்பட்டது.

இந்த பட்டய சட்டம் அரசியலமைப்பில் மேலும் பல மாறுதல்களை ஏற்படுத்தியது.

**1853-ம் வருடச் சட்டத்தின் ஷரத்துக்கள்:-**

**1) கம்பெனியின் சாசம் புதுப்பிக்கப்படவில்லை:-**

இச்சட்டத்தின்படி கம்பெனியின் சாசனம் மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படவில்லை. ஆனால் 'பாராளுமன்றம் விரும்பும் வரை இங்கிலாந்து அரசரின் சார்பாக இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளை கம்பெனி ஆட்சி செய்து கொள்ளலாம்' என்று கூறப்பட்டது. இதனால் எப்பொழுது வேண்டுமானாலும் கம்பெனியிடமிருந்து ஆட்சி செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள பாராளுமன்றம் உரிமை பெற்றது.

**2) இயக்குநர் குழுவின் அதிகாரம் குறைக்கப்பட்டது:-**

இச்சட்டப்படி கம்பெனி இயக்குநர்களின் அதிகாரம் மேலும் குறைக்கப்பட்டது. இயக்குநர்களின் எண்ணிக்கை இருபத்தி நான்கிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது. இந்த பதினெட்டு பேரில் ஆறு பேர் மன்னரால் நியமிக்கப்படுவர். இதன்படி தேர்தல் இல்லாமல் இயக்குநர் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படும் முறை புகுத்தப்பட்டது. இயக்குநர் குழு கூட்டம் கூட்டுவதற்குத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை பத்தாக ஆக்கப்பட்டது.

**3) ஆட்சிப் பணிக்கு தேர்வு போட்டி மூலம் நியமனம்:-**

நிர்வாகக் குழுவிடம் எஞ்சியிருந்த நியமனம் செய்யும் அதிகாரங்களும் இச்சட்டப்படி முடிவுக்கு வந்தன. அதாவது இச்சட்டப்படி, இனிமேல் கம்பெனி ஆட்சிப் பணித்துறைக்கு தேர்வுப் போட்டி நடத்தி அதன் மூலம் திறமை பெற்றவர்களையே நியமிக்க வேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்தியது.

**4) கவர்னா ஜெனரலின் சட்டமியற்றும் சபையின் விரிவாக்கம்:-**

1853-ம் வருடச் சட்டத்தின்படி சட்டமியற்றும் சபையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவிலிருந்த சட்ட உறுப்பினர் நிரந்தரமாக்கப்பட்டார். இப்போது ஆலோசனை சபை உறுப்பினர் எண்ணிக்கை மீண்டும் நான்கானது சட்ட உறுப்பினர் மற்ற உறுப்பினர்களைப் போலவே எல்லா விவாதங்களில் பங்கு பெறவும் ஓட்டளிக்கவும் உரிமை பெற்றார்.

இந்திய நிர்வாகச் சட்டங்களை இயற்றுவதற்காக கவர்னர் ஜெனரலின் சபை மேலும் விரிவாக்கப்பட்டது. ஆறு புதிய அங்கத்தினர்கள் புதிதாக ஆலோசனை சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் வங்காளத்தின் தலைமை நீதிபதி, தலைமை நீதிமன்றத்தின் மற்றுமொரு நீதிபதி, வங்காளம், பம்பாய், சென்னை, வடமேற்கு மாநிலம் ஆகியவைகளிலிருந்து ஒவ்வொரு உறுப்பினர் ஆகிய மொத்தம் ஆறுபேர் ஆவர்.

**5) சட்டமியற்றும் சபையின் நடைமுறை:-**

கவர்னர் ஜெனரலின் புதிதாக சேர்க்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. சபையில் அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு மசோதாவும்

முதலில் ஒரு குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் பிறகு சபையில் விவாதம் நடைபெற்று நிறைவேற்றப்பட வேண்டும்.

சபையில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவும் கவர்னர் ஜெனரலின் கையெழுத்து பெற்ற பின்னரே சட்டமாகும். இயற்றப்பட்ட மசோதாக்களை தள்ளுபடி செய்யும் 'மறுப்பாணை அதிகாரம்' (Veto Power) கவர்னர் ஜெனரலுக்குக் கொடுக்கப்பட்டது. தற்போது சட்டசபையில் உள்ள மொத்தம் 12 உறுப்பினர்களில் (கவர்னர் ஜெனரல், படைத்தளபதி, ஆலோசனை சபை உறுப்பினர் 4 பேர், புதிதாக சேர்க்கப்பட்ட 6 பேர்)? பேர் வந்திருந்தால் தான் சபை நடவடிக்கையை ஆரம்பிக்க முடியும். இந்த உறுப்பினர்களின் வருடச் சம்பளம் 600 பவுண்ட் என்று நிர்ணயிக்கப்பட்டது.

### 6) இந்தியச் சட்டங்களின் தொகுப்பு:-

இந்தியச் சட்டங்களைத் தொகுப்பதற்கு லண்டனில் ஒரு சட்டக்குழு ஏற்படுத்தவும் இச்சட்டம் வழிவகுத்தது. ஏற்கனவே மெக்காலே பிரபுவின் தலைமையில் இந்திய சட்டங்களைத் தொகுக்கும் பணி 1833-லிருந்தே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாக தண்டனை விதி தொகுப்பு, குற்றவியல் நடைமுறைத் தொகுப்பு ஆகியவை தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

### 7) புதிய மாநிலங்களை உருவாக்கும் அதிகாரம்:-

1853-ம் வருட சட்டப்படி புதிய மாநிலங்களை உருவாக்கவும் ஏற்கனவே உள்ள மாநிலங்களின் எல்லைகளில் மாற்றம் செய்யவும் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இந்த மாற்றங்கள் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதன்படிதான், அஸ்ஸாம், மத்திய மாகாணம், ஆக்ரா, பர்மா, டெல்லி போன்ற புதிய பல மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

### 8) வங்காளத்திற்கு தனியாக கவர்னர் நியமனம்:-

இதுவரை இந்தியாவின் கவர்னர் ஜெனரலே வங்காளத்தின் கவர்னருமாக செயல்பட்டு வந்தார். இதனால் நிர்வாகப் பழுவும் பல குழப்பங்களும் ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்ய இச்சட்டப்படி வங்காளத்திற்கு தனியாக ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டார். மேலும் பஞ்சாப் மாநிலத்திற்கும் தனியாக ஒரு துணை கவர்னர் நியமிக்கப்பட்டார்.

### 1853-ம் வருட பட்டய சட்டத்தின் முக்கியத்துவம்:-

1853ம் வருட பட்டய சட்டமானது இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் சிறப்பிடம் பெறுகிறது. கவர்னர் ஜெனரலின் ஆலோசனை சபை சட்டமியத்துவதற்காக விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்தியாவில் ஒரு மைய சட்டசபை தொடங்கப்படுவதற்கு ஆரம்பம் என்று கூறலாம். அது ஒரு மினி பாராளுமன்றமாகவே செயல்பட ஆரம்பித்தது.

அடுத்து, கம்பெனியின் ஆட்சி உரிமை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படவில்லை. அதாவது ஒழுங்குமுறைச் சட்டத்திலிருந்து கம்பெனியின் ஆதிக்கம் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு கடைசியில் பாராளுமன்றமே இந்திய ஆட்சியை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை உருவாகிவிட்டது. ஆம் கம்பெனியின் முடிவு நெருங்கிவிட்டது.

1) 1793-ம் வருட பட்டயச் சட்டத்தின் ஷரத்துக்கள் யாவை?

## 1857 சிப்பாய் கலகம்

1808லிருந்து 1856 வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகப் பல உள்நாட்டுக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி அக்கிளர்ச்சிகளையெல்லாம் தனது இராணுவ வலிமையால் அடக்கி ஒடுக்கிவிட்டது. எனினும் ஆங்கியேரின் அடக்கு முறையும் ஆக்கிரமிப்புக் கொள்கையும் இந்திய ஆட்சியாளரிடையேயும் பிராந்தியத் தலைவர்களிடையேயும், மக்களிடையேயும் மனக்கசப்பை ஏற்படுத்தின. குறிப்பாக டல்ஹௌசி பிரபுவின் இணைப் பாதிக்கக் கொள்கையும், அது செயல்படுத்தப்பட்ட முறையும் மன்னர்களிடையே மனக்கலக்கத்தை உண்டாக்கியது. அதன் கூட்டுவிளைவு 1857 பெருங்கிளர்ச்சியாகும்.

**கிளர்ச்சிக்கான காரணங்கள்:-**

**அரசியல் காரணங்கள்:-**

**டல்ஹௌசியின் பங்கு:-**

1857 பெருங்கிளர்ச்சி கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு (1856-1862) காலத்தில் நிகழ்ந்தது. ஆனால் அவருக்கு முன்பு அப்பதவியிலிருந்த டல்ஹௌசி பிரபு (1848-1856) அக்கிளர்ச்சிக்கு அடித்தளமிட்டார். அவர் தீவிரமாகப் பின்பற்றிய நில இணைப்புக் கொள்கை (Policy of Annexation)யும் அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse)களால் பாதிக்கப்பட்ட இந்திய அரசர்களிடையே பாதுகாப்பின்மையையும், பயத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தின. உதாரணமாக, நாநாசாகிப், இலட்சுமிபாய், தாந்தியாதாபே, பகதுர்ஷா ஆகியோர் டல்ஹௌசியின் கொள்கைகளால் பாதிக்கப்பட்டு வெறுப்பின் எல்லைக்கே துரத்தப்பட்டவர்கள். விவசாயிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட நிலக்கொள்கை பரம்பரை பலமிக்கவர்களான தாலுக்தார்களை விரோதிகளாக்கியது. அவர் கொண்டு வந்த பல முற்போக்கு சீர்திருத்தங்கள் பிற்போக்கு மனப்போக்குடைய மக்களிடையே சந்தேகத்தையும், சஞ்சலத்தையும் ஏற்படுத்தின. எனவே, டல்ஹௌசி பிரபுவின் நில இணைப்பு, இவகாசியிலி, சீர்திருத்த நிர்வாக இராணுவ நடவடிக்கைகள் 1857 பெருங்கிளர்ச்சிக்குக் கணிசமான அளவுக்குக் காரணமாயிருந்தன என்பதில் சந்தேகமில்லை.

**பகதூர் ஷா பட்ட அவமதிப்பு:-**

இரண்டாவது அக்பரின் வாரிசாக வந்த இரண்டாம் பகதூர்ஷா (1837-1857) பெயரளவுக்கு முகலாயப் பேரரசராக இருந்தாலும் பொதுமக்களால் குறிப்பாக முஸ்லீம்களால், பெரிதும் மதிக்கப்பட்டார். அவருக்கு வயதாகிவிட்டது என்று காரணங்காட்டி அவரது வாரிசாக பக்ருதீன் நியமிக்கப்பட்ட போது பகதூர்ஷாவும், பொதுமக்களும் அதிர்ச்சியடைந்தனர். அதுமட்டுமல்ல, அவர் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் அவமானத்துக்கும் தன்மானக் குறைவான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டன.

**பொருளாதாரக் காரணங்கள்:-**

**வேலையின்மை:-**

இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனியின் பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் மக்களிடையே வேலையின்மையை என்றுமில்லா அளவுக்கு அதிகரித்துவிட்டது. நிலச்சுவான்தார்களின் நிலப்பட்டாக்கள் பரிசீலிக்கப்பட்ட போது பலர் பட்டா உரிமை எதுவுமின்றி நிலச் சொந்தக்காரர்களாக இருப்பது தெரிய வந்தது. அத்தகையோரது நிலங்கள் பறிக்கப்பட்டபோது அவர்கள் நிலமற்ற ஏழகளாயினர். நூற்றுக்கணக்கான தாலுக்தார்கள் தரித்திர நாராயணர்கள் ஆனார்கள்! குத்தகையற்ற நிலங்களை அனுபவித்து வந்தோர் பலர். அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டபோது அவர்களும் வேலையற்றோர் கூட்டத்தில் தள்ளப்பட்டனர். நாடுகள் இணைக்கப்பட்டவுடன் அரசர்களது படைகள் கலைக்கப்பட்டன. அதன் காரணமாகப் படைவீரர்கள் வேலை இழந்தனர். மேல்நிலை நிர்வாகப் பதவிகளில் இருந்தோரும் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். வேலையற்றோர் அனைவரும் கிளர்ச்சியில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்.

**சமுதாயக் காரணங்கள்:-**

**சமூகச் சட்டங்கள்:-**

ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த சமூகச் சீர்திருத்தச் சட்டங்களை இந்தியப் பழமைவாதிகள் எதிர்த்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடை செய்த போது (1829) மக்கள் அரசாங்கத்தை சந்தேகித்தனர். அதேபோன்று சாதி ஏலாநிலை நீக்கச் சட்டம் (1850) இயற்றப்பட்டபோது தாழ்த்தப்பட்டோருக்கு சொத்துரிமை வழங்கிய அச்சட்டத்தை இந்துக்கள் சட்டத்துக்குப் புறும்பானதென்று எதிர்த்தனர். விதவை மறுமணச் சட்டமும் (1856) கடும் கண்டனத்துக்குள்ளாயிற்று. அச்சட்டம் மனு, யாக்ஞு வல்க்கியர் ஆகியோர் வகுத்த சட்டத்துக்கு விரோதமானதென்று கருத்தப்பட்டது. ஒருமுறைதான் பிறக்கிறோம், ஒருமுறைதான் மணம் செய்து கொள்கிறோம். ஒரு முறைதான் இறக்கிறோம் எனக்கூறி விதவைகளே அச்சட்டத்தை எதிர்த்தனர்! சமூகச் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஆங்கிலேயர் குறுக்கிடுவதைக் குறிப்பாக இந்துக்கள் விரும்பவில்லை.

**இராணுவக்காரணங்கள்:-**

இந்தியச் சிப்பாய்கள் தங்களது குறைந்த ஊதியம், பதவி உயர்விற்கான வாய்ப்பின்மை, பிற குறையுடைய பணிநிலைகள் பற்றி பெரிதும் அதிருப்தியுற்றிருந்தனர். சிறப்புச் சலுகைகள் எதுவுமின்றித் தொலைதூரங்களில் பணியாற்றுவதை அவர்கள் விரும்பவில்லை. கடல்தாண்டி அனுப்பப்படுவதை மேல்சாதி சிப்பாய்கள் வெறுத்தனர். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இலவச தபால் சலுகையை நிறுத்தியது (1854). வெளிநாடுகளில் திறமைக் குறைவாகச் செயல்படும் சிப்பாய்களுக்கு ஓய்வூதியமில்லை என்று சட்டம் கொண்டு வந்தது (1856) போன்ற நடவடிக்கைகள் சிப்பாய்களிடையே வெறுப்பை வளர்த்தன.

**உடனடிக் காரணம்:-**

1856ல் இந்திய இராணுவத்தில் புதிய என்பீல்டு துப்பாக்கிகள் (Enfield Rifles) அறிமுகப்படுத்தப்பட்டன. டம்டம், அம்பாலா, சியால்கோட் ஆகிய இடங்களில் அத்துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி ஏற்பாடு

செய்யப்பட்டதுரு. 1857ல் என்பீல்டு துப்பாக்கியில் செலுத்தப்படும் தோட்டாக்கள் பசு, பன்றி கொழுப்புக் கலவையால் பூசப்பட்டுள்ளன என்ற வாந்தி வங்காள இராணுவ சிப்பாய்களிடையே வேகமாகப் பரவிற்கு. துப்பாக்கிக்குள் தோட்டா செலுத்தப்படுமுன் அதன் நுனிபாகத்தை வாயினால் கடிக்க வேண்டியிருந்ததால் இந்து சிப்பாய்களும் முஸ்லீம் சிப்பாய்களும் அருவருப்போடு வெறுத்தனர். பல்வேறு காரணங்களால் நாடு முன்னமேயே முற்றும் எரிமலையாக கொந்தளிக்கும் கடலாக இருந்தது. வெடி மருந்துக் கிடங்காயிருந்த சூழ்நிலையில் கொழுப்பு தடவப்பட்ட தோட்டா பற்றவைத்தத் தீக்குச்சியாய் அதில் விழுந்தது! கிடங்கு வெடித்தது. கிளர்ச்சி துவங்கியது. எனவே 1857 பெருங்கிளர்ச்சி தன்னிச்சையால் எழுந்த தற்செயல் நிகழ்ச்சி அல்ல. மாறாக, அது ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக எழுந்த எதிர்ப்புணர்ச்சித் தேக்கத்தின் வடிகாலாகும். கொழுப்பு தடவப்பட்ட தோட்டா விவகாரம் அவ்வடிகாலைத் திறந்துவிட்டது அவ்வளவே.

**கிளர்ச்சியின் போக்கு:-**

1857 ஜனவரி மாதம் கல்கத்தாவுக்கு அருகேயுள்ள டம்டம்மில் கொழுப்பு தடவிய தோட்டாக்கள் பற்றிய வாந்தி துவங்கியது. விரைவில் அது காட்டுத்தீ போல வங்காள சிப்பாய்களிடையே பரவியது. பெர்ஹாம்பூர் சிப்பாய்கள் முதலில் புதிய தோட்டாக்களை வாங்கிக் கொள்ள மறுத்தனர் (பிப்ரவரி 26). இராணுவ அதிகாரி மிட்செலால் (Mictchell) கண்டிக்கப்பட்ட அவர்கள் அன்று நள்ளிரவில் கூச்சலிட்டுத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர். பின்னர் மங்கள் பாண்டே (Mangal Pandey) என்ற பிராமண சிப்பாய் சார்ஜண்ட் மேஜரை நோக்கிச் சுட்டார்.லெப்டினன்ட் பௌ படுகாயமுற்றார் (மார்ச் 29). பாண்டே மரண தண்டனை பெற்றார்.

டெல்லியிலிருந்த காலாட்படையினரும் மீரட் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர்! கர்னல் ரிப்ளையும் பிற ஆங்கிலேய அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயரது பங்களாக்கள் தீக்கிரையாயின. செங்கோட்டை (Red Fort) கைப்பற்றப்பட்டது. பஹதூர்ஷா பேராசரெனப் பிகடனப்படுத்தப்பட்டார். உயிரினும் மேலான நாட்டையும் மதத்தையும் அந்நிய ஆபத்தினின்றும் காப்பாற்றும்படிப் பேரரசர் பஹதூர்ஷாவும் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். 1857 மே 16 அன்று பேரரசர் பஹதூர்ஷாவின் தலைமையில் முறைப்படி டில்லி விடுவிக்கப்பட்டது.

டில்லியின் வீழ்ச்சிக்குப் பிறகு கிளர்ச்சி சூறைக் காற்றென சுழன்றடித்தது. பிரோஸ்பூர், முஸபர்பூர், அலிகார், பஞ்சாப் ஆகிய இடங்களில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர். அயோத்தியிலும் வடமேற்கு மாநிலத்திலும் பல கிளர்ச்சிக்கார சிப்பாய்கள் இருந்தனர். சிப்பாய்க் கிளர்ச்சியோடு பொது மக்களும் கிளர்ந்தெழுதனர். விரைவிலேயே லக்னோ, பரேலி, கான்பூர், ஆக்ர, ஜான்ஸி, மத்திய இந்தியா, பந்தேல் கண்டு போன்ற பகுதிகளுக்குக் கிளர்ச்சி வேகமாகப் பரவியது. அங்கெல்லாம் ஆங்கிலேயர்க்ள கொல்லப்பட்டனர். அவர்களது உடைமைகள் அழிக்கப்பட்டன.

**கிளர்ச்சி ஒடுக்கப்படல்:-**

மத்திய இந்தியாவில் கிளர்ச்சியை அடக்கும் பொறுப்பு சர் ஹக்ரோஸ்ஸிடம் விடப்பட்டது. ராணி இலட்சுமிபாய், தாந்தியா தோபே, குன்வார்சிங் ஆகிய மூவரது கூட்டு எதிர்ப்பை ரோஸ் சந்திக்க நேர்ந்தது. ரோஸ் ஜான்ஸ் நகரைக் கைப்பற்றிய போது (1858 ஏப்ரல் 3) ராணி இலட்சுமி பாய்

கோட்டையை விட்டு வெளியேறி கல்பி தாந்தியா தோபேயுடன் சேர்ந்து கொண்டார். கிளர்ச்சிக்காரர்களின் துணையுடன் அவர்கள் துணிகரமாகக் குவாலியரைக் கைப்பற்றி நானாசாகிப்பை பேஷ்வாவாகப் பிரகடனப்படுத்தினர்! நானாவும் அவரது ஆதரவாளர்களும் பதவிப் பிரமாணக் கொண்டாட்டங்களில் தங்களது நேரத்தையும் பணத்தையும் பொருளையும் வீணடித்துக் கொண்டன. ராணி இலட்சுமிபாய் மட்டும் ஆணுடை அணிந்து கிளர்ச்சிக்காரர்களுடன் தீரத்துடன் போரிட்டார். ஆனால், அவரது குதிரை கால் இடறியபோது கீழே விழுந்தார். விழுந்தவர் எழவே இல்லை. அவரை யாரென்று அடையாளம் தெரியாத ஒருவன் வெட்டிக் கொன்றுவிட்டான்! கிளர்ச்சிக்காரர்களிலேயே இலட்சுமிபாய் தான் சிறந்த துணிச்சல் மிக்க இராணுவத் தலைவர் என்று ஆங்கிலேயத் தளபதி ரோஜே புகழாரம் சூட்டினார். சம்பல் பள்ளத்தாக்குக்குத் தப்பிச் சென்ற தாந்தியா தோபே மான்சிங் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, பிடிபட்டு தூக்கிலிடப்பட்டார். நானாசாகிப் தனது குடும்பத்தினரோடு நேபாளத்துக்குச் சென்றுவிட்டார். கிளர்ச்சி அடக்கப்பட்டது.

**தோல்விக்கான காரணங்கள்:-**

நன்கு துவக்கப்பட்ட கிளாச்சி மோசமாகத் தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. கிளர்ச்சிக்காரர்களுக்கிடையே பொதுவான குறிக்கோள் எதுவுமில்லை. சிப்பாய்களோ, தலைவர்களோ, மக்களோ நாட்டுப்பற்றால் உந்தப்படவில்லை. அவர்களுடைய நோக்கங்கள் பலவாகவும் முரண்பட்டவையாகவும் இருந்தன. கிளர்ச்சிக்காரர்களுக்குத் தக்க திறமையான தலைமை அமையவில்லை. நானாசாகிப் ஆங்கிலேயரைப் பழிவாங்கும் கொடுமைக்காரராகவும் பதவிப் பித்தராகவும் இருந்தார். இலட்சுமிபாய் சிறந்த வீராங்கனை. ஆனால் கிளர்ச்சியை வழிநடத்த அவரால் முடியவில்லை.

இந்திய அரசர்கள் பலர் ஆங்கிலேயரை விசுவாசத்துடன் ஆதரித்தனர். சிந்தியாவும் ஹோல்காரும் ஆங்கிலேயருக்குக் கேடயங்களாகப் பயன்பட்டனர்.

1857-ம் வருட சிப்பாய் கலகத்திற்குப் பிறகு கம்பெனியின் ஆட்சியை நீக்கிவிட்டு இந்தியாவை இங்கிலாந்து ஆட்சியின் கீழ் நேரடியாகக் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. இதற்காக 1858-ம் வருடம் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி ஒரு சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது 'இந்தியாவில் மிகச் சிறந்த அரசை உண்டாக்குவதற்கான சட்டம்' (Act for the better government of India) என வழங்கப்பட்டது. 'அரசியாலும் அரசியார் பெயரிலும், நாட்டின் முக்கிய காரியதரிசிகளுள் ஒருவர் மூலம் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபை உதவியுடன் இந்தியா ஆட்சி செய்யப்படும்" என்று அந்த சட்டம் கூறியது.

இங்கிலாந்தை ஆண்டு வந்த பேரரசி விக்டோரியாவின் பெயரால் அலகாபாத் நகரில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான தர்பாரில் வைசிராய் கானிங்பிரபு ஒரு பிரகடனத்தின் மூலம் 1858 நவம்பர் 1-ம் தேதி இந்தியாவிலுள்ள பத்து கோடி மக்களுக்கு அறிவித்தார். அதுவே மகாராணியாரின் பேரறிப்பு எனப்படுகிறது. 'இந்திய மக்களின் மகாசாசனம்' என்று அது புகழப்படுகிறது.

## மகாராணியாரின் பேரறிவிப்பின் முக்கிய அம்சங்கள்

மகாராணியாரின் பேரறிக்கை டெர்பி பிரபு என்பவரால் தயாரிக்கப்பட்டு விக்டோரியா மகாராணியால் அங்கீகாரம் செய்யப்பட்டது. இந்த பேரறிவிப்பு

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளையும் இந்தியா எதிர்காலத்தில் எவ்விதமாக ஆளப்படும் என்ற உறுதிமொழியையும் கொண்டிருந்தது. அதில் காணப்பட்ட முக்கியமான சாராம்சங்கள் பின்வருமாறு:-

1) இதுவரை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் ஆளப்பட்டு வந்த இந்தியா இனி பிரிட்டிஷ் பேரரசியால் நேரடியாக ஆட்சி செய்யப்படும்.

2) இந்திய சுதேச அரசர்களுடன் கம்பெனி செய்து கொண்ட உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் பிரிட்டிஷ் அரசு அப்படியே ஏற்றுக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளும்.

3) கானிங் பிரபு பிரிட்டிஷ் நேரடி ஆட்சியின் கீழ் முதல் இந்திய வைசிராயாகவும் கவர்னர் ஜெனரலாகவும் நியமனம் செய்யப்படுவார்.

4) இந்திய சுதேச அரசர்களின் உரிமைகள், மதிப்பு, அந்தஸ்து ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மதித்து நடக்கப்படும்.

5) இந்தியாவின் பழமையான உரிமைகள், வழக்கங்கள், வழக்காறுகள், நம்பிக்கைகள் ஆகியவைகளுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படும்.

6) கிறிஸ்தவ மதக் கொள்கைகளின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசு கிறித்வத மதக் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் இந்திய மக்கள் மீது திணிக்காது. எனவே மதத்தின் பெயரால் எந்த இந்தியருக்கும் சலுகை வழங்காது. யாருக்கும் இடையூறோ, அமைதியின்மையையோ ஏற்படுத்தாது. சட்டப்படி எல்லோருக்கும் பாரபட்சமற்ற பாதுகாப்பு கொடுக்கப்படும்.

7) இந்திய மக்களின் மத வழிபாட்டிலும், மத நம்பிக்கையிலும் பிரிட்டிஷ் அரசு தலையிடாது முழுமையான மத வழிபாட்டுரிமை வழங்கப்படும்.

8) இப்பொழுது இருக்கக்கூடிய பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் ஆசை பிரிட்டிஷ் அரசுக்கு கிடையாது. அதாவது காடு பிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை.

9) இந்திய மக்களின் நல்வாழ்வே பிரிட்டிஷ் அரசின் நோக்கமாகும். மக்களின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தப்படும். கடவுளின் ஆசீர்வாதத்துடன் உள்நாட்டு அமைதி ஏற்படுத்தப்படும். நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதே எங்கள் தணியாத ஆசை. பொது நன்மைக்கான, வளர்ச்சிப் பணிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

10) இனம், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் கல்வித் தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியர்களுக்கு அரசு பதவிகள் கொடுக்கப்படும். மேலும் கடமையாற்றுவதில் திறமை, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பதவியிலமர்த்தும் கொள்கை கடைப்பிடிக்கப்படும்.

11) ஆங்கில குடிமக்களின் கொலைகளில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் தவிர, 1857-58ம் வருட புரட்சியில் பங்கு கொண்ட எல்லா மக்களுக்கும் பொது மன்னிப்பு (General amnesty) அளிக்கப்படும்.

12) மகாராணியாரின் பேரறிவிப்பில் கடைசிக்கு முந்தின வரி மிகவும் புகழ் பெற்ற வரிகளாகும். அவர்களின் (இந்திய மக்கள்) வளம், அபிவிருத்தி முன்னேற்றத்திலேயே எங்கள் வலிமை, அவர்களின் மனத்திருப்தியே எங்கள்

பாதுகாப்பு, அவர்களது நன்றி உணர்வே எங்களுக்கு கிடைக்கும் சன்மானம் ஆகும்.

1) 1857ம் வருட சிப்பாய் கலகத்தின் காரணங்கள் யாவை?
2) சிப்பாய் கலகத்தின் போக்கை விவரி?
3) சிப்பாய் கலகத்தின் விளைவுகளை விவரி?

## 1861-ம் வருட இந்திய கவுன்சில் சட்டம்

## (Indian Councils Act of 1861)

1861-ம் வருடம் இயற்றப்பட்ட இந்திய கவுன்சில் சட்டம், சட்டமன்றங்களில் இந்தியர்கள் உறுப்பினர்களாகச் சேர்வதற்கு வசதி செய்து கொடுத்தது. மாநில சட்டமன்றங்கள் தாங்கள் இழந்த உரிமைகளை மீட்டுக் கொண்டன. இங்கிலாந்தின் பிரதமரான கிளாட்சனின் சுதந்திர மனப்பான்மையின் எதிரொலியை இச்சட்டத்தில் காண முடிகிறது. மேலும் இந்தச் சட்டமானது இனி வரவிருக்கிற சட்டங்களுக்கு ஆதாரமாகவும், முன்னோடியாகவும் விளங்கியது என்று கூறலாம்.

### 1861-ம் வருட கவுன்சில் சட்டம் இயற்றப்படுவதற்கான சூழ்நிலை

**1) சட்டமியற்றுவதிலும், நிர்வாகத்திலும் இந்தியர்களுக்கு பங்கு இல்லை:-**

கோடிக்கணக்கான இந்தியர்களுக்காகச் சட்டங்களை இயற்றும் பொறுப்பினை பெற்றிருந்த வைசிராயின் நிர்வாக சபையில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவு. அவர்கள் இந்தியத் தன்மைகள், பண்புகளைப் பற்றி அறிவும், அனுபவமும் பெற்றிருக்கவில்லை. இந்த சபையில் இந்தியர்கள் இடம் பெறாதது, ஒரு பெருங்குறையாகவே கருதப்பட்டது. இயற்றப்படும் சட்டங்களைப் பற்றி இந்தியர்களின் கருத்துக்களையும், விமர்சனங்களையும் ஆங்கிலேயர்களுக்கு தெரிவிக்கும் ஒரே வழி, கலகங்கள், புரட்சிகள், நாசவேலைகள் போன்ற பலாத்கார முறைகளேயாகும். அரசியல் ரீதியான முறையில் (Constitutional) எடுத்துக்கூற எவ்வித வழியும் இல்லை. எனவே சட்டமியற்றுவதில் இந்தியர்களுக்கும் பங்கு அளிக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டது.

**2) சட்டம் இயற்றுவதில் காணப்பட்ட குறைபாடுகள்:-**

சட்டம் இயற்றும் சபை திருப்திகரமாக செயல்படவில்லை. பாராளுமன்ற நடைமுறைகள் அப்படியே பின்பற்றப்பட்டதால் சட்டமியற்றுவதற்கு அதிக காலதாமதமானது. இதில் இந்தியர்கள் இல்லாததால் இந்தியர்களுக்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படவில்லை. மேலும் இந்த சபையின் உறுப்பினர்கள் அரசினால் நியமிக்கப்பட்டவர்கள். ஆதலால் அரசுக்கு கட்டுப்பட்டே செயல்பட்டனர். இந்திய மக்கள் மீது எந்த அனுதாபமும் காட்டவில்லை.

**3) மாநிலங்களுக்கான சட்டமியற்றுவதில் காணப்பட்ட இடையூறுகள்:-**

1833-ம் வருட பட்டயச் சட்டப்படி எல்லா மாநிலங்களுக்குமான சட்டங்களை இயற்ற மைய சட்டமன்றம் அதிகாரம் பெற்றிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பிரதிநதி இடம் பெற்றார். ஆனாலும் இந்த

சட்டமன்றத்தினால் மாநிலங்களுக்குத் தேவையான சட்டங்களை இயற்ற முடியவில்லை. எனவே மாநில அரசுகள் தங்களுக்கு அதிக சட்டமியற்றும் அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டன.

**4) சட்டமன்றத்தின் அதிகார எல்லை பற்றிய குழப்பம்:-**

மைய சட்டமன்றமானது தனது அதிகார எல்லையை வளர்த்துக் கொண்டு ஒரு சிறிய பாராளுமன்றம் போலவே செயல்பட ஆரம்பித்தது. சில நேரங்களில கவர்னர் ஜெனரலிடம் நிர்வாகம் பற்றிய தகவல்களையும், இந்தியா அமைச்சருடன் அவர் கொண்டிருந்த கடிதப் போக்குவரத்தையும் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டது. ஒரு சில நேரங்களில் இங்கிலாந்து அரசின் வேண்டுகோளுக்கே செவிசாய்க்கவில்லை. இப்படி அதிகார எல்லை நிர்ணயம் செய்யப்படாததால் சுதந்திரமாக இயங்க முற்பட்டது. எனவே அதன் அதிகார எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டிடிய அவசியம் ஏற்பட்டது.

மேற்கண்ட சூழ்நிலையில் அப்போது வைசிராயாக இருந்த கானிங் பிரபு இந்தியா அமைச்சராக இருந்த வுட்பிரபுவுக்கு (டுழசன றுழழன) தனது கருத்துக்களைத் தெரிவித்தார். இந்திய பிரதிநிதிகளை ஆட்சிக் குழுவில் சேர்த்துக் கொள்வதின் அவசியத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார். கானிங்பிரபுவின் கருத்துரைகளின் அடிப்படையில் காமன்ஸ் சபையில் சர்லஸ்வுட் 1861, ஜீன் 6ம் தேதி ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தினார். மசோதா நிறைவேற்றப்பட்டு 1861 ஆகஸ்ட் 1ல் அரசியின் சம்மதம் பெற்று 'இந்திய கவுன்சில் சட்டம்' என்ற அரசியின் சம்மதம் பெற்று 'இந்திய கவுன்சில் சட்டம்' என்ற பெயரில் நடைமுறைக்கு வந்தது.

**1861-ம் வருட கவுன்சில் சட்டத்தின் ஷரத்துக்கள்:-**

**1) வைசிராயின் நிர்வாகக் குழுவில் செய்யப்பட்ட மாற்றங்கள்:-**

வைசிராயின் நிர்வாகக் குழு விரிவாக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தப்பட்டது. அதன்படி புதிதாக நிதித்துறை வல்லுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இதில் சட்ட வல்லுநர், நிதித்துறை வல்லுநர் ஆகிய இரு உறுப்பினர்களும் அரசால் நியமிக்கப்படுவர். மீதி மூன்று பேரை இந்தியா அமைச்சர் நியமிப்பார். இவர்களது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

**2) வைசிராயின் அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டது:-**

நிர்வாகக் குழுவின் சட்டதிட்டங்களைவ குக்கும் உரிமை வைசிராய்க்கும் கொடுக்கப்பட்டது. அதிகாரிகளை நியமிக்கும் உரிமையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. சட்டமியற்றும் பணியைத் தவிர மற்ற பணிகளில் அவரது நிர்வாகக் குழுவின் உத்தரவு இன்றி எதையும் செய்யலாம் என்று அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும் தான் இல்லாத நேரங்களில் நிர்வாகக் குழுவிற்குத் தலைமை தாங்க ஒரு தற்காலிக் தலைவரை நியமிக்கும் அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டது.

**3) இலாக்கா ஒதுக்கீடு செய்யும் முறை அறிமுகம் (Portfolio System):-**

இந்த சட்டப்படி நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இலாக்காக்கள் ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வைிராய்க்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு தற்காலத்தில் நிலவும் அமைச்சர்களுக்கு

இலாகாக்கள் ஒதுக்கீடு செய்யப்படும் முறையானது முதன் முதலாக 1861-ம் வருட கவுன்சில் சட்டப்படிதான் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. இதன்படி அந்தந்த இலாக்கா சம்பந்தப்பட்ட சாதாரணப் பிரச்சனைகளை அந்தந்த உறுப்பினர்களே முடிவு செய்வர். இதனால் அந்த உறுப்பினர்களின் நிர்வாகத் திறமை அதிகரித்தது. காலதாமதமின்றி செயலாற்றவும் முடிந்தது.

**4) மைய சட்டமன்றத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்:-**

1861-ம் வருட கவுன்சில் சட்டம் மைய சட்டமன்றத்தில் பல மாற்றங்களைச் செய்தது. சட்டமன்றத்தில் புதிதாக ஆறு உறுப்பினர்களுக்குக் குறையாமலும் பன்னிரெண்டு உறுப்பினர்களுக்கு மேற்படாமலும் வைசிராய் நியமித்துக் கொள்ளலாமம். இதில் பாதிப்பேர் அலுவலர் அல்லாதவர்களாக (non-official) இருக்க வேண்டும். இதனால் சட்டமியற்றும் பணியில் இந்தியர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. (இந்தியர்கள் சிலர் உறுப்பினராக நியமிக்கப்படலாம் என்று சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை). இவர்களது பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

**5) மைய சட்டமன்றத்தின் அதிகாரங்கள்:-**

சட்டம் இயற்றுவது ஒன்றுதான். இந்த சட்டமன்றத்தின் பணி என்று தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. இங்கிலாந்து இந்தியா முழுமைக்கும் இச்சட்டமன்றம் சட்டங்கள் இயற்றலாம். எல்லா நிர்வாகத்துறைக்கும் சட்டம் இயற்றலாம். ஆனால் சட்டமன்றத்தின் அதிகாரங்களுக்கு கீழ்க்கண்ட மூன்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

a) பொதுக் கடன்கள், பொது வருமானம், இந்தயரின் சமயச் சடங்குகள்ட, படைக்கட்டுப்பாடு, இந்திய சுதேச அரசர்கள் சம்பந்தப்பட்ட கொள்கைகள் போன்ற சில குறிப்பிட்ட துறைக்ள சம்பந்தமாக சட்டமியற்ற வேண்டுமானால் வைசிராயின் அனுமதியை முன்னதாகவே பெற வேண்டும்.

b) இந்த சட்டமன்றம் இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு உட்பட்டே சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

c) சட்டமன்றம் இயற்றும மசோதாக்க்ள வைசிராயின் கையொப்பம் பெற்ற பின்பே சட்டமாக முடியும். நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை எந்த நிலையிலும் மறுப்பாணை செய்யும் அதிகாரம் வைசிராய்க்கு உண்டு. மேலும் இங்கிலாந்து அரசாங்கமும் அச்சட்டத்தை எந்த நிலையிலும் தடை செய்ய முடியும்.

**6) மாநில சட்டமன்றங்களுக்கு மீண்டும் சட்டமியற்றும் உரிமை:-**

1833-ம் வருட பட்டயச் சட்டத்தின் மூலம் மாநிலங்கள் தாங்கள் இழந்த சட்டமியற்றும் அதிகாரத்தை 1861-ம் வருட சட்டப்படி மீண்டும் பெற்றுக் கொண்டன. சென்னை, பம்பாய் மாநில கவர்னர்கள் தங்கள் நிர்வாகக் குழுவில் சட்டமியற்றுவதற்காக தலைமை வழக்கறிஞருடன் நான்கு உறுப்பினர்களுக்குக் குறையாமலும் எட்டு உறுப்பினர்களுக்கு மிகாமலும் நியமனம் செய்து கொள்ளலாம். நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர்களில் பாதிப்பேர் அதிகாரிகள் அல்லாதவர்களாக (non-official) இருக்க வேண்டும். இவர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டது.

**7) மாநில சட்டமன்றங்களின் அதிகாராங்கள்:-**

மாநில சட்டமன்றம் அந்த மாநிலத்தின் நல்ல நிர்வாகம் நடைபெறுவதற்கான சட்டங்களை இயற்றலாம். ஆனால் படை, நாணயம், சுங்கவரி, வெளிஉறவு, தபால் தந்தி ஆகியவை பற்றி சட்டமியற்ற முடியாது. மாநில சட்டமன்றம் இயற்றிய மசோதாக்கள் சட்டமாவதற்கு கவர்னரின் கையொப்பம் பெற வேண்டும். மேலும் வைசிராயின் ஒப்புதலும் அவிசயம் தேவை. இறுதியில் அரசரின் சம்மதத்துடன் இச்சட்டங்களை இந்தியா அமைச்சர் தள்ளுபடி செய்யவும் அதிகாரம் உண்டு. தற்காலிக 'அவசர சட்டங்கள்' (ordinances) பிறப்பிக்க கவர்னருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

**8) வைசிராயின் சில முக்கியமான அதிகாரங்கள்:-**

1861-ம் வருட கவுன்சில் சட்டப்படி மாநிலங்களின் எல்லைகளை மாற்றவும், திருத்தி அமைக்கவும், புதிய மாநிலங்களை உருவாக்கவும் வைசிராய்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

மேலும் சிறிய மாநிலங்களில் சட்டமன்றங்களை அமைக்கவும், துணைநிலை கவர்னர்களை நியமிக்கவும் வைசிராய் அதிகாரம் பெற்றார்.

**9) நீதித்துறையில் செய்யப்பட்ட மாற்றங்கள்:-**

1861-ம் வருட சட்டம் நீதித்துறையிலும் சில முக்கியமான மாற்றங்களைச் செய்தது. நீதிமன்றங்களையும், தலைமை நீதிமன்றத்தையும் நீக்கிவிட்டு சென்னை, பம்பாய், கல்கத்தா மாநிலங்களில் உயர்நீதிமன்றங்களை (Hign Courts) ஏற்படுத்தியது. மாவட்ட நீதிபதியின் ஆணைப்படி (District magistrate) மாவட்டங்களில் ஒழுங்கும் அமைதியும் நிலை நாட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இச்சட்டப்படி காவற்படை (Police) நன்கு மாற்றி அமைக்கப்பட்டது.

1) 1864-ம் வருட இந்திய கவுன்சில் சட்டத்தின் ஷரத்துக்கள் யாவை?

## 1892-ம் வருட இந்திய கவுன்சில் சட்டம்

## (Indian Councils Act of 1892)

1861-ம் வருட இந்திய கவுன்சில் சட்டத்தில் காணப்பட்ட குறைகளைத் தீர்க்கவும், மேலும் புதிய சலுகைகளை இந்தியர்களுக்கு அளிக்கவும் 1892-ம் வருட இந்திய கவுன்சில் சட்டம் இயற்றப்பட்டது.

### 1892-ம் வருட இந்திய கவுன்சில் சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலைகள்

**1) இந்திய மக்களிடம் காணப்பட்ட தேசிய உணர்ச்சி:-**

1861-ம் வருடத்திற்கும் 1892-ம் வருடத்திற்குமிடையே உள்ள முப்பது ஆண்டு காலத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் மக்களிடையே தேசிய உணர்வைத் தூண்டின. ராஜாராம் மோகன்ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர் போன்றோர் தலைமையில் சமூக, சமயச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு மக்களிடையே காணப்பட்ட மூடப்பழக்கங்கள் நீங்கின. மேனாட்டு கல்வி புகுத்தப்பட்டது. மேலை நாட்டுப்பண்பாடு செல்வாக்கு பெற்றது. தேசியம் வளர்ந்தது. தேசியத் தலைவர்களின் கருத்துக்கள் பரப்பப்பட்டன. இதனால்

மக்களிடையே தோன்றிய தேசிய உணர்ச்சியானது அரசியல் உணர்ச்சியாக மாறி அரசியல் உரிமைகளைக் கேட்பதில் முடிந்தது.

**2) ரிப்பன் பிரபுவின் கருத்துரைகள்:-**

இந்தியாவில் வைசிராயாக இருந்த லிட்டன்பிரபு அடக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றி இந்திய மக்களுக்கு விரோதமான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஆனால் அவருக்குப் பிறகு வந்த ரிப்பன்பிரபு தாராளக் கொள்கையைப் பின்பற்றினார். இந்தியர்களுக்கு அரசியல் பயிற்சி கொடுக்கவும் சட்டமன்றங்களை சீரமைக்கப்பட வேண்டும் என்றும் அப்போது இந்தியா அமைச்சராக இருந்த ஹாரிங்டன் பிரபுவுக்கு எடுத்துரைத்தார். பத்து இந்தியப் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்களில் மூன்று பேர் சென்னை, பம்பாய், கல்கத்தா நகர சபைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் ரிப்பன் பிரபுவின் கருத்துரைகளை ஹாரிங்டன் பிரபு ஏற்றுக் கொள்ளவில்லை.

**3) இந்திய தேசியக் காங்கிரசின் கோரிக்கைகள்:-**

1885-ல் தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் பல கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைத்தது. சென்னை, பம்பாய், வங்காளம் ஆகிய மாநிலங்களைப் போலவே மற்ற மாநிலங்களிலும் சட்டமன்றங்களை நிறுவ வேண்டும். சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். சட்டமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் அளிக்க வேண்டும் போன்ற பல கோரிக்கைகளில் சிலவற்றையாவது நிறைவேற்றும் வகையில் 1892-ம் வருட கவுன்சில் சட்டம் இயற்றப்பட்டது.

**4) டப்ரின் பிரபுவின் நடவடிக்கைகள்:-**

ரிப்பன் பிரபுவின் கருத்துரைகளை அப்போதைய இந்தியா அமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், காங்கிரசின் கருத்துரைகளை வைசிராய் டப்ரின் பிரபு ஏற்றுக் கொண்டார். காரணம் தனது அதிகாரங்களை அதிகரிப்பதற்கு இந்திய பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற விரும்பியதேயாகும். எனவே 1882-ல் இந்தியர் நிலையைப் புரிந்து கொள்ளவும், சட்டமன்றங்களில் சீர்திருத்தங்களை புகுத்தவும் குழு ஒன்றை அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தனது கருத்துரைகளை இங்கிலாந்து அரசுக்கு அனுப்பினார். ஆனால் அரசு மிக மெதுவாகவே செயல்பட்டு இறுதியில் 1892 ஜீன் 20ம் தேதி இந்திய கவுன்சில் சட்டத்தை இயற்றியது.

## 1892-ம் வருட இந்திய கவுன்சில் சட்டத்தின் ஷரத்துக்கள்

**1) மைய சட்டமன்றத்தின் விரிவாக்கம்:-**

1892-ம் வருட சட்டப்படி மைய சட்டமன்றத்தின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்துக்குக் குறையாமலும் பதினாறுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். இவர்களில் ஆறு பேருக்கு மேற்படாதவர்கள் அதிகாரிகளாக இருக்க வேண்டும். மீதி உள்ள அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் பத்து பேரில் நான்கு பேர் மாநில சட்டசபை பிரதிநிதிகளாகவும், ஒருவர் கல்கத்தா வணிக மன்றத்தின் பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும். மீதி ஐந்து பேர் வைசிராயால் நியமிக்கப்படுவர். இதில் பெரு நிலக்கிழார்கள், தொழிலதிபர்கள் போன்றவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும்.

**2) மாநில சட்டமன்றங்களின் விரிவாக்கம்:-**

மாநில சட்டமன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டது. சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் சட்ட சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தது எட்டு ஆகவும் அதிக அளவு இருபது ஆகவும் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. வடமேற்கு, அயோத்தி மாநிலங்களுக்கு உயர்ந்தபட்சம் பதினைந்து உறுப்பினர்கள் இருக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விதம் உயர்த்தப்பட்ட உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

**3) சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள்:-**

1892-ம் வருட சட்டப்படி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில உரிமைகள் கொடுக்கப்பட்டன. பொது நலன்கள் பற்றிக் கேள்வி கேட்கும் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் சபைத் தலைவருக்கு ஆறு நாட்களுக்கு முன்பே கேள்வி கேட்பது பற்றிய செய்தியைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் அவசியமோ அதைத் தொடர்ந்து உபரிக் கேள்வி கேட்கும் உரிமையோ வழங்கப்படவில்லை.

மேலும், உறுப்பினர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. ஆனால் அதன் மீது வாக்களிக்கும் உரிமை கிடையாது. மேலும் அந்த விவாதம் வைசிராயின் நிர்வாக சபையினரைக் கட்டுப்படுத்தாது. விவாதத்தை தன் இஷ்டப்படி ஏற்கவோ ஒதுக்கவோ இயலும்.

**4) சட்டமன்ற உறுப்பினர்களின் நியமனம்:-**

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், வைசிராய், மாநில கவர்னர்கள், துணை நிலை கவர்னர்க்ள ஆகியோரால் நியமனம் செய்யப்படுவர். ஒரு உறுப்பினர் தொடர்ந்து இரண்டு மாதம் சபை கூட்டத்திற்கு வராமல் இருந்தாலோ, ராஜினாமா செய்தாலோ, இறந்துவிட்டாலோ அந்த உறுப்பினர் பதவி காலியானதாக அறிவிக்கப்படும். அந்தக் காலி இடத்திற்கு மைய சட்டமன்றம் என்றால் வைசிராயினாலும், மாநில சட்டமென்றால் கவர்னராலும் நியமனம் செய்யப்படுவர்.

உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவதற்கான சட்ட திட்டங்களை இந்தியா அமைச்சரின் அனுமதி பெற்று உருவாக்கி நடைமுறைப்படுத்துவார்.

## மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் 1909

## (Minto Morley Reforms, 1909)

மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் இந்தியாவில் மக்களாட்சியைப் புகுத்தியதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பிரதிநிதித்துவ நிறுவனங்களின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையை இச்சட்டம் உண்டாக்கி இந்திய அரசியலமைப்பினை வளர்த்தது. முதல் முறையாக தேர்தல்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பின்கர்களைக் கொண்ட சட்டமன்றங்கள் அமைய இச்சட்டம் வழி செய்தது. மேலும் இந்தியர்களுக்கு சட்டமன்றங்களில் அதிக அளவில் பங்கு தர வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன. பாராளுமன்ற முறையானது நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தியாவில் ஏற்படுத்தப்படுவதற்கு மின்டோ மார்லி சீர்திருத்தங்களே காரணமாகும்.

## மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் இயற்றப்படக் காரணங்கள்

### 1) கர்சான் பிரபுவின் அடக்கு முறை ஆட்சி:-

இந்தியாவில் வைசிராயாக இருந்த கர்சன் பிரபுவின் ஆட்சியில் மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டன. இந்திய மக்கள் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையின்மை மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தியது. அத்துடன் விலைவாசி உயர்வு, பஞ்சம், பிளேக், மலேரியா போன்றவை மக்களின் துன்பங்களை அதிகரித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக கர்சன் பிரபுவின் வங்காளப் பிரிவினை (1905) இந்திய மக்களிடம் பிரிவு மனப்பான்மையை ஏற்படுத்துவதாக அமைந்துவிட்டது. எனவே அவரது ஆட்சிக்கெதிராக இந்திய மக்கள் அதிருப்தி கொண்டனர். அவரது ஆற்றல் வாய்ந்த ஆட்சி இந்திய தேசிய சக்திகளைத் தடுப்பதற்குப் பதிலாக அரசியலில் முன்னேற்றம் காண்பதற்கான ஆவலை இந்தியர்களிடத்தில் தோற்றுவித்தது.

### 2) ஆங்கில அரசின் புதிய கொள்கை:-

ஆங்கில அரசு இந்தியர்களை ஆட்சியில் சேர்த்துக் கொள்ள விரும்பியது. இதற்கு முக்கிய காணம் ஆங்கில அரசின் மீது இந்தியர்கள் கொண்டுள்ள எண்ணங்களையும், அரசு செய்கின்ற சீர்திருத்தங்களை மக்கள் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்குமேயாகும். அது மட்டுமல்லாமல் தீவிரவாதிகளின் போக்கினையும் எதிர்ப்புகளையும் சமாளிக்க மிதவாதிகளின் ஆதரையும், முஸ்லீம்களின் ஆதலவையும் பெற விரும்பியது அரசு.

### 3) மார்லி பிரபுவின் முற்போக்கு கருத்துக்கள்:-

அப்போது இங்கிலாந்தில் லிபரல் கட்சி (Liberal Party) ஆட்சியில் இருந்தது. இக்கட்சியின் இந்தியா மந்திரியாக பதவி வகித்த மார்லி பிரபுவும் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டிருந்தார். 'இந்தியர்களுக்கு மேலும் சிறிது அரசியல் சுதந்திரமும், நிர்வாகத்தில் பங்கும் அளிக்கிற வகையில் சீர்திருத்தம் செய்வது நல்ல பயனைத் தரும்' என்று நம்பி சீர்திருத்தத்திற்கு ஆதரவு அளித்தார்.

### 4) வைசிராய் மின்டோ பிரபுவின் கொள்கை:-

மேலும் வைசிராய் மின்டோ பிரபுவும் மாறிவரும் இந்திய சூழ்நிலைக்கு தகுந்தவாறு ஆங்கில அரசின் கொள்கைகள் தளர்த்தப்பட வேண்டும் என்றார். அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தினால் தான் அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப்படுகின்றன என்ற எண்ணம் இந்தியரிடம் ஏற்படாமல், தானாகவே அரசு சீர்திருத்தங்களை செய்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டால் அது நல்ல பலனைக் கொடுக்கும் என்று மின்டோ கருதினார்.

அதன்படி இந்திய அரசியல் பிரச்சனைகளைப் பற்றி ஆராய நான்கு பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவினர் இந்திய அரசியல் பிரச்சனைகளை ஆராய்ந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. 1909-ம் ஆண்டு மே 25-ம் தேதி அது சட்டமானது. இந்த சட்டமானது மின்டோ, மார்லி ஆகியவர்களின் முயற்சியால் நிறைவேற்றப்பட்டதால் அது 'மின்டோ மார்லி சீர்திருத்தங்கள்' என்ற பெயர் பெற்றது.

## 1909-ம் வருட மின்டோ மார்லி சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

### 1) மைய சட்டமன்றத்தில் செய்யப்பட்ட முக்கிய மாறுதல்கள்:-

1909-ம் வருட மின்டோ மார்லி சட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால் மைய, மாநில சட்டமன்றங்களின் அமைப்பிலும், அதிகாரங்களிலும் செய்யப்பட்ட மாறுதல்களேயாகும்.

மைய சட்டமன்றமானது நான்கு வகைப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவை:

a) தங்கள் பதவியினிமித்தம் உறுப்பினர்களாக இருந்தவர்கள். இதில் வைசிராய், படைத்தலைவர், மாநிலப் பிரதிநிதிகள் அடங்குவர்.

b) நியமிக்கப்பட்ட அதிகாரிகளி, இந்த வகையில் அரசாங்கத்தில் பணிபுரியும் சிவில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்.

c) நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லாதவர்கள். இதில் பொது வாழ்வில் முக்கியப்பங்கு கொண்ட பிரமுகர்கள் நியமிக்கப்பட்டனர்.

d) தேர்தல்கள் மூலம தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள், இவர்கள் நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள், வணிக மன்றங்கள் ஆகியவைகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களாவர்.

ஏற்கனவே மைய சட்டமன்றத்தில் ஒன்பது உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் வைசிராய், படைத்தலைவர், ஆறு உறுப்பினர்கள், ஒரு மாநிலப் பிரதிநிதி ஆகியோர் ஆவர். 1909-ம் வருடச் சட்டப்படி மைய சட்டமன்றத்தில் அதிகமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினாறிலிருந்து அறுபது ஆக உயர்த்தப்பட்டது. ஆக, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 69 ஆக உயர்ந்தது. இதில் ஏற்கனவே இருந்த 9 உறுப்பினர்களை சேர்த்து மொத்தம் 37 பேர் அதிகாரிகளாக இருப்பர். 5 பேர் அதிகாரிகள் அல்லாதவர்களாக (nominated non-officials) இருப்பர். மீதி இருக்கும் 27 இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிரப்பப்படுவர். இந்த 27 பேரில் 5 முகமதியர்கள், 6 இந்து நிலக்கிழார்கள், ஒரு முஸ்லீம் ஜமீன்தார், கல்கத்தாவிலும் பம்பாயிலுமுள்ள வாணிபக் குழுக்கள் சார்பில் தலா 1 உறுப்பினர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதி 13 உறுப்பினர்களை ஒன்பது மாநில சட்டமன்றங்களில் இருக்கும் அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவர்.

### 2) மாநில சட்டமன்றங்களில் அதிகாரிகள் அல்லாதவர்களின் பெரும்பான்மை:-

மின்டோ மார்லி சட்டப்படி சென்னை, பம்பாய், வங்காளம் ஆகிய பெரிய மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களில் அதிகப்படியான இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பதாக உயர்த்தப்பட்டது. மாநில சட்டமன்றங்களில் அதிகாரிகளின் பெரும்பான்மை நீக்கப்பட்டது. இச்சட்டத்தின் சிறப்பம்சமாகும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை ஏற்படவில்லை. அதிகாரிகளையும், நியமனம் செய்யப்பட்ட அதிகரிகள் அல்லாத உறுப்பினர்களையும் சேர்த்தால் அவர்களது எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட சிறிது அதிகமாக இருக்கும்படி அமைக்கப்பட்டது. இவர்கள் அரசாங்கத்திற்குச் சாதகமாகவே நடந்து கொண்டார்கள். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடம் ஒற்றுமை காணப்படவில்லை.

### 3) வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறை அமல் செய்யப்பட்டது:-

பல்வேறு இனத்தாலும், மதத்தாலும், கொள்கைகளாலும் முரண்பட்டுப் பிரிந்து கிடக்கிற இந்தியாவில் இடவாரியாக (Territorial vise) தொகுதிகளைப் பிரிக்க இயலாத காரணத்தினால் இனங்களையும், வர்க்கங்களையும், நிறுவனங்களையும் தொகுதிகளாகக் கருதி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அதன்படி தான் நிலக்கிழார்க்ள, தோட்ட முதலாளிகள், முஸ்லீம்கள் என்ற சமூகங்களும், ஊராட்சி மன்றங்கள், வணிக மன்றங்கள், பல்கலைக்கழகங்கள் என்ற நிறுவனங்களும் தொகுதிகளாயின.

முஸ்லீம் இனத்தவர்களுக்கு தனியாக அவர்களின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும் என்று முஸ்லீம் இனம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலே இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கை அமல் செய்யப்பட்டது. முஸ்லீம்களின் அரசியல் முக்கியத்துவம் கருதியே அவர்களுக்கு இந்த பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அவர்களின் ஜனத்தொகை விகிதத்திற்கு அதிக அளவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

### 4) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக அதிகாரம்:-

1909-ம் வருடச் சட்டப்படி மைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. அரசின் வரவு செலவுத்திட்டம் பற்றி விவாதிக்கவும், தீர்மானங்க்ள கொண்டு வரவும் உறுப்பினர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டது. மேலும் துணைக் கேள்விகள் கேட்பதற்கும், ஸ்தல ஆட்சி நிறுவனங்களுக்கு கடன் வழங்குதல், புதிய வரிகள் விதிப்பது ஆகியவை தொடர்பாக தீர்மானங்கள் கொண்டு வரலாம். பொது நலன் சம்பந்தப்பட்ட காரியங்களையும் விவாதிக்க முடியும். ஆனால் இறுதியான தீர்ப்பு வைசிராயினாலேயே எடுக்கப்படும்.

சட்டமன்றத்தில் தீர்மானங்களைக் கொண்டு வந்து விவாதிக்கலாமே தவிர அவைகளைத் தள்ளவோ, ஒப்புக் கொள்ளவோ வைசிராய்க்கு மட்டுமே அதிகாரம் உண்டு. மேலும் ராணுவம், அயல் நாட்டுக் கொள்கை, இந்திய சமஸ்தானங்கள் போன்றவை பற்றி விவாதிக்கவும் தீர்மானங்கள் கொண்டு வரவும் சட்டமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. இது போல் தான் மாநில சட்டமன்றங்களின் செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கவர்னருக்கு வழங்கப்பட்டது. இதனால் சட்டமன்றங்களின் அதிகாரம் வெறும் பெயரளவுக்குத் தான் அதிகமாக்கப்பட்டதே தவிர உண்மையாகவே சட்டமன்றத்திற்கு வழங்கப்படவில்லை.

### 5) தேர்தல் முறை:-

1909-ம் வருடச் சட்டம் அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் நியமனத்திற்கு தேர்தல் முறையை அங்கீகரித்தது. தேர்தல் முறை பற்றி சட்டதிட்டங்கள் உருவாக்க வைசிராய்க்கு அதிகாரம் வழங்கப்படடது. வாக்குரிமை எல்லோருக்கும் அளிக்கப்படவில்லை. சொத்து, கல்வி ஆகியவைகளின் அடிப்படையில் வாக்காளர்களின் தகுதி நிர்ணயிக்கப்பட்டது. இந்த தகுதிகளும், மாநிலத்திற்கு மாநிலம், இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்பட்டது.

மேலும் தேர்தல் முறை நேராக அமையாமல் சுற்றான வழியில் அமைக்கப்பட்டன. உதாரணமாக, வாக்காளர்கள் ஊராட்சிக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சி உறுப்பினர்கள் தேர்தல் குழு

உறுப்பினர்களைத் தேர்நதெடுத்தனர். இந்த தேர்தல் குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

**6) வைசிராயின் நிர்வாக சபையின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பு:-**

1909-ம் வருட மின்டோ மார்லி சட்டப்படி வைசிராயின் நிர்வாகக் குழுவில் நடைமுறையில் இந்திய உறுப்பினர்களுக்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. அவ்வாறு முதல் இந்திய சட்ட உறப்பினராக ஆக்கப்பட்டவர் சத்தியேந்திர பிரசன்ன சின்ஹா என்பவராவார். இச்சட்டப்படி சென்னை, பம்பாய் கவர்னர்களின் நிர்வாகக் குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டது.

**மின்டோ மார்லி சீர்திருத்தங்களைப் பற்றிய மதிப்பீடு:-**

மின்டோ மார்லி சீர்திருத்தங்களின்படி நிர்வாகத்தில் இந்தியர்களைச் சேர்த்துக் கொள்வதில் தீவிரமாக அக்கரை காட்டப்பட்டது. இதனால் மைய, மாநில சட்டமன்றங்களில் இந்தியர்களின் எண்ணிக்கை கூடியது. இந்த வாய்ப்பு மிகவும் பயன் தரக்கூடிய அரசியல் பயிற்சியையும் அறிவையும் இந்தியர்களுக்கு அளித்தது.

இந்திய உறுப்பினர்களின் அதிகாரங்களை அதிமாக்க இச்சட்டம் வகை செய்தது. கேள்விகள், துணைக்கேள்விகள், அரசாங்க வரவு செலவு திட்டம் மீது விவாதங்கள் ஆகிய எல்லாமே வரவேற்கத் தக்க முன்னேற்றங்களாகும்.

தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்டதும் இச்சட்டத்தின் சிறப்பம்சமாகும். ஆனால் இவையெல்லாமே சிறப்பானவைதான் என்றாலும், அவை நடைமுறைக்கு வந்த போது பல குறைபாடுகள் வெளிப்பட்டன.

1) மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் இயற்றப்படக் காரணங்கள் யாவை?
2) 1909-ம் வருட மின்டோ மார்லி சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள் யாவை?

## 1919ம் வருட மாண்டேகு செம்ஸ்போர்ட் சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள்

**1) முகப்புரை (Preamble):-**

மாண்டேகு செம்ஸ்போர்ட் சட்டத்தின் முகப்புரை இந்தியாவில் படிப்படியாக செயல்படுத்தப்படப் போகும் சீர்திருத்தக் கொள்கைகளைப் பற்றிக் கூறுகிறது. முகப்புரையில் காணப்படும் முக்கிய அம்சங்கள் வருமாறு: “இந்தியாவில் பொறுப்புள்ள ஆட்சியை ஏற்படுத்துவதே ஆங்கில அரசின் கொள்கை. பொறுப்புள்ள ஆட்சி படிப்படியாக ஏற்படுத்தப்படும். ஆட்சித்துறை ஒவ்வொன்றிலும் அதிக அளவில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தியாவில் சுயாட்சியை ஏற்படுத்த உதவும் ஆட்சித்துறை நிறுவனங்கள் படிப்படியாக வளர ஆதரவு அளிக்கப்படும்” என்று முகப்புரை கூறுகிறது. இது மாண்டேகுவின் அறிக்கையில் காணப்படட அம்சங்களை மீண்டும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

**2) இந்தியா அமைச்சர் சம்பந்தமாக செய்யப்பட்ட மாறுதல்கள்:-**

அ) இந்தியா அமைச்சரின் ஊதியம் இதுவரையில் இந்திய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு வந்த வழக்கத்தை நீக்கி இங்கிலாந்து நிதியிலிருந்து அவரது ஊதியத்தைக் கொடுக்கும்படி இச்சட்டம் வகை செய்தது. இந்தியா அமைச்சரின் அதிகாரங்களும் மிகவும் குறைக்கப்பட்டன. படை, அயல் நாட்டுத் தொடர்பு, அரசியல், கடன்கள், நாணய செலவாணி போன்ற குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டுமே வைசிராயும் அவரது ஆலோசனை குழுவும் இந்தியா அமைச்சரைக் கலந்து செயல்பட்டால் போதுமானது என்று இச்சட்டம் அறிவித்தது.

ஆ) இந்தியா கவுன்சில் (India Council) உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டுக்குக் குறையாமலும் பன்னிரெண்டுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. இவர்களில் பாதி உறுப்பினர்கள் குறைந்தது பத்து ஆண்டுகள் இந்திய நிர்வாகத்தில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். இந்த குழுவில் இருந்த இந்தியர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்றாக உயர்த்தப்பட்டது.

இ) இந்தியா அமைச்சரின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டது. இங்கிலாந்தில் உள்ள இந்தியர்களின் தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு இந்தியா உயர் ஆணையர் என்ற புதிய அதிகாரியை இச்சட்டம் நியமித்தது. இவர் வைசிராயினால் ஐந்து ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்படுவார். இந்தியா சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும் ஆங்கில அரசுக்கு பொறுப்பாளியாக இவர் விளங்கினார். இவரது ஊதியம் இந்திய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது.

**3) மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப் பங்கீடு:-**

1919-ம் வருடச் சட்டம் பிரிட்டிஷ் இந்தியாவை ஒன்பது மாநிலங்களாகப் பிரித்தது. அவைகள் சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய பிரதேச மாநிலம், அஸ்ஸாம், பீகார், ஒரிசா, மத்திய மாநிலம், பஞ்சாப் என்பனவாகும். மத்திய மாநிலங்களின் அதிகாரங்களை இந்தச் சட்டம் தெளிவாகப் பிரிவினை செய்தது.

**அ) மத்திய அரசின் அதிகாரங்கள்:-**

பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் பொது நலன் விளைவிக்கும் ஒரே சீரான நிர்வாகம் ஏற்பட உதவும் வகையில் மத்திய அரசின் அதிகாரங்கள் இருந்தன. பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரங்கள், படைப் போக்குவரத்து, தபால் தந்தி, நாணயம், பொதுக்கடன் வாணிபம், காப்புவரி, வருமானவரி, கப்பல் போக்குவரத்து, மக்கள் தொகை கணக்கீடு, புள்ளியியல், வேலை வாய்ப்பு நிறுவனங்கள், சிவில் கிரிமினல் சட்டங்கள், மத சம்பந்தப்பட்ட நிர்வாகம் ஆகிய அனைத்தும் மத்திய அரசின் அதிகாரப் பட்டியலில் உள்ளவையாகும்.

**ஆ) மாநில அரசின் அதிகாரங்கள்:-**

மாநில அளவில் நிலவும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள உதவும் முறையிலும், அந்த மாநில மக்களின் நலன்களைப் பேணக்கூடிய வகையிலும் மாநில அதிகாரங்கள் இருந்தன. அவைகள், உள்நாட்டு சட்டம், அமைதி. நீதிபரிபாலனம், சிறைச்சாலைகளின் நிர்வாகம், நீர்ப்பாசனம், காடுகள், கல்வி, மருத்துவம், பொது சுகாதாரம், பொதுப் பணித்துறை, மராமத்து வேலைகள், வேளாண்மை, ஆயத்தீர்வை, கூட்டுறவு சங்கங்கள், காட்டு வளம், கால்நடை, மீன்வளம், பிறப்பு, இறப்பு பதிவு ஆகியவை மாநில அரசின் அதிகாரப்பட்டியலில் உள்ளவையாகும்.

**இ) எஞ்சிய அதிகாரங்கள்:-**

மத்திய அரசின் அதிகாரங்கள் மாநில அரசின் அதிகாரங்கள் எனத் தனித்தனியாக பிரித்த பின்னரும், அப்போது குறிக்கப்படாமல் போன அதிகாரங்கள், மாறிவரும் அரசியல் சமுதாய பொருளாதார சூழ்நிலையில் தோன்றும் புதிய பிரச்சனைகளை தீர்க்க தோன்றும் புதிய அதிகாரங்கள் போன்ற எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும், அதாவது மத்திய மாநில அரசு பட்டியலில் குறிப்பிடப்படாத மற்ற துறைகள் அனைத்தும், மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டன.

**4) மத்திய அரசின் நிர்வாக சபையில் செய்யப்பட்ட மாறுதல்கள்:-**

**அ) நிர்ாக சபையின் அமைப்பு:-**

கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் இந்த சட்டமானது எந்த விதமான அடிப்படை மாற்றங்களையும் செய்யவில்லை. கவர்னர் ஜெனரலின் கட்டுப்பாடில்லாத எதேச்சதிகாரங்களிலும் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால் இந்திய நிர்வாகத்தில் இந்தியர்களை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் அதிக அளவில் இந்திய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(கவர்னர் ஜெனரலும், வைசிராயும் ஒருவரே! இந்திய சுதேச சமஸ்தானங்கள் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வைசிராய் என்றும், பிரிட்டிஷ் இந்திய மாநிலங்கள் தொடர்பாக அதிகாரம் செலுத்தும் போது கவர்னர் ஜெனரல் என்றும் அழைக்கப்பட்டார்).

கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் இதுவரை ஒரு இந்திய உறுப்பினர் மட்டுமே இருந்தார். இந்த சட்டத்தின்படி நிர்வாக சபையில் இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்த்தப்பட்டு மொத்தம் ஆறு உறுப்பினர்கள் இருந்தனர். இவ்வாறு ஆறு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும். உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

**ஆ) நிர்வாக சபையின் நடவடிக்கைகள்:-**

கவர்னர் ஜெனரலும், அவரது நிர்வாக சபையும் இந்தியா அமைச்சருக்கும் இங்கிலாந்து பாராளுமன்றத்துக்குமே பொறுப்பு வாய்ந்தவர்களாக வைக்கப்பட்டனர். இந்திய சட்டசபைக்கு பொறுப்பு வாய்ந்தவர்களாக இல்லை. இந்த நிர்வாக சபையின் நடவடிக்கைகளில் கவர்னர் ஜெனரலின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. சபை நடவடிக்கைகள் மீது தனது முழு கட்டுப்பாட்டினை ஏற்படுத்தியிருந்தார். இதற்கு முக்கியக் காரணம் உறுப்பினர்கள் அரசரால் நியமிக்கப்பட்டாலும், அந்த நியமனங்களில் கவர்னர் ஜெனரலின் விருப்பங்களே நிறைவேற்றப்பட்டன. மேலும் நிர்வாக உறுப்பினர்களுக்கு உரிய பொறுப்புகளை கவர்னர் ஜெனரலே பிரித்தளித்தார்.

இந்த நிர்வாக சபையில் எந்த தாமானமும் பெருவாரியான உறுப்பினர்களின் வாக்கு பெற்றே நிறைவேற்றப்பட வேண்டும். சமநிலை வாக்கு ஏற்படும் போது கவர்னர் ஜெனரல் தனது முடிவு வாக்கை உபயோகப்படுத்தலாம். நிர்வாக சபையின் எல்லா முடிவுகளும் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் பெற்ற பின்பே செயல்படுத்த முடியும். நிர்வாக சபையின் முடிவுகளை கவர்னர் ஜெனரல் ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். எனவே நிர்வாக சபையின் அதிகாரங்கள் எல்லாம் கவர்னர் ஜெனரல் முன்பு செயலற்றுப் போய்விடுகிறது.

## 5) மத்திய சட்டமன்றம் (Central Legislature):-

1919-ம் வருட சட்டப்படி மத்திய சட்டமன்றத்தில் சிறப்பான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது. இதுவரை மத்திய சட்டமன்றமானது, ஒரு சபையைக் கொண்டதாகவே இருந்தது. இச்சட்டத்தின்படி 'ஈரங்க சட்டமன்ற முறை' (Bi-cameral legislature) கொண்டு வரப்பட்டது. அதாவது மத்திய சட்டமன்றமானது இரண்டு சபைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. ராஜ்யசபை (Council of state) என்ற மேல்சபையும், மத்திய சட்டமன்றம் (Central Legislative Assembly) என்ற கீழ்சபையும் அமைக்கப்பட்டன.

### அ) ராஜ்ய சபை:-

**அமைப்பு:-**

இங்கிலாந்திலுள்ள மேல்சபையான பிரபுக்கள் சபையைப் போன்று ராஜ்ய சபையை அமைக்க விரும்பினர். ராஜ்ய சபையின் உறுப்பினர் எண்ணிக்கை அறுபது ஆகும். இதில் முப்பத்தி மூன்று உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதி இருபத்தேழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்படும் 33 உறுப்பினர்களில் 16 பேர் பொதுத் தொகுதிகளிலிருந்தும், 3 பேர் ஐரோப்பியர்களின் தொகுதியிலிருந்தும், 1 உறுப்பினர் சீக்கியர், மற்ற 2 உறுப்பினர் நிலக்கிழார், வர்த்தகக்குழு, பல்கலைக்கழகம் போன்றவற்றிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நியமனம் செய்யப்படும் 27 உறுப்பினர்களில் 17 பேர் அதிகாரிகளாகவும் 10 பேர் அதிகாரிகள் அல்லாதவர்களாகவும் இருந்தனர்.

ராஜ்யசபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இச்சபையின் தலைவரை கவர்னர் ஜெனரலே நியமிப்பார். இச்சபையைக் கூட்டுபவரும், கலைப்பவரும், ஒத்தி வைப்பவரும் தலைமை ஆளுநரே ஆவார்.

**அதிகாரங்கள்:-**

நிதி சம்பந்தப்பட்ட அதிகாரம் தவிர மற்ற எல்லாவற்றிலும் கீழ்சபைக்குச் சமமான அதிகாரங்களைக் கொண்டிருந்தது. எல்லா மசோதாக்களும் ராஜ்ய சபையின் ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமாக முடியும். கீழ்சபையான மத்திய சட்டமன்றத்தில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் அதே நாளில் ராஜ்ய சபையிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பட்ஜெட் மீது ராஜ்ய சபையில் விவாதங்களும், பரிந்துரைகளும் செய்யப்படும், கீழ்சபையில் அறிமுகப்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டு நிறைவேறிய நிதி மசோதாக்கள் ராஜ்ய சபையின் ஒப்புதலை பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படும். அதன்மீது விவாதங்கள் நடத்தி, சட்டமன்றத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் திருத்தங்களை செய்யலாம். நிதி ஒதுக்கீட்டு மசோதாவில் ராஜ்யசபை எந்த திருத்தத்தையும் செய்ய முடியாது.

இவ்வாறு மேல் சபையான ராஜ்யசபா உறுப்பினர்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் வரவு செலவு திட்டம், நிதி மசோதா ஆகியவைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஒப்புதல் அளிக்கவும் உள்ள அளவில் மட்டுமே அதிகாரம் பெற்றிருந்தனர். புதிய மசோதாக்களை இயற்றும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

## ஆ) மத்திய சட்டசபை (Central Legislative Assembly):-

**அமைப்பு:-**

மத்திய சட்டமன்றம கீழ்சபையாகும். இதில் 145 உறுப்பினர் இருப்பர். இவர்களில் 104 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். மீதி 41 பேர் நியமனம் செய்யப்படுவர். நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் பொதுத் தொகுதி மூலம் 52 பேரும், முகமதியர்களால் 30 பேரும், சீக்கியர்கள் 2 பேரும் ஐரோப்பியர்களால் 9 பேரும், நிலக்கிழார்களால் 7 பேரும், வணிக்க் குழுவினரால் 4 பேரும் ஆக மொத்தம் 104 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். நியமனம் செய்யப்படும் 41 உறுப்பினர்களில் 26 பேர் அதிகாரிகளாகவும், 15 பேர் அதிகாரிகள் அல்லாதவர்களாகவும் இருப்பர்.

மத்திய சட்டமன்றத்தின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். இதன் தலைவர் கவர்னர் ஜெனரலினால் நியமிக்கப்படுவார். சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கும், கலைப்பதற்கும், நீட்டிப்பதற்கும் கவர்னர் ஜெனரல் அதிகாரம் பெற்றிருந்தார்.

**தேர்தல் முறை:-**

மத்திய சட்டசபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் தகுதிகளும் வரையறை செய்யப்பட்டன. சொத்துரிமையின் அடிப்படையிலேயே வாக்காளர்களின் தகுதிகள் வரையறுக்கப்பட்டன. நகராட்சிக்கு பதினைந்து ரூபாய் வரி செலுத்தப்பவர்கள், வருடத்திற்கு இரண்டாயிரம் வருமானம் உடையவர்கள், ஐம்பது ரூபாய் நிலவரி செலுத்துகிறவர்கள் போன்றவர்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இந்த சொத்துரிமை தகுதியும் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டிருந்தது. மேலும் மத்திய சட்டமன்றத்தின் தொகுதிகளும் மாநிலங்களுக்கிடையே சீரான முறையில் பங்கீடு செய்யப்படவில்லை.

**அதிகாரங்கள்:-**

மத்திய சட்டசபையின் அதிகாரங்கள் மிகவும் விரிவுபடுத்தப்பட்டன. ஆங்கிலேய இந்தியா முழுவதற்கும் சட்டமியற்றும் உரிமை மத்திய சட்டசபைக்குக் கொடுக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கென்று ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் பற்றிய சட்டங்களை இயற்றுவதிலும், நிர்வகிப்பதிலும் பெரும்பங்கு பெற்றது. இந்த சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் கவர்னர் ஜெனரலின் (வைசிராய்) ஒப்புதலுடன் சட்டமாகிறது. ஆனால் சட்டமன்றத்தின் அதிகாரங்கள் பல வழிகளில் கவர்னர் ஜெனரலினால் கட்டுப்படுத்தப்பட்டது.

மாநில அதிகாரங்கள், மாநில சட்டமன்றங்கள் இயற்றி சட்டங்களை ரத்து செய்தல், கவர்னர் ஜெனரலின் அவசரப் பிரகடனங்களில் திருத்தங்கள் செய்தல், பாதுகாப்பு, அயல் உறவு, சமய விவகாரம் ஆகியவை தொடர்புடைய மசோதாக்கள் கொண்டு வரும் போது கவர்னர் ஜெனரலின் முன் அனுமதியைப் பெற வேண்டும். மேலும் அரசியலமைப்புகளை மாற்றும் அளவிற்கோ, இங்கிலாந்து சட்டங்களுக்கு முரண்பாடான வகையிலோ சட்டங்களை இயற்ற முடியாது. நிதி தொடர்பான அதிகாரங்களும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது அதில் வாக்களிக்கப்பட வேண்டிய பகுதி, வாக்களிக்கப்பட முடியாத பகுதி (votable and non-votabble items) என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டன. வாக்களிக்கப்படக்கூடிய பகுதிகள் பற்றி

தான் விவாதம் நடத்தவும், வாக்களிக்கவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு.

இறுதியாக சட்டமன்றம் இயற்றும் எல்லாச் சட்டங்களும் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் பெற வேண்டும். ஆனால் கவர்னர் ஜெனரல் தனக்கு அளிக்கப்பட்ட 'தன்உசித அதிகாரம்', 'ரத்து அதிகாரம்', 'நாட்டின் அமைதி மற்றும் பேரரசின் நலம் காக்கும் கடமை' ஆகிய அதிகாரங்களைப் பிரயோகித்து சட்டமன்றத்தினை முழுமையாக கட்டுப்படுத்தினார்.

ராஜ்ய சபைக்கும், மத்திய சட்டமன்றத்திற்கும், இடையில் ஏதேனும் ஒரு பிரச்சனையில் முட்டுக்கட்டை (dead lock) ஏற்பட்டால் கவர்னர் ஜெனரல் இரண்டு சபைகளிலிருந்தும் எண்ணிக்கையில் மாறுபடாமல் உள்ள பிரதிநிதிகளை அழைத்து கூடிப்பேசி முடிவு காண்பார். அதில் பிரச்சனை தீரவில்லையென்றால் இரண்டு சபைகளையும் ஒரே நேரத்தில் கூட்டி (Joint sitting) பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும்.

## மாநிலங்களில் இரட்டை ஆட்சிமுறை (Diarchy in the Provinces)

1919-ம் வருட மாண்டேகு செம்ஸ்போர்ட் சட்டத்தின் மிகச் சிறப்பான அம்சம் என்னவென்றால் மாநிலங்களில் பொறுப்புள்ள ஆட்சியை (Responsible government) உருவாக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'இரட்டை ஆட்சி முறையேயாகும்'.

**விளக்கம்:-**

இந்த இரட்டை ஆட்சி முறையின்படி மாநிலங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் ஆங்கிலேயர்களுக்கும், இந்தியர்களுக்குமிடையே பங்கீடு செய்யப்பட்டன. அதாவது மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பு இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டதால் இந்த புதிய மாற்றத்திற்கு 'இரட்டை ஆட்சி' என்று பெயரிடப்பட்டது.

மாநில அதிகாரங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அவை ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) என்றும், மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) என்றும் அழைக்கப்பட்டன.

**ஒதுக்கப்பட்ட துறைகள்:-**

காவற்படை, நீதி நிர்வாகம், நில வருவாய், நீர்ப்பாசனம், பஞ்ச நிவாரணம், பத்திரிக்கை, அச்சகம், புத்தகக் கட்டுப்பாடு, விவசாயக் கடன், வனங்கள், சிறைச்சாலை, தொழில் தகராறு தீர்த்தல் போன்ற தேச அபிவிருத்தித் துறைகளை (Nation Building departments) கவர்னரும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட அவரது நிர்வாக சபையினரும் நிருவகிப்பர்.

**மாற்றப்பட்ட துறைகள்:-**

கல்வி, பொதுப்பணித்துறை, விவசாயம், மீன்வளம், தலசுயாட்சி, பொது சுகாதாரம், கூட்டுறவு சங்கங்கள், தொழில் நுணுக்கக் கல்வி, தொழிற்சாலை வளர்ச்சி, தொழில் ஆராய்ச்சி ஆகியவை மாற்றப்பட்ட துறைகளாகும். இந்த துறைகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து கவர்னரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் நிருவகித்தனர்.

இவ்வாறு இரண்டு வகைப்பட்ட அதிகார அமைப்புகளைக் கொண்ட மாநில நிர்வாக சீர்திருத்தமே இரட்டை ஆட்சி என்று அழைக்கப்பட்டது.

**இரட்டை ஆட்சி செயல்பட்ட விதம்:-**

1919-ம் வருட மாண்டேகு செம்ஸ்போர்ட் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சிமுறை சென்னை, வங்காளம், பம்பாய், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், மத்திய மாகாணம், அஸ்ஸாம் ஆகிய எட்டு மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி சட்டமன்றத்துக்கான தேர்தல்கள் 1920-21ல் நடைபெற்றன. இந்த தேர்தலில் ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக காங்கிரஸ் போட்டியிடவில்லை. 1923-ல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்யக் கட்சியினர் கலநது கொண்டு வெற்றியடைந்தனர்.

ஆனால் வெற்றி பெற்று சட்டமன்றத்திற்குள் சென்ற சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்க நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தனர். சட்டமன்றத்திற்குள் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு தீராத பிரச்சனைகளை ஏற்படுத்தினர். மத்திய மாகாண சட்டமன்றத்தில் சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்ததால் அங்கு நிர்வாகத்தையே முடக்கி விட்டனர். மேலும் ஐக்கிய மாகாணத்திலும், பம்பாய் சட்டமன்றத்திலும் சுயராஜ்யக் கட்சியினர் அரசை கடுமையாக விமர்சித்தனர். மாற்றப்பட்ட துறையின் செயல்பட முடியாத நிலை பற்றி விமர்சித்தனர்.

ஆனால் சென்னை மாகாணத்தில் இரட்டை ஆட்சிமுறை சிறப்பாக செயல்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இங்கு ஆட்சியைப் பிடித்த நீதிக்கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவாக செயல்பட்டதேயாகும். 1920-ம் வருடம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி (Justice Party) 98 இடங்களில் போட்டியிட்டு 68 இடங்களில் வென்று ஆட்சி அமைத்தது. ஆனால் அதன்பிறகு 1921, 1923, 1926-ல் நடைபெற்ற தேர்தல்களில் குறைந்த இடங்களிலேயே வெற்றி பெற்றாலும் நீதிக்கட்சியே ஆளும் கட்சியாக நீடித்தது. இரட்டை ஆட்சி காலத்தில் மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தம் சென்னை மாநிலத்தில் முழு வெற்றியடைய நீதிக்கட்சி துணை புரிந்தது.

**இரட்டை ஆட்சி முறையின் சாதனைகள்:-**

கிட்டத்தட்ட பதினாறு ஆண்டு காலம் நடைமுறையிலிருந்த இரட்டை ஆட்சி முறை இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் சிறப்பிடம் பெறுகிறது. ஒரு முக்கிய திருப்பு முனையாகவும் அமைந்தது. இதன்படி மகள் பிரதிநிதிகள் மாநில நிர்வாகத்தில் நேரடியாக பங்கேற்க முடிந்தது. இதனால் உறுப்பினர்களுக்கு சட்டமன்ற நடவடிக்கைகளில் நல்ல தேர்ச்சியும், பயிற்சியும் கிடைத்தது. அரசாங்கம் செயல்படும் முறையைக் கவனிக்கவும், திறனாய்வு செய்யவும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆங்கிலேயர்களின் வல்லாட்சி முறைக்கும் மக்களின் பொறுப்பாட்சி முறைக்குமிடையே ஒரு பாலமாக செயல்பட்டது. இந்த இரட்டை ஆட்சி முறை, மாநில சுயாட்சி முறைக்கு வழிவகுத்துக் கொடுத்தது. இந்திய அமைச்சர்கள் சிறப்பாகச் செயல்பட்டு, பல நல்வாழ்வுத் திட்டங்களை அறிமுகப்படுத்தினர். பொறுப்பாட்சி முறைக்கு தாங்கள் தகுதியானவர்களே என்பதை நிரூபித்துக் காட்டினர்.

**இரட்டை ஆட்சி முறையின் குறைகள்:- (தோல்வி)**

இரட்டை ஆட்சி முறை 1921-ம் ஆண்டிலிருந்து 1937-ம் ஆண்டு வரை பல மாநிலங்ளில் நடைமுறையில் இருந்தது. இந்த முறையினால் பல நன்மைகள் கிடைத்தாலும் பல காரணங்களால் இரட்டை ஆட்சி முறை வெற்றி பெறவில்லை.

**அ) இயற்கைக்கு முரணான அதிகார வரையறை:-**

மாநில அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறை, மாற்றப்பட்ட துறை என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு தவறானது, இயற்கைக்கு முரணானது ஆகும். இதனை சென்னை மாநிலத்தில் அமைச்சராக பதவியிலிருந்த சர்.கே.வி.ரெட்டி என்பவர் கூறுவதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

நான் வளர்ச்சித்துறை (Development) அமைச்சராக இருந்தேன். ஆனால் காட்டைப் பராமரிக்கும் பணியானது அதன் கீழ் சாராமல் ஒதுக்கப்பட்ட துறையில் இருந்தது. நான் வேளாண்மை (agriculture) அமைச்சராக இருந்தேன். ஆனால் நீர்ப்பாசனம் ஒதுக்கப்பட்ட துறைக்கு போய் விட்டது. மேலும் உழவர்களின் கடன் உதவி சட்டத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை. பஞ்ச நிவாரண அதிகாரத்தை நான் தொடக்கூட முடியாது. பிறகு நான் தொழில் அமைச்சரானேன். ஆனால் தொழிற்சாலை, மின்சாரம், சுரங்கத் தொழில் எல்லாமே மாற்றப்பட்ட துறையில் இயங்கின'. இவ்வாறு இரண்டாக அதிகாரம் பிரிக்கப்பட்டதால் நடைமுறையில் தோல்வியை ஏற்படுத்தியது.

**ஆ) துறைகளுக்கிடையே ஒற்றுமையில்லை:-**

ஒதுக்கப்பட்ட துறைக்கும் மாற்றப்பட்ட துறைக்குமிடையே ஒற்றுமையும் ஒருங்கிணைப்பும் இல்லாமல் போய் விட்டது. பொதுவாக கவர்னர் ஒதுக்கப்பட்ட துறையையே ஆதரித்தார். இதனால் வெளிப்படையாகவே பொது இடங்களில் இவ்விரு துறையைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கி பேசிக் கொண்டனர்.

**இ) அமைச்சர்களின் பரிதாபநிலை:-**

கவர்னரால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களே அமைச்சர்களாக இருந்தபடியால் அவர்களால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. மக்களின் பிரதிநிதிகளாக பணியாற்ற இயலவில்லை. கவர்னருக்கே பொறுப்பானவர்கள் என்ற எண்ணம் அவர்கள் மனதில் நிலவியது. எனவே கவர்னருக்கு ஆலோசகர்கள் போன்றே செயல்பட்டனர். மேலும் இந்த அமைச்சர்கள் சட்டமன்றம், கவர்னர் ஆகிய இரண்டு எஜமான்களுக்கும் கட்டுப்பட வேண்டியதாயிற்று. எனவே அவர்களின் நிலை பரிதாபகரமாக இருந்தது.

**ஈ) அமைச்சர்களிடம் ஒற்றுமை காணப்படவில்லை:-**

அமைச்சர்களிடையே ஒற்றுமை காணப்படவில்லை. ஏனெனில் அவர்கள், ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இல்லை. பொறுப்புணர்ச்சியும் அவர்களிடம் காணப்படவில்லை. மேலும் அவர்களுக்கிடையே போட்டியும் பொறாமையும் காணப்பட்டது. இதனால் இரட்டை ஆட்சி முறையின் நோக்கம் செயல்படவில்லை.

1) மாண்டேகு செம்ஸ்போடு சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலையை விவரி?
2) 1919-ம் வருட மாண்மேகு செம்ஸ்போர்டு சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள் யாவை?

# அலகு - II

## சைமன் குழு 1927-1929

காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டடிருந்த எஸ்.சீனிவாச ஐய்யங்காரைச் (1926) சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்குமாறு எஸ்.சத்தியாமூர்த்தி கேட்டுக் கொண்டார். திருப்திகரமான தீர்வு காணாதவரை அரசாங்கப் பதவி எதையும் ஏற்பதில்லை என்று கௌகாத்தி காங்கிரஸ் (1926) தன் முடிவை மீண்டும் வலியுறுத்தியது சுயராஜ்யக் கட்சினர் இரட்டை ஆட்சிக்கெதிராகச் சட்ட மன்றத்துக்குள் ஓத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்தக் சூழ்நிலையில் சைமன்குழு (Simon Commission) அமைக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது.

**சைமன்குழு அமைக்கப்படல்**

இந்தியாவில் உருவாகி வந்த அரசியல் சூழ்நிலையைக் கவனித்த பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியர்களது விருப்பத்தை ஓரளவாவது பூர்த்தி செய்ய வேண்டும் என்று விரும்பியது. இங்கிலாந்தில் விரைவாகப் பரவி வந்த திவிரமாக தொழிலாளர் இயக்கத்தினர் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்க வெண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தனர்.

இத்தகைய சூழ்நிலைகளின் கட்டாயத்தால் 1919 இந்திய அரசாங்கச் சட்டப்படி பத்தாண்டு முடிவில் அமைக்கப்பட வேண்டிய இந்த ராயல் கமிஷன் 1927 நவம்பர் 26 ஆம் தேதியே அமைக்கப்பட்டுவிட்டது.

இக்குழுவின் தலைவராக பிரிட்டிஷ் விபரல் கட்சியைச் சேர்ந்த சர் ஜான் சைமன் (Sir John Simon) நியமிக்கப்பட்டார். அக்குழுவில் மேலும் ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றனர். அவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களே! 1919 சட்டப்படி உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு எவ்வாறு செயல்படுகின்ற தென்பதையும், இரட்டை ஆட்சியின் நிறைகுறைகளைப்பற்றி அறிவதும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் பற்றி தெரிவிப்பதும், அந்நிறுவனங்களுக்கு மேலும் பொறுப்பாட்சியை வழங்குவது விரும்பத்தக்கதா என்பதைப் பற்றிப் பரிந்துரை செய்வதும் இக்குழுவின் நோக்கங்களாகும்.

**சைமன் குழு புறக்கணிப்பு**

சைமன் குழுவில் இந்தியர் எவருக்கும் இடம் கொடுக்காதது இந்தியத் தலைவர்களுக்கு வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் கோபத்தையும் உண்டாக்கிற்று. பிரிட்டிஷ் பிரபுக்கள் அவையின் உறுப்பினரான இந்தியர் கின்ஹா பிரபு (Lord Sinha) கூட இக்குழுவில் இடம் பெறவில்லை.

1927 டிசம்பர் மாதம் சென்னையில் கூடிய காங்கிரஸ் முழுவதும் ஆங்கிலேயர்களைக் கொண்டே அமைக்கப்பட்ட சைமன் குழுவைக் கடுமையாகக் கண்டித்தது.

சென்னை காங்கிரஸ் தான் சைமன் கமிஷன் புறக்கணிப்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சைமன் கமிஷனின் வருகையின்போது மக்கள் அதைப் புறக்கனிக்க வேண்டுமென்றும் அப்புறக்கணிப்புக்குச் சாதகமாக மக்களின் ஆதரவைப் திரட்ட வேண்டுமென்றும், அக்குழுவோடு யாரும் ஒத்துழைக்கலாகாது என்றும் அத்தீர்மானம் கேட்டுக் கொண்டது.

லாகூரில் லாலா லஜபதிராயின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தபோத எவ்வித முகாந்திரமும் இன்றி லாலா போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் (Saundars) என்பவரால் கொடூரமாகத் தாக்கப்பட்டார். அதுவே அவரது மரணத்துக்குக் காரணமாயிற்று (1928 நவ.17) லக்னோவின் ஜவஹர்லால் நேருவும் பிற தொண்டர்களும் போலீஸ்சாரால் தாக்கப்பட்டனர். பாட்னாவில் பலத்த ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது.. சென்னை, டில்லி, லாகூர் லக்னோ, பாட்னா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் தவிரப் பிற இடங்களில் சைமன் குழு அமைதியாகவே சென்று வந்தது. 1929 மார்ச் 31 ஆம் நாள் பம்பாயை விட்டு புறப்பட்டுச் சென்றது சைமன்குழு.

**சைமன் குழு அறிக்கை**

1. இரட்டை ஆட்சிக்கு பதில் (Dyarchy) மாநில சுயாட்சி (Provincial Autonomy) கொண்டுவரப்பட வேண்டும்.
2. மாநில நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர்களுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.
3. மாநிலச் சட்ட மன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
4. மாநிலச் சட்ட மன்றத்தில் அரசாங்க சார்புடைய நியமன உறுப்பினர்கள் இருக்கக்கூடாது.
5. முஸ்லீம்களுக்குச் சிறப்பான போதிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
6. உயர்நீதி மன்றங்கள் மத்தி அரசின் கட்டுபாட்டின்கீழ் இருக்க வேண்டும்.
7. மத்தியில் பிரிட்டிஷ் இந்திய பகுதிகளும் மன்னர் மாநிலப் பகுதிகளும் ஒன்றாக இணைந்த கூட்டாட்சி (Federation) ஏற்பட வேண்டும்.
8. பத்தாண்டுகளுக்கொரு முறை அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பர்சீலனை செய்யும் சட்டக் கட்டுப்பாட்டுக்குப் பதில் தேவையானபோது பரிசீலனை செய்வதற்குரிய வகையில் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.
9. இந்தியாவிலிருந்து பர்மாவைத் தனிநாடாகப் பிரித்துவிட வேண்டும்.
10. வடமேற்கு எல்லை மாநிலத்தில் சட்டமன்றம் அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

1) சைமன் குழு ஏன் புறக்கணிக்கப்பட்டது?
2) சைமன் குழுவின் அறிக்கையை விவரி?

## வட்டமேஜை மாநாடுகள்

**காந்தி இர்வின் ஒப்பந்தம்**

நிலைமையின் தீரத்தை உணர்ந்த வைசிராய் இர்வின் பிரவு காந்தியும் பிற காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்படுவர் என்று அறிவித்தார். 1931 ஜீன் 25, அவ்வறிப்பின்படி காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர். காங்கிரஸ் மீது விதிகப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

**காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் காணப்பட்ட முக்கிய விதிளாவன:**

1. அரசியல் சட்ட சீதிருத்தங்கள் பற்றி எல்லைகள் தெளவிகா வரையறுக்கப்படும்.

2. வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
3. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்படும்
4. சுதேசித் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதால் விதேசிப் பொருள் புறக்கணிப்ப கைவிடப்படும்.
5. கள்ளுக்கடை மறியல் அமைதியாக நடைபெறும்
6. போலீஸ் அத்துமீறல் பற்றிய விசாரணை வலியுறுத்தப்பட மாட்டாது.
7. சட்டமறுப்பு இயக்கம்பற்றி அரசாங்கம் பிறப்பித்து ஆணைகள் அனைத்தும் விலக்கிக் கொள்ளப்படும்.
8. குற்றச்சட்டத் திருத்தம் சட்டம் கைவிடப்படும்
9. அரசியல் வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படும்
10. சட்டமறுப்பு இயக்கம் சம்பந்மாகக் கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுதலை செய்யப்படுவர்.
11. அபராதத் தொகை வசூலிக்கப்பட மாட்டாது.
12. ஆர்ப்பாட்டக்காரர்களை தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்ட போலீசார் விலக்கிக் கொள்ளப்படுவர்.
13. கைப்பற்றப்பட்ட நகரும் சொத்துக்களும் திருப்பியளிக்கப்படும்.
14. பிற நகராட்சி சொத்துக்களும் திரும்ப வழங்கப்படும்.
15. பதவியைத் துறந்தோர் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படும்.
16. உப்பு வரிச்சட்டம் விளக்கிக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் கடலோரப்பகுதி மக்கள் வீட்டுத் தேவைக்கான உப்பை உற்பத்தி செய்து கொள்ளலாம்.
17. இந்த ஒப்பந்தத்தைத் காங்கிரஸ் கடைபிடிக்கத் தவறினால் பொது மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கலாம்.

காந்தி இர்வின் ஒப்பந்தம் பரஸ்பர நம்பிக்கையின் மீது செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்பாடாகும். முதன்முறையாக ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசைத் தன்கது சமமாக மதித்த, அதன் பிரதிநிதியான காந்தியுடன் செய்து கொண்ட சமரச உடன்படிக்கையாகும்.

இந்திய அரசியல் சட்ட வளர்ச்சி வரலாற்றில் இவ்வொப்பந்தம் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக அரசாங்க அடக்குமுறை தற்காலிகமாக நின்றது. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் போராடுவதற்கான புதுப்பலம் பெற்றது. காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

காந்தி இர்வின் ஒப்பந்தத்துக்குப் பரவலான வரவேற்பு இருந்தபோதிலும் ஜவஹர்லால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்கள் இவ்வுடன்பாட்டால் இந்தியாவின் மீது இங்கிலாந்துக்கிருந்த கட்டுப்பாடு எவ்வகையிலும் குறையவில்லை என்று குறை கூறினர்.

கராச்சியில் கூடிய காங்கிரஸ் 1931 மார்ச்ச காந்தி இர்வி ஒப்பந்தத்தை அங்கீகரித்தது, அதுமட்டுமல்ல காந்தியைத் தனது ஏகப்பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பி வைத்தது காங்கிரஸ்

### இரண்டாவது வட்டமேஜை மாநாடு 1931

இரண்டாவது வட்ட மேஜை மாநாடு 1931 செப்டம்பர் 7 லிருந்து டிசம்பர் 7 வரை நடைபெற்றது. மாநாடு துவங்கி ஐந்து நாட்களுக்குப் பிறகு செப் 12 காந்தி கலந்து கொண்டார். மொத்தம் 107 பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பங்கேற்றனர். பிரிட்டிஷ் பிரமர் தலைமையேற்றார் இந்தியாவில் வருங்கால அரசியல் சட்ட அமைப்பும் சிறுபான்மையினரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பிரதானமாக விவாதிக்கப்பட்டது.

அம்பேத்காரும், ஜீன்னாவும் தனித்தொகுதித் திட்டத்தை ஆதரித்தனர். இந்தியத் தலைவர்களுக்கிடையே இதுபற்றிய கரத்துடன்பாடு இன்மையால் சிறுவான்மையனரக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்புகள் பற்றி பிரிட்டிஷ் அரசாங்மே முடிவு செய்யும் என்று அறிவித்தார் பிரதமர் ராம்சே மர்டொனால்டு அதன் விளைவே வகுப்பு தீர்வு (Communal Award) ஆகும் தனது மகத்தான முயற்சியில் தோல்விகண்ட காந்தி தோல்வியை ஏற்றுக்கொண்டு வெறுங்கையோடு இந்தியா திரும்பினார்.

### மீண்டும் போராட்டம்

இர்வின் பிரபுவுக்குப் பின் வைசிராயாக வந்த விலிங்டன் பிரபு (Lord Willington 1931-36) காந்தி - இர்வின் ஒப்பந்தத்தைக் கைவிட்டார் அடக்குமுறையைக் கையாண்டார். ஐக்கி மாகாணத்தில் வரிகொடாக கிளர்ச்சியில் ஈடுபட்ட நேரு. ஷெர்வானி, புருஷோத்தம்தாஸ், தாண்டன் போன்றோர் கைது செய்யப்பட்டனர். வங்காளத்தில் சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் கடுமையாக அடக்கப்பட்டன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான்அப்துல் கபார்கான் கமிஷனர் நடத்திய தர்பாரில் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக கைது செய்யப்பட்டார்! அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த அவரது தொண்டர்கள் மிருகத்தனமாகத் தர்க்கப்பட்டனர். ஈவிரக்கமின்றிச் சுடப்பட்டனர். இவையாவும் காந்தி லண்டனில் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டிருந்தபோது நிகழந்தவையாகும்.

காந்தி இந்தியா திரும்பியவுடன் (1931 டிசம்பர் 28) இந்தியாவில் நடந்த அத்துமீறல்கள் பற்றி அறிந்தார்.

காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் துவக்கத் தீர்மானித்தார். 1932 ஜனவரி 3ஆம் நாள் போராட்டம் திரும்பவும் துவக்கப்பட்டது. அரசாங்கம் நான்கு நெருக்கடிச் சட்டங்களைப் பிறப்பித்துப் போராட்டத்தை அடக்கத் துணிந்தது. போராட்டம் புதுப்பிக்கப்பட்ட மறுநாளே (ஜன 4) காந்தி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையிலடைக்கப்பட்டார்.

### வகுப்புவாரித் தீர்வு

இந்தியாவில் சட்டமறுப்ப இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு தனது வகுப்புவாரித் தீர்வை (Communal Award) 1932 ஆகஸ்டு 17 ஆம் நாள் அறிவித்தார். இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றி இந்தியத் தலைவர்கள் ஒருமுடிவுக்கு வரமுடியாமையால் பிரிட்டிஷ் பிரதமர் தன்னிசையாக இத்தீர்வை வழங்கினார். அவ்வகுப்புவாரித் தீர்வின்படி.

1. முஸ்லீமகள், இந்தியாவிலுள்ள ஐரோப்பியர், சீக்கியர்கள் ஆகியோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்.
2. தனித்தொகுதிகள் இடம்பெறாத பிற தகுதியுடைய வாக்காளர்கள் பொதுத் தொகுதியில் வாக்களிப்பர்.
3. பம்பாயில் பலவகை உறுப்பினர் தொகுதிகள் (Plural Member Constituencies) சிலவற்றில் மராத்தியர்களுக்கென ஏழு இடங்கள் ஒதுக்கப்படும்.
4. தாழத்தப்பட்டோருக்கான (னுநிசநளளநன ஊடயளளநள) தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்.
5. ஆங்கிலோ - இந்தியர்கள் தங்களது வகுப்புவாரியாகவே வாக்களிப்பர்.
6. வர்த்தகம், தொழில், தோட்டத்தொழில் ஆகியவற்றுக்குப் பிரதியேகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு வழங்கிய வகுப்புத் தீர்வு இந்திய சமுதாயங்களுக்கிடையே புகுத்தப்பட்ட வெறுப்புத் தீர்வாகும்.

**பூனா உடன்பாடு:-**

மெக்டொனால்டின் வகுப்புத் தீர்வு இந்தியர்களை அதிர்ச்சிக்குள்ளாகியது எரவாடா சிறையிலிருந்த காந்தி தனது உயிரைப் பணயம் வைத்தாவது வகுப்புத் தீர்வை எதிர்ப்பதென்று முடிவு செய்தார்.

இந்துக்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கும் நோக்கத்தோடு தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இது தவிர்க்கப்பட வேண்டிய திணிப்பு எனக் கருதிய காந்தி அதற்கெதிராகச் சாகும்வரை உண்ணாவிரத்தை (fast Unto Death) த் துவக்கினார்.

மாளவியாவின் முயற்சிகள் பிரதான இந்துத் தலைவர்கள் பூனாவில் கூடினர். மாளவியா, சாப்ரூ, ராஜேந்திர பிரசாத், அம்ரித்லாஸ் தக்கார், ராஜகோபாலாச்சாரி, பிர்லா, வல்லபாய் பட்டேல், சரோஜினி நாயுடு, குன்ஸ்ரூ அம்பேத்கார், எம்.சி.ராஜா போன்றோர். விரிவாக விவாதித்த பின்னர் ஒரு உடன்பாடுக்கு வந்தனர். அந்த உடன்பாடே பூனா உடன்பாடு (Poona Pact) என்றழைக்கப்படுகிறது.

பூனா உடன்பாட்டின் படி

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனித்தொகுதியல் இருக்காது.
2. பிற இந்துக்களைப் போலவே பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பர்!
3. பொது தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கென குறிப்பிட்ட இடங்களில் ஒதுக்கப்படும்.
4. ஒவ்வொரு ஒதுக்கப்பட்ட இடத்துக்கும் தாழ்த்தப்பட்டோர் நான்கு வேட்பாளர்களை தங்களுக்குள்ளிருந்து தேர்ந்தெடுப்பர்.
5. தாழ்த்தப்பட்டோருக்க அளிக்கப்படும் வேட்பாளர் தேர்வு பற்றிய தொடக்கத் தேர்தல்கள் (ீசைஅயசல நுடநஉவழைெ) ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கும்.
6. தாழ்த்தப்பட்டோருக்கு உள்ளாட்சி மன்றங்களிலும், பொதுப்பணிகளிலும் போதிய இடங்கள் அளிக்கப்படும்.

**மூன்றாவது வட்டமேஜை மாநாடு 1992**

இந்திய தலைவர்கள் வகுப்புவாதச் சிக்கலைத் தீர்ப்பதிலும் பலவீனப் பட்டுப்போன சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துவதிலும் ஈடுபட்டிருந்தபோது

மூன்றாவது வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. அது 1932 நவம்பர் 12 லிருந்து டிசம்பர் 24 வரை நடைபெற்றது. அம்மாநாட்டிற்க 46 தெரிந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் மட்டுமே பிரநிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் இதில் கலந்து கொள்ளவில்லை. இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் போது அமைக்கப்பட்ட துணைக்குழுக்களின் அறிக்கைகள் பற்றியே விவாதம் நடைபெற்றது. குறிப்பாக பாதுகாப்பு விதிகள் கூட்டாட்சியில் மன்னர் மாநிலங்கள் இணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள் எஞ்சியுள்ள அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்தளிப்பது ஆகிய பிரச்சனைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன. மூன்று வட்ட மேஜை மாநாடுகளும் வீண் முயற்சிகள் என கூற முடியாது இந்தியக் கூட்டாட்சி கூட்டாட்சிச் சட்டமன்றம் நீதிமன்றம், மன்னர் மாநிலங்கள் இணைவது போன்ற பல அரசியல் சட்டப் பிரச்சனைகள் பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன இம்முடிவுகளையெல்லாம் உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை (White Paper) தயாரிக்கப்பட்டு 1933 மார்ச் மாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது தான் 1935 இந்திய அரசாங்கச் சட்டமாகும்.

1) வட்ட மேஜை மாநாடுகளைப் பற்றி ஒரு கட்டுரை வரைக?
2) காந்தி இர்வின் ஒப்பந்தம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக?

## 1935-ம் வருட சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலை

மூன்று வட்டமேஜை மாநாடுகளின் விளைவாக புதிய அரசியலமைப்புக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. மாநாட்டு முடிவுகளை உள்ளடக்கிய ‘வெள்ளை அறிக்கை’ (white paper) பிரிட்டிஷ் பாராளுமன்றத்தல் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வெள்ளை அறிக்கையைப் பரிசீலிப்பதற்காக பாராளுமன்றத்தின் கூட்டு உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குழு ஒன்று லின்லித்கோ பிரபு தலைமையில் அமைக்கப்பட்டது. இந்திய அரசியல் வாழ்வின் வளர்ச்சியில் ஆர்வமும் நம்பிக்கையும் கொண்ட இந்தியர்கள் இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இந்தக்குழு பதினெட்டு மாதங்கள் விரிவாகப் பரிசீலித்த பின்னர் 1934 நவம்பர் 11-ம் தேதி தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இந்த குழுவின் பரிந்துறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. மசோதா டிசம்பர் 19-ம் தேதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பொதுமக்கள் சபையிலும், பிரபுக்கள் சபையிலும் நடைபெற்ற விரிவான விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டது. 1935 ஆகஸ்ட் 4ல் மன்னரின் ஒப்புதலைப் பெற்றுச் சட்டமானது. இதுவே 1935-ம் வருட இந்திய அரசாங்க சட்டம் எனப்படுகிறது. இச்சட்டம் 1937 ஏப்ரல் 1ம் தேதி (!) நடைமுறைக்கு வந்தது.

### 1935-ம் வருட சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:-

மிகவும் நீளமானதும், விரிவானதுமான 1935-ம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் 321 விதிகளையும் 10 அட்டவணைகளையும் கொண்டது ஆகும். இதன் முக்கிய ஷரத்துக்கள் பின்வருமாறு.

## 1) மாநில சுயாட்சி:- (Provincial Autonomy)

மாநிலங்களில் நடைபெற்று வந்த இரட்டை ஆட்சி முறை (னுலயசஉாவ) ஒழிக்கப்பட்டது. மாநிலங்களில் சுயாட்சிமுறை புகுத்தப்பட்டது. இதன்படி மாநில அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறை, மாற்றப்பட்ட துறை என்ற அதிகாரப் பங்கீடு முறை ஒழிக்கப்பட்டது. மாநிலங்களில் எல்லா அதிகாரங்களும் இச்சட்டப்படி இந்திய அமைச்சர்களிடமே ஒதுக்கப்பட்டன. மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் மீது கவர்னர் ஜெனரலின் கட்டுப்பாடும் ஓரளவு குறைக்கப்பட்டது. ஆனால் அமைச்சர்கள் முழு சுதந்திரமாக செயல்பட முடியவில்லை. கவர்னரின் அதிகாரங்கள் அமைச்சர்களை கட்டுப்படுத்தியே வைத்தன.

## 2)அகில இந்தியக் கூட்டாட்சி:- (All India Federation)

பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும் இந்திய சுதேச அரசுகளையும் கொண்ட ஒரு அகில இந்திய கூட்டாட்சி அமைக்கப்பட இச்சட்டம் வழிவகுத்தது. சுதேச அரசுகள் தங்கள் விருப்பப்படி கூட்டாட்சியில் சேருவதற்கும், சேராமல் இருப்பதற்கும் உரிமை உண்டு. கூட்டாட்சியில் சேர முடிவு செய்த அரசுகள் எந்த அளவிற்கு தாங்கள் அதிகாரங்களை கூட்டாட்சி அரசுக்கு விட்டுக் கொடுக்கிறோம் என்று ஒரு 'இணைப்புப் பத்திரத்தில்' உறுதிமொழி கொடுக்க வேண்டும். கூட்டாட்சியில் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் உள்நாட்டு விவகாரங்களில் முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டது.

## 3) மத்தியில் இரட்டை ஆட்சி:- (Dyarchy at the centre)

மாநிலங்களில் இரட்டை ஆட்சி முறையை ஒழித்துக் கட்டிய இச்சட்டம் அதனை மத்தியில் அறிமுகப்படுத்தியது. அதன்படி, மத்திய அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறைகள் மாற்றப்பட்ட துறைகள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறையைச் சார்ந்தவை. இதனை கவர்னர் ஜெனரலும் அவரால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களும் நிர்வாகம் செய்தனர். மாற்றப்பட்ட துறையானது கவர்னர் ஜெனரலினால் நியமிக்கப்பட்ட பத்துக்கும் மேற்படாத அமைச்சர்களின் பிரதிநிதிகளையும், சிறுபான்மையினரையும் கவர்னர் ஜெனரல் நியமித்துக் கொள்ளலாம். ஆனால் ஒதுக்கப்பட்ட துறை, மாற்றப்பட்ட துறை ஆகியவற்றின் ஒட்டு மொத்த கட்டுப்பாடு கவர்னர் ஜெனரலிடமே கொடுக்கப்பட்டது.

### 4) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு:-

இச்சட்டப்படி சிறுபான்மை சமுதாயங்களுக்கான தேர்தல் பாதுகாப்புகளும் இட ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டன. பெரும்பான்மை இனத்தவரிடமிருந்து சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் உண்மையில் இந்த ஷரத்தின்படி கவர்னர் ஜெனரலும், கவர்னர்களும் சேர்ந்து மந்திரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் மேலும் கட்டுப்படுத்த வழிவகுக்கப்பட்டதாகத்தான் கருதப்பட்டது.

### 5) இங்கிலாந்து பாராளுமன்றத்தின் மேன்மை:-

1935-ம் வருட சட்டமானது நெகிழ்ச்சி இல்லாத சட்டமாகும். கூட்டாட்சி சட்டமன்றமோ அல்லது மாநில சட்டமன்றங்களோ இச்சட்டத்தை மாற்றவோ, திருத்தங்கள் கொண்டு வரவோ முடியாது. இங்கிலாந்து பாராளுமன்றம் மட்டுமே இச்சட்டத்தை திருத்த முடியும். அரசியலமைப்புத் திருத்தங்கள் வேண்டுமென்று

அரசரிடம் கேட்டுக் கொள்ள இந்திய சட்டமன்றங்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டது.

### 6) கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court):-

சட்ட அமைப்பு சம்பந்தப்பட்ட சிக்கல்களையோ, மத்திய அரசுக்கும் ஒரு மாநிலத்திற்கும் இடையே எழக்கூடிய வேறுபாடுகளையோ அல்லது ஒரு மாநிலத்தறிகும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே ஏற்படக்கூடிய தகராறையோ தீர்த்து வைப்பதற்காக கூட்டாட்சி நீதிமன்றம் அமைக்கப்பட வழி செய்யப்பட்டது. ஆனால் இதுவே இறுதியான நீதிமன்றம் கிடையாது. இங்கிலாந்திலுள்ள பிரிவு கவுன்சிலுக்கு மேல் முறையீடு செய்யலாம்.

### 7) வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டது (Extention of Franchise):-

1935-ம் வருடச் சட்டப்படி வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் மொத்த மக்கள் தொகையில் பத்து சதவீதம் மக்கள் வாக்குரிமை பெற்றனர். ஆனால் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முறை மேலும் விரிவுபடுத்தப்பட்டதால் அது இந்திய ஒற்றுமையை மேலும் குலைத்துப் போடுவதாக அமைந்தது. மத்திய மேல்சபை உறுப்பினர்கள் 260 ஆகவும், கீழ்சபை உறுப்பினநர்கள் 375 ஆகவும் உயர்த்தப்பட்டது. மொத்தம் உள்ள பதினொரு மாநிலங்களில் ஆறு மாநிலங்களில் ஈரங்க சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

### 8) அதிகாரப் பங்கீடு (Division of powers):-

மாநில அரசுகளுக்கும் மத்திய கூட்டாட்சி அரசுக்குமிடையே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த அதிகாரப் பங்கீடு பற்றி மூன்று பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. அவை, கூட்டாட்சி அதிகாரப் பட்டியல், மாநில அதிகாரப் பட்டியல், இரண்டு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரப் பட்டியல் என்பனவாகும்.

கூட்டாட்சி அதிகாரப் பட்டியலில் 59 இனங்களும், மாநில அதிகாரப் பட்டியலில் 36 இனங்களும் இடம் பெற்றன. இந்த மூன்றாவது பட்டியலில் உள்ள இனங்கள் பற்றி கூட்டாட்சி அரசும், மாநில அரசும் முரணான சட்டங்களை இயற்றினால் கூட்டாட்சி அரசின் சட்டங்களே செல்லுபடியாகும். இந்த மூன்று பட்டியல்களிலும் காணாத அதிகாரம் ஏதேனும் இருந்தால் அதை மாநில அரசுக்கோ மத்திய கூட்டாட்சி அரசுக்கோ கவர்னர் ஜெனரல் வழங்கலாம்.

### 9) இந்தியா கவுன்சில் ஒழிக்கப்பட்டது:- (Abolition of India Council)

இந்தியா அமைச்சரின் இந்தியா கவுன்சில் இச்சட்டத்தின்படி ஒழிக்கப்பட்டது. அதற்கு பதிலாக இந்தியா அமைச்சர் மூன்று பேருக்கு குறையாத ஆறு பேருக்கு அதிகப்படாத உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துக் கொள்ள இச்சட்டம் வழிவகுத்தது. மேலும் இச்சட்டப்படி மாநில சுயாட்சி வழங்கப்பட்டதால் இநதிய அமைச்சரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைந்து போய்விட்டன.

### 10) வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை விரிவுபடுத்தப்படுதல் :

1935ம் வருட சட்டப்படி வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையானது மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இந்துக்களில் தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. முஸ்லீம்களுக்கு கூட்டாட்சி சட்டமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தேச

நலன்களுக்கு விரோதமானதாகவும் வளர்ந்து வரும் தேசிய உணர்வுகளை நசுக்கும் விதமாகவும் அமைந்தது.

### 11) பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.

1935-ம் வருட சட்டப்படி பர்மா இந்தியாவிலிருந்து பரிக்கப்பட்டது. மேலும் இதுவரை ஹைதராபாத்தின் ஒரு பகுதியாக இருந்த பேரார் (டீநசயச) நிர்வாக வசதியின் பொருட்டு மத்திய மாகாணத்துடன் இணைக்கப்பட்டது.

இவ்வாறு 1935-ம் வருட இந்திய அரசாங்க சட்டம் பல சிறப்ப அம்சங்களைக் கொண்டு விளங்கியது. இனி இந்த சட்டத்தின்படி மத்திய அமைக்கப்பட்ட கூட்டாட்சி அரச பற்றியும் மாநிலங்களின் அறிமுகப்படுத்தப்பட்ட மாநில சுயாட்சி பற்றியும் விரிவாகக் காணலாம்.

## 1.அமைந்திந்தியக் கூட்டாட்சி (All India Federation)

### கூட்டாட்சி அமைப்பு உருவாக்கப்படுதல்:-

1935-ம் வருட சட்டம் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களும், இந்தி சுதேச அரசுகளும் சேர்ந்த ஒரு கூட்டாட்சி அரசினை ஏற்படுத்த உதவியது. பிரிட்டிஷ் மாநிலங்கள் அனைத்தும் மத்திய கூட்டாட்சியில் கட்டாயமாக சேர வேண்டும். ஆனால் சுதேச அரசர்கள் இறைமை யுடையவராக இருப்பதால் அவர்களை கூட்டாட்சி அரசில் சேரக் கட்டாயப்படுத்த முடியாது. கூட்டாட்சி அரசில் சேருவதும், விலகி இரப்பதும் அவர்களில் சொந்த விருப்பத்திற்கு விடப்பட்டது. கூட்டாட்சி அரசில் சேராத சுதேச அரசுகள் ஆங்கில அரசின் மூலம் அதன் மேலாண்மையின் கீழ் தொடர்ந்து இருந்து வரும் கூட்டாட்சி யில் சேர்ந்த சுதேச அரசுகள் சில குறிப்பிட்ட அதிகாரங்களை கூட்டாட்சிக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.

கூட்டாட்சியில் சேரும் சுதேச அரசர்கள் ஒவ்வொருவரும் ஒரு ‘இணைப்பு ஒப்பந்தத்தினை’ (ஐளைவசரஅநவெ ழக யுஉநளளழைெ) முதலில் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்த விதிகளை ஏற்றுக் கொண்ட பின்னரே கூட்டாட்சியில் சேர அனுமதிக்கப்படுவர். அந்த ஒப்பந்த விதிகள் வருமாறு கவர்னர் ஜெனரல் கூட்டாட்சி அரசின் சட்ட மன்றம், நீதிமன்றம் மற்றும் கூட்டாட்சி அரசின் நிர்வாக அதிகாரிகள், ஆட்சி இயந்திரம் ஆகியவை தடையில்லாமல் சுதேச சமஸ்தானங்களில் செயல்பட ஒத்துழைக்க வேண்டும் என்பதேயாகும்.

மாநில அரசுகள் மீதும், சுதேச அரசுகள் மீதும் கூட்டாட்சி அரசு செலுத்தும் அதிகாரம வேறுபட்டிருந்தது. எல்லா மாநிலங்களின் மீதும் ஒரே மாதிரியான அதிகாரத்தைக் கூட்டாட்சி அரசு செலுத்தும், ஆனால் சுதேச அரசுகளைப் பொறுத்த வரையில் கூட்டாட்சியின் அதிகாரங்கள் அரசுக்கு அரசு வேறுபட்டிருக்கும். சட்டம் இயற்றும் அதிகாரம் கூட்டாட்சிக்கு இருந்தது. எனினும் சுதேச அரசுகள் ஒப்புதல் தெரிவிக்காவிடில் கூட்டாட்சியின் சட்டங்கள் செல்லாமல் போய்விடும்.

மத்திய சட்டமன்றங்களுக்க பிரதிநிதிகளை அனுப்புவதிலும் மாநிலங்களுக்கும் சுதேச அரசுகளுக்குமிடையே வேறுபாடு இருந்தது. மாநிலங்களிலிருந்து உறுப்பினர்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் சுதேச அரசுகள் தங்கள் பிரதிநிதிகளை தாங்களே விருப்பம் போல் நியமித்துக் கொள்ளலாம். மேலும் சுதேச அரசுகளின்

உறுப்பினர் எண்ணிக்கை. அவற்றின் பரப்ப மக்கள் தொகை ஆகியவை அடிப்படையில் நிர்ணயிக்கப்படவில்லை. (ஆனால் இந்த அனைந்திந்திய கூட்டாட்சி அரசு உருவாகவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.)

## II. கூட்டாட்சி நிர்வாகம் (Federal Executive)

### மத்திய அரசில் இரட்டை ஆட்சி : (Diarchy in the Centre)

1935-ம் வருடச் சட்டப்படி மாநிலங்களில் ஒழிக்கப்பட்ட இரடடை ஆட்சி முறை மத்தியில் புகுத்தப்பட்டது. இதனால் கூட்டாட்சி அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும் மாற்றப்பட்டதுறைகள் எனவும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டன.

### a) ஒதுக்கப்பட்ட துறை :

ஒதுக்கப்பட்ட துறையில் (சுநுளநசஎன ளூரடிதநஉவ) நாட்டின் பாதுகாப்ப அயல்நாட்டு உறுவுகள், சமய விவகாரங்கள், நிதி செலவாணி நாணயமுறை, அகில இந்திய பணிகள், ரிசர்வ் பேங்க், ரயில் பாதைகள் போன்றவை அடங்கியிருந்தன. இத்துறைகளை கவர்னர் ஜெனரலுக்கு பொறுப்பான மூன்று ஆலோசகர்கள் நிர்வகித்து வருவார்கள். இத்துறைகளில் கவர்னர் ஜெனரல் முழு அதிகாரம் கொண்டிருந்தார். மாற்றப்பட்ட துறைகளிலும் கவர்னர் ஜெனரல் தன் விருப்பப்படி நடக்க உரிமை உண்டு. இவ்வாறு கூட்டாட்சி அரசின் உயர்ந்த தலைவராக விளங்கியவர் கவர்னா ஜெனரலேயாவார்.

### b) மாற்றப்பட்ட துறை – அமைச்சர்கள் :

ஒதுக்கப்பட்ட துறைகளில் குறிக்கப்பட்ட அதிகாரங்கள் போக மற்ற துறைகள் அனைத்து மாற்றப்பட்ட துறைகள் ஆகும். இத் துறைகளை பத்துபேருக்கு மேற்படாத அமைச்சர்களைத் சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்களிலிருந்து கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்படுவர். அமைச்சராக நியமனம் செய்யப்படுபவர்கள் கூட்டாட்சி சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். அப்படி உறுப்பினராக இல்லாத ஒருவர் அமைச்சராக நியமனம் செய்யப்பட்டால் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் கூட்டாட்சி சட்ட மன்றங்களில் ஏதேனும் ஒன்றில் உறுப்பினராதல் வேண்டும். இல்லையென்றால் அமைச்சராக பதவியில் நீடிக்க முடியாது.

இந்த மாற்றப்பட்ட துறையிலும் கவர்னர் ஜெனரல் தன் விருப்பப்படி நடக்க அதிகாரம் உண்டு நாட்டின் சட்டம் ஒழுங்கு மத்திய இறக்குமதி, சுதேச அரசுகளின் பாதுகாப்ப போன்றவற்றில் தம் விருப்பப்படி நடக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு. தலைமை ஆளுநரின் இந்த அதிகாரம் சட்டமன்றத்தின் உரிமைகளைக் குறைப்பதாக அமைந்தது. மேலும் அமைச்சரவை சுதந்திரமாக இயங்குவதைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த அதிகாரம் பயன்பட்டது.

மத்திய அரசில் நெடுக்கடிகள் ஏற்படுமாயின் அமைச்சரவையைக் கலைத்து விட்டு கவர்னர் ஜெனரலே எல்லா அதிகாரங்களையும் எடுத்துக் கொள்ளலாம். இந்தநிலை ஆறுமாதங்களுக்கு மேல் நீடிக்கக் கூடாது அவ்வாறு நீடிக்க வேண்டுமென்றால் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டும். அதுவும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் வழங்கப்பட மாட்டாது இவ்வாறு மத்தியில் இரட்டை ஆட்சி ஏற்பட்டது.

## மத்திய கூட்டாட்சி சட்டமன்றம் (Federal Legislative)

மத்திய கூட்டாட்சி சட்டமன்றமானது இரண்டு சபைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. மாநிலங்களவை (Council of State) என்பது மேலவை ஆகும். கூட்டாடசி சட்டமன்றம் (குநனநசயட யுளளழஅடிடல) என்பது கீழ் சபையாகும். இந்த இரண்டு சபைளுக்கும் தலைவா் கவா்னா் ஜெனரலேயவாா்.

### a)மாநிலங்களவை (Council of State)

இது ஒரு நிரந்தரமான சபையாகும். இது கூட்டாட்சி சட்டமன்றத்தின் மேல் சபையாகும். இதன் உறுப்பினா்கள் 260 போ் இவா்களில் மாநிலங்களின் பிரதிநிதிகள் 156 போ் சுதேச அரசுகளின் பிரதிநிதிகள் 104 போ் ஆவா். மேல்சபை உறுப்பினா்களில் மூன்றில் ஒரு பகுதியினா் மூன்றாண்டுகளுக்க ஒரு முறை பதவி விலகுவா். அதே எண்ணிக்கையுடைய புதிய உறுப்பினா்கள் தோ்ந்தெடுக்கப்படுவா். மாநிலங்களின் பிரதிநித்துவம் வகுப்பவா் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி இந்துக்களுக்கு 75 இடங்கள், தாழ்த்தப்பட்டவா்களுக்கும், சீக்கியா்கள் 4, முஸ்லீம்கள் 49, ஆங்கிலோ இந்தியா்1, ஐரோப்பிய சமூகத்தினா் 7, இந்திய கிறிஸ்தவா்பன் 2, பெண்கள் 6, கவா்னா் ஜெனரலினால் நியமனம் செய்யப்படுபவா் 6 என்று பிரிக்கப்பட்டன.

சொத்து, படிப்பு, வரி செலுத்துதல் ஆகியவைகளின் அடிப்படையில் வாக்காளா்களின் தகுதி நிா்ணயிக்கப்பட்டதால் வாக்குரிமை பெற்றோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்தது. மேலும் எல்லா மாநிலங்களுக்கும் சீரான முறையிலும் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

### b) கூட்டாட்சி சட்டமன்றம் (Federal Assembly)

இது மத்திய கூட்டாட்சி சட்டமன்றத்தின் கீழ் சபையாகும். இதன் மொத்த உறுப்பினா்கள் 375 போ் இவா்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தோ்ந்தெடுக்கப்படுவா். மொத்த உறுப்பினா்களில் மாநிலங்களின் உறுப்பினா்கள் 250 போ். சுதேச அரசுகளுக்கு மீத 125 இடங்கள் ஒதுக்கப்பட்டது. உறுப்பினா்களைத் தோ்ந்தெடுப்பதில் நேரடி தோ்தல் தவிா்க்கப்பட்டது. உறுப்பினா்களை மாநில சட்டமன்ற உறுப்பினா்கள் ஒற்றை மாற்று வாக்கு முறை (ளுபைெடந வசயளௌகநசசயடிடந ஏழவந) வழக்கம்போல் வகுப்பு வாரியாக பல்வேறு இனங்களுக்கும் பிரிக்கப்பட்டன. அரசா்களின் பிரதிநிதிகளை மன்னா்கள் நியமித்து அனுப்பி வைத்தாா்கள்.

### c) அதிகாரங்களும் சட்டமியற்றும் முறையும்

சட்டமியற்றுவதில் இரு சபைகளுக்கும் சம அதிகாரம் உண்டு கூட்டாட்சி அரசு கொண்டுவரும் மசோதா சட்டமாக வேண்டுமென்றால் அது மத்திய கூட்டாட்சி சட்டமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட வேண்டும். இரு சபைகளில் எந்த சபையிலும் மசோதாக்களை அறிமுகப்படுத்தலாம். ஆனால் நிதி மசோதாக்கள் கீழ் சபையில்தான் முதலில் கொண்டு வரவேண்டும்.

கூட்டாட்சி அரசுக்கென்று ஒதுக்கப்பட்ட அதிகாரங்களில் சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம். அதே போல மத்தி மாநில அரசுகளுக்குப் பொதுவான துறைகளிலும் சட்டம் இயற்ற முடியும் அவசரகாங்களில் மாநில அதிகாரப் பட்டியலிலுள்ள அதிகாரங்கள் மீதும் சட்டம் இயற்றிக் கொள்ளலாம். மசோதாக்கள் இரு சபைகளிலும் நிறைவேறிய பின்னா் கவா்னா் ஜெனரலில்

ஒப்புதல் பெற்றே சட்டமாகும். தனது விஷே அதிகாரங்களைப் பயன்படுத்தி அந்த சட்டங்களை நிராகரிக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு.

ஒரு மசோதா குறித்து இரு சபைகளுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பாடுமனால் கவர்னா ஜெனரல் இரு சபையின் கூட்டுக் கூட்டத்தைக் (துழவைெ ளுவைவவைபெ) கூட்டி அதில் பெரும்பான்மை வாக்குப்படி முடிவு செய்யலாம். கவர்னர் ஜெனரல் விரும்பினால் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல். அதை சட்டமன்றத்தின் மறு ஆய்வுக்கு திருப்பி அனுப்பலாம். அயல் நாட்டுறவு, சுதேச அரசுகளின் நிலை போன்றவற்றைப் பற்றி கவர்னர் ஜெனரலின் அனுமதியின்றி சட்டமன்றம் விவாதிக்க முடியாது. கவர்னர் ஜெனரலின் ஊதியம் பற்றியும் சுதேுச அரசுகளின் செலவினங்கள் பற்றியும் விவாதிக்க சட்டமன்றத்திற்கு உரிமை இல்லை. பாதுகாப்பு, வெளிஉறுவு சமயம் ஆகியவை பற்றிய நிதிமசோதாக்களை சட்டமன்றம் விவாதிக்கலாம். ஆனால் மன்றம் விவாதிக்கும் மசோதா நாட்டின் சட்டமன்றத்திற்கும் ஒழுங்கிற்கும் கவர்னர் ஜெனரல் தடுக்கலாம். இவ்வாறு கூட்டாட்சி சட்டமன்றங்களின் அதிகாரங்கள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலிருந்தன.

**மாநில ஆட்சி**

## a) நிர்வாகத்துறை : (Executive)

1935-ம் வருடச் சட்டப்படி மாநிலங்களில் சட்டசபையில் பெரும்பான்மை பெற்றோரின் ஆதரவ பெற்ற பொறுப்பான அரசுகள் அமைவதற்கு வழி வகுத்தது. மாநில நிர்வாகம் பொதுவாக ஒரு அமைச்சரவை மூலமாக செயல்படுத்தப்பட்டது. அமைச்சர்கள் மாநில சட்டமன்றங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து கவர்னரால் நியமிக்கப்பட்டவர்களாவர். மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு முதலிய துறைகள் தவிர பிற துறைகளில் அமைச்சர்களின் ஆலோசனைப்படியே கவர்னர் நடக்க வேண்டும். 1935-ம் வருடச் சட்டப்படி மாநிலங்களில் மாநில சுயாட்சி அறிமுகபடுத்தப்பட்டது.

## b) கவர்னரின் அதிகாரங்கள் :

இங்கிலாந்து மன்னரின் பிரதிநிதி என்ற முறையிலும், பேரரசின் கொள்கைகளை மாநில அளவில் செயல்படுத்துகிறவர் என்ற வகையிலும், கவர்னர் சிறப்பான அதிகாரங்களைப் பெற்றிருந்தார். சட்டசபைக்க தலைமை தாங்குதல், சபையை கூட்டுதல், கலைத்தல், அமைச்சர்களை நியமித்தல், நீக்குதல், கவர்னர் ஜெனரலின் ஆணைகளை நிறைவேற்றுதல் ஆகியவைகள் கவர்னரின் சிறப்ப அதிகாரங்கள் ஆகும். மேலும் ரத்து அதிகாரம், மாநில நீதி மன்றத் தலைவரை நியமித்தல், அவசர சட்டங்களைப் பிரகடனப்படுத்துதல் ஆகிய அதிகாரங்களையும் பெற்றிருந்தார். மாநிலத்தில் அரசியல் நெருக்கடி தோன்றினால் கவர்னர் ஜெனரலில் அனுமதி பெற்று, மாநில சட்டசபையையம் அமைச்சரவையையும் கலைந்து விட்டு கவர்னரே மாநில நிர்வாகத்தை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு கவர்னர் பெற்றிருந்த சிற்பப அதிகாரங்கள் காரணமாக அவர் மாநில சட்டமன்றத்திற்கோ, அமைச்சரவைக்கோ நீதிமன்றத்திற்கொ கூட பொறுப்பானவர் அல்ல. எனவே அவரது செல்வாக்கும் அதிக்கமும் மாநில அளவில் எல்லாத்துறைகளிலும் மிகுந்து காணப்பட்டன.

## c) மாநில மேல்சபை : (Legislative Council)

1935-ம் வரடச் சட்டப்படி சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாநிலம், பீகார், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் இரு சபைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் அமைந்தன மற்ற மாநில்களில் ஒரே சபையைக் கொண்ட சட்டமன்றங்கள் அமைந்தன.

மாநில மேல்சபை நிரந்தரமானது கலைக்க முடியாதது இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பதவியிலிருந்து விலகுவர். அவர்களின் இடத்திற்குப் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். எனவே ஒரு தொடர்ச்சி இருந்தது. மேல்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த மாநில மக்கள் தொகை நியமனங்கள் மூலமாகவும் உறுப்பினர்கள் சபைக்கு வந்தனர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பெண்களுக்குப் பிரதிநிதித்துவம், பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் கவனம் தலைவர் துணைத் தலைவர் இருந்தனர். தலைவருக்கு முடிவு செய்யும் வாக்கு அளிக்கப்பட்டது.

## d) மாநில கீழ்சபை (Legislavie Assembly):

மாநில கீழ்சபை உறுப்பினர்கள் ஐந்தாண்டுகளுக்க ஒரு முறை தோந்தெடுக்கப்பவர் இந்த கீழ் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அந்தந்த மாநில மக்கள் தொகை அடிப்படையில் அமைந்திருந்தது நியமனமுறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு நேரடி தேர்தல் முறை வலியுறுத்தப்பட்டது. எனவே தேர்தல் தொகுதிகள் முக்கியத்துவம் பெற்றன. முஸ்லீம்கள், ஆங்கிலேயர் இந்தியர், ஐரோப்பியர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், வணிகர், நில உடமையாளர்கள் பல்கலைக்கழகங்கள், பெண்கள் போன்ற பதினேழு வகையான பிரிவினர்களின் பிரதிநிதிகள் இடம்பெற வகை செய்யப்பட்டிருந்தது.

வாக்காளர்களின் தகுதிகளை நிர்ணயம் செய்வதில் பதில் சலுகைகள் அளிக்கப்பட்டதால் வாக்காளர் எண்ணிக்கை மூன்று வதவீதத்திலிருந்து பதினான்கு சதவீதத்திற்கு உயர்ந்தது. ஆனால் வாக்களரின் தகதிகள் மாநிலத்தறிகு மாநிலம் வேறுபட்டு இருந்தது. பொதுவாக சொத்துரிமையின் அடிப்படையிலேயே வாக்குரிமை நிர்ணயம் செய்யப்பட்டது. பெண்களுக்க வாக்குரிமை அளிக்கப்பட்டது. பெரும்பாலும் படித்த பெண்கள், சொத்துள்ள பெண்களே வாக்காளர்களாக இருந்தனர்.

### c) மாநில சட்டமன்றகளின் அதிகாரங்கள் :

மாநில சட்டமன்றங்கள் மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் மீதும், மத்திய மாநில அரசுகளுக்கு பொதுவாக கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மீதும் சட்டம் இயற்றலாம். பிரிட்டிஷ் பேரரசின் மற்ற டொமினியன்களைப் பாதிக்கும் வகையிலோ, நடைமுறையில் இருந்து வரும் சட்டங்களைத் திருத்தும் வகையிலோ, ஆங்கில மக்களை வேற்றுமைப்படுத்தும் வகையிலோ சட்டம் இயற்றுதல் கூடாது.

மேலும், பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை திருத்துதல், கவர்னர் ஜெனரலின் அவரசப் பிரகடனங்களைத் திருத்துதல், கவர்னர் ஜெனரலின் சுயமுவு அதிகாரங்கள் ஆகியவை சமபந்தப்பட்ட விவகாரங்களில் சட்டம் இயற்றும் முன்னர் கவர்னர் ஜெனரலின் முன் அனுமதி பெற வேண்டும்.

ஓர் ஆண்டிற்கான வரவ செலவு திட்ட அறிக்கை சட்ட மன்றத்தில் வைக்கப்படும். ஆனால் வரவு செலவுத் திட்டம் வாக் கெடுப்பின் மூலம் முடிவு செய்யப்படும் செலவினங்கள் வாக்கெடுப்பு இல்லாமலேயே முடிவு செய்யப்படும் செலவினங்கள் என்று இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கவர்னரின் சம்பளம், அமைச்சர்களின் சம்பளம், அட்வகேட் ஜெனரலின் சம்பளம், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் ஆயிகவை வாக்கெடுப்பிற்கு விடமுடியாது செலவினங்கள் ஆகும்.

## மாநில சுயாட்சி (Provincial autonomy)

1935-ம் வருடச் சட்டப்படி மாநில இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டு சுயாட்சி மலரும் நாளை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். 1935 ஏப்ரல் 29-ல் ஜவகர்லால் நேருவின் தலைமையில் லக்னோவில் கூடிய காங்கிரஸ் 1935-ம் வருட சட்டத்தை வன்மையாகக் கண்டித்தது அதேசமயம் மாநில சட்ட மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது. தேர்தல் அறிக்கை ஒன்றையும் தயாரித்து வெளியிட்டது.

### பொதுத் தேர்தல்கள் :

1935-ம் வரடச் சட்டத்தில் குறிப்பிட்டபடி மாநிலங்களில் சுயாட்சியினை மலரச்செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன்படி மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தல் 1937 பிப்பரவரி மாதம் நாடு முழுவதும் நடைபெற்றது. தேர்தலில் போட்டியிட்ட முக்கிய அரசியல் கட்சிகள் காங்கிரஸ், முஸ்லீம் லீக், நீதிக்கட்சி ஆகியவைகளாகும். இக்கட்சிகள் நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் தேர்தல்களில் ஈடுபட்டன. பெருவாரியான வாக்காளர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்ததால் மஞ்சள், நீலம், சிவப்பு வர்ணம் பூசப்பட்ட ஓட்டுப்பெட்டிகளே கட்சியின் சின்னங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 1585 தொகுதிகளில் 711 தொகுதிகளில் காங்கிரஸ் வென்றது. இவ்வளவு

பெரிய வெற்றி கிடைத்ததற்குக் காரணம் மக்கள் காந்தியின் மீது வைத்த

நம்பிக்கையே ஆகும். தேர்தலின் போது காந்தியின் கட்சிக்கே எங்கள் ஓட்டு என்று சொல்லியே மக்கள் வாக்களித்தனர்.

### நடைமுறையில் மாநில சுயாட்சி:

சென்னை, மத்திய மகாணம், ஐக்கிய மாகாணம், பீகார், ஓரிசா ஆகிய ஐந்து மாநிலங்களில் காங்கிரஸ் இறுதிப் பெரும்பான்மை பெற்றதால் தனியாக அமைச்சரவையை நிறுவியது. பம்பாய் மற்றும் வடமேற்கு எல்லை மாகாணத்தில் தனிப்பெரும் கம்சியாக விளங்கியதால் பிற கட்சிகளின் உதவியுடன் அமைச்சரவை அமைந்தது. அதாவது மொத்தம் உள்ள 11 மாநிலங்களில் ஏழு மாநிலங்களான வங்காளம், பஞ்சாப், அஸ்ஸாம், சிந்து ஆகியவற்றில் முஸ்லீம் லீக் அமைச்சரவை அமைந்தது.

இவ்வாறு 1935-ம் வருட சட்டப்படி மாநில அளவில் பொறுப்புள்ள ‘இந்திய ஆட்சியை’த் தொடங்கினர். இவ்விதமாக மாநில சுயாட்சி மலர்ந்தது.

**மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியின் செயல்பாடுகள்:**

தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் டெல்லியில் 1937, மார்ச்ச மாதம் கூடி தேசவிடுதலைக்காகப் பாடுபடுவதென்றும், அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தை (Constituent Assembly) அமைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் சுதந்திர ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த முயல வேண்டுமென்றும் தீர்மானம் எடுத்துக் கொண்டனர்.

காங்கிரஸ் கட்சியானது 1935-ம் வருட சட்டத்தை 'உள்ளிருந்தே தகர்க்க வேண்டும்' என்ற நோக்கத்தில்தான் தேர்தலில் போட்டியிட்டது. ஆனால் தேர்தலில் பெற்ற மாபெரும் வெற்றியினால் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டது. வெற்றி பெற்ற மாநிலங்களில் அமைச்சரவையை அமைத்து சுயாட்சிப்பகுதியை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த முடிவு செய்தது. அதன்பின் மாநில கவர்னர்கள் தங்களின் விசேஷ அதிகாரங்களைப் பயன்படுத்திச் சுயாட்சியின் அன்றாட அலுவல்களில் தலையீடு செய்வதைத் தவிர்த்தல் வேண்டும் என்றும், அமைச்சர்களின் பரிந்துரைகளுக்கேற்பவே கவர்னர்கள் செயல்பட வேண்டும் என்ற உறுதிமொழிகளை வைசிராய் லின்லித்கோ பிரபுவிடமிருந்து பெற்றுக் கொண்டு ஆடசிப் பொறுப் பினை ஏற்றுக் கொண்டது. ஆம் 1937 அக்டோபர் மாதம் மாநிலங்களில் மாநில சுயாட்சி மலர்ந்தது.

1) 1935-ம் வருட சட்டத்தின் சிறப்பு அம்சங்கள் யாவை?

## 19. இந்திய அரசியலமைப்பு வளர்ச்சி

## 1935 முதல் 1947 வரை

# ( Constitutional Development between 1935 and 1947)

### 1.ஆகஸ்டு சலுகை

### (August offer)

1935 – ம் வருட சட்டப்படி மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டாலும் கூட, கவர்னர் ஜெனரலுக்கு இருந்த தனிப்பட்ட அதிகாரம், பொது அதிகாரம் ஆகியவை மாநில சுயாட்சிக்கு மதிப்பில்லாமல் செய்து விட்டன. 1939- ம் வருடம் கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தம மசோதாவின் படி நெருக்கடியான காலங்களில் மாநிலங்களின் நிர்வாகத்தில் மைய அரசு தலையிடலாம் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் 1939- ல் இரண்டாவது உலகப்போரில் இந்தியாவும் ஈடுபட்டுள்ளதாக மாநில சட்டமன்றங்களை கலந்து கொள்ளாமல் வைசிராய் அறிவித்து விட்டார். காங்கிரஸ் செயற்குழு வைசிராயின் இந்த ஒருதலைப்பட்ட சமான அறிவிப்பைக் கண்டித்தது. ஆனால் சில நிபந்தனைகளின் பேரில் இந்தியர்கள் தங்கள் உதவியையும் ஆதரவையும் அளிக்க முன் வந்தனர்.

அதன்படி 1) போருக்குப்பின் இந்தியாவின் சுயாட்சிக்கொள்கை பிசிறில்லாமல் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். 2).இந்தியாவிலுள்ள

முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தற்காலிக தேசிய அரசு ஒன்று மத்திய அரசில் ஏற்படுத்தப்பட வேண்டும். 3) அந்த தற்காலிக அரசு இந்திய சட்டமன்றங்களுக்குப் பொறுப்புள்ளதாக இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் இந்தியர்களால், இந்தியர்களுக்காக பொறுப்புள்ள கூட்டரசு ஒன்று மத்திய அரசில் ஏற்ப்பட வேண்டும் என்றார் காந்தி.

## வெள்ளை அறிக்கை: (White Paper, 1939)

இந்த சூழ்நிலையில் வைசிராய் லின்த்கோ பல அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்த பின்னர் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட்டார். அதன்படி, 1) இந்தியா பிற டொமினியன்களுக்கிடையே உரிய இடத்தைப் பெறுவதற்கேற்ப பிரிட்டிஷ் பேரரசுக்குள் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையேயான பிணைப்பை பலப்படுத்துவதே அரசின் கொள்கையாகும். 2) போர் முடிந்த பின்னர் இந்தியாவின் அரசியலமைப்பு முறையை முழுமையாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும். 3) உடனடியாக இந்தியாவுக்கு அதிக அளவு அதிகார மாற்றம் செய்வது என்பது இயலாது. 4) அனைத்து அரசியலமைப்புகள் வழங்கும் ஆலோசனைகளுக்கும், உதவிகளுக்கும் உரிய மதிப்பு அளிக்கப்படும். 5) போர்க்காலத்தில் வைசிராய்க்கு உதவியாக இருக்க ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்படும்.

ஆனால் இந்த வெள்ளைஅறிக்கை காங்கிரசுக்கு திருப்தி அளிக்கவில்லை. “ரொட்டி கேட்டதற்கு கல்தான் கிடைத்தது”.ரொட்டி கேட்டதற்கு கல்தான் கிடைத்தது’. என்றார் மகாத்மா காந்தி.

## ஆகஸ்டு சலுகை: 8, ஆகஸ்டு 1940.

இதற்கிடையில் இங்கிலாந்தில் புதிய அமைச்சரவை பிற் போக்குவாதியான வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்த புதிய அரசானது இந்தியா சுதந்திரம் பெறுவதை கொஞ்சமும் விரும்பாத பழமை வாதிகளைக் கொண்ட அரசு ஆகும். ஆனால் 1940 –ம் வருட மத்தியில் இங்கிலாந்து இரண்டாம் உலகப்போரில் இக்கட்டான நிலையில் இருந்தது. எனவே போர் முயற்சியில் இந்தியர்களின் ஆதரவைப் பெரும் பொருட்டு 1940 ஆகஸ்டு எட்டாம் தேதி வைசிராய் லின்த்கோ புதிய அரசியல் கொள்கைகளைக் கொண்ட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதுவே “ஆகஸ்டு சலுகை” என்றழைக்கப்பட்டது. அதன்படி,

1. இந்தியாவுக்கு டொமினியன் தகுதியை கொடுப்பதே இங்கிலாந்தின் நோக்கமாகும்.
2. இந்திய அரசியல், சமூக, பொருளாதார மரபுகள், தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க இந்தியர்களைக் கொண்ட மன்றம் ஒன்று ஏற்படுத்தப்படும்.
3. வைசிராயின் நிர்வாக சபையில் இந்திய பிரதிநிதிகள் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
4. இந்திய சுதேச அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட போர் ஆலோசனை மன்றம் ஒன்று ஏற்படுத்தப்படும்.
5. அரசியலமைப்பு மாற்றம் செய்யப்படும்போது சிறுபான்மையினரின் கருத்துகளுக்கு முழுக்கவனம் செலுத்தப்படும்.
6. ஒரு கட்சிக்கு அதிகார மாற்றம் செய்வதை அடுத்த பெரிய கட்சி ஆதரிக்குமானால் பிரிட்டிஷ் அரசாங்கம் எந்தக் கட்சிக்கும் அதிகார மாற்றம் செய்யாது.

இந்த ஆகஸ்டு சலுகை மூலம்தான் முதன்முதலாக இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுக்கு இணையானது என்று அறிவிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பைத் தீர்மானிக்கும் உரிமை இந்தியர்களுக்கே வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. போர் முடிந்தவுடன் டொமினியன் தகுதி கொடுப்பதற்கான உத்திரவாதம் வழங்கப்பட்டது.

## 2. கிரிப்ஸ் தூதுக் குழுவின் திட்டம்,1942 (Cripp' s proposals,1942)

ஆகஸ்டு சலுகைகளின் விளைவாக நடைமுறையில் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இரண்டாவது உலகப்போர் துவங்கியதிலிருந்து இங்கிலாந்து இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியமைக்காக காங்கிரஸ் தனது எதிர்ப்பை தொடர்ந்து தெரிவித்து வந்தது. முஸ்லீம்லீக்கும் தனது 'தனிபாகிஸ்தான்' கோரிக்கையை தீவிரமாக வலியுறுத்தி வந்தது. இங்கிலாந்திலும் 'போர் முயற்சிக்கு இந்தியர்களின் பூரண ஒத்துழைப்பை பெற வேண்டும்' என்ற கோரிக்கை வலுவடைந்தது. கிளமண்ட் அட்லி, இந்திய அரசியலமைப்பில் அடிப்படை மாற்றம் செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். இங்கிலாந்து பாராளுமன்றமும் அட்லியின் கொள்கைகளை ஆதரித்தது.

இதற்கிடையில் தென்கிழக்காசியாவில் ஜப்பான் வியத்தகு வெற்றி பெற்றது. ஜப்பானின் வெற்றி ஆங்கிலேயர்களுக்கு கலக்கத்தை அளித்தது. 1942 மார்ச் 8-ல் ரங்கூன் வீழ்ந்தது. இந்தியாவும் ஜப்பானால் தாக்கப்படும் பீதி நிலவியது. எனவேதான் காங்கிரஸின் எதிர்ப்பைச் சமாளிக்கவும் இந்தியர்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெறவும் சர்.ஸ்போர்ட் கிரிப்ஸ்(Sir. Srafford Cripps) தனது குழுவினருடன் 1942 மார்ச் 22-ல் இந்தியா வந்தார். அவர் வைசிராய், மற்றும் இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். தான் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் தயாரித்த அறிக்கையை மார்ச் மாதத்திலேயே வெளியிட்டார். அதற்கு 'கிரிப்ஸ் ஏற்பாடுகள்' (Cripp' s proposals) என்று பெயர். கிரிப்ஸ் ஏற்பாடுகளில் காணப்பட்ட இந்திய அரசியலமைப்பு சம்பந்தப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1) இந்தியாவிற்கு பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து பிரிந்து போகக் கூடிய அதிகாரத்துடன் கூடிய டொமினியன் தகுதி வழங்கப்படும்.
2) போர் முடிந்தவுடனேயே இந்திய அரசியல் சட்டத்தை வரைவதற்கான 'அரசியலமைப்பு சட்டமன்றம்' ஒன்று அமைக்கப்படும். இதில் இந்தியர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருப்பர். இச்சபையில் உறுப்பினர்கள் 'தேர்தல் குழு' மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்
3) புதிய அரசியலமைப்பு சட்டம் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு செயல்படுத்தப்படும். இந்திய மாநிலங்களும் சுதேச அரசுகளும், அந்த சட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். நிராகரிக்கும் மாநிலம் தனக்கென்று ஓர் அரசியலமைப்பு சட்டத்தை தயாரித்துக் கொண்டு சுதந்திரமாக செயல்படலாம். அதிகாரம் பொறுப்பு மாற்றம் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கமும் அரசியலமைப்பு நிர்ணயசபையும் கலந்து பேசி ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்ளும்.
4) இடைக்காலத்தில் பாதுகாப்புத்துறை பிரிட்டிஷ் அரசாங்கத்திடமே இருக்கும்.

1) ஆகஸ்டு சலுகை என்றால் என்ன?

## இந்திய சுதந்திரச் சட்டம், 1947 (Indian Independence Act,1947)

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தின்படி இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபைக்கான தேர்தல் 1946 ஜீன் 29-ல் வெற்றிகரமாக நடந்தது. அதில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. பின்னர் இடைக்கால அரசாங்கம் அமைக்கும்படி வைசிராய் வேவல் பிரவு ஜவகர்லால் நேருவை 1946 ஆகஸ்டு 12ல் கேட்டுக்கொண்டார். அவ்வழைப்பை நேரு ஏற்றுக் கொண்டு இடைக்கால அரசாங்கத்தை அமைத்தார். அது செப்டம்பர் 2-ம் தேதியிலிருந்து செயல்படத் தொடங்கியது. இடைக்கால அரசாங்கத்தில் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் 12பேர் இடம் பெற்றனர்.

மேலும் இடைக்கால அரசியல் சேர்ந்த லீக் ‘அரசியலமைப்பு நிர்ணய சபையில் சேர மறுத்து விட்டது. அதன் நடவடிக்கைகளைப் புறக்கணித்து. லீக்கின் ஒத்துழைப்பு இல்லாமல் அரசியலமைப்பு நிர்ணய சபை அதன் பணிகளை ஒழுங்காச் செய்ய முடியவில்லை.

**மவுண்ட் பேட்டன் திட்டம் 1947, ஜீன்,3:-**

நாடு முழுவதும் கலவரங்களும் அமைதியின்மையும் ஏற்பட்டன. வைசிராய் வேவல் பிரபுபவினால் இந்த அரசியல் தேக்க நிலையினைப் போக்க முடியவில்லை. இந்த நேரத்தில் தான் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை 1947 பிப் 29-ல் வெளியிட்டார். அதன்படி

1) 1948 ஜீன் முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு மாற்றம் செய்துவிடும்.

2) யாருக்கு அதிகாரத்தை மாற்றம் செய்து கொடுப்பது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கமே முடிவு செய்யும்.

3) வேவலுக்குப்பிறகு வைசிராயாக மவுண்ட் பேட்டன் பிரபு நியமிக்கப்படுவார். புதிய வைசிராய் இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றிக்கொடுப்பார்.

பிரதமர் அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து மவுண்ட் பேட்டன் பிரபு 1947 மார்ச் 22ல் இந்தியாவுக்கு வந்தார். காலத்தை வீணாக்காமல் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தியத் தலைவர்களின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும், கொள்கைகளையும், பொறுமையுடன் கேட்டார். அதன் பிறகு தனது திட்டங்களை உருவாக்கிக்கொண்டார். இங்கிலாந்து அரசின் இசைவைப்பெற இங்கிலாந்து சென்றார். அரசின் இசைவைப்பெற்று, இந்தியா திரும்பி வந்து 1947 ஜீன் 3-ம் தேதி தன் திட்டத்தை வெளியிட்டார். அதன் படி,

1) இந்தியப்பிரிவினை உறுதி செய்யப்பட்டு விட்டது. இந்தியாவை பிரித்து இரண்டு தனித்தனி நாடுகள் உருவாக்கப்படும் இரண்டு நாடுகளும் அவரவர் விருப்பத்திற்ப அரசிலமைப்பினை உருவாக்கிக் கொள்ளலாம்.

2) நடைமுறையில் டில்லியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் வேலை இடையூறின்றி நடைபெறும்.

3) புதிதாக எழுதப்படும் அரசியலமைப்பு சட்டம் அதை பெற்றுக் கொள்ளாத பகுதிகளுக்குப் பொருந்தாது. நடைமுறையில் இருக்கும்

அரசியமைப்பு சட்டமன்றத்தை ஏற்றுக் கொள்ளாத பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தனிமன்றத்தின் மூலம் அப்பகுதிகளின் விருப்பம் அறியப்படும்.

4) சிந்து சட்டமன்றம் யார் பக்கம் இருக்க வேண்டும் என்பதனை அதுவே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

5) வடமேற்கு எல்லை மாகாணத்தில் இப்பிரச்சனை வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். பலுசிஸ்தான் மக்களுடைய கருத்தை அறிவதற்கான முறையை வைசிராய் செய்வார்.

6) பஞ்சாப், வங்காளம், சில்ஹெட் ஆகிய பகுதிகளில் தேர்தல் நடத்தி அரசியலமைப்பு சட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

7) இந்திய சுதேச அரசுகளைப் பொறுத்தவரை அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தில் கண்டுள்ள விதிகள் பின்பற்றப்படும்.

8) இந்தியாவை இரண்டாக பிரிவினை செய்வதால் ஏற்படக்கூடிய நிர்வாக விளைவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்துகக் கொள்ள வேண்டும்.

9) இந்திய அரசியல் கட்சிகள் சுமூகமான முறையில் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு முடிவு செய்யுமேயானால் அதிகார மாற்றம் 1948 ஜீன் மாதத்திற்குப் பதிலாக 1947 ஆகஸ்டு 14 நள்ளிரவில் நிகழக்கூடும்.

இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் கூறுபோடும் மவுண்ட் பேட்டனின் திட்டம் 1947 ஜீன் 3-ம் தேதி வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. காங்கிரசும் லீகும் மவுண்ட் பேட்டன் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. எனவே உடனடியாக அத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

**இந்திய சுதந்திரச்சட்டம் 4, ஜுலை 1947:-**

இந்தியப் பிரிவினை பற்றி முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் வேகமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்திற்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை “மசோதா” ஒன்று தயாரிக்கப்பட்டு 1947 ஜீலை 4-ம் தேதி பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபைகளில் நிறைவேறிய பின் அரசரின் ஒப்புதலுடன் சட்டமானது. அதன்படி 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ல் ஆங்கில ஆட்சி முடிவடைந்தது. இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டு சுதந்திர நாடுகள் உருவாயின. இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி,

1) ஆங்கிலப்பேரரசு பெற்றிருந்த இந்திய ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் இந்தியா. பாகிஸ்தான் ஆகிய டொமினியன்களிடம் ஒப்படைக்கப்படும்.

2) இவ்விரு டொமினியன்களும் தனித்தனியே எல்லைகளாக வரையறுக்கப்பட்டுள்ள நிலப் பகுதிகளை ஏற்பதற்கும், மறுப்பதற்கும் அந்த டொமினயன்களுக்கு அதிகாரம் உண்டு.

3) ஒவ்வொரு டொமினியனும், தலைமை ஆளுநர் ஒருவரைப் பெற்றிருக்கும். அவர் அரசியலமைப்பின் தலைவராக விளங்குவார். அவர் சட்டமன்றத்திற்கும் பொறுப்புள்ள அமைச்சரவையின் பரிந்துரைகளின் பேரில் நிர்வாகம் செய்வார்.

4) இரண்டு டொமினியன்களின் அரசியலமைப்பு நிர்ணய சபைகளும் அந்தந்த டொமினியன்களின் விருப்பங்கள், தேவைக்களுக்கேற்ப அரசியலமைப்பினை உருவாக்கும். இந்த அரசியலமைப்பு நிர்ணய சபைகளே அந்தந்த டொமினியன்களின் மத்தியச் சட்டமன்றமாகவும் செயல்படும்.

5) இரண்டு டொமினியன்களிலும் நடைமுறையில் இருந்து வருகிற சட்டங்கள், அந்தந்த டொமினியனின் சட்டமன்றங்களினால் திருத்தியமைக்கப்படும் வரை இருக்கிறபடியே செயல்படும்.

6) 1935ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் அமைப்புகள், செயல்முறைகள் செயல்படும். ஆயினும், தலைமை ஆளுநருக்கு அச்சட்டத்தின்படி அளிக்கப்பட்டிருந்த அதிகாரக் கவசங்களும், தனி அதிகாரங்களும் நீக்கப்படும்.

7) இந்திய சிவில் சர்வீஸ் அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தனிச் சலுகைகளும், அதிகாரங்களும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். பதவிக்காலம் முடிகிற வரை பதவியிலிருக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கும்.

8) இந்திய சமஸ்தான அரசுகளின் மீதுள்ள ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கம் நீக்கப்பட்டு விடும். ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட சமஸ்தான அரசுகள் அவைகளின் விருப்பங்களுக்கேற்ப இந்திய யூனியனிலோ, பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம்.

## இந்திய அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகள்

## (Salient features of Indian constitution)

சுதந்திர இந்தியாவின் அரசியமைப்பின் ‘அரசியல் நிர்ணயசபையினால் உருவாக்கப்பட்டது. காபினட் தூதுக்குழுவின் திட்டத்தின்படி அரசியல் நிர்ணயசபை தேர்ந்தெடுக்கப்பட்டது.

**அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தொடர்கள்:**

இந்தியாவிற்குத் தேவையான அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்கும் பொருட்டு,அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9-ல் டாக்டர். சச்சிதானந்த சின்ஹா என்பவரின் தலைமையின் கீழ் கூடியது. இக்கூட்டத்தின் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அரசியல் நிர்ணய சபையின் நிரந்தரத் தலைவராகத் தோந்தெடுக்கப்பட்டார். இடைக்கால அரசின் தலைமை அமைச்சரான நேரு ‘குறிக்கோளடங்கிய தீர்மானம் மக்களின் எண்ணங்கள், விருப்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது. இந்த தீர்மானம் விவாதத்திற்குப்பிறகு நிறைவேற்றப்பட்டது.

**இந்திய அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகள்**

1. **உலகின் மிக நீண்ட அரசியலமைப்பு: (Lenthiest consititution)**
   இந்திய அரசியலமைப்பு உலகின் மற்ற அரசியலமைப்பு உலகின் மற்ற அரசியலமைப்புகளை விட நீளமானது. விரிவானது. இது 395 பிரிவுகளையும்,12 அட்டவணைகளையும், பின்னிணைப்புகளையும் கொண்டுள்ளது. தற்போது(மார்ச் 2001) இந்திய அரசியலமைப்பு 445 பிரிவுகளை கொண்டுள்ளது. இப்படி இந்திய அரசியலமைப்பு விரிவாக இருப்பதற்குக் காரணம், இதில் மத்திய அரசு, மாநில அரசுகள், மத்திய

நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் அமைப்பு அதிகாரங்களும் விரிவாகக் கொடுக்கபட்டுள்ளதே காரணம். இந்தியாவில் பல்வேறு பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் அடிப்படை உரிமைகள், கடமைகள்,வழிகாட்டி நெறிகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

2. **எழுதப்பட்ட அரசியலமைப்பு ( written constitution)**
இந்திய அரசியலமைப்பானது எழுதப்பட்ட அரசியலமைப்பாகும். ஒரு கூட்டாட்சி நாட்டிற்கான முதல் தகுதி, அந்த நாட்டின் அரசியலமைப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும்.
மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரப் பங்கீடு மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

3. **சிறப்பான முகப்புரை (Preamble)**
இந்தியா சர்வ அதிகாரங்களையும் பெற்ற ஒரு ஜனநாயக,சோஷலிச, மத சார்பற்ற நாடு என்று முகப்புரையில் கூறப்பட்டுள்ளது. இதில் சோஷலிச, மதசார்பற்ற ஆகிய வார்த்தைகள் 42-வது அரசியலமைப்பு திருத்தின்படி 1976 –ல் சேர்க்கப்பட்டது.
இந்த முகப்புரை அரசியலைமைப்பை உருவாக்கியவர்களின் உள்ளக்கிடக்கையையும், நோக்த்ததையும் தெளிவாகக் காட்டுகிறது.

4. **பாராளுமன்ற முறையிலான அரசாங்கம்**

ஜனாதிபதியும், லோக்சபை, இராஜ்ய சபை என்ற இரு சபைகள் அடங்கிய பாராளுமன்றமுமே சட்டமியற்றும் அதிகாரமும் படைத்துள்ளது. லோக்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 545-க்கு அதிகப்படாமல் இருக்க வேண்டும். இவர்களின் 535 பேர் மாநிலங்களிலிருந்தும் 8 பேர் யூனியன் பிரதேசங்களிலிருந்தும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இரண்டு ஆங்கிலோ இந்தியர்களை குடியரசுத்தலைவர் நியமனம் செய்வார். இதன் ஆயட்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ராஜ்ய சபையில் மாநில சட்டமன்றங்களால் தேர்வு செய்யப்பட்ட 238 உறுப்பினர்களும், ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட 12 உறுப்பினர்களும் உண்டு.

இந்த பாராளுமன்றமே உண்மையான ஆட்சித்துறையாக செயல்படுகிறது. நாட்டின் பிரதம மந்திரியும், அவரது அமைச்சர் அவையின் பிற உறுப்பினர்களும் பாராளுமன்றத்திலிருந்தே நியமனம் பெறுகிறார்கள். இவர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு உடையவர்கள்.

5. **கூட்டாச்சி முறை (Federal Polity)**
கூட்டாச்சி அரசியலமைப்புக்குத் தேவையான குண்டான மூன்று தன்மைகளும் இந்திய அரசியலமைப்பில் காணப்படுகின்றன. முதலாவது, மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையிலான அதிகாரங்கள், மத்திய அரசு பட்டியல், மாநில அரசு பட்டியல், பொது அதிகாரப் பட்டியல் என்று மூன்று பிரிவாக தெளிவாக பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக அரசியலமைப்பின் மேலாண்மை காணப்படுகிறது. எழுதப்பட்ட அரசியலமைப் பாகவும் அரசியல் மைப்பைத் திருத்துவது சிறிது கஷ்டமானதாகவும் உள்ளது. கூட்டாட்சியின் மூன்றாவது அம்சமான நீதிமன்றத்தின் மேன்மையும் காணப்படுகிறது. அரசியலமைப்பின்படி சுதந்திரமாகச் செயல்படும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

6. **அடிப்படை உரிமைகள் (Fundamental rights):**

இந்திய அரசியலமைப்பு தனது மூன்றாவது பிரிவை அடிப்படை உரிமைகளுக்காக ஒதுக்கியுள்ளது. மக்களின் அடிப்படை உரிமைகளை ஆறு பிரிவுகளாகப் பிரித்துத் தந்துள்ளது. அவை 1. சமத்துவ உரிமை 2. பேச்சுரிமை 3. சுதந்திரமாகச் செயல்படும் உரிமை 4. மதவழி பாட்டு உரிமை 5. சுரண்டலுக்கெதிரான உரிமை, 6. நீதிமன்றங்களின் மூலம் பாதுகாப்பு பெறும் உரிமை ஆகியவைகள் ஆகும்.

7. **அரசு வழிகாட்டு நெறிகள் (Directive Principles State Policy):**

இந்த நெறிமுறைகள் அரசியலமைப்பின் நான்காம் பாகத்தில் அடங்கி உள்ளது. இந்த நெறிகள் அரசியலமைப்பில் சேர்க்கப்படுகவதற்கு மூல ஆதரமாக இருந்தது அயர்லாந்து நாட்டு அரசியலமைப்பில் காணப்படும் நெறிகளாகும். மத்திய அரசம், மாநில அரசுகளும், தங்கள் கொள்கைகளையும், சட்டங்களையும் உருவாக்கும்போது, இந்த வழிகாட்டு நெறிகளை கருத்தில் கொள்ள வேண்டும். இந்த வழிகாட்டு நெறிகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவைசோசலிக் கொள்கைகளை செயல்படுத்துவதற்கு துணை நிற்பவை, காந்தியக் கொள்கைகள், உலக அமைதியை வளர்ப்பதற்கு உதவுபவை ஆகியவையாகும்.

8. **சமய சார்பற்ற அரசு :**

இந்தியாவில் சமய சார்பற்ற அரசு அமைக்கப்பட்டுள்ளது. 42-வது அரசியலமைப்பு திருத்தத்தின் விளைவாக அரசியலமைப்பின் முகப்புரையில் 'சமதர்ம', 'சமயசார்பற்ற' என்ற இரண்டு வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த முறையிலும் வழிபாடு செய்ய உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

9. **நீதிப்புனராய்வு :**

அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் எந்த ஒரு சட்டமும் தலைமை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படும். மேலும் பாராளுமன்றம், மாநில சட்டசபைகள் ஆகியவை நிறைவேற்றும் சட்டங்களையும், அரசாங்க உத்தரவுகளையும் அரசியலமைப்பிலுள்ள விதிகளோடு ஒப்பிட்டு, புனராய்வு செய்து, அவை அரசியலமைப்பிற்கு உட்பட்டதா இல்லை முரணானதா என்று தீர்ப்புக் கூறுவதற்கு இந்திய நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்தின் சர்வாதிகாரத்திலிருந்து தனி நபரின் சுதந்திரம் காக்கப்படுகிறது.

## அரசியலமைப்பைத் திருத்தும் முறை

## (CONSTITUTIONAL AMENDMENT)

இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகளில் ஒன்று தேவை ஏற்பட்டால் அரசியலமைப்பின் சில பகுதிகளை மாற்றியமைக்க முடியும் என்பதேயாகும். இந்திய அரசியலமைப்பின் 368ம் விதி அரசியலமைப்பைத் திருத்தும் முறையை விவரிக்கிறது. பொதுவாக கூட்டாச்சி அரசியலமைப்புகளெல்லாம் நெகிழா வகையைச் சேர்ந்தவைகளாகவும் எளிதில் மாற்ற முடியாதவைகளாகவும் இருப்பது இயல்பு. அமெரிக்க அரசியலமைப்பைத் திருத்துவது மிகவும் கடினமானது, சிக்கல் நிறைந்தது. அதே நேரம் இங்கிலாந்து அரசியலமைப்பைத் திருத்துவது மிகவும் எளிது.

இந்திய அரசியலமைப்பைத் திருத்துவது மிகவும் எளிதாகவும் இல்லை. மிகவும் கடினமானதாகவும் இல்லை. திருத்த முறையில் இந்தியா நடுவழியைப் பின்பற்றுகிறது. இந்திய அரசியலமைப்பு மிகவும் விரிவானதாகவும் பரந்தும் உள்ளதால், அதனை நெகிழா அரசியலமைப்பு என்கிறார்கள். எல்லா சூழ்நிலைக் கேற்பவும் மிகவும் விரிவான பகுதிகளை அரசியலமைப்பில் சேர்ந்துள்ளதால் அடிக்கடி திருத்தங்கள் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் 2000 ஆண்டுவரை 83 அரசியலமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டடுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசியலமைப்பைத் திருத்துவதற்குக் கீழ்கண்ட மூன்று வழிகள் சொல்லப்பட்டுள்ளன.

### 1) அரசியலமைப்பின் கூட்டாச்சி ஏற்பாடுகள் திருத்தப்படும் முறை:(Federal Provisions)

அரசியலமைப்பின் சில கூட்டாட்சி விதிகளை கடினமான முறையைப் பின்பற்றித்தான் திருத்த முடியும். இதன்படி அரசியலமைப்பு திருத்த மசோதா ஒன்று பாராளுமன்றத்தின் எந்த சபையில் வேண்டுமானாலும் தாக்கல் செய்யப்படலாம். அத்தகைய மசோதா பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சபையிலும் மொத்தம் உள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையோராலும், வாக்கெடுப்பில் கலந்து கொள்பவரின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்வேண்டும். இவ்வாறு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா இந்திய மாநிலங்களில் பாதி மாநிலங்களின் ஒப்புதல் வேண்டும். அதன்பிறகு அது குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு அவர் இசைவு கிடைத்தவுடன் சட்டமாகிவிடும். இம்முறையில் மாற்றப்படக் கூடிய அரசியலமைப்பின் பகுதிகள் வருமாறு.

1. குடியரசு தலைவரின் தேர்தல்
2. மத்திய, மாநில நிர்வாகத்துறை அதிகாரத்தின் வரம்பு
3. தலைமை நீதிமன்றம், மற்றும் உயர்நீதிமன்றங்கள்
4. மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சட்டமியற்றும் அதிகாரப் பங்கீடு
5. பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம்
6. அரசியலமைப்பைத் திருத்தும் முறையைக் கூறும் 368-ம் விதி, ஆகியவை ஆகும்.

### 2. அரசியலமைப்பில் சாதனை விதிகளைத் திருத்தும் முறை:

அரசியலமைப்பிலுள்ள சில விதிகளை எளிய முறையில் சாதாரணப் பெரும்பான்மையுடன் திருத்தியமைப்பது, இரண்டாவது முறையாகும். பாராளுமன்றத்தால் சாதாணச் சட்டங்களை இயற்றுவதற்கு பின்பற்றப்படும் முறைதான் அரசியலமைப்பின் சில விதிகளைத் திருத்துவதற்கும் பின்பற்றப்படுகிறது. அதாவது பாராளுமன்றத்தின் இரு சபைகளின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படலாம். இதற்கு மாநிலங்களின் இசைவு தேவையில்லை. இவ்வித மாற்றங்களை அரசியலமைப்புத் திருத்தங்களாகவே கொள்ளுவதில்லை. மேலும் இந்த அடிப்படையில் மாற்றப்படக்கூடிய பகுதிகள் மிகச்சிலவேயாகும்.

1) புதிய மாநிலங்களை உருவாக்குதல்
2) இருக்கின்ற மாநிலங்களை மாற்றியமைத்தல்.
3) மாநிலங்களில் மேல்சபை ஏற்படுத்துதல் அல்லது ஒழித்தல்.

4) இந்தியக் குடிமகனுக்கான தகுதிகள்.
5) பட்டியலிலுள்ள பகுதிகள், பழங்குயினர், நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள்.
6) மத்திய அரசு பகுதிகளின் அரசியலமைப்பைத் தீர்மானித்தல்.

ஆகியவைகளை பாராளுமன்றம் சாதாரணச் சட்டங்கள் இயற்றும் முறையிலேயே திருத்தலாம்.

**3. அரசியலமைப்பின் இதர பகுதிகள்:**

அரசியலமைப்பின் இதரவிதிகளைத் திருத்த பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் தனித்தனியாக ஒவ்வொரு சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேருக்கு மேலானவர்களின் இசைவும் சபைக் கூட்டத்தில் வந்து வாக்களிப்பில் பங்கு கொள்வோரில் மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் இசைவும் இன்றியமையாதது.

அரசியலமைப்பைத் திருத்தும் முறைகளில் கீழ்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவது கவனிக்கப்பட வேண்டும்.

1) அரசியலமைப்புத் திருத்தங்கள் அனைத்தும் மத்திய பாராளுமன்றத்தால் மட்டுமே கொண்டுவர முடியும். மாநில சட்டசபைகள் திருத்த மசோதாக்களைக் கொண்டுவர முடியாது.

2) பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட திருத்த மசோதாக்களை மாநிலங்கள் ஏற்கின்னறனவா அல்லது மறுக்கின்றனவா என்பதை எவ்வளவு காலத்திற்குள்ளாகத் தெரியப்படுத்த வேண்டும் என்பதை அரசியலமைப்பு குறிப்பிடவில்லை.

3) இருபத்தி நான்காவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின்படி, (1971) அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களை ஏற்க மறுக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு இல்லை.

4) அரசியலமைப்பின் விதிகளை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு விதமான திருத்த முறையை நிர்ணயித்திருப்பது போன்ற ஏற்பாட்டை உலகில் வேறு எந்த அரசியலமைப்பிலும் நாம் பார்க்க முடியாது.

1) இந்திய அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகள் யாவை?

## மாநிலங்களவை
## ராஜ்ய சபா (RAJYA SABHA)

இந்தியப் பாராளுமன்றத்தின் மேல் சபை மாநிலங்களவை அல்லது ராஜ்ய சபா என்று அழைக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்பின் 80-ம் விதிப்படி இச்சபையின் அதிகபட்ச உறுப்பினர்கள் 250 பேர் ஆவர். இவர்களில் 238-பேர் மாநிலங்களின் பிரதிநிதிகள். மீதி 12 உறுப்பினர்கள் கல்வி கலை, விஞ்ஞானம், சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களாக பார்த்து குடியரசு தலைவர் நியமனம் செய்கிறார். மாநிலங்கள் தங்கள் மக்கள் தொகையின் விகிதாச்சாரப்படி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.

**மாநிலங்களைவையின் அமைப்பு:-**

மாநிலங்களை பிரதிநிதிகளை கீழ் சபையான மாநில சட்டமன்றமே (Legislative Assembly) தேர்ந்தெடுக்கும். இத்தேர்ாதலில் மாநில சபையான (Legislative council பங்கு பெருவதில்லை. தேர்தலில் ஒற்றை மாற்றுவாக்குப்படி விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்கேற்ப நடைபெறும். ஆனால் எல்லா மாநிலங்களுக்கும் பெரியதோ சிறியதோ, அவைகளின் மக்கள் தொகை குறைவோ, அதிகவோ எந்த விதமான வேறுபாடுகளும் இன்றி சமபிரதிநிதித்துவம் இந்தியாவில்கொடுக்கப்படவில்லை. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணானது ஆகும்.

**உறுப்பினரவதற்கு வேண்டிய தகுதி:-**

மாநிலங்களவை உறுப்பினராவதற்குச் சில தகுதிகள் இருக்க வேண்டும். அவர் இந்திய குடிமகனாகவும் முப்பது வறதுள்ளவராகவும், எந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட விரும்புகிறாரோ அந்த மாநிலத்தின் வாக்களார் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டு வாக்களிக்கும் தகுதி உடையவராகவும் இருக்க வேண்டும்.

மாநிலங்களின் சபை நிலையான சபையாகும். இதன் உறுப்பினர்கள் ஆறாண்டு பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுகிறார்கள். இந்த காலியிடங்களை நிரப்ப இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உறுப்பினர்களை மாநில சட்டசபைகள் தேர்ந்தெடுத்து அனுப்பும். பதவியிலிருந்து விலகுபவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். மாநிலங்களைவைக் கூட்டம் நடத்த குறைந்த அளவு பத்தில் ஒரு பங்கு உறுப்பினராவது சபைக்கு வந்திருக்க வேண்டும். மாநிலங்களவையைக் கலைக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குக் கிடையாது.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மாநிலங்களவையில் காலியாகும் இடங்களுக்கு தேர்தல் நடைபெறும். ஒரு வேட்பாளருக்கு குறைந்தது 10 MLA-க்கள் முன்மொழிய வேண்டும். வேட்பாளர்கள் தங்கள் மீது எவ்வித கிரிமினல் வழக்கும் இல்லை என்பதற்கான சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். டெபாசிட் தொகை ரூபாய் 5000 செலுத்த வேண்டும். தமிழக எம்.எல்.ஏக்களில் 34 பேர் ஆதரவு இருந்தால் ஒரு ராஜ்ய சபா உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**மாநிலங்களவையின் தலைவர்:-**

அரசியலமைப்பின் 89-ம் விதிப்படி இந்திய துணைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவையின் தலைவராகப் (சபாநாயகர்) பணியாற்றுகிறார். இவர் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார். இவரைத் தவிர மாநில சபையின் உறுப்பினர்களில் ஒருவர் துனைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தலைவர் இல்லாதபோது இவர் சபை கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார். மாநிலங்களவையின் அலுவல்கள் சரியான படி நடைபெற உதவுவதும். சபையில் ஒழுங்கையும் அமைதியையும் ஏற்படுத்தி உறுப்பினர்கள் விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்ளுமாற செய்வதும், வாக்கெடுப்பு நடத்தி முடியவை அறிவிப்பதும் சபையின் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரின் அதிகாரங்களாகும். மாநிலங்களவையின் தலைவரும், துணைத்தலைவரம் மக்கள்சபை சபாநாயகருக்கும் துணை சபாநாயகருக்கும் என்னென்ன சலுகைகளும் சிறப்புகளும்

வழங்கப்படுகின்றனவோ அதே சலுகைகளையும் சிறப்புகளையும் பெறுகின்றனர். தற்போது மாநிலங்களவையின் தலைவராக இருப்பவர் கிருஷ்ணகாந்த் ஆவார்.

தலைவரையும் துணைத் தலைவரையும் விசாரணை செய்து நீக்கும் அதிகாரம் சபைக்கு உண்டு. சபையில் அப்போதுள்ள மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் பதவி ஆதரவுடன் நீக்க தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அவர்களைப் பற்றிய விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது தலைவரோ, துணைத் தலைவரோ தலைமை தாங்கக் கூடாது.

**உறுப்பினர்களின் சலுகைகள்:-**

மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பரிபூரண பேச்சு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. சுபையில் நிகழ்த்திய பேச்சுகளுக்காக அவர்களைக் கைது செய்ய முடியாது. அதே போல் சபை கூட்டப்படுவதற்கு நாற்பது நாள் முன்னும் கூட்டத்தின் கடைசி நாளிலிருந்து நாற்பது நாட்கள் பின்னும் அவர்கள் கைது செய்யப்பட முடியாது.

**மாநிலங்கள் சபையின் அதிகாரங்கள்:-**

**1. சட்டமியற்றும் அதிகாரம்: (சாதாரணமசோதா)**

சாதாரணச் சட்டங்களை இயற்றுவதில் மாநிலங்கள் சபை மக்கள் சபையுடன் சம அதிகாரம் கொண்டுள்ளது. மக்கள் சபையில் நிறைவேறிய மசோதா மாநில சபைக்கு அனுப்பப்படும். மாநில சபை அதை நிறைவேற்றலாம். ஆல்லது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கலாம். ஆனால் அதிக பட்சம் ஆறுமாத காலத்திற்குத்தான் நடவடிக்கை எடுக்காமல் மசோதாவை நிறுத்தி வைக்கலாம். பிறகு இரு சபைகளின் இணைப்புக் கூட்டத்தை குடியரசுத் தலைவர் கூட்டுவார். இந்த இணைப்புக் கூட்டத்தில் இரு சபைகளின் உறுப்பினர்களும் பங்கு கொண்டு பிரச்சனைக்குரிய மசோதாவை பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுகிறார்கள். மக்கள் சபை உறுப்பினர்களே எண்ணிக்கையில் அதிகம் இருப்பதால் மேல்சபையின் எதிர்ப்பு எடுபடாமல் போய் விடுகிறது.

**2. பண மசோதாவை நிறைவேற்றுதல்:-**

பண மசோதாக்களை நிறைவேற்றவதில் மாநில சபைக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. வரவு செலவுத் திட்டம், ஓதுக்கீடு மசோதா (Budget Appropriation Bill) போன்ற பண மசோதாக்களை மக்கள் சபையில்தான் சமர்ப்பிக்க முடியும். மக்கள் சபையில் நிறைவேற்றிய பிறகு மேல் சபைக்கு அபுன்னப்படும். மேல் சபையில் பண மசோதாக்கள் நிறைவேற வேண்டும் என்ற அவசியம் இல்லை. பண மசோதா வந்த இரண்டு வாரத்துக்குள் விவாதித்து அதன்மேல் பரிந்துரை மட்டும் செய்ய வேண்டும். மாநில சபையின் பரிந்துரைகளை மக்கள் சபை ஏற்கவோ, மறுக்கவோ செய்யலாம். எது எவ்வாறாயினும் பண மசோதாவை இரண்டு சபைகளும் நிறைவேற்றியதாகக் கருதப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். மேலும் மானியங்கள் (Grants) மக்கள் சபையால் மட்டுமே அங்கீகாரம் செய்யப்படுகின்றன. இதனால் நிதிச்சட்டம் இயற்றுவதில் மாநிலங்கள் சபை சக்தியற்றது என்றே கூறலாம்.

**3. நிர்வாகத் துறையை கட்டுக்கடுத்துகிறது:-**

அமைச்சர்கள் மக்கள் சபைக்கு மட்டும்தான் பொறுப்புள்ளவர்கள் அல்லது கட்டுப்பட்டுள்ளதால் அமைச்சர்கள் மீது மாநிலங்கள் சபைக்கு பிடிப்பு இல்லாமல் போய்விடுகிறது. இருந்தாலும் நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துவதில் மாநிலங்களவை ஓரளவு அதிகாரம் பெற்றுள்ளது. அமைச்சர்கள் விவாதங்களில் கலந்து கொள்ளும் போது கேள்விகள் மூலமாகவும், வாதங்கள் வாயிலாகவும், ஒத்திவைப்புப்பிரோணை மூலமாகவும் அரசாங்கத்தின் கொள்கைகளை ஓரளவு கட்டுப்படுத்துகிறது.

**4. அரசியலமைப்புத் திருத்தம் செய்யும் அதிகாரம்:-**

அரசியலமைப்புத் திருத்தங்களை செய்வதில் மாநில சபையின் ஒப்புதல் அவசியம் தேவை. திருத்தம் ஒன்றை மாநில சபை ஏற்கவில்லையென்றால் இருசபைகளின் இணைப்புக் கூட்டத்தை குடியரசு தலைவர் கூட்டுவித்து பெரும்பான்மை ஆதரவுடன் திருத்தம் நிறைவேற்றப்படும்.

1) இந்திய பாராளுமன்றத்தின் மேல்சபையை விவரி?

## மக்கள் சபை

## லோக்சபை (LOK SABHA)

இந்திய பாராளுமன்றத்தின் கீழ் சபையின் பெயர் லோகச்சபை அல்லது மக்கள் சபையாகும். இதில் மொத்தம் 545 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதில் 413 தொகுதிகள் பொதுவானவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு உறுப்பினர்கள் ஆங்கிலோ இந்திய சமுதாயத்தினருக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்காக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர்.

**பதவிக்காலம்:-**

மக்கள் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகள் முடிவடைதற்கு முன்பாகவே குடியரசுத் தலைவர் மக்கள் சபையைக் கலைக்கலாம்.

### சபாநாயகர்: (Speaker)

**1. சபாநாயகர் தேர்வு:-**

மக்கள் சபையில் சபாநாயகர், துணைசபாநாயகர் ஆகிய இரண்டு அலுவலர்கள் இருக்கிறார்கள். சுபை தனது உறுப்பினர்களில் ஒருவரை சபாநாயகராகவும் மற்றொருவரைத் துணை சபாநாயகராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. பொதுவாக சபா நாயகர் எதிர்கட்சியைச் சேர்ந்தவராகவும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவர்களை பிரதம மந்திரி எதிர்கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வழி செய்கிறார்.

**2. பதவிக் காலம்:-**

சபாநாயகரும், உதவி சபாநாயகரும் பாராளுமன்றத்தின் ஆயட்காலம் வரை பதவியிலிருகப்பார்கள். அவர்கள் தாங்களாகவே பதவியை ராஜினாமா செய்யலாம். அல்லது சபை அவர்களிடம் நம்பிக்கை இல்லையென்ற தீர்மானத்தை நிறைவேற்றினாலும். ஆவர்கள் பதவி விலக வேண்டும். மக்கள் சபை கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் முடிந்து புதிய மக்கள் சபையின் சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படும் வரை முந்தைய மக்கள் சபையின் சபாநாயகர் பதவியில் தொடர்ந்து இருந்து வருவார்.

**3. பதவி நீக்கம் செய்யும் முறை:-**

சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றால் பதினான்கு நாட்கள் முன் அறிவிப்புக்குப் பின் மக்கள் சபைகூடும் போது சபைக்கு வந்துள்ள மொத்த உறுப்பினருள் பெரும்பான்மையோரின் வாக்குகள் தேவை. பின்பு குடியரசுத் தலைவரின் இசைவுடன் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

**4. சபாநாயகரின் அதிகாரங்கள்:-**

a) **சபையின் உரிமைகளைப் பாதுகாத்தல்:-**

மக்கள் சபையின் தீர்மானங்களையும் உத்தரகளையும் நிறைவேற்றும் பொழுது சபையின் தனி உரிமைகளைப் பாதுகாக்கிறார்.

b) **சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்:-**

சபாநாயகர் மக்கள் சபை கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி தென் நடவடிக்கைகளை விதிமுறைகளுக்கேற்ப நடத்தி வைக்கிறார் சபையின் அலுவலகள் என்னென்ன, உறுப்பினர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்பதையேல்லாம் அவரே முடிவு செய்வார். சுபையின் அமைதியையும் ஓழுங்கையும். புாரமரிப்பதும், உறுப்பினார்கள் கண்ணியமாக பேசும்படி பார்த்துக் கொள்வது அவரது பணிகளுள் ஒன்றாகும். சுபையின் விவாதங்களில் பங்கு கொள்ள விரும்புகிறவர்களை அனுமதித்து விவாதங்களை சிறந்த முயைில் நடத்தி வைக்கிறார். எனவே சபாநாயகரை ‘விவாதங்களின் நாயகர்’ (Lord of debater) என்று அழைக்கலாம்.

**c) சட்டமியற்றும் பணிகளில் பங்கு:-**

மசோதாக்களில் எவை பல மசோதாக்கல் என்று முடிவு செய்வது சபாநாயகர்தான்.

**e) பிற அதிகாரங்கள்:-**

இவ்வாறு மக்கள் சபையின் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சபாநாயகலே நடுநாயகம் ஆவார்.

**மக்கள் சபையின் அதிகாரங்கள்:-**

**1. சட்டமியற்றும் பணி:(சாதாரண மசோதாக்கள்)**

ஒரு சாதாரண மசோதா மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாநில சபை எந்த விதமான சடவடிக்கையும் எடுக்காமல் ஆறு மாதத்திற்கு

காலம் தாழ்த்தினால், இரு சபைகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டையத்ட தீர்க்க குடியரசத் தலைவர் இலு சபைகளின் இணைப்புக் கூட்டத்தைக் கூட்டுவார்.குறிப்பிட்ட நாளில் கூட்டப்படும் இணைப்புக் கூட்டத்திற்கு மக்கள் கபையின் சபாநாயகரே தலைமை தாங்குவார். இருசபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு பிரச்சனைக்குரிய மசோதாவை பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுகிறார்கள். இந்த இணைப்புக் கூட்டத்தில் மக்கள் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையே அதிகம் இருப்பதால் மேல் சபையின் எதிர்ப்பு எடுபடாது.

**2. பண மசோதாக்களை இயற்றுதல்:-**

பண மசோதாக்கள் முதலில் மக்கள் சபையில் தான் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வரவு செலவு கணக்கு, ஒதுக்கீடு மசோதா ஆகியவை மக்கள் சபையில் தான் முதலில் சமர்பிக்கப்பட வேண்டும். மேலும் அரசாங்கமே பண மசோதாக்களை சமர்பிக்க வேண்டும்.

மக்கள் சபையில் நிறைவேறிய பண மசோதக்கள் மாநிலங்களின் சபைக்கு அனுப்பப்படும். மாநிலங்கள் சபை அந்த மசோதாவை பதினான்கு நாட்களுக்குள் தனது பரிந்துரையுடன் திருப்பி அனுப்ப வேண்டும். மக்கள் சபை அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டால் அத்திருத்தங்களுடன் அம்மசோதா நிறைவேறியதாகக் கருதப்படும். மக்கள் சபை அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள மறுக்குமானால் மக்கள் சபை நிறைவேற்றிய வடிவிலேயே அந்த மசோதா இருசபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

**3. அமைச்சரவை மீது கட்டுப்பாடு:-**

அமைச்சர்கள் கூட்டாக மக்கள் சபைக்குத்தான் பொறுப்புள்ளவர்கள். அவர்களுடையே கொள்கைகளை மக்கள் சபை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் பதவியிலிருந்து விலக வேண்டும். இவ்வாறு அரசாங்கத்தின் கொள்ளைகளையும் அன்றாட நடவடிக்கைகளையும் மக்கள் சபை தொடர்ந்து கட்டுப் படுத்துகிறது.

**4. அரசாங்கத்தின் மீது கட்டுப்பாடு:-**

a) அன்றாடம் கேள்வி கேட்பதின் மூலம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளையும், புள்ளி விபரங்களையும் அமைச்சர்களிடமிருந்து வரவழைக்கிறது. மக்கள் சபையில் கேள்வி நேரம் மிகவும் முக்கியமானது.

b) அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலம் அதன் கொள்கைகளும் நடவடிக்கைகளும் கண்டிக்கப்படுகின்றன. கட்டுப்படுத்தப்படுகின்றன நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்கள் சபையில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

1) இந்திய பாராளுமன்றத்தின் மக்கள் சபையின் அதிகாரங்களை விவரி?

# அலகு - III

## தென்னிந்தியக் கிளர்ச்சி, 1800-1801

### ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு

1600 டிசம்பர் 31ஆம் நாள் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி வர்த்தகத்திற்காக இந்தியாவினுள் நுழைந்தது. கூடாரத்துக்குள் நுழைந்த ஒட்டகம் போல படிப்படியாக வர்த்தகத்தோடு தன்னையும் வளர்த்துக் கொண்டது. பதினோழாம் நூற்றாண்டில் இந்திய மண்ணில் உறுதியாகக் காலூன்றியது வர்த்தகக் கடங்கை ஏற்படுத்தயது.அதைச்சுற்றி ஆங்கிலேயர் குடியேறினர். மூன்று கர்நாடகப் போர்கள் (1746-1763), நான்கு மைசூர்ப் போர்கள் (1767-1799) ஆகியவற்றின் விளைவாக ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

புலித்தேவருக்குப் பின்னர் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்தவர் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத் தலைவரான வீரபாண்டிய கட்டபொம்ம நாயக்கர் ஆவார். அவர் திருநெல்வேலிக் கூட்டணியைப் பலப்படுத்தி கம்பெனியோடு தீரத்துடன் போராடினார். ஆனால் அவர் மேஜர் பானர்மனிடம் கட்டபொம்மனது கிளர்ச்சியும் நசுக்கப்பட்டு விட்டது. கட்டபொம்மன் கொல்லப்படட அடுத்த ஆண்டே பரவலான பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. அதைப் பேராசியர் கு.ராஜய்யன் ‘தென்னிந்தியக் கிளர்ச்சி’ என்றும் ‘முதல் சுதந்திரப்போர்’ என்றும் வர்ணித்துள்ளார்.

### கிளர்ச்சிக்கான காரணங்கள்

#### அரசியல் காரணங்கள்:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துவக்கப்பட்டதே தென்னிந்தியக் கிளர்ச்சியாகும். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தென்னிந்தியா குழப்பத்துக்கும், கொந்தளிப்புக்கும் உள்ளாயிற்று. எனினும், அரசர்களும் பாளையக்காரர்களும் கிராமக் குடியாட்சி முறையும் அரசியல் கட்டுக்கோப்பும் குலையாது சமநிலையைப் பாதுகாத்தனர்.அந்த அமைப்பு முறை ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இலக்கானபோது எதிர்ப்பு ஏற்பட்டது. ஆற்காடு நவாப் சந்தா சாகேப், தஞ்சாவூர் பிரதாப்சிங், மதுரை கான்சாகிப் ஆகியோர் கம்பெனி ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனர். மைசூர் மன்னர்களான ஹைதர் அலியும், திப்புசுல்தானும் அவ்வாதிக்கத்தை எதிர்த்து மடிந்தனர். கம்பெனியோடு உடன்படிக்கை இருந்துகொண்டு மக்களைச் சுரண்டினர்; கொடுமைப்படுத்தினர். அரசர்கள் கம்பெனிக்கு அடங்கி மக்களை அடக்கியமையால் மக்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று.

அரசர்களை அடக்கியது போன்று கம்பெனியால் பாளையக்காரர்களை அடிபணிய வைக்க முடியவில்லை. கர்நாடகத்திலும், மலபாரிலும், தமிழகத்திலும் கம்பெனி பல்வேறு உத்திகளைக் கையாண்டு அவர்களைப் பலவீனப்படுத்திற்று. எனினும் உறுதியான பாளையங்காரர்கள் ஒன்று சேர்ந்து கம்பெனி ஆட்சியை எதிர்க்கத் துணிந்தனர். கிராமங்களின் கேடமாக இருந்த அவர்கள் தங்களது பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதைக் கொஞ்சமும் விரும்பவில்லை.

**பொருளாதாரக் காரணங்கள்:**

அரசியல் அடங்குமறைப் போன்றே பொருளதாரச் சுரண்டலும் தென்னிந்தியக் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. மக்கள் நலனைப் பேணுவதையிடக் கம்பெனி தனது வருவாயைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தது. வரிகளை வரம்பின்றி உயர்த்தியது. உதாராணமாக, திண்டுக்கல்லில் திப்புசல்தான் வசூலித்ததற்கு மேலாக இருபத்தைந்து விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூலிக்கப்பட்டது. கன்னடப் பகுதி, சூன்டா, சேலம், கோயமுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொண்ணூறு விழுக்காடு அதிகமாக வரி வசூல் செய்யப்பட்டது. தன்னிச்சைப்படி உயர்த்தப்பட்ட வரிகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, அவர்கள் அனுபவித்து வந்த பல சலுகைகள் பறிக்கப்பட்டன. விவசாய நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வையே அதிகமாக இருந்தது.

**மருது பாண்டியன் கூறிய காரணம்**

சிவகங்கை மருது பாண்டியன் தென்னிந்தியாவின் தாழ்ச்சிக்குரிய காரணத்தை அறிவுப்பூர்வமாக ஆய்ந்தறிந்து கூறினார். அவரின் ஆய்வின்படி அரசர்களின் அரசியல் சாதுர்யமற்ற கொள்கை, குழு கோஷ்டி மனப்பான்மை, ஆங்கிலேயரின் வஞ்சகத்தன்மை, மக்களின் ஒரு பகுதியினரின் அந்நிய அதிகாரத்துக்கு அடிபணியும் வழக்கமான போக்கு ஆகியவையே தென்னிந்தியருடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன்மானக்குறைவான தாழ்ந்த நிலையே அடைந்ததை அவர் வன்மையாகக் கண்டித்தார். தென்னிந்தியர்களிடையேஉள்ள ஒற்றுமையின்மையை ஆங்கிலேயர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையோடு ஒப்பிட்டுக் காட்டினார்.

**பிராந்தியக் கூட்டமைப்புகள் (Regional Leagues)**

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் விளைவாக தென்னிந்தியாவில் அரசியல் அடக்குமுறை, பொருளாதாரச் சுரண்டல், நிர்வாகக் கெடுபிடி போன்றவை அதிகரிக்கலாயிற்று. மக்கள் சொல்லொனா இன்னல்களுக்கு ஆட்பட்டனர். எதிர்ப்புணர்ச்சியே கிளர்ச்சிக்கு ஆணிவேர். ஆனால் வடிவமற்ற எதிர்ப்புணர்ச்சி வீண்முயற்ச்சியாகும். விழலுக்கிறைத்த நீராகும். எனவே, மக்களின் தலைவர்களுக்கு உரிய வடிவம் கொடுத்தனர். அவ்வடிவம் முதலில் பிராந்தியக் கூட்டமைப்புக்காக உருவெடுத்தது. 1795லிருந்து 1799 வரை இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், மலபார், கோயமுத்தூர் ஆகிய நான்கு பிராந்திய கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

**இராமநாதபுரம் கூட்டமைப்பு**

இக்கூட்டமைப்பின் கர்த்தா சிவகங்கை வெள்ளம் மருதுபாண்டியன் ஆவார். இவரது இளவல் சின்னமருது. மருது சகோதரர்கள் சிவகங்கை மன்னரான முத்து வடுகநாதத் தேவரிடம் சாதாரண ஊழியர்களாகத் தங்களது பணியைத் துவங்கினார். தங்களது பயன் கருதாப் பணியாலும், நேர்மைத் திறத்தாலும் எஜமான பக்தி விசுவாசத்திலும் கடுமையான உழைப்பாலும் உயர்ந்தனர்; அமைச்சர்களாயினர். அரசரின் மறைவுக்குப் பிறகு அரச குடும்பத்தைக் காத்த பெருமை இவர்களுக்கு உண்டு. சிவகங்கைககு அடுக்கடுக்காக வந்த சோதனைகளைச் சமாளித்தனர்.

முத்துகருப்பதேவர் ஆகியோர் மருதுபாண்டியனின் முயற்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். தஞ்சாவூர் ஞானமுத்துவும் சிவகிரி மாப்பிள்ளை

வன்னியனும் மதுரைக் கள்ளர்களும் மருது பாண்டியன் அமைத்த இராமநாதபுரம் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தனர். மருது பாண்டியனது தலைமையில் இக்கூட்டமைப்புக்கு செயல்பட்டது.

### திருநெல்வேலி கூட்டமைப்பு

மருது பாண்டியனால் ஊக்குவிக்கப்பட்டு நாகலாபுரம் மன்னர்: கோட்டை, போவாலி, கோலார்பட்டி, சென்னால்குடி பாளையக்காரர்கள் சேர்ந்து உருவாக்கியதுதான் திருநெல்வேலிக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பில் சேர்ந்து அதற்கு புதுப்பொலிவையும் வலுவையும் கொடுத்தார் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரான வீரபாண்டிய கட்டபொம்மன். மருது பாண்டியனால் கவரப்பட்டு, அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரையே முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட்டார் கட்டபொம்மன். அவர் சாப்டூர், ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களையும் கூட்டு சேர்த்துக்கொண்டு திருநெல்வேலி கூட்டமைப்பைப் பலப்படுத்தினார்.

### திண்டுக்கல் கூட்டமைப்பு

திண்டுக்கல் கூட்டமைப்பை உருவாக்கியவர் கோபால நாயக்கர் ஆவார். விருப்பாட்சிப் பாளையக்காரான கோபால நாயக்கர் சிறந்த ராஜதந்திரி; போர்க்களங்கள் பல கண்டவர்; திறமையான அமைப்பாளர்.அந்நிய அடக்குமுறை ஆதிக்கத்திடமிருந்து விடுபட எண்ணியோருக்கு அவரது தலைமை கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது. திண்டுக்கல், மணப்பாறை கள்ளர்நாடு, கோபமுத்தூர், சேலம் ஆகிய இடங்களுக்குத் தனது தூதுவர்களை அனுப்பி ஆதரவு தேடினார் கோபால நாயக்கர்.

### மலபார்-கோயமுத்தூர் கூட்டமைப்பு

இந்த அமைப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் கேரளவர்மா ஆவார். மக்கள் செல்வாக்கு மிகப் பெற்றவர் இவர். பிற கூட்டமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கையில் கம்பெனிப் படையோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தவர் கேரளவர்மா. விவசாயிகளின் பக்கபலம் அவருக்கு எப்போதும் இருந்தது. கேரளவர்மா பிற பாளையக்காரர்களுக்கு அனுப்பிய ஓலைச் சுவடி கடிதங்கள் நல்ல பலனளித்தன; அவர்களின் ஆதரவு கிடைத்தது. வைநாடு, கோட்டயாட்டு, குரப்பரநாடு, பரப்பநாடு ஆகியவற்றின் தலைவர்களும் இருவி நாட்டு நம்பூதிரிகளும் சமோரின் குடும்பத்தினரும், மலபார் மாப்பிள்ளைகளும் கேரளவர்மாவை ஆதரித்தனர். ஆங்கிலேயர்களின் நோக்கும் போக்கும் பிடிக்காத கோயமுத்தூர் கவுண்டர்களும் மலபார் கிளர்ச்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டனர். மலபார், திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் மையமாக விளங்கியது கோயமுத்தூர்.

## தென்னிந்தியக் கூட்டமைப்பு (Peninsular Confederacy)

பிராந்தியக் கூட்டமைப்புகள் காலத்தின் கட்டாயத்தில் தன்னிச்சையாகத் தோன்றியவையாகும். இவ்வமைப்புகளின் இணைப்புப் பாலமாக விளங்கியவர் மருதுபாண்டியன். நான்கு கூட்டமைப்புகளுக்கும் பொதுவான குறிக்கோள் இருந்தது. இவை தென்னிந்தியாவின் பரந்த நிலப்பகுதியில் செயல்பட்டன. அதைத் தங்களது செல்வாக்கின் கீழ் வைத்திருந்தன. திண்டுக்கல் மலபார் கூட்டமைப்புகள் மைசூர் திப்புசுல்தானுடன் உடன்பாடு கொண்டிருந்தன. ஆனால் 1799ல் திப்புசுல்தான் வீழ்ச்சிக்குப் பின்னர் பிராந்திக் கூட்டமைப்புகள் பலமிழந்தன.

**கிளர்ச்சியின் போக்கு**

**கிளர்ச்சித் திட்டம்**

ஆங்கிலேயரது ஆட்சியை அகற்றி, நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதே தென்னிந்தியக் கூட்டிணைப்பின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டும்பொருட்டு கூட்டிணைப்புத் தலைவர்கள் விருப்பாட்சியில் கூடி சதியாலோசனை செய்தனர்(1800 ஏப்ரல்).விரிவான ஆலோசனைக்குப் பின்னர் அவர்கள் பின்வரும் மூன்று முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர்.

1. ஒரே சமயத்தின் பல பகுதிகள் கிளர்ச்சியைத் துவக்குவது,
2. கிளர்ச்சிக்காரர்கள் ஒற்றுமையாக இருந்து போராடுவது,
3. ஆங்கிலேயப் படையோடு நேரடியாக மோதாமல், மறைந்திருந்து தாக்கும் கொரில்லா முறையைப் பின்பற்றல். மருது பாண்டியன் மதுரைப் பகுதியிலும் கோபால நாயக்கர் திண்டுக்கல்-திருச்சி பகுதியிலும், கான்-இ-ஜஹான் கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூர் பகுதியிலும், தூண்டாஜி வாக் கன்னட நாட்டின் வடக்குப் பகுதியிலும் கிளர்ச்சிக்குப் பொறுப்பேற்பது என்று முடிவாயிற்று.

**கிளர்ச்சி துவக்கம்**

விருப்பாட்சி திட்டத்தைப்பற்றி ஏதும் அறியாத கம்பெனிப்படை கிருஷ்ணப்ப நாயக்கரின் கேந்திர மையமான பெல்லம்(Bellum) என்ற இடத்தைக் கைப்பற்ற முயன்றது (1800 மார்ச் 30). பொறுமை இழந்த தூண்டாஜி வாக் தனது படையினரை பெல்லத்துக்கு அனுப்பினார். அவரோடு அவரது சகாக்களும் கிளர்ச்சியிலீடுபட்டனர். கிளர்ச்சி திட்டமிட்தற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே துவக்கப்பட்டுவிட்டது. மே மாத துவக்கத்தில் கிளர்ச்சிக்காரர்கள் கோயமுத்தூரை நெருக்கினர். நரசிங்கராவின் தலைமையில் கோயமுத்தூர் வாசிகள் கிளர்ச்சிக்காரர்களுக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

**பாஞ்சாலங்குறிச்சியிப் போர்கள்**

200 கிளர்ச்சிக்காரர்கள் திருச்செந்தூர் செல்லும் பக்தர்கள் போன்று வேடமிட்டுச் சென்று பாளையங்கோட்டையில் சிறைப்பட்டிருந்த செவத்தையா, ஊமைத்துரை உள்ளிட்ட பலரை விடுவித்தனர். அவர்கள் மலைநாடு மலை வழியாகப் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தனர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை புதிதாகக் கட்டப்பட்டது. மருதுபாண்டியன் அனுப்பிய30,000 கிளர்ச்சிக்காரர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். மறவர்களும், பரவர்களும், நாடார்களும், தோட்டியான்களும் அவர்களுக்குக் கைகொடுத்தனர். பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார்திருநகரிக்கும் இடைப்பட்ட பகுதிகளை அவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். விலிமைமிக்க கோமெரிக் கோட்டை கிளர்ச்சிக்கார்கள் கைவசமாயிற்று. மேலப்பன் பல இடங்களை மீட்டார். சிவகங்கையிலிருந்து வந்த கிளர்ச்சிக்காரர்கள் நெட்டூரில் கம்பெனிப் படையைச் சிதறடித்தனர். எனினும் காலின் மெக்காலேயும், கர்னல் அக்னுவும் பாஞ்சாலங்குறிச்சிப் கோட்டையை முற்றுகையிட்டனர்.

**காளையார்கோவில் கிளர்ச்சி**

பாஞ்சாலங்கறிச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிவகங்கை காளையார்கோவில் காடு கிளர்ச்சி மையமாற்று. திருப்பத்தூர், நத்தம், திரும்வேலூர், மேலூர், வெரம்பூர் ஆகிய இடங்கிளில் கம்பெனிப் படை கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. பொம் நாயக்கர் வெரப்பூரிலிருந்து கம்பெனிப் படையினரை

விரட்டினார். ஊமைத்துரை பழைய நாட்டை விடுவித்தார். கள்ளர்கள் மதுரையின் மேற்குப் பகுதியை விடுவித்தனர். காளையார்கோவில் கிளர்ச்சிக்காரர்கள் வசமாயிற்று.

**திருச்சிப் பிரகடனம்**

தென்னிந்தியக் கூட்டிணைப்புப் படையினர் வெற்றிவாகை சூடிக் கொண்டிருந்த சமயத்தில்தான் மருதுபாண்டியன் தனது வரலாற்று முக்கியத்துவமிக்க திருச்சிப் பிரகடனத்தை (Trichy proclamation) வெளியிட்டார். அப்பிரகடனம் திருச்சி கோட்டை நுழைவாய்ச் சுவற்றிலும், ஸ்ரீரங்கம் பெரியகோவில் சுவற்றிலும் ஒட்டப்பட்டிருந்தது. சாதி, சமய, இன வேறுபாடின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும், அறைகூவல் விடுத்தது அந்தப் பிரகடனம். அது மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்தது;

**வீழ்ச்சிக்கான காரணங்கள்:**

தென்னிந்தியக் கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன.

1. கிளர்ச்சித் திட்டம் செவ்வனே தீட்டப்பட்டாலும் அது திட்டமிட்டபடி செயல்படுத்தப் படவில்லை. தூண்டாஜிவாக் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார்;
2. கிளர்ச்சி பல இடங்களில் ஒரே நேரத்தில் துவக்கப்படவில்லை. பல பகுதிகள் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடவில்லை;
3. பல சமயங்களில் 'கொரில்லா போர்' முறையைப் பின்பற்றாமல் நேரடி மோதலில் ஈடுபட்டனர்;
4. தூண்டாஜி வாக்கின் அகால மரணத்தால் பல மராத்தியத் தலைவர்களின் ஆதரவைக் கிளர்ச்சிக்காரர்கள் பெற முடியாது போயிற்று;
5. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாங்கூர், மைசூர் மன்னர்கள், ஹைதராபாத் நிஜாம், பூனாவின் பேஷ்வா ஆகியோர் கம்பெனியின் ஆதரவாளர்களாக இருந்தனர்;
6. ஏமன்நாயர், சட்டுநாயர், ராமன் நாயர் போன்ற கருங்காலிகள் கிளர்ச்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டனர்;
7. கிளர்ச்சித் தலைவர்களிடம் போதிய போர்த் தளவாடங்கள் இல்லை. அவர்களது போர் உத்திகளும் சிறப்பாயில்லை;
8. போராட்டத் தலைவர்களிடையே ஒற்றுமை இருந்தாலும், கிளர்ச்சிக்காரர்களிடையே ஒற்றுமை இல்லை;
9. பொதுமக்களின் ஆதரவு பூரணமாக கிடைக்கவில்லை;

1) தென்னிந்தியக் கிளர்ச்சிக்கான காரணங்கள் யாவை?
2) திருச்சி பிரகடனம் என்றால் என்ன?

## வேலூர்க் கிளர்ச்சி 1806

தென்னிந்தியக் கிளர்ச்சி அடக்கி ஒடுக்கப்பட்ட ஆறாண்டுக் காலத்தில் வேலூரில் மற்றொரு கிளர்ச்சி வெடித்தது. முந்தியக் கிளர்ச்சியில் கலந்துகொண்டு தப்பிவந்த பல கிளர்ச்சிக்காரர்களுக்கு வேலூர் சிறந்த கொத்தளமாகப் பயன்பட்டது. பாளையக்காரர்களிடம் பணியாற்றிய பல வீரர்கள் கம்பெனிப் படையில் சேர்ந்திருந்தனர். வேலூர்க் கோட்டையில் சிறைப்பட்டிருந்த திப்பு சுல்தானின் புதல்வர்கள், குறிப்பாக அவரது மூத்தமகன் பட்டே ஹைதர் ஆங்கிலேயருக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். கம்பெனியின் ஆக்கிரமிப்புக் கொள்கையால் பாதிக்கப்பட்ட

ஹைதராபத்தும், மைசூரும் கிளர்ச்சியை ஆதரிக்க விரும்பின. இச்சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சி செய்தனர்.

**கிளர்ச்சிக்கான காரணங்கள்**

வேலூர் கிளர்ச்சிக்கான உண்மைக் காரணங்களைப்பற்றி ஒருமித்த கருத்தில்லை. ஒன்றுக்கொன்று மாறுபட்ட முரண்பட்ட காரணங்கள் கூறப்பட்டுள்ளன. எனினும் வேலூர்க் கிளர்ச்சி தோன்றியதற்கான கீழக்கண்ட விளக்கங்களை கூறலாம்.

1. ஆங்கிலேய ஆட்சியை அகற்றுவதே வேலூர்க் கிளர்ச்சியின் முக்கிய நோக்கமாகும். தென்னிந்தியக் கிளர்ச்சி முறியடிக்கப்பட்ட பின் எஞசித் தப்பிய கிளர்ச்சிக்காரர்களில் பலர் கம்பெனி இராணுவத்தில் சேர்ந்தனர். பலர் வேலூரைச் சுற்றி குடியேறினர். அவர்கள் அவ்வப்போது சந்தித்து, இரகசியமாகக் கருததுப் பரிமாற்றம் செய்துக்கொண்டு மீண்டும் ஒரு கிளர்ச்சி செய்து ஆங்கிலேய ஆட்சியை அகற்ற முடிவு செய்தனர். இருக்கருத்தை பேராசிரியர் கு.ராஜய்யன் வலியுறுத்துகிறார்.
2. மைசூர் முடியாட்சியை மீட்க வேண்டும் என்று திப்பு சுல்தானின் வாரிசுகள் சதித் திட்டம் தீட்டினர். திப்பு இறந்தபின் அவரது பன்னிரண்டு பிள்ளைகளையும், ஆறு பெண்களையும் வேலூர் கோட்டையில் சிறை வைத்திருந்தனர். அவர்களில் குறிப்பாக திப்புவின் மூத்த மைந்தன் பட்டே ஹைதர் பிறரது துணையுடன் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டார் அவரது முயற்சியால் கிட்டத்தட்ட 3000 கன்னடக் கிளர்ச்சிக்காரர்கள் வேலுரைச் சுற்றி குடியேறினர். கம்பெனி படைத்தளபதி ஜே.எப்.பிரடோக் மைசூர் மீண்டும் முஸ்லீம் முடியாட்சியை ஏற்படுத்துவதே வேலூர்க் கிளர்ச்சியின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.
3. ஆங்கிலேயரது ஆக்கிரமிப்புக் கொள்கையால் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த ஹைதராபாத் நிஜீம் மீண்டும் தனது ஆட்சியை நிலைநாட்ட நாட்டம் கொண்டிருந்தார். ஹைதராபாத் சிக்காகோல் மக்களும் மனவருத்த முற்றிருந்தனர். அவர்கள் கிளர்ச்சி செய்யத் துடித்துக் கொண்டிருந்தார்கள். வேலூரியிலிருந்து கிளர்ச்சிக்காரர்கள் ஹைதராபாத் கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட ஹைதராபாத் நிஜாம் தனது ஆட்சியை மீட்க முயன்றார்.
4. கம்பெனிப் படையில் சேர்ந்த சிப்பாய்களுக்கு இராணுவக் கட்டுப்பாடு போர்க்கருவிகள், பயிற்சிமுறை, போர் முறைகள் பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தும் புதுமையாயிருந்தன. அவற்றுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அது மட்டுமல்ல, சிப்பாய்கள் ஆங்கிலேய வீரர்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. அது சிப்பாய்களிடையே இனவேற்றுமையை வளர்த்தது அதன் காரணமாக அவர்கள் அந்நியரை அகற்ற வேண்டுமென்று விரும்பினர்.
5. 1806ல் சென்னை இராணுவப் பிரிவல் சில சிர்திருத்தங்கள் செய்யப்பட்டன. சென்னை இராணுவத் தளபதியான சர் ஜான் கிரடோக், சென்னை கவர்னராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் சம்மதத்தோடு சில மாற்றங்களைச் செய்தார். அதன்படி சிப்பாய்கள் ஐரோப்பிய படைவீரர்கள் அணிவது போன்ற தலைப்பாகையை அணிந்து கொள்ள வேண்டும், பணியில் இருக்கையில் சிப்பாய்கள் காதணிகளை அணிவதோ, நெற்றியில் திருந்து அல்லது நாமம் போட்டுக் கொள்வதோ கூடாது. முகத்தை நன்கு மழித்துக் கொள்ள வேண்டும். மீசையை நன்றாக நறுக்கப்பட்டிருக்க வேண்டும். சிப்பாய்கள் சிலுவைச் சின்னம் கொண்ட பட்டையை அணிய

வேண்டும். இச்சீர்திருத்தங்கள் சிப்பாய்களிடையே ஆங்கிலேயர் மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தின.

6. ஆங்கிலேயர்கள் தங்களை கிறித்துவ மதத்துக்கு மாற்ற முயற்சிக்கின்றனர் என்று சிப்பாய்கள் சந்தேகப்பட்டனர். அந்த நோக்கத்தோடு தான் இராணுவச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. என்று அவர்கள் கருதினர். குறிப்பாக 'அக்னு குல ˙லா' யில் இருந்த முடிச்சு பசு, பன்றித் தோலால் ஆனது என்ற சந்தேகம் இந்து முஸ்லீம் சிப்பாய்களிடையே சினமூட்டியது. அக்குல்லாய்கள் கிறித்துவ மதத்துக்கு மாறியவர்கள் அணிந்ததைப் போன்றிருந்தன. சிலுவைச் சின்னமிட்ட அடையாளப் பட்டையை அணிய வேண்டுமென்ற உத்தரவு சிப்பாய்களிடையே இருந்த மதமாற்ற அச்சத்தை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

**கிளர்ச்சித் திட்டம்**

மேற்கண்ட காரணங்களால் கிளர்ச்சிக்காரர்களும் திப்புசுல்தான் மைந்தர்களும் சிப்பாய்களும் கிளர்ச்சிக்காகத் திட்டமிட்டனர். வேலூர்க் கிளர்ச்சிக்கரர்கள் ஆற்காடு, மைசூர், ஹைதராபாத் கலக்காரர்களோடு தொடர்பு கொண்டனர். பிலிகொண்டா மக்களும், வாலாஜாபாத்தில் இருந்த சிப்பாய்களும் வேலூர் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவ முன் வந்தனர். சித்தூர் சிப்பாய்களும் கிளர்ச்சியை ஆதரித்தனர். ஹைதராபாத், சிக்காகோல் சிப்பாய்கள் அப்பகுதி மககளோடு இரகசியத் தொடர்பு கொண்டனர். ஹைதராபாத் கிளர்ச்சியை அடுத்து சிக்காகோவில் கிளர்ச்சி செய்ய முடிவு செய்தனர். அச்சதிததிட்டத்தை நிஜாம் கண்டும் காணாமல் இருந்து விட்டார். மனக்கசப்படைந்திருந்த மைசூர் மக்களும் கிளர்ச்சியில் கலந்து கொள்ளத் தயாராயிருந்தனர். 1806 ஜீலை 13 ஆம் தேதி அதிகாலையில் வேலூர் கோட்டையை கைப்பற்றுவதென்றும் அதைத் தொடர்ந்து மைசூரிலும், ஹைதராபாத்திலும் கிளர்ச்சி துவக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**கிளர்ச்சியின் போக்கு**

புதிய குல்லாய்கள் புகுத்தப்பட்ட போதே கிளர்ச்சிக்கான அறிகுறிகள் காணப்பட்டன. துவக்கத்தில் சிப்பாய்கள் எதிர்ப்பை வெளிக்காட்டாது அணிந்து கொண்டனர். கோட்டைக்கு வெளியே கூடிய மக்கள் குல்லாயணிந்த சிப்பாய்களைக் கேலி செய்தனர். அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். எனினும் கூட்டத்தினர் செய்த கேலி சிப்பாய்களிடையே அடங்கிக் கிடந்த தன்மான உணர்வைத் தூண்டிவிட்டது. பல சிப்பாய்கள் கோபத்துடன் குல்லாய்களைக் கழற்றி விசி ஏறிந்தனர். ஆனால் அந்த சிப்பாய்கள் தண்டிக்கப்பட்டு, ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது.

திட்டப்படி கிளர்ச்சி 1806 ஜீலை 13ஆம் தேதி துவக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஐந்து நாட்களுக்கு முன்னரே துவக்கப்பட்டுவிட்டது. பல குதிரைப்படை வீரர்கள் பணியாட்களுடன் வேலூருக்குள் நுழைந்தனர் (ஜீலை 9) அடுத்த நாள் வேலூர்க் கோட்டையிலிருந்து சிப்பாய்கள் ஆங்கிலேயர்கள் வசித்த குடியிருப்புப் பகுதியை நோக்கிச் சுட்டனர். அவர்களது தளபதி கர்னல் பென்கோர்ட் (ஊழட குநஉெழரசவ) டின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். அவரைச் சுட்டுகொன்றனர். அவரன்றி இராணுவ அதகாரிகளான மெக்காரசும், மேஜர் ஆம்ஸ்டடராங்கும் கொல்லப்பட்டனர். பின்னர் படை இருப்பிடத்திலிருந்து பிற அதிகாரிகளையும் இராணுவத்தினரையும் கொல்ல முற்பட்டனர். கோட்டையில் பிரதான நுழைவாயிலில் பல ஆங்கிலேயர்களைக் கொன்று

குவித்தனர் வெடிமருந்துக் கிடங்குக் காவலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் தேசியக் கொடி இறக்கப்பட்டது அதற்கு பதில் சிகப்ப பின்னணியில் பச்சைக் கோடுகள் போடப்பட்டு. மத்தியில் சூரியன் வடிவம் பொறிக்கப்பட்ட திப்புசுல்தானது கொடி ஏற்றப்பட்டது. திப்புசுல்தானது மூத்த மகனான பட்டே ஹைதர் அரசரென அறிவிக்க்ப்பட்டார்.

**கிளர்ச்சியின் தோல்வி**

வேலூர்க் கிளர்ச்சி திட்டமிடப்பட்டதற்கு முன்பாகவே துவக்கப்பட்டு விட்டதால் வலுவிழந்தது மைசூரும் ஹைதராபாத்தும் ஒரே சமயத்தில் கிளர்ச்சி செய்யவில்லை. வேலூர் கோட்டையில் நடந்த கிளர்ச்சியைப் பற்றி அறிந்த கர்னல் சில்லெஸ்பி (Col Gillelspie) வலிமை வாய்ந்த மீட்புப் படையுடன் ஆற்காட்டிலிருந்து விரைந்து வந்தார். மூடப்பட்டிருந்த வேலூர் கோட்டையின் நுழைவாயிலை வெடிவைத்துத் தகர்த்துவிட்டு உள்நுழைந்தார் இவர் கில்லஸ்பி கோட்டைக்குள்ளிருந்த கிளர்ச்சிக்கார சிப்பாய்களை மூர்க்கமாகத் தாக்கினார். சிப்பாய்களும் துணிவுடன் போரிட்டனர். அம்மோதலில் 350 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 113 ஐரோப்பியர் உயிரழந்தனர். 500 கிளர்ச்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டு. சிறையில் அடைக்கப்பட்டனர். வேலூர்க் கிளர்ச்சி முழுவதுமாக அடக்கப்பட்டது.

**தோல்விக்கான காரணங்கள்**

வேலூர்க் கிளர்ச்சிக்கான பொதுக்குறிக்கோள் எதுவுமில்லை. கிளர்ச்சி நன்கு கணிக்கப்பட்டு திட்டமிடப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு. திறமையாக நடத்தப்படவில்லை. வேலூர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு மருதுபாண்டியன் போன்ற ஒரு ராஜதந்தரி கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் கூட்டமைப்பு எதையும் உருவாக்கவில்லை. கிளர்ச்சிக்கான தேதி குறிப்பிட்டாலும் குறிப்பிட்ட தேதிகிகு முன்னரே கிளர்ச்சி துவக்க்ப்பட்டுவிட்டது. வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றியது கிளர்ச்சிக்காரர்களின் துணிகரமான சாகச் செயல்தான் என்பதில் ஐயமில்லை. எனினும் அது தனிப்பட்ட நிகழ்ச்சியாகவே இரந்துவிட்டது. வேலூர்க் கிளர்ச்சியையொட்டி மைசூரிலும், ஹைதராபாத்திலும் கிளர்ச்சிகள் தோன்றவில்லை. வேலூர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு உரிய காலத்தில் போதிய உதவிகள் கிடைக்கவில்லை. பணம், பொருள், ஆய்த வசதிகளும் அவர்களுக்குக் குறைவு. மேலும் எல்லாச் சிப்பாய்களும் இக்கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. பலர் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு விசுவாசத்துடன் இருந்தனர். அக்னு குல்லா அணிந்த சிப்பாய்களைக் கேலி செய்வதற்காகக் கூடிய கூட்டத்தைத் தவிர மக்கள் இக்கிளர்ச்சியிலல் பங்கு கொள்ளவில்லை. கில்லென்பியின் கொடூரத் தாக்குதலுக்கு முன் கிளர்ச்சிக்கார சிப்பாய்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

**கிளர்ச்சியின் இயல்பும் சிறப்பும்**

வேலூர்க் கிளர்ச்சியின் இயல்பைப் பற்றியும் சிறப்பைப் பற்றியும் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. வேலூர்க் கிளர்ச்சி அடக்கப்பட்டபின் அதன் உண்மை நிலையைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஜி.ஹார்கோர்ட் ஆர்.கில்லெஸ்பி, ஐ.கென்னடி, ஐ.மன்றோ ஆகியோர் கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. திப்பு சுல்தானின் மைந்தர்கள் சதி செய்து தூண்டிவிட்டதால் விளைவாகவே வேலூர்க் கிளர்ச்சி ஏற்பட்டது என்ற முடிவுக்கு வந்தது அந்த விசாரணையாகவே வேலூர்க் கிளர்ச்சி எற்பட்டது என்ற முடிவுக்கு வந்தது அந்த விசாரணைக் குழு மேஜர் ஜெனரல் பேட்டர் தலைமையிலான சிறப்புக் கமிஷன் ஒன்றும் நியமிக்கப்பட்டது. புதிதாகப்

புகுத்தப்பட்ட இராணுவச் சீர்திருத்தங்களும் திப்புவின் செல்வாக்கும் சேர்ந்தே கிளர்ச்சியைத் தோற்றுவித்தது என்று கண்டுபிடித்தது அந்தக் கமிஷன் முகலாய ஆட்சியே வேலூர்க் கிளர்ச்சிக்கான காரணமென்றார் ஜே.எப்.கிரடோக் மதமாற்ற பயமே கிளர்ச்சிக்குக் காரணம் என்றார் சர்.தாமஸ் மன்றோ இந்து முஸ்லீம்களின் சமய உணர்ச்சி புண்பட்டதால்தான் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர் என்றார் வில்லியம் பெண்டிங் பிரவு. பல்வேறு கருத்துக்களையும் பரிசிலித்து இயக்குனர்கள் மன்றம் (Court of Directors) புதிய இராணுவ மாற்றங்களால் சிப்பாய்கள் அதிருப்தியுற்றனர். அந்த அதிருப்தியை வேலூர்க் கோட்டையில் சிறைப்பட்டிரந்த திப்புசுல்தானின் மைந்தர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்ற முடிவுக்கு வந்தது.

வேலூர்க் கிளர்சிச கம்பெனி ஆட்சிக்கெதிரான சிப்பாய் கலகமே என்கிறார் பேராசிரியர் ஜோசப்திலியன். 1857 பெருங்கிளர்ச்சிக்கான ஒத்திகையே வேலூர்க் கிளர்ச்சி என்று எழுதியுள்ளார் வி.டி.சவார்க்கர் தென்னிந்தியக் கிளர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்டு கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்ட விடுதலைப் போராட்ட முயற்சியே வேலூர்க் கிளர்ச்சி என்பது பேரராசிரியர் கு.ராஜய்யனது வாதம் வேலூர்க் கிளர்ச்சி தேனீர்க் கோப்பையில் எழுந்த புயலல்ல மாறாக, அது பல வகையிலும் 1857 பெருங்கிளர்ச்சிக்கான முன்னோடியாகும் எனக் கருதுவதில் தவறில்லை.

**விளைவுகள்**

வேலூர்க் கிளர்ச்சி விளைவுகளற்ற விழ்சசியன்று அதன் விளைவாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டன. சென்னை கவர்னர் வில்லியம் பெண்டிங் பிரபுவும் சென்னை தளபதி சர் ஜான் கிரடோக்கும் பதவியினின்றும் விலக்கிக் கொள்ளப்பட்டது (1807) உடனடி விளைவாகும். புதிதாகப் புகுத்தப்பட்ட இராணுவ மாற்றங்கள் நீக்கப்பட்டன. வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் கடும்பத்தினர் வங்களாத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். புதிய கவர்னராக வந்த பார்லோ (டீயசடழற) மக்களின் சமய உணர்வுகளை மதிப்பதன் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டார். கம்பெனி அதிகாரிகள் கிறித்துவ சமயப் பிரச்சாத்தில் ஈடுபடுவது கணிசமாகக் குறைந்தது ஆயினும் பிரிட்டிஷ் மேலதிகாரிகள். பிரெஞ்சு பூர்பான் அரசர்களைப் போன், தென்னிந்திய வேலூர்க் கிளர்ச்சிகளிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்கவுமில்லை! மறக்கவுமில்லை!

1) வேலூர்க் கிளர்ச்சியின் போக்கை விளக்குக.
2) வேலூர் கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் யாவை?

## சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள்

இந்துக்கள் பின்பற்றும் மதமுறைகள் அவர்களது அரசியல் நலன்களைப் பாதுகாப்பதாயில்லை. அதேபோன்று சாதிவேறுபாடுகள் எண்ணிறந்த பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் ஏற்படுத்தி விட்டது. இது அவர்களிடையே நாட்டுப்பற்றை வளர விடாமல் செய்துவிட்டது.

**-ராஜா ராம்மோகன் ராய்.**

1857 பெருங்கிளர்ச்சிக்கு பின் ஐம்பதாண்டுகளில் இந்திய தேசிய உணர்ச்சி விரைவாக வளரலாயிற்று. பல சமுதாய, சமயச் சீர்திருத்தவாதிகள் தேசிய உணர்ச்சிகாண அறிவு, ஆன்மீக உணர்ச்சி அடித்தளங்களை அமைத்துக் கொடுத்தனர். அவர்கள் அனைவருக்கும் சாதிமுறை, குழந்தைத் திருமணம், குழந்தைக் கொலை, விதவைகளை ஒதுக்கி வைத்தல், சமூக வேறுபாடுகள் சீர்திருத்தவாதிகள், சமுதாயக் கேடுகளுக்கும், கொடுமைகளுக்கும் வேதங்களிலும், உபநிடதங்களிலும் பரிகாரம் தேடினார்கள். வேறு சிலர் அறிவின் துணைகொண்டு, சமுதாய சமயப் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து பரிகாரங் கூறினர். சீர்திருத்தம்(Reform) பழைமை மீட்பு (Revival) பகுத்தறிவு (Rationalism) ஆகிய மூன்று வழிகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய சமுதாய சீர்திருத்தவாதிகள் தங்களது இயக்கங்களை நடத்தினர். பிரம்ம சமாஜம், பிராத்தனா சமாஜம், ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண இயக்கம், பிரம்மஞான சபை ஆகியவை இந்திய தேசிய உணர்வு அரும்ப அரும்பாடுபட்டன.

**பிரம்ம சமாஜம்**

**ராஜா ராம்மோகன் ராய்**

பிரம்ம சமாஜத்தைத் (Brahmo Samaj) தோற்றுவித்தவர் ராஜா ராம்மோகன் ராய் (1772-1883) ஆவார். வசதியான பிராமணக் குடும்பத்தில் பிறந்த ராம்மோகன் இளவயதிலேயே முற்போக்கு எண்ணங் கொண்டவராக இருந்தார். உருவ வழிபாட்டை எதிர்த்தார். அறியாமை, பொறையின்மை, மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கெதிராகப் போராடினாார். உடன்கட்டை ஏறும் வழக்கத்திற்கு எதிராகப் போர் தொடுத்தார். சாதி முறையைச் சாடினார். பெண்கள் விடுதலைக்காப் பாடுபட்டார். எண்ணச் சுதந்திரத்தையும் எழுத்துச் சுதந்திரத்தையும் இரு கண்களாகப் பாவித்தார். நிர்வாகத் துறையும் நிதித் துறையும் தனித்தனியே இருக்க வேண்டுமென்றார். மாபெரும் மனிதாபிமானியான ராஜா ராம்மோகன்ராய் அனைத்துக் துறைகளிலும் மனித விடுதலைக்காப் பாடுபட்டார். பல கடவுட் கொள்கையைப் புறக்கணித்து ஒரே கடவுள் கொள்கையைப் போற்றினார். இறைவன் மனித குலத்துக்குப் பொதுவானவர்; அதேபோன்று சமயமும் மனித குலத்துக்குப் பொதுவாயிருக்க வேண்டும் என்பது அவரது கோட்பாடு. 'சர்வசமய சமரச சன்மார்க்கம்' ராஜா ராம்மோகன்ராய் காட்டிய ஆன்மிக வழியாகும். அவர் முற்போக்கு இந்தியாவின் முன்னோடித் தலைவர் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய, சமயக் சீர்த்திருத்த இயக்கத்தின் தந்தை அவர். அதனால்தான் ராஜா ராம்மோகன்ராய் 'புதிய இந்தியாவின் விடிவெள்ளி' என்றும், 'முற்போக்கு ஆன்மிகக் கண்டம் கண்ட இந்தியக் கொலம்பஸ்' என்றும், போற்றப்படுகிறார்.

**பிரம்ம சமாஜம்**

1828 ஆகஸ்டு 20ஆம் நாள் பிரம்ம சமாஜம் ராஜா ராம்மோகன் ராயால் துவக்கப்பட்டது. 1830 ஜனவரி 23ஆம் நாளிலிலிருந்து அது முறைப்படி செயல்பட ஆரம்பித்தது. அது பிரம்ம சபை அல்லது ஒரே கடவுள் சங்கம் என்று ஆரம்பிக்கப்பட்டது. பிரம்ம சமாஜம் பகுத்தறிவு சமூக சீர்திருத்ததின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. இந்தியாவில் ஒரே கடவுள் கொள்கையை (Monotheism) நிலை நாட்டுவதே அதன் நோக்கம், பிரம்ம சமாஜத்தின் உறுப்பினர்கள் 'பிரமோக்கள்' (Brahmos) என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வழிபட்ட கடவுளுக்குப் பெயரோ, பட்டமோ, உருவமோ, சிலையோ கிடையாது.

அனைவருக்கும் பொதுவான பரம்பொருளை வழிபட எவ்வித வேறுபாடுமின்றி மக்கள் பிரம்ம சமாஜத்தின் அனுமதிக்கப்பட்டனர். கல்விபெற்ற மத்தியதர மக்கள் பெருவாரியாக பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தனர். ராஜா ராம்மோகன் ராயின் இம்முற்போக்கு ஆன்மிகப் பரிசோதனையை வங்காள வைதீகர்கள் கடுமையாக எதிர்த்தனர். பிரம்ம சமாஜத்துக்கெதிராகத் 'தர்மசபை' (Dharma Sabha) என்ற போட்டி அமைப்பை அவர்கள் ஏற்படுத்தினர். இந்து சமுதாயம் கொந்தளிப்புக்குள்ளாயிற்று. முகலாயப் பேரரசர் அக்பரைப் போன்றே ராம்மோகன் ராயும் இந்திய மக்களை எளிய ஆன்மீக நம்பிக்கைமூலம் ஒன்று சேர்த்துவிடலாம் என்று கண்டார்; அக்பரைப் போன்றே அவரும் மக்களிடையே இருந்த மூடநம்பிக்கையைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார் என்று வில்டூரண்ட் கூறியுள்ளார்.

### ஆதிபிரம்ம சாமஜம்

ராஜா ராம்மோகன்ராய் இறந்த பின்னர் (1833) பிரம்ம சமாஜம் நலிவடைந்தது. ஆனால் அதன் நலிவைப் போக்கி இதற்குப் புதுப்பொலிவைக் கொடுத்த பெருமை தேவேந்திரநாத் தாகூரை (1817-1905) சாரும். அவர் 1859ல் துவக்கிய தத்துவபோதினி சபையை பிரம்ம சமாஜத்தோடு இணைத்தார் (1838). அவரது ஆதரவிலும் அரவணைப்பிலும் அச்சபை சிறந்த சமூகச் சீர்திருத்தக் கருவியாகப் பயன்பட்டது. பல அறிவொளிமிக்க இந்துக்கள் சங்கத்தில் சேர்ந்தனர். சங்கத்தின் கருத்துப் பிரச்சாரமும், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளும் கிராமங்களுக்கெல்லாம் ஊடுருவிச் சென்றன. சமூகச் சீர்திருத்ததில் தாகூர் போதிய தீவிரம் காட்டவில்லை என்பதால் அவரது பிரதம சீடரான கேசவ் சந்திரசென் (keshab Chandra Sen) பிரம்ம சமாஜத்தை விட்டுப் பிரிந்து சென்றார். தாகூரின் தலைமையில் இயங்கிய சங்கம் ஆதி பிரம்ம சமாஜம் என்றழைக்கப்பட்டது.

### முற்போக்கு பிரம்ம சமாஜம்

பிரம்ம சமாஜத்திலிருந்து பிரிந்துவந்த கேசவ் சந்திரசென் (1829-1884) முற்போக்கு பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தார். பிரம்மமோக்கன் சாதியைக் கைவிட வேண்டும், உருவ வழிபாட்டை அறவே விலக்க வேண்டும் என்றார் அவர். கிறித்துவக் கோட்பாட்டால் பெரிதும் கவரப்பட்ட கேசவ் சந்திரா மக்களிடையே மூடப்பழக்கங்களையும், அறியாமையையும் பரப்பி வந்த தகர்த்தெறியப்பட வேண்டுமென்றார். மனிதனுக்கோ அல்லது புனித ஈகை மற்றும் சமூக ஒழுக்க மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டார் கேசவ் சந்திர சென். அவரது அகில இந்திய சுற்றுப் பயணம் அவரது சமாஜத்துக்கு இந்தியக் கண்ணோட்டத்தைக் கொடுத்தது. தேசிய ஒற்றுமையை வளர்த்தது. பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களை ஒரே மேடையில் கூட்டுவித்தது. பின்னர் சுரேந்திரநாத் பானர்ஜி மேற்கொண்ட முயற்சிக்கு கேசவ் சென்னின் நடவடிக்கை திகழ்ந்தார். அவர் இறந்தபோது (1884) இந்தியா அவருக்கு அஞ்சலி செலுத்தியது. பின்னர் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டபின் அதில் பல பிரம்மோக்கள் பிரதான பங்கேற்றனர்.

### பிரார்த்தனா சமாஜம்

கேசவ் சந்திர சென்னின் பம்பாய்ப் பயணத்தின் (1861) விளைவாகச் துவக்கப்பட்டதே பிரார்த்தனா சமாஜமாகும். அந்த சமாஜம் ஆத்மராம் பாண்டுரங்காவின் தலைமையில் 1867 மார்ச் 31ஆம் நாள் துவக்கப்பட்டது. மகாதேவ கோவிந்த ரானடே, ராமகிருஷ்ண கோபால் பந்தர்கார் போன்ற

பிரமுகர்கள் பிரார்த்தனா சமாஜத்தில் சேர்ந்தனர். 'சத்யமேவ ஜெயதே' அல்லது 'வாய்மையே வெல்லும்' என்ற வாசகத்தை தனது குறிக்கோளுரையாகக் கொண்டது பிரார்த்தனா சமாஜம்.

ஒரே கடவுள் கொள்கையும் சமுதாய சீர்திருத்தமும் பிராத்தனா சமாஜத்தின் இரண்டு குறிக்கோளாகும். உருமற்ற இறை வழிபாட்டை சமாஜம் பின்பற்றியது. இந்து சமயத்தில் புறையோடிப் போயிருந்து ஊழல்களை அது வன்மையாகக் கண்டித்தது.சமயச் சடங்குகளை எதிர்த்தது. புனித நூல்களில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை என்பதை ஏற்க மறுத்தது. கடவுள் அவதாரங்களையும் அற்புத அதிசயச் செய்கைகளையும் கண்டித்தது. பக்தர்களுக்கும் பரமனுக்குமிடையே உள்ள இடைத்தரகர்களுக்கு இச்சமாஜத்தில் இடமில்லை.பிரார்த்தனா சமாஜம் நூற்றக்கணக்கான துவக்க இடைநிலைப் பள்ளிகள்; இரவுப் பள்ளிகள், அநாதை இல்லங்கள்; மகிளா சமாஜங்கள், தாழ்த்தப்பட்டோர் மிஷன் சங்கங்கள் ஆகியவற்றை நடத்திற்று. குழந்தைத் திருமண தடுப்பு, விதவை மறுமணம், கலப்புத் திருமணம் போன்ற சமூகச் சீர்த்திருத்தங்களையும் இந்த சமாஜம் தீவிரமாக மேற்கொண்டது. எம்.ஜி.ரானடே அகில இந்தியச் சீர்திருத்த இயக்கத்திற்கான திட்டம் வகுத்தார். இந்திய தேசிய சமூக மாநாடு அவரது ஏற்பாடுதான். இந்திய தேசிய காங்கிரசைத் தோற்றுவித்தவர்களில் அவரும் ஒருவர், பக்தர்கள், நாராயணன் சந்தவார்கள். கோபால கிருஷ்ண கோகலே போன்றோர் பிரார்த்தனா சமாஜத்தில் பிற பிரமுகர்களாகத் திகழந்தார்கள்.

**ஆரிய சமாஜம்**

**சுவாமி தயானந்த சரஸ்வதி**

தயானந்த சரஸ்வதி (1824-1883) ஒரு குஜராத்தி வைதிக பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இளவயதில் அவர் மூல சங்கரர் என்றழைக்கப்பட்டார். உண்மை, அறிவு, வாய்மை, விவேகம் ஆகியவற்றைத் தேடி அலைந்தார். மேற்கத்திய அறிவாலும், பண்பாட்டாலும் சிறிதும் பாதிக்கப்படாதவர் தயானந்தர். அவர் ஒரு வேத வித்தகர்,விவாத வல்லுநர், வேத சமய மீட்பாளர், தயானந்தர். அவர் ஒரு வேத வித்தகர், விவாத வல்லுநர், வேத சமய மீட்பாளர் சமூக சீர்திருத்தவாதி, வேதத்துக்குத் திரும்பு என்பதை அவர் தாரசு மந்திரமாகக் கொண்டார். வேதத்தில் இல்லாத வேறெதிலும் இல்லை என்பது அவரது துணிபு. வேதம் அறிவுச் சுரங்கம். தற்கால விஞ்ஞான விளக்கங்கள் அனைத்து வேதங்களில் காணக்கிடக்கின்றன. சாதி வேறுபாடற்ற வர்ணாசிரம தர்மத்தை அவர் வரவேற்றார். பிறப்பு ஒருவனது சாதியை நிர்ணயிக்கிறது என்ற அளவுகோலை தயானந்தர் ஏற்கவில்லை. கிராமத்தை அடித்தளமாகக் கொண்டு அரசியலமைப்பு அமைய வேண்டுமென்றார். அரசியலில் தேவையான வன்முறையைப் பிரயோகிக்கலாம் என்றார். பரம்பரை சாதிமுறை, தீண்டாமை பல கடவுள் கொள்கை, உருவ வழிபாடு, குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறல் போன்றவற்றக்கு வேதங்களின் அனுமதி இல்லை என்று ஆணித்தரமாகக் கூறினார் தயானந்தர். இந்தியாவை 'ஆரிய வர்த்தா' எனக் கூறிய தயானந்தர் ஒரு தீவிர தேசியவாதி. தேசத்தின் ஒழுக்கத் தூய்மையின் இன்றியமையானையை வலியுறுத்தினார். மக்களிடையே அச்சமின்மை, சுயசார்புடைமை, சுயமரியாதை ஆகியவ்றறை பற்றிப் பிரச்சாரம் செய்தார்.

**சமாஜம்**

1875ஆம் ஆண்டு ஆரிய சமாஜம் சுவாமி தயானந்த சரஸ்வதியால் பம்பாயில் துவக்கப்பட்டது. அதே ஆண்டில் அந்த சமாஜம் பஞ்சாப்பிலுள்ள லாகூரிலும் தோற்றுவிக்கப்பட்டது. ஆரிய சமாஜம் பஞ்சாபில் வேகமாக வளர்ந்தது. வேதங்கள் தவறில்லாதவை என்பதும் மறுபிறப்பு உண்டு என்பதும் ஆரிய சமாஜத்தின் அடிப்படைக் கொள்கைகள். சமாஜ உறுப்பினர்கள் வேதங்களைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். ஆகிய சமஜம் இஸ்லாம், கிறித்துவ சமயங்களுக்கு எதிராகத் துவக்கப்பட்டதால் அது இந்து சமயத்தை வானுயறப் போற்றிப் புகழ்ந்தது. அது ஆண்-பெண் சமத்துவம், சமுதாயச் சமத்துவம், அனைவருக்கும் பொதுவாய்ப்புகள், எல்லோருக்கும் அன்புடன் கூடிய ஈகை ஆகியவை பற்றிப் போதித்தது. ஆரிய சமாஜம் ஒரு சமுதயாச் சீர்திருத்த இயக்கமாகும்.

**சமாஜத்தின் சாதனைகள்**

மக்களுக்கு குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தொண்டு செய்வதையே ஆரிய சமாஜம் தனது கடமையாகக் கொண்டது. அறச்செயல் அதன் ஆணிவேர். சமாஜம் திருமணத்துக் கெதிராகப் போர் தொடுத்தது. 1929ல் ‘சாரதாச் சட்டம்’ நிறைவேற்றப்படுவதற்குச் காரணமாயிருந்த ‘ஹர்பிலாஸ் சார்தா’ (Harbilas Sarda) ஒரு ஆகிய சமாஜக்காரர் என்பது நினைவுகூறத்தக்கது. விதவை மறுமணத்துக்காக சமாஜம் தீவிரப் பிரச்சாரம் செய்தது. பெண் கல்விக்காகப் பள்ளிகளைத் துவக்கிற்று. தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்துக்காக ஆரிய சமாஜம் புரட்சிகரமாக பணிகளில் ஈடுபட்டது. சுத்தி (Shuddhi) முறையின் மூலம் கிறித்துவ மதத்துக்கு மாறிய பல்லாயிரக்கணக்கானோரை மீண்டும் இந்து மதத்துக்குக் கொண்டுவர ஆரிய சமாஜம் காரணமாயிருந்தது. காயத்திரி மந்திரம் ஜெபித்து, பூணூல் போட்டு தீண்டத்தகாதோர் எனக் கருதப்பட்டோர் பிற இந்துக்களுக்குச் சமமாகக் கொண்டு வரப்பட்டனர்! ‘இந்திய மறுமலர்ச்சியின் தந்தை’ எனக் கருதப்படும் சுவாமி தயானந்த சரஸ்வதி இந்திய அரசியல் விடுதலைக்கான விதையையும் விதைத்துச் சிரத்தானந்தா, லாலா லஜபதிராய், முன்ஷிராமா, ராமதேவா ஆகியோர் ஆரிய சமாஜத்தினரே. அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டடோராவர்.

**இராமகிருஷ்ண இயக்கம்**

**ராமகிருஷ்ண பரமஹம்ஸர்**

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886) சுவாமி தயானந்த சரஸ்வதியின் சமகாலத்தவர். தயானந்தரைப் போன்றே ராமகிருஷ்ணரும் மேலைநாட்டு மோகத்தால் சிறிதும் பாதிக்கப்படாதவர். ராமகிருஷ்ணர் கடவுளைக் காளி வடிவில் கண்டவர். பண்ணிரண்டாண்டு காலச் சாதனைக்குப்பின் கிருஷ்ணனும், அல்லாவும், ஏசுவும் ஒரே கடவுளின் பல்வேறு வடிவங்களே என்ற உண்மையை உணர்ந்தார் அவர். அனைத்துச் சமயங்களின் அடிப்படை ஒன்றே என்பதை ராமகிருஷ்ணர் கோடிட்டுக் காட்டினார். பல்வேறு சமயக்கோட்பாடுகள் அனைத்தும் ஒரே கடவுளை அடைவதற்கான பாதைகளே என்பதை அவர் வலியுறுத்தினார். சமயத்தின் பேரால் மக்கள் பிரிக்கப்பட்ட போது ராமகிருஷ்ணர் தனது இறை ஒருமைப்பாட்டு அணுகுமுறையால் மக்களை ஒருங்கிணைத்தார். ராமகிருஷ்ணர் படித்தவரல்லர்; ஆயினும் படித்ததோரெல்லாம் அவரை நாடிச் சென்று ஆன்ம அமைதி பெற்றனர். அவர் ஒரு மறை மெய்யாளராக (Mystic) விளங்கியபோதும்

மனித நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். மனித சேவையே மகேசன் சேவை எனக் கருதியவர் ராமகிருஷ்ணர். ஜீவனில் சிவனைக் கண்டவர் அவர். ஒரு மனிதனுக்கு உதவ முடியுமானால் அவரால் மனிதனிடம் கடவுளைக் காணும் பொறுப்பைச் சுவாமி விவேகானந்தரிடம் ஒப்படைக்க முடிந்தது. தற்காலச் சூழ்நிலையில் ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பலரும் புரிந்து கொள்வது கடினம்; அவர் இறையருள் பெற்றவர் என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர் என்று ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டுள்ளார்.

### சுவாமி விவேகானந்தர்

நரேந்திநாத் தத்தா சுவாமி விவேகானந்தர் (1863-1902) ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு நேர்மாறக இருந்தாலும் அவரது ஆன்மீக சாதனையால் ஈர்க்கப்பட்டவர். ராமகிருஷ்ணரது மறைவுக்குப்பின் (1886 ஆகஸ்டு) சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். 1893ல் அவர் அமெரிக்க நாட்டு சிக்காகோவில் நடைபெற்ற உலகச் சமய மாநாட்டில் ஆற்றிய உரை ஆன்மீக உலகை ஆட்கொண்டது. அந்த ‘சூறாவளி இந்து’, ‘இந்து நெப்போலியன்’ தனது காந்தக் கருத்துக்களால் கோடையிடிப் பேச்சுக்களால் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை ஆன்மீக முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். அவரது வீர உரைகள் உறங்கிக் கொண்டிருந்த இந்தியரை விழித்தெழச் செய்தன. மனிதனை மனிதனாக்கும் சமயமே, கல்வியே, கொள்கைகளே தற்கால இந்தியாவுக்குத் தேவை என்பதை வலியுறுத்தினார். மனிதருக்குள்ளே மறைந்து கிடக்கும் அளப்பறிய ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டுமென்றார். இளைஞர்கள் இந்தியாவின் பெருமை உணர்ந்து அதன் வீழ்ச்சிக்கான காரணங்களைச் கண்டறிந்து, நாட்டின் எழுச்சிக்காக ஓயாமல், ஒழியாமல் உழைக்க வேண்டும்மென்றார் சுவாமி விவேகானந்தர். ‘விழி,எழு,உழை’ என்ற மந்திரத்தை அவர்களுக்குப் போதித்தார். பெண்கள் விடுதலைக்காகவும், பாமரர்களின் புனர்வாழ்வுக்காகவும் பாடுபட்டார். இந்திய தேசிய இயக்கத்தின் தோற்றுவாயை சுவாமி விவேகானந்தரின் வீரவார்த்தைளில் காணலாம்.

### ராமகிருஷ்ண மடமும் மிஷனும்

ராமகிருஷ்ண பரமஹம்சர் இறந்த பின்னர், சுவாமி விவேகானந்தர் ராமகிருஷ்ண மடத்தையும், மிஷனையும் தோற்றுவித்தார் (1887). மடம் ஆன்மீக மையம், அதில் சந்தியாசிகளுக்கு ஆன்மீகக் கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பட்டது. அவர்கள் மக்கள் நலம்பேணும் படையினர். மிஷன் பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். வெள்ளம், புயல், வறட்சியால் மக்கள் பாதிக்கப்படும்போது மடத்தையும் மிஷனையும் சார்ந்தோர் தீயணைப்பு படையினரைப்போல் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபடுவர். ராமகிருஷ்ண மடம், மிஷன் கிளைகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நிறுவப்பட்டன. இவைகளின் கல்விப் பணியும், சுகாதார பொது நலப்பணிகளும் போற்றுதற்குரியன. காந்தி, நேரு, போஸ் போன்றவர்கள் விவேகானந்தரின் நாட்டுப்பற்றால் ஈர்க்கப்பட்டார்கள்.

### பிரம்மஞான சபை

எச்.பி.பிளாவட்ஸ்கி என்ற ரஸ்ய அம்மையாரும, கர்னல் எச்.எஸ். ஆர்காட் என்ற அமெரிக்கரும் இணைந்து நியூயார்க்கில் 1875 ஆம் ஆண்டு துவங்கிய சங்கமே பிரம்மஞான சபை(Thesophical Society) ஆகும். 1879ல் இந்தியாவுக்கு

வந்த அவர்கள் சுவாமி தயானந்த சரஸ்வதியின் துணையோடு பிரம்மஞானசபையின் தலைமை மையத்தை அமெரிக்காவிலிருந்து சென்னை அடையாருக்கு மாற்றினார். பிளாவட்ஸ்கி அம்மையார் தன்னை இந்து சமயத்தோடு ஐக்கியப்படுத்திக் கொண்டார். ஆன்மீக துறையில் இந்துக்கள் ஐபோரப்பியர்களைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள் என்று அவர் கூறினார். கர்னல் ஆல்காட் பண்டைய இந்திய ஆன்மீகப் பெருமையில் தனது மனதைப் பறிகொடுத்தார். இருவரும் இந்தியா புத்துயிர் பெறுவதில் பேரார்வம் காட்டினார். உலக சகோதரத்துவதை வளர்த்தல், பழங்கால ஆரிய சமயம், இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவற்றை ஆழ்ந்து கற்றல்; இயற்கை நியதிகளை ஆராய்ந்து மனிதனுக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆன்மீக ஆற்றல்களை வெளிக்கொணரல் ஆகியவை பிரம்மஞான சபையின் நோக்கங்களாகும்.

திருமதி டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் பிரம்மஞான சபையில் சேர்ந்து அதை மக்கள் செல்வாக்குப்பெற்ற இயக்கமாக்கினார். இந்து இதயம்கொண்ட ஐரிஷ் மாது அவர். இந்துவைப்போரில் உடையணிந்து, இந்துவைப்போல் வாழ்ந்து இந்துக்களின் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டார். கேட்டார்ப் பணிக்குந் தகையவாயக் கோளாரும் வேட்ப மொழியும் சொல்லாற்றல் மிக்கவர் அன்னிபெசண்ட் அம்மையார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சிறுமி திருமணத்தையும், விதவை முடக்கத்தையும் கண்டித்தார். 1898ல் காசியில் இந்து கல்லரி துவக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தவர்களுள் இவரும் ஒருவராவார். இந்து மதம் இன்றேல் இந்தியா இல்லை என்று நம்பிய அன்னிபெசண்ம் அம்மையார் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து, தன்னாட்சி சங்கத்தைத் தோற்றுவித்து சுதேசி இயக்கத்தை ஊக்குவித்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறப்பாக பங்கேற்றார். இந்திய தேசியக் காங்கிரசைத் தோற்றுவித்த எ.ஓ.ஹுயூம், பிளாவட்ஸ்கி அம்மையாரின் பிரதமக் கூட்டாளி என்பது குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின், பிரம்மஞான சபை இந்திய தேசியத்தின் உற்து சக்தியாகவும் ஊக்கச் சக்தியாகவும் இருந்தது என்றால் மிகையாகாது.

**அலிகார் இயக்கம்**

சர் சயது அகமதுகான் (1817 – 98) இந்திய முஸ்லீம்களிடையே சமயச் சீர்திருத்தத்தையும் சமுதாயக் சீரமைப்பையும் ஒழுக்க விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். இவர் இஸ்லாமிய போதனைகளை நவீன காலத் தேவைகளுக்கேற்ப இணக்குவிக்க முயன்றார். சமயக் கோட்பாடுகள் மாற்ற முடியாதவையல்ல என்று கூறினார். சமயம் சமுதாய முன்னேற்றத்துக்கு உதவ வேண்டுமேயன்றி முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தினார். காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத சமயம் இந்திய இஸ்லாம் போன்று பயனற்ற பழஞ்சின்னமாகிவிடும் என்று எச்சரித்தார். எல்லா தீர்க்கதரிசிகளும் ஒரே இறை நம்பிக்கையைத்தான் பிரதிபலித்தாகக் கூறினார். இவரது பார்வை அறிவுபூர்வமான, சமயச்சார்பற்ற, மனிதாபிமானப் பார்வையாகும்.

சயத் அகமதுகான் இந்திய முஸ்லீம்கள் மூடப்பழக்க வழக்கங்களையும் சமயப் பொறையின்மையும், சாரமற்ற சம்பிரதாயங்களையும் கைவிட்டு விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினர். இவர் திரக்குரனை உருதுவில் மொழி பெயர்த்தார். அதுமட்டுமல்ல அம்மறை நூலுக்க அறிவியல் பூர்வமான விளக்கமளித்தார். இவர் பர்தா முறையைச் சாடினார். சமயக் கருத்து வேறுபாடுகள் தேச நலனுக்கு ஊறுவிளைவிக்கக் கூடாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். மக்களிடையே மத வித்தியாசங்கள்

இருஜப்பினும் அனைவரிடையேயும் ஒரு தேசமக்கள் என்ற உணர்வு மேலோங்கி இருக்க வேண்டும் இன்றியமையாமையை வலியுறுத்தினார்.

சயத் அகமதுதகான் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை ஆதரித்தார். மக்களிடையே குறிப்பாக முஸ்லீம்களிடையே ஆங்கிலக் கல்வியைப் பரப்ப பல முயற்சிகளை மேற்கொண்டார். 1860களில் முஸ்லீம்களையும் இந்துக்களையும் கொண்ட பல அறிவியல் கழகங்களை உருவாக்கினார். இவர் 1876ம் ஆண்டு அலிகார் முஸ்லீம் ஆங்கிலேயர் ஒரியண்டல் கல்லூரியை நிறுவினார் அகமதுகான் இக்கல்லூாயில் இருச்சாரருக்கும் சம முக்கியத்துவம் கொடுத்தார். இந்தக் கல்லூரியே பின்னர் புகழ்பெற்ற அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாக விரிவடைந்தது. இவர் மேற்கொண்ட முயற்சியே அலிகார் இயக்கம் என்று அறியப்படுகிறது.

சர் சயத் அகமதுகானுக்குப் பல திறமையும் செல்வாக்குமிக்க பிரமுகர்களில் ஆதரவ கிடைத்தது. இவர் கூட்டிய முஸ்லீம் கல்வி மாநாடு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த முஸ்லீம் நடுத்தர வாக்கத்தினரை ஒன்று சேர வைத்தது. அகமதுகான் முஸ்லீம்களிடையே ஆங்கிலக்கல்வி பரவக் காரணமாக இருந்தார். இவரது சமயச்சார்பற்ற, அறிவியல் ரீதியான பகுத்தறிவு அணுகுமுறை அதிசியிக்கத்தக்கது. எனினும் கானின் முற்போக்கு சமய – சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் முஸ்லீம் மேல்தட்டு மக்களோடு நின்றுவிட்டனர். அடித்தட்டு இயக்கத்திலிருந்து மனமாற்றம் செய்வதில் வெற்றி பெற்றார். சான்று புகழாரம் சூட்டியுள்ளார் நேரு. சயத் அகமதுகான் சந்தேகத்துக்கு இடமின்றி 19ம் நூற்றாண்டின் தலைசிறந்த இந்தியர்களில் ஒருவர் என்று மதிப்பீடு செய்கிறார் பிபன் சந்திரா.

**சாதிச் சிர்திருத்தம்**

சாதி அமைப்பு முறை இந்து கலாச்சாரத்தின் களங்கமாகும் திண்டாமை வருணாசிரம தர்மத்தின் விஷவித்தாகும். தீண்டாமைக்குக் காரணமான, வர்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சாதி வரிசைப்படிமுறை இந்திய சமுதாய அமைப்பில் ஆழமாக வேரூன்றிவிட்டது. உயர்சாதி இந்துக்கள் தீண்டத்தகாதோரின் வருகையை முன்னறிவிப்பு செய்வதற்காக மணி அடித்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கு வந்த சீனயாத்ர்கா் பாஹியான் சாதி அமைப்பு முறை சமுதாயத்தைப் பலவீனப்படுத்திவிட்டது. சாதி வேறுபாடுகளை சாசுவதமாக்கிவிட்டது. தேசப்பற்று தோன்றவிடாமல் தடுத்துவிட்டது. சமுதாய சமுத்துவ ஜனநாயகத்துக்குத் தடையாக இருந்தது எனவே, மக்களை மக்களாகக் கருதாமல் மேல்சாதியினர். கீழ்சாதியினர் என்று பாகுபடுத்தி வேறுபடுத்திய சாதிமுறையைச் சீரமைக்க ராஜா ராம்மோகன் ராய், தயானந்தர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் சாதிச் சீர்கேடுகளைக் கடுமையாகச் சாடினார். சாதிச் சீர்திருத்தம் பற்றிப் பேசினர், கீழ்ச்சாதித் தலைவர்கள் சாதித் சீர்திருத்தத்தை மேற்கொண்டனர்.

**ஜோதிபா பூலே 1827-1890**

ஜோதிபா 1827ம் ஆண்டு மராட்டிய மாநிலத்தில் பூனாவில் சீழ்சாதியாகக் கருதப்பட்ட ‘மாலி’ வகுப்பில் பிறந்தார். இவர் பூத்தொடுக்கும் குடும்பத்தில் பிற்நததமையால் ‘பூலே” என்று அழைக்கப்பட்டார். உயர்சாதியினராகக் கருதிக்கொண்ட பிராமணர்கள் மதத்தின் பெயரால் பிற வகுப்பாரைக் கொடுமைபடுத்தி அடிமைகளாக்கி விட்டனர் என்று கருதினார். ஜோதிபா, எனவே, ஜோதிபா பிராமண ஆதிக்க எதிர்ப்பாளர் ஆனார். இவர் கல்வியில் மூலம்

தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற முடியும் என்று நம்பினார். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

ஜோதிபா பூலே 1848ம் ஆம் ஆண்டு பத்வார்பேத் என்ற ஊரில் உயர்சாதியினரின் எதிர்ப்பை எதிர்கொண்டு பெண்கள் பள்ளியைத் துவக்கினார். அதைத்தொடர்ந்து பல ஊர்களிலும் பள்ளிகளை ஆரம்பித்தார். ஸ்காட்டிஷ் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்த ஜோதிபகா (1854) தன் மனைவியின் துணையுடன் இரவு நேரப் பள்ளி ஒன்றையும் துவக்கினார். ஜோதிபாவின் கல்விப்பணியைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு ஆறு ஏக்கர் நிலம் கொடுத்து ஊக்கவித்து (1857).

அரசாங்கம் ஆதரவால் ஊக்குவிக்கப்பட்ட ஜோதிபா சத்திய ஷோடக் சமாஜம் அல்லது வாய்மையைத் தேடும் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். (1860). அனைத்துச் சாதியினருக்கும் பொதுவான அனாதை இல்லங்களைக் கட்டினார். ஜோதிபாவின் சேவையைப் பாராட்டிய மக்கள் இவரை பூனா நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர். (1876)இ ஜோதிபா ஹண்டர் கல்விக் கமிட்டியிடம் தாழ்த்தப்படடோருக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். (1882) தர்ம திரிய ரத்னா (புராணப் புரட்டுகளைப் பற்றியது). இஷாரா (எச்சரிக்கை), சிவாஜி போன்ற நூல்களை ஜோதிபா எழுதியுள்ளார். பெண் கல்வி, குழந்தைத் திருமணத்தடை, விதவைகள் மறுமணம், சடங்குகளற்ற சீர்திருத்தத் திருமணம், அனாதைகள் பாதுகாப், தாழ்த்தப்பட்டோருக்குச் சமஉரிமை ஆகியவற்றுக்காகத் தன்னை அர்பணித்துக் கொண்ட ஜோதிபா பூலே ‘மகாத்மா’ என்று அழைக்கப்பட்டார்.

**நாராயண குரு. 1854-1928**

நாராயண குரு கேராளாவில் திண்டத்தகாத கீழ்ச்சாதியாகக் கருதப்பட்ட ஈழவ வகுப்பைச் சேர்நதவர். இவர் வேதங்களிலும் உபநிடதங்களிலும் புராணங்களிலும் பெரும்புலமை பெற்றவர். இவர் பிராமணர் ஆதிக்கத்துக்கு எதிராகப் போர்கொடி உயர்த்தினார். பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்காகப் போராடினார்.

நாராயண குரு ‘கீழ்ச்சாதியினர் கோயிருக்குள் நுழையக்கூடாது என்ற சமுகத்தடையை உடைக்க உறுதிபூண்டார். திருவனந்தபுரம் அருகே அருவிபுரம் என்ற ஊரில் ஒரு கோயிலைக்கட்டி, அதில் சாதிவேறுபாடின்றி அனைவரும் வழிபடச் செய்தார். சிறந்த சொற்பொழிவாளரான இவர் சாதிசமய வேறுபாடற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கப் பிரச்சாரம் செய்தார். போராடினார். இவரும், இவரது சகாக்களும் தீண்டாமைக் கொடுமையைக் களைய முயன்றனர். திருமணம், சமய வழிபாடு, சவஅ டக்கம் ஆகியவற்றுக்கான சடங்குகளை எளிமைப்படுத்தினார், சமத்துவ சமுதாயம் அமையப் பாடுபட்டார். யாவற்றுக்கும் மேலாக, நாராயணகுரு ‘மனித குலத்துக்கு ஒன்றே சமயம், ஒன்றே சாதி, ஒன்றே கடவுள்’ என்ற கோஷத்தைக் கொடுத்தார். இவரது சீடரான சகாதரன் ஐயப்பன் ஒரு படி மேலேசென்று ‘மனிதகுலத்துக்கு மதமில்லை, சாதியில்லை, கடவுள்இல்லை என்ற புதிய மந்திரத்தைத் தந்தார்.

**நாயர் இயக்கம் 1891**

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கேரள நாயர்கள் நம்பூத்திரி பிராமணர்களின் ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்நதெழுந்தனர். நம்பூதிரி பிராமணர்கள் சமுதாய மற்றும் அசியல் துறைகளில் ஆதிக்க ஆதாயம்

பெறுவதை எதிர்த்தனர் சி.வி.ராமன் பிள்ளை என்பவர் 1891ம் ஆண்டு 'மலையாள நினைவுச் சின்னம்' ஒன்றை நிறுவினர். இவருடைய 'மார்த்தாண்டவர்மா' என்ற நாவல் நாயர்களின் வீரத்தையும், பழம்பெருமையையும் உயர்வாகக் காட்டியது. பத்மநாப பிள்ளை என்பவர் 'நாயர் சேவா சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ராஜா ராம்மோகன்ராய், தயானந்தர், சுவாமி விவேகானந்தர், ஜோதிபா பூலே, நாராயண குரு, சி.வி.ராமன் போன்றோரின் பங்களிப்பால் சாதிச் சீர்திருத்த இயக்கத்துக்கான அடித்தளம் அமைக்கப்பட்டன. இவர்கள் துவக்கிய இப்பணி 20ம் நூற்றாண்டில் அம்பேத்கார் சாதி ஒழிப்ப இயக்கமாக, நீதிக்கட்சியினரின் பிராமணரல்லாதார் முன்னேற்ற இயக்கமாக, நாடார் போராட்டமாக, வைக்கம் சத்தியாகிரகமாக, குருவாயூர் கோயில் நுழைவுப் போராட்டமாக, வோக்கலிகர் இயக்கமாக உருவெடுத்தது.

1) ராஜாராம் மோகன் ராயின் சீர்திருத்தங்களை விவரி?
2) சமுதாய சீர்திருத்தத்தின் விளைவாக இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

## இந்திய தேசிய காங்கிரஸ் 1880-1905

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிகக நிகழச்சியாகும். மேற்கத்தியப் பண்பாட்டுத் தாக்கம் இந்திய சமுதாய, சமய மறுமலர்ச்சி, பத்திரிக்கை, இலக்கிய வளர்ச்சி, ஆங்கிலேய அதிகார வர்க்கத்தின் ஆதிக்கப் போக்கு அரசாங்கத்தின் பொருளாதாரச் சுரண்டல் கொள்கை ஆகியவற்றின் விளைவாக் இந்தியாக்களிடையே தேசிய உணர்ச்சி உருவானது. வங்காளம், பம்பாய், சென்னை ராஜதானிகளில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள் இந்திய தேசிய காங்கிரசின் தோற்றமாகும். காங்கிரஸ் துவக்கப்பட்ட பின்னர் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

### காங்கிரசின் தோற்றம்

இந்திய அரசியல் வானில் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றியதற்கான சூழ்நிலைகள், காரணங்கள் பற்றிய ஒரு மித்த கருத்தில்லை. வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் காங்கிரசின் தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் முக்கிய விளக்கங்கள் வருமாறு.

### இயல்பான தோற்றம்

காங்கிரசின் தோற்றம் இயல்பானது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் துவக்கப்பட்ட அரசியல் சாந்த அமைப்புகளின் தவிர்க்க முடியாது இயற்கையான விளைவே காங்கிரசின் தோற்றமாகும். ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கப் போக்க, அதற்கெதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகள், இந்திய மறுமலர்ச்சி, தேசியம் பல்வேறு ராஜதானி அமைப்புகள் ஆகியவை காங்கிரஸ் தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கின. ரிப்பன் பிரபுவின் தாராளக் கொள்கைகளை ஐரோப்பியர்கள் தீவிரமாக எடுத்ததால் தேசிய உணர்வுமிக்க இந்தியர்கள் அகில இந்திய அரசியல் அமைப்பின் இன்றியமையாமையை உணர்ந்தனர். அத்தகைய அமைப்பைத் தோற்றுவித்தனர்.

காலத்தின் கட்டாயம் அது. அன்னை இந்தியா இயல்பாக ஈன்றெடுத்த தேசியக் குழந்தையே காங்கிரஸ் ஆகும்.

**டஃபரின் பிரபுவின் பங்கு**

காங்கிரஸ் தோன்றுவதற்க இந்திய வைசிராய் டஃபரின் பிரிபு (டுழசன னுரககநசனைெ 1884 -88) காரணகர்த்தா என்று லாலா லஜபதிராய் கருதினார். காங்கிரஸ் அவரது 'கருத்து குழந்தை' என்றும் அவரே 'காங்கிரசின் ஞானத் தந்தை' என்றும் கூறப்படுகிறது. அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாக இருக்கக்கூடிய தேசிய அமைப்பை அமைக்குமாறு டஃபரின் பிரப தன்னைக் கலந்தாலோசித்த ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O.Hume) கூறியதாகவும், அந்த ஆலோசனையைச் சிரமேற்கொண்டு ஹியூம்இந்திய தேசிய காங்கிரசைத் தோற்றுவித்தார் என்றும் சொல்லப்படுகிறது. அத்தகைய அமைப்பின்மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் கொள்கைகளையும் எடுத்துக்கூற முடியும் என்றும், அவை பற்றிய மக்களின் கருத்துக்களை அறியவும் உதவியாக இருக்கும் என்றும் கருதியதாலேயே அகில இந்திய அமைப்பு உருவானது என்பதே இந்த வாதத்தின் சாரமாகும்.

**ஹியூமின் பங்கு**

ஆலன் ஆக்டேவியன் ஹியூம்தான் காங்கிரஸ் தோன்றுவதற்கு முழு முதற்காரணம் என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. காங்கிரசின் முதல் தலைவரான டபிள்யு.சி. பானர்ஜி (W.C.Bonnarjee) ஹியூமைக் 'காங்கிரசின் தந்தை' என்று வர்ணித்தார். இந்திய அரசு பணியிலிருந்த ஹியூமைக் அரசாங்கச் சார்பற்ற ஆதாரங்களின் அடிப்படையில் இந்தியாவில் 1857ல் ஏற்பட்ட கிளர்ச்சியைவிட மோசமான கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்று அறிந்து, அத்தகைய ஆபத்தைத் தவிர்க்கவே காங்கிரசைச் தோற்றுவித்தார் என்று கருதப்படுகிறது. 1877 பஞ்சாத்துக்குப்பின் மக்களிடையே எழுந்த ஏமாற்றமும், கற்றோரின் அந்நியப்பட்ட நிலையும் அவரது முடிவை உறுதி செய்தன. மக்களின் சீற்றத்துக்குத் தக்க வடிகாலமைப்பதே பிரிட்டிஷ் பேரரசின் நலனுக்கு உகந்தது என்றுணர்ந்த ஹியூம் காங்கிரசைத் துவக்கினார். மேலும் அத்தகைய அமைப்பு இங்கிலாந்தில் உள்ளது போன்ற அரசாங்கத்தின் பொறுப்பான எதிர்க் கட்சியாகச் செயல்படலாமென்றும், இந்திய சமுதாயப் பிரச்சனைகளை விவாதிக்கலாமென்றும் அரசாங்கச் சார்பற்றோருக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாமென்றும் ஹியூம் நினைத்தே காங்கிரசைத் தோற்றுவித்தார்.

**ரஷ்யப் படையெடுப்புப் பயம்**

டஃபரின் பிரபு இந்திய வைசிராயாகப் பொறுப்பேற்ற போது ரஷ்யா இந்தியாவை எந்த நேரத்திலும் தாக்கக்கூடும் என்ற பயமிருந்தது. ரஷ்யா ஹீரட்டைத் தாக்கக்கூடும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. இந்தியர்கள் இந்தியாவிலிருந்து ஐரோப்பியர், பத்திரிக்கையாளர்கள் ரஷ்ய அபாயம் கண்டு அஞ்சினர். ரஷ்ய தாக்குதலை முறியடிக்கத் தங்களது முழு ஆதரவை அரசாங்கத்துக்குத் தந்தனர். ரஷ்யப் படையெடுப்புக்கு எதிராக இந்தியாவில் 'தொண்டர் படை இயக்கம்' (Volunteer Corps Movement) தீவிரமாகத் துவக்கப்பட்டது. எனவே ரஷ்யப் படையெடுப்பு பற்றிய பயமே (Russophobia) காங்கிரஸ் தோன்றுவதற்கான உடனடியான உந்து சக்தியாக இருந்தது.

## கற்றறிந்தோர் அரசாங்கக் கூட்டு முயற்சி

1870களிலும், 1880 துவக்கத்திலும் இந்தியாவில் புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலை இருந்தது. ஆங்கிலேய அரசாங்கத்துக்கெதிராக மக்களும் மனக்கசப்படைந்திருந்தனர். கற்றோரும் வெறுப்புற்றிருந்தனர். இல்பர்ட் மசோதா பற்றிய போராட்டம் இந்தியாவில் பதட்ட நிலையைத் தோற்றுவித்திருந்தது. கற்றோர் கூட்டம் மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கிப் போராடினால் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி ஆட்டங் கண்டுவிடும் என்று அஞ்சிய அரசாங்கம் கற்றறிந்தோருடன் கூட்டுச் சேர்ந்து, காங்கிரஸ் துவக்கப்படுவதை ஆதரித்தது. அதாவது கற்றோர் கூட்டத்தைப் பாமரர்களிடமிருந்து பிரிக்கும் நோக்கத்துடனேயே காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. அம்முயற்சியில் அது வெற்றி பெறவும் செய்தது. அதனால்தான், துவக்க காலத்தில் காங்கிரஸ் மேல்தட்டு மக்களின் கருவியாகச் செயல்பட்டது. எனலாம். இது ஒரு சாரரின் வாதம்.

## பிரம்மஞான சபையின் பங்கு

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றுவதற்குப் பிரம்மஞான சபை (Theosophical Society) பெரிதும் காரணமாக இருந்தது என்று வாதிக்கப்படுகிறது. அச்சபை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளை ஒன்றுகூட்டி நாட்டின் பொதுப்பிரச்சனைகளை விவாதித்தது என்பதில் ஐயமில்லை. 1884 டிசம்பர் மாதம் சென்னையிலிருந்து ரகுநாதராவின் இல்லத்தில் அத்தகைய ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டமே இந்திய தேசிய காங்கிரஸ் பின்னர் பம்பாயில் கூடுவதற்குக் காரணமாயிருந்தது என்று உரிமை கொண்டாடப்படுகிறது. பிரம்ம ஞான சபையின் விளைவே காங்கிரஸ் என்று வாதிட்டார் அன்னிபெசன்ட் அம்மையார். பேராசிரியர் கு.ராஜய்யனும் இரகுநாத ராவ் இல்லத்தில் நடந்த கூட்டமே தேசிய காங்கிரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதாக கருதுகிறார்.

## மதிப்பீடு

தேசத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் துவக்கப்பட்ட அமைப்பே இந்திய தேசிய காங்கிரஸ். அதற்குமுன் துவக்கப்பட்ட பல அரசியல் அமைப்புகளின் உச்சக்கட்டமாக உருவானது காங்கிரஸ். காங்கிரசின் வரலாற்றை எழுதிய பி.பட்டாபி சீத்தாராமையா காங்கிரசின் தோற்றம் ஒரு மர்மமாகவே உள்ளது என்று எழுதியுள்ளார். காங்கிரசின் தோற்றத்தில் எவ்வித மர்மமும் இல்லை. தற்கால இந்திய வரலாற்றின் தவிர்க்க இயலாத இயல்பான விளைவே காங்கிரஸ். அகில இந்திய அமைப்பைத் துவக்கும் போட்டியில் ஹியூம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் காங்கிரசைத் தோற்றுவிப்பதில் முந்திக் கொண்டார், அவ்வளவே.

ஹியூம் பிரிட்டிஷ் பேரரசுக்கும் விசுவாசமாயிருந்து கொண்டு இந்தியருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற இரசவாத வித்தையை நிகழ்த்தப் பார்த்தார். இவ்விரண்டும் மணலும் சர்க்கரையும் போன்றவை; இரண்டறக் கலக்க முடியாது. எனினும், ஹியூமின் முயற்சியால்தான் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது. 1882ல் இந்திய அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஹியூம் ஒரு அகில இந்திய அமைப்பைத் தோற்றுவிக்க அரும்பாடு பட்டார். ‘முதியவரின் நம்பிக்கை’ என்ற நூலில் இந்தியர்களின் இன்னல்கனையும் இடர்பாடுகளையும் ஆங்கிலேய ஆட்சி அசட்டை செய்யக்கூடாதென எச்சரித்தார். வைசிராய் டஃபரினைச் சந்தித்து

அரசியல் சார்ந்த அமைப்பை ஏற்படுத்துவதுபற்றி ஆலோசனை நடத்தினார். 1883 மார்ச் முதல் தேதி கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் கடுகு விதைகளைப் போன்று ஐம்பது தன்னலங்கருதாத, தியாகம் செய்யக்கூடிய இந்தியர்களைக் கொண்ட அமைப்பை ஏற்படுத்த வேண்டியதால் இன்றியமையாமையை வலியுறுத்தினார். இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். 1885 டிசம்பர் மாதம் இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டுவதென மார்ச் மாதமே முடீவு செய்தார். இதற்கிடையே ஹியும் இங்கிலாந்து சென்று ரிப்பன் பிரிபு ஜான் பிரைட், ஆர்.டி.ரீட் போன்றோரைச் சந்தித்துத் தன் முயற்சிக்கு அவர்களது ஆதரவை நாடினார். இந்தியாவில் நடக்கவிருந்த மாநாடுபற்றிய விவரஙகளை இங்கிலாந்தின் பத்திரிக்கைகளில் பிரசுரிக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியா திரும்பிய ஹீயூம் வெற்றிகரமாக இந்திய தேசிய காங்கிரசைத் துவக்கினார். எனவே காங்கிரஸ் தோன்றுவதற்கு ஹீயூம் தனிப் பொறுப்பேற்றார் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை. காங்கிரசின் தோற்றத்துக்காக் கூறப்படும் பறிே காரணங்கள் அனைத்தும் தேசிய அரசியல் அமைப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலையையும், பின்புலத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தன.

**காங்கிரசின் முதல் கூட்டம், 1985**

இந்திய தேசிய யூனியன் (Indian National Union) என்ற பெயர் தாதாபாய் நௌரோஜியின் யோசனைப்படி இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress) என்று மாற்றப்பட்டது. அதன் முதல் கூட்டம் 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாய் கோகுல்தாஸ் தேஸ்பால் சமஸ்கிருதக் கல்லூரியின் மண்டபத்தில் துவக்கப்பட்டது. கல்கத்தாவின் பிரபல வழக்கறிஞரான உமேஷ் சந்திர பானர்ஜி (W.C. Bonnerjee) காங்கிரசின் முதல் தலைவராக ஒரு மனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆலன் ஆக்டேவியன் ஹியூம் அதன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்பதிவியல் அவர் 1906 வரை நீடித்தார். காங்கிரசனி முதல் கூட்டத்தில் ஆங்கிலத் தேர்ச்சி பெற்ற 72 நேர்மையான, விசுவாகமுள்ள, அக்கறையுள்ள இந்தியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தேசப்பற்று மிக்க இந்தியர்களின் முதல் மகாசபை அது.

காங்கிரஸ் உறுப்பினர்களிடையே நட்புறவை ஏற்படுத்துதல் தேசிய உணர்ச்சிகளை ஒருங்கிணைத்தல்: இந்தியாவின் முக்கியப் பிரச்சனைகள் பற்றிய இந்தியத் தலைவர்களின் கருத்துக்களை சேகரித்தல் காங்கிரசனி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைத் தீர்மானித்தல் ஆகியவை காங்கிரசின் குறிக்கோள்களாயிருந்தன.

**வரலாற்றுச் சிறப்பு**

காங்கிரசின் தோற்றம் இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும் வைசிராய் ட.ஃபரின் பிரிபுவின் ஆசிர்வாதத்துடன் ஹியூமால் துவக்கப்பட்ட காங்கிரஸ் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றதில் வியப்பில்லை. சர் ஹென்றி காட்டன், சர் வில்லியம் வெடர்பர்ன் போன்ற இந்திய அரசின் உயர் அதிகாரிகள் காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதிகார வர்க்கததின் எதிர்ப்பையும் மிறி ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசன் தோற்றத்தை அங்கீகரித்தது. இந்தியாவிலிருந்து அனைத்து அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளும் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள், வங்கியதிபர்கள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், கல்லூரி முதல்கர்கள் பேராசியர்கள், பத்திரிக்கை அதிபர்கள், சட்டமன்ற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அக்கூட்டத்தில்

பங்கேற்றனர். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள், சிக்கியர்கள், பார்சீக்கள் என்ற வேறுபாடியின்றி காங்கிரஸ் ஒரு தேச அமைப்பாகத் திகழ்ந்தது, காங்கிரசின் வருகையால் மக்களிடையே மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. கதிரவனைக் கண்ட விண்மீன்கள் போன்று காங்கிரசின் தோற்றத்துக்குப் பின்னர் பிற அரசியல் சார்ந்த அமைப்புகளெல்லாம் செல்வாக்கிழந்தன, காங்கிரசோடு ஐக்கியமாயின.

**காங்கிரசின் வளர்ச்சி 1885-1905**

**காங்கிரஸ் கூட்டங்கள்**

1885 லிருந்து 1905 வரை காங்கிரஸ் ஆண்டுக் கூட்டங்கள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்றன. பம்பாய் (1885, 1889, 1904) கல்கத்தா (1886,1890,1896,1901), சென்னை (1887, 1894, 1898, 1903), அலகாபாத் (1888, 1892), நாக்பூர் (1891), லாகூர் (1893, 1900), பூனா (1895) அம்ரோதி (1897), லக்னோ(1899) அகமதாபாத் (1902), பனாரஸ் (1905) ஆகிய நகரங்களில் காங்கிரஸ் கூடிற்று ஆண்டுதோறும் கிறித்துமஸ் விழாவையொட்டி மூன்று அல்லது நான்கு நாட்கள் கூட்டம் நடக்கும். இந்தியாவில் பொதுப் பிள்ளைகள் விவாதிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அக்கூட்டங்கள் ‘ஆண்டு தமாஷா’, ‘ஆண்டுக் கொண்டாட்டம்’. ‘மூன்று நாள் அதிசயம்’ என்று விமர்சிக்கப்பட்டது. கற்றோர்கள் ஆண்டுதோறும். ஓரிடத்தில்கூடி தங்களிடமிருந்து விலையுர்ந்த உடைகளை அணிந்து கொண்டு, விடுமுஜற ஒவ்வெடுத்து, ஊர் சுற்றிப் பார்த்து, நண்பர்களைக் கண்டுபேசி, விவாதங்கள் பலசெய்து, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசுப் பொருள்களை வாங்கிக் கொண்டு தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றனர் என்று லாலா லஜபதிராய் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டோரைப்பற்றி வர்ணிததார். 1901 கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட காந்தி மூன்று நாட்கள் கூடிப்பின் தூங்கச் சென்றுவிடும் அமைப்பே காங்கிரஸ்’ என்று கூறினார்.

**தேசிய அமைப்பு**

காங்கிரஸ் உண்மையான தேசிய அமைப்பைத் திகழ்ந்தது. சர் பெரோஸ்ஷா மேத்தா, தாதாபாய் நௌரோஜி போன்ற பாரசீகர்களும், பத்ருதீன் தியாப்ஜி போன்ற முஸ்லீம்களும் டபிள்யு சி.பானர்ஜி போன்ற கிறித்தவர்களும் காங்கிரசின் தூண்களாக இருந்தனர். பம்பாய் ராஜதானிக் கழகம் பூனா சர்வஜனிக் சபை, சென்னை மகாஜன சபை, இந்தியக் கழகம் போன்ற பிராந்திய அமைப்புகள் காங்கிரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. சுரேந்திரநாத். பானர்ஜியின் தலைமையில் செயல்ப்பட இந்தியக் கழகம் 1806 ல் காங்கிரசோடு இணைந்தது. இந்தியாவில் செல்வாக்குமிக்க தலைவர்கள் காங்கிரசில் சேர்ந்தனர். காங்கிரஸ் தோன்றிய நாளிலிருந்து இந்திய தேசியத்தைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

**காங்கிரஸ் தலைமை**

காங்கிரஸ் துவக்கப்பட்டபின் இருபதாண்டு காலத்துக்கு மேட்டுக்குடி மக்களால் ஆங்கிலக் கல்வி பெற்ற செல்வரும் செல்வாக்க மிக்கவர்களால் தலைமையேற்ற நடத்தப்பட்டது, அவர்களனைவரும் பிராத்திய அரசியல, பக்கவமும் அனுபவமும் பெற்றவர்கள். அவர்களின் மிகப்பெரும்பான்மையோர் நகரங்களைச் சேர்ந்தவாகள். அவர்கள்தான் காங்கிரஸ் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். முக்கியப் பதவிகளை வசித்தனர். இங்கிலாந்துக்குச் சென்ற தூதுக்குழுக்களில் இடம்பெற்றனர். காங்கிரசுக்கும் அரசாங்கத்துமிடையே

நடைபெற்ற சமரசப் பேச்சுக்களில் பங்கேற்றனர். மிதவாதிகளான காங்கிரஸ் தலைவர்கள் தங்களது ஆழ்நத அறிவாற்றலாலும் பழுத்த அனுபவத்தாலும் நடைமுறைத் திறமையாலும், சமூகச் செல்வாக்காலும் காங்கிரசை வழிநடத்திச் சென்றனர். எனினும் துவக்க கால காங்கிரசில் விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்குத் தலைமை பீத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**காங்கிரசின் கோரிக்கைகள்**

இருபதாண்டு கால (1885-1905) காங்கிரஸ் கூட்ட விவாதங்களையும் தீர்மானங்களையும் பரிசீலித்துப் பார்த்தால் பின்வரும் கோரிக்கைகளுக்கு காங்கிரஸ் முக்கியத்துவம் கொடுத்ததைக் காணலாம்

1. வைசிராய், கவர்னர் ஆகியோரது ஆட்சிக்குழுக்களை விரிவுப்படுத்தி அவற்றில் இந்தியர்களுக்கு அதக இடங்களைக் கொடுத்தல்.
2. இராணுவச் செலவைக் குறைத்தல்
3. இந்திய விவகாரச் செயலர் பதவியை நீக்கல்
4. இந்திய நிர்வாகத்தைப்பற்றி மதிப்பீடு செய்ய ஒரு “ராயல்கமிஷனை’ நியமித்தல்.
5. பொதுப்பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்துதல்.
6. பொதுப் பணிகளில் இந்தியர்களுக்கு அதிக இடங்களை ஒதுக்குதல்.
7. சுயாட்சி நிறுவனங்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்தல்.
8. ஆட்சித் துறையிலிருந்த நீதித்துறையைப் பிரித்தல்.
9. துணைக்கேள்விகளை எழுப்பவும், வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கவும் உரிமைப்பெற்ற பிரதிநித்துவச் சட்ட மன்றத்தை ஏற்படுத்துதல்.
10. மிதமான வரிகள்
11. நட்புறவான போலீஸ்
12. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகளுக்கு இடமளித்தல்.
13. இந்தியத் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்தல்.
14. கல்வி மற்ற வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.
15. நிலவரியைக் குறைத்தல்.
16. பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
17. கிராம வங்கிகளை ஏற்படத்துதல்
18. நிலச்சுவான்தார்களின் சுரண்டலிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்தல்
19. உப்பு வரியைக் குறைத்தல்.
20. பொதுவாக மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தல்.

**அரசாங்கத்தின்போக்கு**

இந்திய தேசிய காங்கிஸ் வைசிராய் டஃபரின் பிரபுவின் வாழ்த்துக்களோடுதான் துவக்கப்பட்டது. இரண்டாவது காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகளை வைசிராய் அரச இல்லத்தில் தோட்ட விருந்துக்கழைத்து சிறப்பித்தார் (1886). அதே போன்று சென்னை கவர்னர். கன்னிமாரா பிரபுவும் சென்னைக் காங்கிரசில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்க வரவேற்பளித்தார் (1887). பிரபல ஆங்கிலேயர்கள் காங்கிரஸ் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். ஆனால் காங்கிரசின் செல்வாக்கு விரைந்து வளர்ந்தபோது அரசாங்கம் தனது போக்கை மாற்றிக்கொள்ளத் துவங்கியது. வைசிராய் டஃபரினே அதை ‘அரசு துரோக அமைப்பு’ என்று கண்டித்தார். ஒரு சில

கற்றவர்களின் கூட்டம் அது என்று காங்கிரசை உதாசீனப்படுத்தினார். அவர்வடமேற்கு மாநில லெப்டினன்ட் கவர்னராயிருந்த சர் ஆக்லண்டு கோல்வின் காங்கிரசை ' அபாயகரமான அமைப்பு' என்று நிந்தித்தார். இந்தியச் செயலராயிருந்த ஹாமில்டன் காங்கிரஸ்காரர்களை 'அரசாங்கத்துக்கெதிரான இரட்டை இயல்பு கொண்டவர்கள்' என்று குற்றம் சாட்டினார். அதிகார வர்க்கத்தினர் காங்கிரஸ்காரர்களை 'வன்முறை வில்லன்கள் என்று வர்ணித்தனர். கர்ஸன் பிரப காங்கிரசைத் 'தள்ளாடிக் கொண்டிருக்கும் அசுத்தமான அமைப்பு' என்று சாடினார். அரசாங்கமும் அதிகார வர்க்கமும் இந்தியரைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்து, காங்கிரஸ் வளராமல் இருப்பதற்குப் பல தடைகளையும் ஏற்படுத்தின.

**காங்கிரசின் சாதனைகள்**

இந்தியர்களை ஒன்று சேர்த்து மக்களுக்கு அரசியல் கல்வி அளித்து அவர்களின் தேசிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்த ஒரே தேசிய அமைப்பு காங்கிரஸ்தான். 1885 லிருந்து 1905 வரை காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களின் மூலம் இந்தியரது தேவைகளையும் விருப்பங்களையும் குறைபாடுகளையும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூடியது. அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும், சட்டங்களையும் கண்டிக்கவும் எதிர்க்கவும் தவறவில்லை.. காங்கிரசின் சட்டமுறையான போராட்டத்தின் விளைவாகத்தான் 1892ல் இந்திய மன்றங்கள் சட்டம் இயற்றப்பட்டது. அரசாங்கப் பொதுப்பணிக்கான தேர்வுகள் ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு முறையில் மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சாதகமாக இங்கிலாந்து மக்களின் ஆதரவைத் திரட்டும் பொருட்டு காங்கிரஸ் இங்கிலாந்துக்கு அனுப்பிய தூதுக்குழுக்கள் சிறந்த பணியாற்றின. காங்கிரசின் கோரிக்கையின் விளைவாக அரசாங்க நிர்வாகப் பணிகளில் இந்தியர்களுக்கு இடங்கள் அளிக்கப்பட்டன. காங்கிரசிஸ் கற்றோரால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று குறை கூறப்பட்டபோது. கற்றவர்கள் இன்று நினைப்பதை மற்றவர்கள் நாளை நிறைப்பர் என்று பதிலாக கொடுத்தார் கோகலே அப்போதைய சூழ்நிலையில் காங்கிரசின் சாதனைகள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவையே, துவக்க கால காங்கிரஸ் சாதிக்காததற்கும், சாதிக்க முடியாததற்கும், சாதிக்க முயலாததற்கும் அதைக்குறை கூறுவதில் பயனில்லை.

**ஆலன் ஆக்டேவியன் ஹியூம். 1829-1912**

'காங்கிரசின் தந்தை' என்று அழைக்கப்படும் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allen Octavian Hume) இந்தியாவில் பல்வேறு அரசாங்கப் பதவிகளை வகித்தவர். இவர் ஒன்பதாண்டு காலம் 1870-79) இந்திய அரசாங்கத்தின் வருவாய் விவசாயம் மற்றும் வர்த்தகத் துறைச் செயலராகப் பணியாற்றியபோது இந்தியரது நிலை பற்றியும் அவர்களது நினைப்பு குறித்தும் 30,000 இரகசிய அறிக்கைகள் அடங்கிய 7 தொகுப்புக் கோப்புகளைப் பார்க்கக்4டிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அதேபோன்று 1881ம் ஆண்டு மேடம் பிளவட்ஸ்கி மூலம் இந்தியரது மனநிலை பற்றிய தனது கணிப்பு சரியானதே என்பது உறுதியாயிற்று. இவற்றிலிருந்து ஹியூம் மக்களிடையே 'கொதித்துக் குமுறும் கோபம்' இருப்பதையும், அடித்தட்டு மக்கள் வன்முறைக் கிளர்ச்சி மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதற்குத் தயாராக உள்ளனர். என்ற முடிவுக்க வந்தார். அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

1882ம் ஆண்டு அரசாங்கப் பணியிலிருந்து விலகிக்கொண்ட ஹியூம் 1.இந்தியர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டும். 2. இவர்கள் சமுதாயப் பிரச்சனைகளால் பிளவுபடக் கூடாது என்று வெளிப்படையாகப் பேசினார். 'முதியவரின் நம்பிக்கை" என்ற நூலில் இந்தியரின் இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் பிரிட்டிஷ் அரசாங்கம் புறக்கணிக்கக்கூடாது என்றும், 'பயமுறுத்திய பேரபாயம்' பற்றியும் எச்சரித்தார். 1883 மார்ச் முதல் தேதி கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டத்தாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் 'கடுகு விதைகளைப் போன்று ஐம்பது தன்னலம் கருதாத 'தியாக மனப்பான்மையுடைய இந்தியர்களைக் கொண்ட அமைப்பை' ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்தியத் தலைவர்களோடு தொடர்பு கொண்டார்.

ஹியூம் இங்கிலாந்து சென்று ரிப்பன் பிரபு, ஜான் பிரைட், டி.ரீட் போன்ற பிரபலங்களைச் சந்தித்துத் தன் முயற்சிக்கு ஆதரவு கோரினார். இந்தியாவல் நடக்கவிருந்த மாநாடு பற்றிய தகவல்களைப் பிரிட்ஷ் பத்திரிக்கைகளில் பிரசுரிக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியா திரும்பி ஹீயூம் இந்திய தேசிய காங்கிரசை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். ஹியூமின் வாழ்க்கை வரலாற்று எழுதிய வில்லியம் வெடர்பான் (William Wedderburn) அச்சுறுத்தும் அபாயத்தைத் தடுப்பதற்காகவே ஹியும் காங்கிரசைத் தோற்றுவித்தார் என்று குறிப்பிட்டுள்ளார். அதே போன்று 1896ல் 'இந்திய அரசியல் என்ற பததிரிக்கையில் டபுள்யு.சி. பானர்ஜி வெளியிட்ட அறிக்கையில் ஹியூம் 1884 லேயே இந்தியாவின் முன்னணித் தலைவர்களைக் கூட்டி இந்திய விவகாரங்கள் பற்றி விவாதிக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறியிருந்தார்.

ஹியூம் 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாயில் துவக்கப்பட்ட அகில இந்திய காங்கிரசின் முதல் பொதுச் செயலாராகப் பொறுப்பேற்றார். அவர் அப்பதவியில் 1907 வரை நீடித்தார். காங்கிரசின் கோட்பாடுபற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்ய ஹீயூம் ஆண்டுதோறும் அவரது சொந்த செலவில் இந்தியாவில் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தார். 'ஹியூமுடன் தொடர்புகொண்ட செயலாற்றலற்ற மக்கள்கூட செயலுக்கமுள்ள மக்களாக மாற்றக்கூடிய வசிய ஆற்றல் அவரிடமிருந்தது என்று பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசியல் நூலாசிரியர் சி.ஒய்.சிந்தாமணி புகழாரம் சூட்டியுள்ளார்.

1) இந்திய தேசிய காங்கிரசின் தோற்றத்தை விவரி?

## காங்கிரசில் தீவிரவாத இயக்கங்கள்

1905 லிருந்து 1919 வரையான காலக்கட்டத்தைத் 'தீவிரவாதிகளின் சகாப்தம் (Era of the Extremists) என அழைக்கலாம். மிதவாதிகளைப் போன்றரே தீவிரவாதிகளும் நாட்டுப்பற்று மிக்க காங்கிரஸ்காரர்கள் தான். காங்கிரஸ் மிதவாதிகளின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தவரை (1885-1905) தீவிரவாதிகளால் தலைதூக்க முடியவில்லை. வங்கப் பிரிவினையின்போது (1905) தீவிரவாதிகள் சுதேசி இயக்கத்தின் மூலம் தங்களைத் தெளிவாக அடையாளங் காட்டிக் கொண்டனர். அரசியல் குறிக்கோள்;

**அக்குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள்;**

மக்களின் ஆதரவோடுகூடிய இயக்கம் ஆகிய மூன்று விஷயங்களிலும் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் முரண்பட்டு நின்றனர்.

**தீவிர தேசியத்தின் தோற்றம்**

**அரவிந்த கோஷ் (1872-1950)**

இவர் இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பியவுடன் (1893) இந்திய தேசிய அரசியலில் தீவிரவாத விதைகளை விதைத்தார். பம்பாயிலிருந்து வெளியான ஒரு பத்திரிகையில் முதியோருக்கு புதிய விளக்குகள் (New Lamps for old) என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினார். அவற்றில் காங்கிரசையும் காங்கிரஸ் தலைமையையும் குறை கூறினார். காங்கிரசை 'ஒரு மத்தர தர வகுப்பாரின் கருவி' என வர்ணித்தார். சிறுசிறு சீர்திருத்தங்களுக்காகத் தங்களது ஆற்றலை விரயம் செய்வதாகக் காங்கிரஸ்காரர்களைச் சாடினார். தேசவிடுதலை. மக்கள் ஆதரவைத் திரட்டல், புரட்சியின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றியெல்லாம் அரவிந்தர் எழுதினார். அதனால்தான் அவரை 'தீவிர இயக்கத்தின் தீர்க்கதரிசி' (Prophet of militant nationalism) என க் கரன்சிங் வர்ணித்தார்.

**தீவிர தேசியம் தோன்றக் காரணங்கள்**

இந்திய தேசிய இயக்கத்தில் தீவிர தேசியம் தோன்ற பல காரணங்களும் சூழ்நிலைகளும் இருந்தன.

1. 1858ல் வெளியிடப்பட்ட பேரரசியின் பிரகடனம் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தது. அதில் கொடுக்கப்பட்ட உத்திரவாதங்கள் செயல்படுத்தபடவில்லை. 1861, 1892 குவன்சில் சட்டங்கள் மக்களுக்கு ஏமாற்றத்தையெ அளித்தன. மிதவாதிகள் மதிப்பழிந்தனர்.
2. 1896-97ல் தலைவிதித்தாடிய பஞ்சத்தைக் கட்டுப்பத்தவோ, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிக்கவோ அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. குறிப்பாக பம்பாய் ராஜதானியில் பரவிய கொள்ளைநோயை கட்டுப்படுத்த அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களைச் சினங்கொண்டு எழச் செய்தன. திலகர் அதிகாரிகளின் போக்கைச் சாடினார். பூனாவின் கொள்ளை நோய்க் கமிஷனர் ராண்டும் (Rand) அவரது உதவியாளர் லெப்டினன்ட் அயர்ஸ்டும் (Ayerst) சுட்டுக்கொள்ளப்பட்டனர்.
3. மக்கள் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில் அரசாங்கம் விக்டோரியா மகராணியாரின் பட்டமளிப்பின் வைரவிழாவைக் கொண்டாடுவதில் பணவிரயம் செய்து. அது கண்டு மக்கள் ஆத்திரமடைந்தனர்.
4. அமெரிக்கா, கனடா, பிரிட்டிஷ் கொலம்பியா, தென் ஆப்பிக்கா போன்ற நாடுகளில் ஒப்பந்தக் கூலிகளாகவும், பிழைப்புக்காகவும் சென்று தங்கிய இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் பற்றி ஆங்கிலேய அரசாங்கம் அசட்டையாக இருந்தது. இந்தியத் தலைவர்கள் சிலரது கோபத்தைக் கிளறிவிட்டது.
5. இத்தாலியை அபிசினியா தோற்கடித்தது (1896), ஜப்பான் ரஷ்யாவை வென்றது (1905) போன்ற நிகழ்ச்சிகளும், சீனா, துருக்க, எகிப்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளும் பிரிட்டிஸ்

ஏகாதிபத்தில் மாயையை அகற்றின. இந்திய இளைஞர்கள் எழுச்சி பெற்றனர். தீவிரவாதம் தூண்டிவிடப்பட்டது.

6. மிதவாதிகள் ஆங்கிலேயப் பண்பாடு, புகழ், அரசியல் அமைப்புகள் பற்றி புகழ்பாடிக் கொண்டிருக்கையில், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால் லாலா லஜபதிராய் அரவிந்தர், அன்னிபெசன்ட் அம்மையார் போன்றோர் இந்தியாவின் கடந்தகாலப் பெருமையின் அருமை கண்டு அதன்அடிப்படையில் வருங்கால இந்தியாவை உருவாக்க மனைந்தனர். மராட்டிய மாவீரர்களையும், 1857 கிளர்ச்சித் தலைவர்களையும் முன்மாதிரியாகக் கொண்டனர்.
7. பிரிட்டிஷாரின் இந்திய எதிர்ப்புக் கொள்ளை தீவிர எண்ணங்கொண்ட தேசியவாதிகளுக்கு எரிச்சலூட்டியது.
8. மேலை நாடுகளில் எழுந்த விடுதலை இயக்கங்களும் கரிபால்டி, மாஜினி போன்ற போராட்டத் தலைவர்களின் தியாகச் செயல்களும் புரட்சிக் கருத்துகளும் எழுச்சியை ஏற்படுத்தின.
9. ஆங்கில அரசின் காலனி அதிக்கப் பொருளாதாரச் சுரண்டல் கொள்கையில் தீவிரவாத தேசியவாதிகளுக்கு சற்றும் உடன்பாடில்லை. திலகர் கைது செய்யப்பட்டதால் 1908ல் ஏற்பட்ட பம்பாய் தொழிலாளர் வேலைநிறுத்தம், தேசியக் காற்று எத்திசை நோக்கி அடிக்கிறது என்பதைக் காட்டியது.
10. இந்திய வைசிராய் கர்சன் பிரபுவின் கொள்கை குளவிக் கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! தீவிரவாதம் தேசிய அங்கீகாரம் பெற்றது.

### தீவிரவாதிகள் என்பவர்கள் யார்?

ஆங்கிலேய ஆதிக்க அடக்கமுறைக் கொள்கையால் எரிச்சலடைந்து, மிதவதிகளின் தோல்வியால் ஏமாற்றுமுற்ற காங்கிரஸ்காரர்களே திவிரவாதிகளாயினர். காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவில் நீடிப்பதைத் தீவிரவாதிகள் எதிர்த்தனர். ஆங்கிலேயர்கள் அளிக்கும் சீர்திருத்தப் பிச்சைகளை ஏற்றுக்கொண்டால் தேசிய இயக்கத்தின் தீவிரம் தளர்ந்து விடும் என்று அவர்கள் அஞ்சினர். சுயராஜ்யமே (ளுறயசயத) அவர்கள் குறிக்கோள் இந்தியர்களுக்குத் தங்களை தாங்களே ஆட்சிசெய்து கொள்ளக்கூடிய திறமை இருப்பதால் சுயாட்சி முறையே சிறந்த அரசியல் முறையெனத் தீவிரவாதிகள் கருதினர். தன்னாட்சி அமைப்பில்தான் மக்கள் தங்களது திறமையை சுயமரியாதையை, தன்னம்பிக்கையை, தற்சார்புடைமையை, தியாக மனப்பான்மையை வளர்த்து கொள்ள முடியுமென அவர்கள் நம்பினர் ஏதேனும் சுயராஜ்யம், விதேசிப் பொருள் புறக்கணிப்பு, தேசியக்கல்வி ஆகியவையே அவர்களது திட்டங்களாக இருந்தன. பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால் ஆகியோர் பெருமைக்கும், புகழுக்குமுரிய தீவிரவாதத் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

### சூரத் கங்கிரஸ் பிளவு 1907

### காசி காங்கிரஸ் 1905

மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இருந்த மாறுபாடுகளுறும் முரண்பாடுகளும் வளர்ந்துகொண்டே சென்றனவேயன்றிக் குறையவில்லை அவர்களுடைய மனப்பான்மையும், அணுகுமுறையும், போராட்ட முறைகளும் இருசாராரையும் இருதுரவங்களாக்கிவிட்டன. அவர்களுக்கிடையே இருந்த இடைவெளி காங்கிரசை இரண்டாகப் பிளவுபடுவதைத் தவிர்க்க

முடியாததாக்கிவிட்டது. வங்காளத்தில் சுதேசி இயக்கம் சூடுபிடித்து சுழன்றடித்துக் கொண்டிருக்கையில்தான் காசியில் காங்கிரஸ் கூடியது (1905) அக்கூட்டத்துக்கு கோகலே தலைமை தாங்கி சுதேசி இயக்கத்தின் பெருமை பற்றிப் புகழ்ந்துபேசிய போதிலும், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா போன்ற பிற மிதவாதத் தலைவர்கள் காலத்தின் மாற்றத்துக் கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. திலகர் சர்த்வீகப்போராட்டம் பற்றிக் கொண்டுவந்த தீர்மானம் மிதவாதிகள் தீரவாதிகளிடையே பலத்த சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது. ஆனால் நெருக்கடியை உத்தேசித்து மோதலைத் தவிர்த்தனர்.

**கல்கத்தா காங்கிரஸ் 1906**

அடுத்த ஆண்டு (1906) காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது, அதற்குமுன் வங்கப்பிரிவினை முடிந்த முடிவு என்ற மார்லி பிரபுவின் அறிவிப்பு தீவிரவாதிகளை வெகுண்டெழச் செய்தது. அதேபோன்று வங்கப் பிரிவினையை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை மக்களிடையே மனக்குமுறலை ஏற்படுத்தியது. அப்பின்னணியில் தான் கல்கத்தா காங்கிரஸ் கூடியது “திலகரே அக்காங்கிரசின் தலைவராக வேண்டுமெனத் திவிரவாதிகள் விரும்பினர். ஆனால் அதை மிதவாதிகள் எதிர்த்தனர்.

‘காங்கிரஸ் தாத்தா’ தாதாபாய் நௌரோஜி தலைமை தாங்க ஒப்புக்கொண்டதால் தலைமை பற்றிய சிக்கல் தீர்த்தது நௌரோஜி ஆங்கிலேய அரசாங்கத்தின் காட்டுமிராண்டிக் கொடுங்கோலாட்சியைக் கண்டித்தார். சுயராஜ்யமே காங்கிரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றார் சுதேசி, விதேசிப் பொருள் புறக்கணிப்பு தேசியக் கல்வி பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன தீவிரவாதிகளுக்குக் கிடைத்த வெற்றி அது.

**சூரத் காங்கிரஸ், 1907**

எனினும் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இருந்த இடைவெளி குறையவில்லை. இரு பிரிவினரும் தங்களது பலத்தை சோதித்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். காங்கிரஸ் நாகபுரியில் (Nagpur) கூடுவதாக இருந்தது. நாகபுரி தீவிரவாதிகளில் கோட்டை எனவே, காங்கிரஸ் கூடுமிடம் மிதவாதிகளின் அரணான சூரத் (Surat) துக்கு மாற்றப்பட்டது! சூரத் காங்கிரஸ் 1907 டிசம்பர் 26ஆம் நாள் கூடிற்று. அக்கூட்டம் குருஷேத்திரப் போர்க்களமாகக் காட்சியளித்தது. திலகர் மூன்று முக்கிய கோரிக்கைகளைக் சூரத் காங்கிரசின் பரிசீலனைக்குக் கொண்டு வந்தார்.

1. கடந்த ஆண்டு கல்கத்தா காங்கிரசின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனைவரும் பின்பற்ற வேண்டும்.
2. விஷயாலோசனைக்குழு (Subjects Committee) உறுப்பினர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
3. காங்கிரஸ் கூட்டத் தலைவரைப் பிரதிநிதிகளே தேர்நதெடுக்க வேண்டும். திலகரின் அம்மூன்று கோரிக்கைகளையும் மிதவாதிகள் நிராகரித்து விட்டனர். டாக்டர் ராஷ்பிஹாரி கோஷின் (Dr.Rahs Behari Ghose) பெயர் முன்மொழியப்பட்டது. திவிரவாதிகள் அதிர்ச்சியடைந்தனர். எஸ்.என்.பானர்ஜி கோஷின் பெயரை வழிமொழியர் சென்றபோது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

அடுத்த நாள் (27 டிசம்பர்) காங்கிரஸ் கூடியபோது எஸ்.என்.பானர்ஜி தனது பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். காங்கிரஸ் கூட்டத் தலைவர் தேர்நதெடுக்கப்பட்ட முறை பற்றிப் பேச விரும்பினார். ஆனால் அவர் பெச அனுமதிக்கப்படவில்லை! தன் பேச்சுரிமையை நிலைநாட்ட மேடைக்குச் சென்ற திலகரைப் பேசவிடவில்லை. எனவே கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மோதிக்கொண்டனர். நாற்காலிகள் தூக்கி எறியப்பட்டனர்! செருப்புகள் விசுப்பட்டன! ஒரு செருப்பு மேடையில் வீற்றிருந்த சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா ஆகியோரை உரசிச் சென்றது எனறு பி.பட்டாயி சீத்தாராமையா எழுதியுள்ளார்! போலீசார் பந்தலுக்குள் நுழைந்து நிலைமையைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்தினர். மறுநாள் (28 டிசம்பர்) மிதவாதிகள் டாக்டர் ராஷ் பிஹாரி கோஷின் தலைமையிலும், தீவிரவாதிகள் அரவிந்த் கோஷின் தலைமையிலும் தனித்தனியாகக் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டனர். காங்கிரஸ் பிளவுபட்டது. இதுவே ‘சூரத் பிளவு’ (Surat Split) என்றழைக்கப்படுகிறது.

### மதிப்பீடு

சூரத் காங்கிரசுக்குப் பின் காங்கிரஸ் வீடு இரண்டுபட்டது. ஒரு பிரிவினர் கோகலேயின் தலைமையிலும், மற்றுமொரு பிரிவினர் திலகரின் தலைமையிலும் செயல்பட்டனர். காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் தெளிவு உண்டாச் சூரத் பிளவு வழி வகுத்தது. இரு அணிகளிலும் இருந்தோரின் சிறந்த திறமைகள் வெளிவர வாய்ப்புண்டாயிற்று. இந்திய அரசியலில் இரு கட்சி அமைப்புமுறை (Tow party system) உருவாயிற்று. இருப்பினும் சூரத் பிளவு காங்கிரசையும் தேசிய இயக்கத்தையும் பலவீனப்படுத்திவிட்டது. தேசிய சக்தி சிதறுண்டு போயிற்று. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் தானே! ஆங்கிலேய அரசு இப்பிளவைத் தனக்குத் சாதகமாக்கிக் கொண்டது. அது மிதவாதிகளை ஆதரித்து தீரவாதிகளை அடக்கியது. லாலா லஜபதிராயும் அஜித் சிங்கும், திலகரும் கைது செய்யப்பட்டு பரிமாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டனர். பல அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன பிரிந்த காங்கிரஸ்காரர்கள் மீண்டும் 1916 லக்னோ காங்கிரசின் ஒன்று கூடினர்.

### தமிழ்நாட்டில் திவிரவாதம்

பொதுவாகத் தமிழ்நாடு மிதவாதிகளின் பூங்காவாகக் காட்சியளித்தது பூங்காவுக்குள் புகுந்த புயலாக வந்தார் பிபின் சந்தரபால் (1907) குறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். வீரமுழக்கமிட்டார். சென்றவிடமெல்லாம் தீவிரவாத விதைகளைத் தவிர சென்றார் பல தமிழர்கள் நீண்ட உறக்கத்திலிருந்து மீண்டனர். தீவிரவாதிகளாயினர். வ.உ.சிதம்பரம் பிள்ளையும் அவரது நண்பர் சுப்பிரமணிய சிவாவுசும் தமிழ்நாட்டில் தீவிரவாத இயக்கத்துக்குத் தலைமையேற்று நடத்தினர். குறிப்பாக வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதேசி கப்பல் கம்பெனி (Swadeshi Navigation Company) யை ஆங்கிலேயர் நடத்திய ‘இந்திய நீராவி கப்பல் கம்பெனி (Indian Steam Navigation) க்குப் போட்டியாகத் துவங்கினார். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட அவர் ‘கோரல் தொழிற்சாலை’ (Coral mill) நிர்வாகிகளுடன் பேசித் தொழலாளர் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தார். சிறைமீண்ட பிபின் சந்திர பாலரைப் பாராட்டும் பொருட்டு தடையை மீறிப் பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சி கைது செய்யப்பட்டு (1908 மார்ச்8) நான்காண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். ‘தமிழ்நாட்டுத் திலகர் என்றழைக்கப்பட்ட வ.உ.சியைப் போன்றே சுப்பிரமணிய சிவாவும் வ.வே.சுப்பிரமணிய ஐய்யரும்

வாஞ்சிநாதனும், சுப்பிரமணிய பாரதியாரும் தங்கள் சொல்லாலும், செயலாலும் தமிழ்நாட்டில் தீவிரவாதத்தை நிலைகொள்ளச் செய்தனர்.

## வங்கப் பிரிவினையும் சுதேசி இயக்கமும், 1905

**வங்கப் பிரிவினை:-**

வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார், சோட்டா, நாக்பூர் ஆகிய பகுதிகள் சேர்ந்தே வங்காள ராஜதானியாக அமைந்திருந்தது. பரப்பளவில் பெரிதும் நிர்வாகத்துக்குக் கடினமாகவும் இருந்த அப்பெரிய ராஜதானியைப் பிரிப்பதற்கான முயற்சிகள் நாற்பதாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு எவ்வித முடிவுக்கும் வராமல் இருந்தது ஆங்கிலேய அரசாங்கம். ஆனால் கர்சன் பிரபு வைசிராயாக வந்த உடனேயே (1899-1905) பிற நடவடிக்கைகளோடு வங்காளத்தைத் துண்டாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

**காரணங்கள்:-**

வங்காள ராஜதானி திறமையாக முடியாத அளவுக்குப் பெரிதாக இருந்தது. அதன் காரணமாக அரசியல் மாற்றங்களைச் செய்ய இயலவில்லை. கிழக்கு வங்காளம் வளர்ச்சி குன்றிபோய்விட்டது. அதன் முன்னேற்றத்துக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியதில்லை. இத்தகைய காரணங்களைக் காட்டி வங்கப் பிரிவினைக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் உண்மையான காரணம் வங்காளத்தில் இருந்த இந்திய தேசிய ஊற்றை அடைத்துவிட வேண்டும் என்பதுதான். வங்காள இந்து முஸ்லீம்களுக்கிடையே பிளவை ஏற்படுத்திவிட்டால் அக்காரியம் எளிதில் நிறைவேறிவிடும் என்ற தீர்மானத்தோடு தான் கர்சன்பிரபு வங்கப்பிரிவினைத் திட்டத்தை துரிதப்படுத்தினார். தனது பிரிவினைத் திட்டத்துக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு கர்சன்பிரபு கிழக்கு வங்காளத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது (1904) அங்கிருந்த முஸ்லீம்களுக்கு பல சலுகைகளை வழங்கினார்.

**எதிர்ப்பு:-**

கர்சனின் வங்கப் பிரிவினைத் திட்டத்தை வங்கத் தலைவர்கள் துவக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். பொதுக்கூட்டங்கள் போட்டு பிரிவினை திட்டத்துக்கெதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சூளுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**சுதேசி இயக்கம்:-**

**துக்க தினம்:-**

வங்காளம் பிரிக்கப்பட்ட நாளான 1905 அக்டோபர் 16 தேசிய துக்கதினமாக வங்காள முழுவதும் கொண்டாடப்பட்டது. அன்று மக்கள் உண்ணாவிரதமிருந்தனர். கல்கத்தாவில் 'அர்த்தால்' அனுஷ்டிக்கப்பட்டது. அன்று பாடுவதற்கென பிரத்யேகமாக இரவீந்திரநாத் தாகூரால் புனையப்பட்ட பாடலை மக்கள் பாடினர். ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலைப் பாடிச் சென்றனர்.

## வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டம்

### இரகசிய சங்கங்கள்

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே மிதவாதிகளும் திவிரவாதிகளும் பயங்கரவாதிகளும் தங்களது இயக்கங்களுக்குனு ஆதரவு தேடும் பொருட்டு வெளிநாடுகளிடன் தொடர்பு கொண்டனர். பயங்கரவாதிகள் இங்கிலாந்து பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்று இரகசியச் சங்கங்களை அமைத்து இந்திய விடுதலை போராட்ட வெற்றிக்காகப் பாடுபட்டனர். வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர்கள் இதில் திவர பங்கேற்றனர்.

### இந்திய சுயாட்சி சங்கம்

ஷாம்ஜி கிருஷ்ண வர்மா இலண்டனில் இந்திய சுயாட்சிக் சங்கத்தை (Society of Indian Home Rule) த் தோற்றுவித்தார். (1905). அவர் இந்திய சமூகவியலாளர் (The Indian Sociologist) என்ற பத்திரிக்கையை நடத்தினார் வர்மாவுடைய 'இந்திய இல்லம்' (Indian House) பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் இந்திய மாணவர்களுக்குப் புகலிடமாக இருந்ததோடன்றி பயங்கரவாதிகளின் புரட்சிமையமாகவும் பயன்பட்டது. இந்தியாவிலிருந்து மேல்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற வி.டி.சவார்க்கர் இந்திய இல்லத்தில் சேர்ந்து வர்மாவின் நெருங்கிய கூட்டாளியாளர். விரேந்திரநாத் சட்டோபாத்தியாய், எஸ்.ரவபாய்ராணா, மதன்லால் திங்ரா.வ.வே.க.ஐயர் போன்றோர் பிற பிரமுகர்களாவர். இலண்டன் போலீசாரின் கெடுபிடி தாங்காமல் அவர்கள் பிரான்சுக்ச் சென்றுவிட்டனர்.

### பாரிஸ்குழு

பிரான்சுக்குச் சென்ற இந்தியப் பயங்கரவாதிகள் 'பாரிஸ் குழு' (Paris Group) என்ற அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு செயல்பட்டனர். ரஷ்யப் புரட்சியாளர்களுடனும் இந்திய இரகசிய அமைப்பகளோடும் தொடர்பு கொண்டிருந்தனர். ஏராளமான பங்கரவாதப் பிரசுரங்கள் இந்தியாவுக்க அனுப்பி வைக்கப்பட்டன. இந்தியப் பயங்கரவாதிகள் ஜெர்மனியிலும் சுறுசுறுப்பாக இயங்கினர். 1907ல் அவர்கள் நடத்திய சர்வதேசச் சமூகவியலாளர் மாநாட்டில் (International Sociologists Conference) காமா அம்மையாரும் (Madam R.Gama) சர்தார் சிங்ராணாவும் (Sardar Singh Rana) பாரீசிலிருந்து போய்க் கலந்து கொண்டனர். அம்மாநட்டில்தான் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார் காமா அம்மையார் உலகெங்குமுள்ள விடுதலை விரும்பிகள் இந்திய விடுதலைப் போராட்டத்தை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் காமா அம்மையார். இந்திய விடுதலைக்காக நாற்பதாண்டு காலம் உழைத்தவர். பெர்லினில் இந்திய விடுதலைக்குழு (Indian Independence Committee) ஒன்றும் அமைக்கப்பட்டது. வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயாவும், ஹாத்யாளும் அக்குழுவின் தீவிர உறுப்பினர்களாவர். முதல் உலகப்போரின் போது இந்தியப் பயங்கரவாதிகள் இங்கிலாந்துக்கெதிராக ஜெர்மனியின் உதவியை எதிர்பார்த்தனர் கிடைக்கவில்லை.

### கதாரி இயக்கம்

'கதார்' (Ghadar) என்றால் 'கிளர்ச்சி' என்று பொருள் கதார் இயக்கம் வட அமெரிக்காவை நிலைக்களானாகக் கொண்டு இயங்கியது பகவான் சிங்கும்,

லாலா ஹர்தயாலும் இந்த இயக்கத்தின் இரு தூண்களாவர், பகவான்சிங் ஒரு சிக்கிய மதகுரு. இவர் பஞ்சாபை விட்டுச்சென்று ஹாங்காங்கிலும், மலாய் நாடுகளிலும் கனடாவிலும் ஆயுதக் கிளர்ச்சியன் மூலம் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். லாலா ஹர்தயால் நாடு கடத்தப்பட்டவர். இவர் 1911 ஏப்ரல் மாதம் கலிபோர்னியா சென்று, பின்னர் ஸ்டோன்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1912 டிசம்பர் 23ம் நாள் இந்திய வைசிராய் ஹார்டிஞ் பிரபு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி இவரை வெகுமாக ஊக்கவித்தது. அந்நிகழ்ச்சியைப் பாராட்டி ‘யுகாந்தர் சர்க்குலர்’ (Yugandar Circular) என்ற துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டார்.

## ஆயுதக் கிளர்ச்சித் திட்டம்

அமெரிக்காவின் மேற்கக் கடற்கரைப் பகுதியில் ஹர்தயால் தலைமையில் இந்தியாவுக்கு ஆதரவாக வன்முறைப் புரட்சி இயக்கம் சூடுபிடித்தது 1913 மே மாதம் மே மாதம் போர்ட்லாந்தில் ‘இந்தி சங்கம்’ (Hindi Association) துவங்கப்பட்டது. இச்சங்கத்தின் முதல் கூட்டம் கான்ஷிராம் என்பவரது இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஹர்தயால் தனது ஆயுதக் கிளர்ச்சித் திட்டத்தை அறிவித்தார். 1.அமெரிக்கா அளிக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டனுக்கு எதிராகப் போரிட வேண்டும் 2.இந்தியா விடுதலை அடைந்தால்தான் அமெரிக்காவில் இந்தியர் சம்மாக நடத்தப்படுவர் 3.இந்தியாவின் வறுமைக்குக் காரணமான பிரிட்டிஷ் ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சிமூலம் அகற்ற வேண்டும். 4. இத்திடத்தை இந்திய மக்களிடையேயும், இந்திய இராணுவ வீரர்களிடையேயும் பரப்பி அவர்களின் ஆதரவையும், பங்கேற்பையும் பெற வேண்டும்.

ஹாத்யாவின் ஆய்தக் கிளர்ச்சித் திட்டம் அமெரிக்காவாழ் இந்தியக் குடியேறிகளிடம் உற்சாக வரவேற்பைப் பெற்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு ‘செயற்குழு’ அமைக்கப்பட்டு. பிர ச்சாரம் செய்வதற்காக ‘கதார் (The Ghadar) என்ற வாரஇதழ் துவங்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டது. பிரான்சிஸ்கோவில் யுகாந்தர் ஆசிரமம் நிறுவப்பட்டது. இந்த நகரமே கதார் இயக்கத்தின் தலைமையமாகத் திகழ்ந்தது. பல அமெரிக்க நகரங்களில் கதார் இயக்க விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த இயக்கம் குறிப்பாக சீக்கியர்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றது.

## கதார் வார இதழ்

அமெரிக்காவிலிருந்து வெளியிடப்பட்ட கதார் வாரஇதழ் வெளிநாடுகளிலிருந்து இயங்கிவந்த ஆய்தப் புரட்சி இயக்கத்தின் பிரச்சார பீரங்கியாகப் பயன்பட்டது. 1919 நவம்பர் முதல் தேதி கதார் இதழ் உருது மொழியிலும் டிசம்பர் 9ம் நர்ள குர்முகியிலும் வெளியிடப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய ஆட்சியை விரோதியாகக் கருதி, அதன் அடக்குமுறையை அம்பலப்படுத்தி அந்த ஆட்சியை அகற்றுவதே கதார் இதழின் தலையாய் நோக்கமாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்க எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொகுத்து ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டது.

கதார் இதழ் வடஅமெரிக்காவில் வாழந்த இந்தியர்கள் மட்டுமல்லாது பிலிப்பைன்ஸ், ஹாங்காய், சீனா, மலாய் நாடுகள், சிங்கப்பூர், டிரினிடாட், ஹோண்டுராஸ் மற்றும் இந்தியாவிலிருந்து இயங்கிய புரட்சியாளர்களைச் சென்றடைந்தது இவர்களிடம் ஆய்தக் கிளர்ச்சியின் மூலம் இந்தியாவிலிருந்து

அந்நிய ஆட்சியை அகற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது குறிப்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இரந்த சீக்கிய இராணுவ வீரர்களை அரசாங்க விரோதிகளாக மாற்ற உதவியது. இந்தியாவை விரைவில் விடுவிக்கும் உத்வேகத்தை இளைஞர்களிடையே உருவாக்கியது. ஆயுதக் கிளர்ச்சியில் குவிமையமாக இருந்த ஹர்தயால் 1914 மார்ச் 25ம் நாள் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அவர் அமெரிக்காவை விட்டு வெளியேறினார்!.

**காமகட்டாமாறு நிகழ்ச்சி**

காமகட்டாமாறு (Komagatamaru) என்ற பெயருடைய கப்பல் இந்தியக் குடியேறிகளை ஏற்றிக்கொண்டு 1914 மார்ச் மாதம் கட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடைந்தது. குருதித் சிங்க (Gurdit Singh) என்ற சிங்கப்பூரில் இருந்த இந்தியர்களை ஒன்றுதிரட்டி வான்கூவருக்கு அனுப்பவதற்காக இக்கப்பலை ஒப்பந்தம் செய்தார்.

376 இந்தியப் பயணிகளுடன் சென்ற காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடையக் கனடா அரசாங்கம் தடை செய்தது. அந்நிகழ்ச்சி கனடா வாழ் இந்தியர்களிடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது. இந்தியப் பயணிகளின் உரிமைக்காகப் பல கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. நீதி திரட்டப்பட்டது. அமெரிக்கா வாழ் இந்தியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடத் தயாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன் விளைவாக இந்தியாவில் ஆயுதக்கிளர்ச்சி பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. எனவே காமகட்டாமற்று வான்கூவர் துறைமுகத்தை விட்டு வெளியேற்றப்பட்டது.

வான்கூவர் துறைமுகத்தைவிட்டு வெறியெற்றப்பட்ட காமகட்டாமாறு கல்கத்தாவை அடுத:து பட்ஜ் பட்ஜ் (Budge Budge) என்ற இடத்தை அடைந்தபோது பயணிகளுக்கும் காவல் படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதில் 18 பயணிகள் கொல்லப்பட்டனர். 202 பேர் கைது செய்யப்பட்டனர். எஞ்சியோர் தப்பிச் சென்றனர். இதற்கிடையே முதல் உலகப்போர் துவங்கிவிட்டதால் ஆயுதப் புரட்சியாளர்கள் புதுத்திட்டம் தீட்டினார்.

**கிளர்ச்சியின் வீழ்ச்சி**

கதார் இயக்கத் தலைவர்கள் இந்தியாவுக்கு திரும்பி இந்திய இராணுவ வீரர்களின் துணைகொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஆயுதப்புரட்சி செய்யத் திட்டமிட்டனர். அதன்படி வெளிநாடுகளின் வாழ்ந்த இந்தியப் புரட்சியாளர்கள் தாய்நாடு திரும்பலாயினர். இத்திட்டத்தை முன்கூடடியே அறிந்த இந்திய அரசாங்கம் இந்திய திரும்பியோரை விழிப்புடன் கண்காணித்தது. பஞ்சாபுக்குள் நுழைந்த புரட்சியாளர்களுக்கு எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. அந்த இக்கட்டான கூட்டத்தில் வங்காளப் புரட்சியாளர் ராஷ் பிகாரி போஸ். பஞ்சாபுக்கு வந்த கதார் இயக்கத்துக்குத் தலைமை தாங்க முன்வந்தார் (1915 ஜனவரி). இவர்தான் பின்னர் சுபாஷ் சந்திரபோசுக்கு இந்திய தேசிய இராணுவத்தின் தளபதிப் பொறுப்பை கொடுத்தவர்.

ராஷ் பிகாரிபோல் ஆயுதக் கிளர்ச்சிக்காக கதாரி இயக்கத்துக்கு அமைப்பு வடிவம் கொடுத்தார். அவர்கள் பல பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டார். 1915 பிப்ரவரி 19ம் நாள் ஆயுதக் கிளாச்சி செய்யுத் திட்டமிட்டிருந்தார். ஒற்றர்மூலம் தகவல் அறிந்த காலனி அரசாங்கம் பல கதார் இயக்கத் தலைவர்களைக் கைது செய்தது. பிகாரிபோஸ் தப்பிவிட்டார் சதிக்குற்றத்துக்கா 45 கிளர்ச்சிக்காரர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. 200 பேருக்கு சிறை தண்டனை கொடுக்கப்பட்டது. கதார் கிளாச்சி வீழ்ச்சியடைந்தது.

1) வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டத்தின் பங்கை விவரி?

## முதல் உலகப்போரும் சுயாட்சி இயக்கமும், 1914-1918

### போருக்கு ஆதரவு

முதல் உலகப் போர் 1914 ஆண்டு ஆகஸ்ட் செப்டம்பரில் ஆரம்பித்தது அந்த நெருக்கடியான நேரத்தில் இந்திய இங்கிலாந்தை ஆதரித்து. சென்னையில் கூடிய காங்கிரஸ் கூட்டத்திற்குத் (1914) தலைமை தாங்கிய சர் சத்யேந்திர சின்ஹா இந்தியா இங்கிலாந்துடன் தோளோடு தோள் நின்று போரிடுவதைப் பற்றிப் பெருமைப்படுவதாகப் பேசினார். காங்கிரஸ் பிரிட்டனுக்கு விசுவாசத்துடன் இருப்பதாகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு இந்தியரும் தன்னாலியன்ற அளவுக்கு அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டுமென்று தீவிரவாதிகளின் தலைவரான திலகர் கேட்டுக் கொண்டார். மிதவாதிகளின் போர் ஆதரவு அபரிமிதமாக இருந்தது. சோதனைக் காலநத்தே பிரிட்டனோடு ஒத்துழைப்பது இந்தியாவின் கடமையனெ இங்கிலாந்திலிருந்து மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி கருதினார்.

### சுயாட்சி இயக்கம்

### சுயாட்சி

1914ஆம் ஆண்டு அயர்லாந்து சுயாட்சி சட்டம் (Irish Home Rule Act) நிறைவேற்றப்பட்டு அயர்லாந்து விடுதலை யடைந்தது. சுயாட்சி (Home Rule) என்ற சொல்லால் கவரப்பட்ட அன்னிபெசண்ட் அம்மையார் அச்சொல்லையே இந்திய தேசிய போராட்டத்தின் தாரசு மந்திரமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். அயர்லாந்து விடுதலைப் பொராட்ட வீரர்களின் உயிர் மூச்சாக இருந்ததோடு மட்டுமல்லாது, அச்சொல் ஆங்கிலேயர்களுக்கு நன்கு அறிமுகமான
இருந்ததோடு மட்டுமல்லாது, அச்சொல் ஆங்கிலேயர்களுக்கு நன்கு அறிமுகமான
சொல்லுமாகும். பிரிட்டானியப் பேரரசுக்குட்பட்ட சுயாட்சியைப் பேரரசிலிருந்து இந்தியா பிரிந்து செல்வதைக் குறிப்பதாக ஆங்கிலேயர்கள் கருதப்படும் என்றெண்ணிய அன்னிபெசண்ட் ‘சுயாட்சி’ என்ற சொல்லையே பயன்படுத்தினார்.

### பொண்டின் பங்கு

முதல் உலகப்போர் துவக்கப்படுவதற்கு முன்பே இங்கிலாந்திலிருந்த அன்னிபெசண்ட் இந்தியா சுயாட்சி பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ‘இந்திய கட்சி’ (Indian Party) யை உருவாக்க முனைந்தார். இலண்டனில் ‘சுயாட்சி சங்கம்’ (Home Rule League) ஒன்றைத் துவக்கினார். இந்தியா திரும்பிய அம்மையார் ‘சென்னை ஸ்டாண்டர்டு’ (Madras Standard) என்ற பத்திரிக்கையை வெளியிட்ட நிறுவனத்தை விலைக்கு வாங்கி, அப்பத்திரிக்கைக்கு ‘நியு இந்தியா’ (New India) என்று மாற்றம் செய்து சுயாட்சி பற்றிய தனது கருத்துக்களை வெளியிட்டார். (1914 ஜீன்). மிதவாதிகளையும் தீவிரவாதிகளையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் வெற்றிபெற முடியாமையால் அன்னிபெசண்ட் தன் சுயாட்சி சங்கம் அமைப்பது பற்றிய விருப்பத்தை வெளியிட்டார். சுயாட்சி பற்றி தீர்மானமொன்றைப் பம்பாயில் கூடிய காங்கிரசில் கொண்டு வந்தார் (1915 டிசம்பர்) ஆனால் அத்தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

**திலகரின் சுயாட்சி சங்கம்**

மாண்டலே சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்த திலகர் (1914 ஜீன் 16) தனது ஆதரவாளர்களைக் கொண்டு மாநிலக் கூட்டமொன்றைக் கூட்டி (1915 மே) 'தேசிய சங்கம்' ஒன்றை அமைக்கும் தனது திட்டத்தைப் பற்றி விவாதித்தார். 1916 ஏப்ரல் நான் திலகர் சுயாட்சி சங்கத்தை (Home Rule league) துவக்கினார். பூனா அதன் தலைமையகமாயிற்று இந்தியாவுக்க சுயராஜ்த்தைப் பெற்றுக் தருவதே அச்சங்கத்தின் குறிக்கோள். அன்னிபெசண்ட் அம்மையாரின் பாதிப்பால் திலகர் தான் துவக்கி சங்கத்துக்கு சுயராஜ்ய சங்கம் என்று பெயர் சூட்டாது 'சுயாட்சி சங்கம்' என்றே பெயரிட்டார்!.

**பெசண்டின் சுயாட்சி சங்கம்**

அதே ஆண்டு செப்டம்பர் 3 ஆம் நாள் அன்னிபெசண்ட் அம்மையார் சென்னை கோகலே மண்டபத்தில் தனியே ஒரு சுயாட்சி சங்கத்தைத் தோற்றுவித்தார். அடையாறு அதன் தலைமையகமாயிற்று. அச்சங்கத்தின் நோக்கங்களாவன.

1. சட்டரீதியான முறைகளை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சுயாட்சியை பெற்றுத் தருதல்
2. சுயாட்சி பெற்ற பின்னரும் பிரிட்டிஷ் பேரரசுடன் தொடர்ப கொண்டிருத்தல்
3. காங்கிரசை ஆதரித்துப் பலப்படுத்தல்
4. இந்தியாவுக்குச் சுயாட்சி வேண்டியதன் அவசியம் பற்றித் தொடர்ந்து பிரச்சாரம் செய்தல்

திலகரும் பெசண்டும் தனித்தனியே சுயாட்சிச் சங்கங்களாகத் துவக்கியதேன்? சுயராஜ்யம், சுயராடசி பற்றிய கருத்து மாறுபாடு கொண்டவர்கள் இருதரப்பிலும் இருந்தனர். எனவே அவர்கள் அனைவரையும் தேசிய இயக்கத்தில் ஈடுபடவைக்கவே இரு சங்கங்களையும் ஆரம்பித்து இருவரும் இணைத்து போராடுவதென முடிவு செய்ததாக அன்னிபெசண்ட் விளக்கமளித்தார்.

**சுயாட்சிப் போராட்டம்**

திலகர் வட இந்தியாவில் இந்தியா சுயாட்சிக்காகத் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதைப் போன்ற அன்னிபெசண்ட் அம்மையார் தென்னிந்தியாவில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். ஆந்திரப் பகுதியில் மட்டும் சுயாட்சிச் சங்கத்தின் ஐம்பது கிளைகள் துவக்கப்பட்டன. சென்னை ராஜ்யத்தின் வட்டாரப் பகுதிகளுக்கெல்லாம் சுயாட்சி இயக்கம் பரவியது. மிதவாதிகளும் இவ்வியக்கத்தை ஆதரித்தனர்! ஏராளமான பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. பொதுக்கூட்டங்களில் இந்தியாவுக்கு சுயாட்சிகோரி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. சென்னையில் புகைவண்டியில் ஐரோப்பியர்களுக்கென தனியே ஒதுக்கீடு செய்வதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் (1916 ஜீலை 24) கோட்டை புகைவண்டி நிலையத்தில் மாணவர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சென்னை கவர்னர் பெண்ட்லண்டு பிரபு (Lord Pentland) அதிர்ச்சியடைந்தார். சுயாட்சி இயக்கம் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற. முதல் உலகப்போரின்போது காங்கரஸ் முடங்கிக் கிடந்தபோது திலகரும், அன்னபெசண்ட் அம்மையாரும் இந்திய தேசிய இயக்கத்தின் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து முழக்கமிட்டனர்.

உலகப்போரில் முழ்சிக் கிடந்த பிரிட்டன் இந்தியாவில் சுயாட்சி இயக்கம் காட்டுத்தீ போல பரவவதைக்கண்டு பதட்டமடைந்தது. அவ்வியக்கத்தை அடக்கத் தீர்மானித்தது. சுயாட்சி சங்கக் கூட்டங்களுக்குச் செல்லக்கூடாது என்னும் மாணவர்கள் தடை செய்யப்பட்டனர். சட்டத்தை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். விரும்பத்தகாத அந்நியர்கள் இந்தியாவினுள் நுழையாமல் தடுக்கப்பட்டனர். சுயாட்சி பற்றி பிரச்சாரம் கட்டுப்படுத்தப்பட்டது. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. திலகர்மீது அரசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்து. நன்டைத்தைக்காக அவரிடமிருந்து ரூ.20,000 பணயப் பணமாகக் கோரப்பட்டது. திலகரும் பெசண்டும் பஞ்சாபுக்குள் செல்ல தடை செய்யப்பட்டனர்.

புதிய இந்தியாவில் அரசு விரோதக் கட்டுரைகள் எழுதினார் எனக் குற்றம் சுமத்தி அன்னிபெசண்ட் அம்மையாரை ரூ.2000 பாதுகாப்புப் பணமாகக் கட்டுமாறு கட்டளையிட்டது சென்னை அரசு கட்டப்பட்ட அத்தொகையை பறிமுதல் செய்துகொண்டு மேலும் ரூ.10,000 கட்டுமாறு பணித்தது. அத்தொகையையும் கட்டினார் பெசண்டர் சென்னை அரசின் அக்கிரமத்தை இந்தியாவில் பலும் கண்டித்தனர். மாளவியா, சாப்ரூ, சிந்தாமணி, ஜின்னா போன்றோர் அரசாங்க அடக்குமுறையைக் கடுமையாக எதிர்த்தனர். சென்னை ராஜதானியின் பல இடங்களில் கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. புதிய இந்தியா பாதுகாப்பு நிதி திரட்டப்பட்டது. அரசுக்கெதிராக அன்னிபெசண்ட் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். வெற்றி பெறவில்லை. ஆனால் அவ்வழக்கு அவருக்கு மாபெரும் விளம்பரத்தைத் தேடித் தந்தது பெசண்டும் அவரது இரு சகாக்களான அருண்டேலும், வாடியாவும் ஊட்டியில் காவலில் வைக்கப்பட்டனர். அது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று. இந்தியா முழுவதிலும் எதிர்ப்பு எழுந்தது. பொதுமக்களின் சீற்றத்துக்குத் தலைவணங்கி அவர்களை விடுவித்தது சென்னை அரசு. 1917ல் இந்திய விவாகரச் செயலர் மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனத்துக்குப் பின் சுயாட்சி இயக்கம் செல்வாக்கிழந்தது.

**சாதனைகள் :**

**சுயாட்சி இயக்கம் பல சாதனைகளை ஏற்படுத்தியது.**

1. இந்திய தேசிய இயக்கத்துக்கு ஒரு புதிய பாதை காட்டியது சுயாட்சி இயக்கம். ‘சுயாட்சி’ என்ற தெளிவான, திட்டவட்டமான செயல்திட்டத்தை நாட்டுக்களித்தது.
2. கோகலே, பெரோஷா மேத்தா போன்ற அரசியல் மேதைகள் இல்லாத குறையைநீக்கி, காங்கிரஸ் பிளவுபட்டதால் ஏற்பட்ட பலவீனத்தைப்போக்கி, ஆங்கிலேய ஆட்சிக்கு ஒருமித்த எதிர்ப்பைக் கொடுத்தது சுயாட்சி இயக்கம்.
3. இவ்வியக்கம் யாசகப் போக்கை விடுத்து. பிரச்சார, பத்திரிக்கைகள் சுதந்திர, நீதிமன்றப் போராட்டத்தில் இறங்கியது. பேச்சுச் சுதந்திரத்துக்காகத் திலகர் மேற்கொண்ட பிரச்சாரமும் பத்திரிக்கை சுததந்திரத்துக்காக பெசண்ட் தொடுத்த வழக்கும் சுயாட்சிக்கு சாதகமாக பொதுமக்கள் கருத்து உருவாகக் காரணமாயிருந்தன.
4. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இந்திய சுயாட்சிக்கு ஆதரவைத் தேடித் தந்தது இவ்வியக்கம் 1918 செப்டம்பரில் திலகரே இங்கிலாந்துக்கு ஒரு தூதுக்குழுவை அழைத்துச் சென்றார். அமெரிக்காவில் லாலா லஜபதி ராய் ஹார்திகார், கே.டி.சாஸ்திரி போன்றோர் சான்பிரான்சிஸ்கோவில் சுயாட்சி சங்கத்தின் கிளையைத் துவக்கிப் பல அமெரிக்கர்களின் ஆதரவைப் பெற்றனர்.

5. இந்தியர்களை அதிகமாக நிர்வாகத்தில் பங்குபெறச் செய்து தன்னாட்சி நிறுவனங்களை வளர்ப்பது. பற்றிய மாண்டேகுவின் ஆகஸ்ட பிரகடனம் வெளியிடப்படுவதற்குச் சுயாட்சப் போராட்டம் பெரிதும் காரணமாயிருந்தது.
6. மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற திலகரும், பெசண்டும் காங்கிரசைக் கைப்பற்றினர்
7. சென்னை ராஜதாணி சுயாட்சி இயக்கத்தின் மையமாயிற்று அன்னிபெசண்ட் தேசிய இயக்கத்துக்குப் புதிய உந்து சக்தியைக் கொடுத்தார். தனி ஆந்திர மாநில அமைவதற்கான உணர்வை அவர் ஏற்படுத்தினார்.
8. திலகரின் தியாக வாழ்க்கையின் பெருமைக்குரிய தொண்டாகத் திகழந்தது சுயாட்சி இயக்கம். சுயராஜ்யம் பிறப்புரிமையை நிலை நாட்டியத சுயாட்சிச் சங்கம் திலகர் விதைத்தார். காந்தி பின்னர் அறுவடை செய்தார்.

**மீண்டும் ஒன்று கூடிய காங்கிரஸ்**

சூரத் பிளவு (1907) க்குப் பின்னர் காங்கிரஸ் கோட்டை இரண்டுபட்டது. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மீண்டம் ஒன்று சேரவே விரும்பினர். எனினும் திலகரும், கோகலேயும் மேற்கொண்ட ஒற்றுமை முயற்சிகள் வெற்றி பெறவில்லை. திலகர் சிறையிலிருந்தபோது தீவிரவாதிகள் செயலிழந்து தின்றனர். மிதவாதிகள் சக்தியற்றுப் போயினர். ஹீயூமும் பிற சேியவாதிகளுமஅ் கட்டிக்காத்த காங்கிரஸ் சதறிப்போவது கண்டு கோகலே கலங்கினார். ஒரே ஆண்டில் கோகலேயும் (1915 பிப்.19). பெரோஸ்ஷா மேத்தாவும் (நவம்பர்) மறைந்தனர். காங்கிரஸ் குறைக்கேட்டையாகி (சுரஅ ரி) விட்டதேயென்று லாலா லஜபதி ராய் வருந்தினார். தீன்ஷா வாச்சா, சுரேந்திரநாத் பானர்ஜி மாளவியா, சீனிவாச சாஸ்திரி போன்றோரால் அவர்களது இடங்களை நிரப்ப இயலவில்லை. காங்கிரஸ் ‘தளபதி இல்லாத பட்டாளம்’ போல் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் பட்டாபி சீத்தாராமய்யா.

**லக்னோ காங்கிரஸ், 1916**

1916 டிசம்பர் மாதம் அம்பிகா சிரண் மஜீம்தார் தலைமையில் காங்கிரஸ் கூட்டம் லக்னோவில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திலகர் மற்றும் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் தனித்தனியே செயல்பட்டு வந்த சுயாட்சிக் கட்சியினர் முறைப்படி காங்கிரசில் சேர்ந்தனர். 1916ல் மாண்டலே சிறையிலிருந்து விடுதலையான திலகர் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய மஜீம்தார் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகால அரசியல் வனவாசத்துக்குப் பிறகு இவர்கள் மீண்டும் காங்கிரஸ் பேரியக்கத்தில் பங்கேற்பதை மனநிறைவோடு வரவேற்றார். திலகரும், அன்னிபெசண்ட் அம்மையாரும் ராஷ்பிகாரி கோஷ் சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோருடன் ஒரே மேடையில் வீற்றிருந்தது கண்கொள்ளாக் கட்சியாகும்.

காங்கிரஸ் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அருகாமையிலேயே முஸ்லீம் லீக்கின் கூட்டமும் கூடியது 1916ம் ஆண்டு முஸ்லீம் லீக்கின் தலைமைப் பொறுப்பேற்ற முகமது அலி ஜின்னா அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அந்த காலகட்டத்தில் ஜின்னா அகில இந்திய கண்ணோட்டத்தோடு சமயச்சார்பற்ற நாட்டுப்பற்றுமிக்க தேசியவாதியாக இருந்தார் தன்னைப்போன்றே பிற முஸ்லீம் தலைவர்களையும் சமயச் சார்பற்ற மனப்பான்மையுடையவர்களாக மாற்ற முனைந்தார்.

காங்கிரஸ் கூட்டமும் முஸ்லீம் கூட்டமும் லக்னோவில் தனித்தனியே நடைபெற்றதாலும் இரு இயக்கத் தலைவர்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒரே மன அலை வரிசையில் இருந்தது எனக் கூறலாம் காங்கிரசில் இணைந்த திலகர் காங்கிரசையும் முஸ்லீம் லீக்கையும் ஒருங்கிணைக்கும் பணியில் முனைப்புடன் செயல்பட்டார். இந்து முஸ்லீம் ஒற்றுமையின்மூலமே இநதிய விடுதலையைப் பெற முடியும் என்று கருதி திலகர் அம்முயற்சியில் இறங்கினார். “இந்திய இந்துக்களின் பிரதிநிதியாகக் கூறுகிறேன். எதிர்யோடு போரிடும் போது அனைவரும் இன, மத, அரசியல் வேறுபாடியின்றி ஒன்றுபட்டுப் போராட வேண்டியதான் முக்கியம் என்று கூறினார் திலகர். பெரும்பான்மையினரின் மேலாதிக்கம் பற்றிய சிறுபான்மையினரின் அச்சத்தைப் போக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். லக்னோ உடன்பாடு ஏற்படுவதற்கு திலகர் பெரிதும் காரணமாக இருந்தார்.

**லக்னோ உடன்பாடு**

லக்னொ காங்கிரசின் மாபெரும் சாதனை இந்திய அரசியல் சீர்திருத்தங்கள் பற்றி காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடாகும். இதுவே காங்கிரஸ் லீக் திட்டம் (Congress League Scheme) அல்லது லக்னோ உடன்பாடு (Lucknow Pact) என்றழைக்கப்படுகிறது. இவ்வுடன்பாடடின் விதிகளாவன.

இந்திய பிரிட்டிஷ் பேரரசின் சுயாட்சி பெற்ற நாடாக வேண்டும். பல்வேறு மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பகுதி இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்படும் நிறுவனங்களில் சிபான்மையினருக்கும் போதிய தனிப்பிரதிநித்தும் கொடுக்கப்பட வேண்டும் ஒரு இனத்தை பாதிக்கக்கூடிய தீர்மானத்தை எந்த அரசாங்கச் சார்பற்ற உறுப்பினரும் கொண்டு வரக்கூடாது. கவர்னரால் இரத்து செய்யப்படாத ஒவ்வொரு மசோதாவும் நிறைவேற்றப்படல் வேண்டும். நிதி விவகாரங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். வைசிராய்கரும், கவர்னருக்கும் வெட்டதிகாரம் (ஏநவழ ீழநச) கொடுக்கப்படலாம் வைசிராயின் ஆட்சி குழுவின் உறுப்பினர்களில் பாதி பேர் மத்தியச் சட்ட மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாயிருத்தல் அவசியம் மாநிலங்களுக்கு அதிக தன்னாட்சியுரிமை வழங்கப்படல் வேண்டும். மத்தியச் சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 150 ஆக உயர்த்தப்பட்டு, அதிக கூன்றில் ஒரு பகுதியினர் முஸ்லீம் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும். இந்திய விவகாரச் செயலரின் ‘இந்திய கவுன்சில்’ கலைக்கப்படல் வேண்டும் பிரிட்டிஸ் பேரரசுக்குள் இந்தியர் பிறருக்குச் சமமாக நடத்தப்படல் வேண்டும் பேரரசு சம்பந்தமான விஷயங்களை விவாதிக்கும் அமைப்புகளில் இந்தியருக்குச் சமவாய்ப்பளிக்க வேண்டும் இராணுவ கடற்படைப் பணிகளுக்கு இந்தியர்கள் தகுதியானவர்கள் என்று ஏற்கப்படல் வேண்டும். அதிகார வர்க்கதினரிடமிருந்து நீதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் பிரிக்கப்படல் வேண்டும்.

**முக்கியத்துவம்**

‘லக்னோ காங்கிரசின் பெரிய சாதனையே காங்கிரஸ் லீக் உடன்பாடு என்கிறார் பட்டாபி சீத்தாராமையா தேசிய பிரச்சனைக்கும் இந்து முஸ்லீம் பொது அணுகுமுறைக்கும் வழி வகுத்தது இந்த உடன்பாடு சுயாட்சியே இந்திய தேசிய இயக்கத்தின் குறிக்கோள் என்பதை லீக் ஏற்றுக் கொண்டதன் மூலம்

இந்துக்களோடு இணைந்து பொது நோக்ககத்துக்காகப் போராடுவதற்கு முஸ்லீம்கள் முன்வந்தார்கள்.

1) இந்தியாவின் தன்னாட்சி இயக்கத்தைப் பற்றி விவரி?

## மாண்ட் - போர்டு சீர்திருத்தங்களும் இரட்டை ஆட்சியும் 1919

### இரட்டை ஆட்சி

1919 இந்திய அரசாங்கம்ச் சட்டம் றாங்பததேழு விதிகளைக் கொண்ட ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அச்சட்டத்தின் முடிவுரை (ீசநயஅடிடந) மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களுக்குப் பின்புலமாக இருந்த அடிப்படைக் கொள்கைகளைப் பற்றி சுருக்கமாகக் கூறியது. இந்திய விவகாரச் செயலரின் அதிகாரங்கள், வைசிராயின் நிர்வாக குழு, மத்திய சட்டமன்றம் மாநில சட்ட மன்றம் ஆகியவற்றில் செய்யப்பட்ட மாற்றங்களைப் பற்றி அச்சட்டம் விரிவாகக் கூறியது. இந்திய ஹைகமிஷனா் பதவி புதிதாக உருவாக்கப்பட்டது. இவை யாவற்றிலும் அடிப்படையான மாற்றம் மாநிலங்களில் இரட்டை ஆட்சி (Dyarchy) முறை புகுத்தப்பட்ட நேயாகும்.

### இரட்டை ஆட்சி என்றால் என்ன?

மாநிலத்தின் நிரவாகப்பொறுப்ப இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டதால் இப்புதிய மாற்றத்துக்கு “இரட்டை ஆட்சி” என்று பெயரிடப்பட்டது. பிரிக்கப்பட்ட பொறுப்புகள் முறையே மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) என்றும் ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) என்றும் அழைக்கப்பட்டன. கல்வி, பொதுப்பணிகள் விவசாயம், மீன், வளத்துறை, தல சுயாட்சி, ஆய்த்தீர்வை, பொதுச்சுகாதாரம், மருத்துவ நிர்வாகம், தொழில் நுணுக்கக் கல்வி, தொழிற்சாலை வளர்ச்சி, தொழில் ஆராய்ச்சி ஆகியவை மாற்றப்பட்ட துறைகளாகும். அவற்றை மக்களால் தோந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினா்களிலிருந்து கவா்ணரால் நியமிக்கப்பட்ட அமைச்சா்கள் நிா்வகித்தனா். மாறாக காவல், நீதி, நிா்வாகம் நிலவருவாய், நீா்பாசனம் பஞ்ச நிவாரணம் பத்திரிக்கை அச்சகம், புத்தகம் கட்டுப்பாடு, விவசாயக் கடன்கள் வனங்கள், சிறைகள் தொழில் தகராறு தீா்த்தல் போன்ற தேச அபிவிருந்தித் துறைகள் (Nation Building departments) கவா்னரால் அவரது நிா்வாகக் குழு உறுப்பினா்களின் துணைகொண்டு நிா்வகிக்கப்பட்டன. இவ்வாறு இருவேறு அதிகார அமைப்புக்களைக் கொண்ட மாநில நிரவாகச் சீா்திருத்தமே இரட்டை ஆட்சி என்று அழைக்கப்பட்டது.

### இரட்டை ஆட்சி செயல்பட்ட முறை

1921 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சென்னை, வங்களாம், பம்பாய், ஐக்கிய மாகானம், பஞ்சாப், பிகாரி, மத்திய மாகாணம், அசாம், ஆகிய எட்டு மாநிலங்களில் இரட்டை ஆட்சி அமல் செய்யப்பட்டது. அதன்பின் பா்மாவுக்கும் வடமேற்கு எல்லை மாகாணத்திற்கும் இவ்வாட்சி விரிவுபடுத்தப்பட்டது. இரட்டையாட்சி முறை 1920 லிருந்து 1937 வரை செயல்பட்டது. இவ்வாட்சியில் முதல் சட்டமன்றத்துக்கான தோ்தல்கள் 1920-21ல் நடைபெற்றன. ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக காங்கிரஸ் தோ்தலில் கலந்து கொள்ளவில்லை. எனினும் விபரம் கட்சியினா் தோ்தலில் போட்டியிட்டனா் 1923

தேர்தலில் சுயராஜ்யக் கட்சினர் (Swajists) தேர்தலில் கலந்து கொண்டு வியத்தகு வெற்றியடைந்தனர்.

சட்ட மன்றத்துக்குள்ளிருந்து கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தச் சென்ற சுயராஜ்யச் அரசாங்கத்துக்குத் தீர்வு தலைவலியாக இருந்தனர். மாற்றப்பட்ட துறைகள் செயல்பட்ட, செயல்பட முடியாத நிலைபற்றிக் கடுமையாக அவர்கள் விமர்ச்சித்தனர். மத்திய மாகாணச் சட்டமன்றத்தில் சுயராஜ்யக் கட்சினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தால் அங்கு நிர்வாகத்தை நடைபெற முடியாதவாறு முடக்கிவிட்டனர். வங்காள சட்டமன்றத்டதில் அவர்கள் சுயேச்சைத் தேசியவாதிகளுடன் சேர்ந்து கொண்டு தேக்கநிலையை உண்டாக்கிவிட்டனர். ஐக்கிய மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியின் கொள்கை பல ஆதரவாளர்களைப் பெற்றுத் தந்தது பம்பாய் சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் “அரசாங்க ஆதர்வாளர்கள்” சுயராஜ்ய எதிர்க்கட்சியினர் எனப் பிரிந்து விவாதப் போரிட்டனர். பஞ்சாப்பிலும் அஸ்ஸாமிலும் சுயராஜ்யக் கட்சியினர் சிறுபான்மையினராக இருந்தமையால் அரசாங்கத்தாருக்கு முட்டுக்கட்டையாக இருக்க முடியவில்லை.

சென்னை ராஜதானில் இரட்டை ஆட்சி வெற்றிகரமாக வேலைசெய்தது அதற்குக் காரணம் நீதிக்கட்சி (Justice Party) அரசாங்கத்தை ஆதரித்து நீதியை வழங்க வேண்டும் என்று தீர்மானமாக செயல்பட்டதுதான். 1920 டிசம்பரில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட நீதிக்கட்சி 96 இடங்களில் 63 இடங்களை வென்று ஆட்சியை அமைத்தது. முதல் சட்டசபைக் கூட்டம் கன்னாட் சோமகனால் (Duke of Connaught) துவக்கி வைக்கப்பட்டது. (1921 ஜன12)! இரண்டாவது சட்டமன்றத் தேர்தலில் (1923) 44 இடங்களை மட்டுமே வெல்ல முடிந்தது. சுயராஜ்யக் கட்சி 41 இடங்களில் வெற்றி பெற்றது. எனினும் அக்கட்சி அமைச்சரவையை அமைக்க சம்மதிக்காததால் முன்னாள் நீதிக்கட்சித் தலைவரான டாக்டர்.பி.சுப்பராயன் தலைமையில் சுயேச்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது. 1934 தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டு நீதிக்கட்சியைத் தோற்கடித்த போதிலும் கூட அக்கட்சி அமைச்சரவைப் பொறுப்பை ஏற்க மறுத்ததால் நீதிக்கட்சியே ஆட்சிபீடத்தில் அமர்ந்தது! 1937ல் ராஜகோபாலாச்சாரியார் அமைச்சரவை ஏற்படுவரை நீதிக்கட்சியே ஆளும்கட்சியாக நீடித்தது! இரட்டை ஆட்சிக் காலத்தில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் சென்னை மாநிலத்தில் முழுவெற்றியடைய நீதிக்கட்சி துணைபுரிந்தது. சென்னை ராஜதானி தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிந்து செயல்பட்டது. ஒரு விதிவிலக்காகும்.

**சாதனைகள்**

பதினாறாண்டு காலம் நடைமுறைப் படுத்தப்பட்ட இரட்டை ஆட்சிப் பரிசோதனை பல சாதனைகளைப் புரிந்ததெனலாம். இந்திய அரசியல் அமைப்ப வரலாற்றில் இரட்டை ஆட்சிக் கொண்டுவரப்பட்டது. ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது எனக் கூறலாம். மக்கள் பிரதிநிதிகள் மாநில நிர்வாகத்தில் நேரடியாய் பங்கேற்றதால் அவர்களுக்கு சட்டமன்ற முறையில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் கிடைத்தது சட்டமியற்றும் கலையில் இந்திய அரசியல்வவாதிகளுக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டது. அரசாங்கம் செயல்படும் முறையைக் கவனிக்கவும் அரசாங்கச் செயல்முறைகளைத் திறனாய்வ செய்யவும் அவர்களுக்கு வாய்ப்பேற்பட்டது. ஆங்கிலேய வல்லாட்சிக்கும் மக்களின் பொறுப்பாட்சிக்குமிடையே உள்ள இணைப்புப் பாலமாகப் பயன்பட்டது. இரட்டை ஆட்சி முறை. அது மாநில சுயாட்சி முறைக்கு வழி வகுத்துக்கொடுத்தது. எதிர்கட்சியாகப் பணியாற்றிய சுயராஜ்யக் கட்சியினர்

அரசாங்கத்தினா் தேச விரோதக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தினா். அவா்களுடைய எதிா்ப்புக்கு அஞ்சி கவா்னரும், அவரது ஆலோசகா்களும் செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. முதன்முறையாக அதிகாரவா்க்கதினா் மாற்றப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சா்களின் கீழ் பணியாற்றினா்! அதனால் அதிகாரிகளின் மனப்பான்மையும், அணுகுமுறையில் நல்ல முறையில் மாறத் தொடங்கியது. அமைச்சா்களால் பல மக்கள் நலவாழ்வுத் திட்டங்களை செயல்படுத்த முடிந்தது பொறுப்பாட்சிகள்க இந்தியா்கள் தகுதியானவா்களே என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது.

**இரட்டை ஆட்சியின் தோல்வி**

இரட்டை ஆட்சியால் பல நன்மைகள் ஏற்பட்டாலும் கூட அப்பரிசோதனை தோல்வி அடைந்தது. மாநில நிா்வாகத்தை மாற்றப்பட்ட துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் என்று பிரித்தது தவறான இயற்கைக்கு முரணானது நடைமுறைக்கு ஒவ்வாதது. மக்களால் தோந்தெடக்கப்பட்ட பிரதிநிதிகளும் கவா்னரால் நியமிக்கப்பட்டோரும் சோ்ந்து செயல்பட்டது. எலியும் தவளையும் கால்களைக் கட்டிக்கொண்டு கிணற்றுக்குள் குதித்த கதையாயிற்று. கவா்ணரைச் கால்களைக் கட்டிக்கொண்டு கிணற்றுக்குள் குறித்து கதையாயிற்று, கவா்ணரைச் சுற்றியே இரட்டை ஆட்சிமுறை சுழன்றது. அவரால் தோ்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினா்களெ அமைச்சா்களாயிருந்தமையால் அவா்களால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. கவா்னரின் தயவை நாடியே அவாகள் செயல்பட வேண்டியிருந்தது. அமைச்சா்கள் கவா்ணருக்கு ஆலோசகா்கள் போன்றே இருந்தனா். சட்டமன்றம், கவா்னா் ஆகிய இரண்டு எஜமானா்களுக்கும் அமைச்சா்கள் கட்டுப்படவேண்டியதாயிற்று. அவா்கள் இரு தலைக்கொள்ளி எறும்பு போலாயினா் அவா்களால் இரண்டு குதிரைகளின் மீதும் ஒரே சமயத்தில் சவாரிசெய்ய முடியவில்லை! யாவற்றுக்கும் மேலாக அமைச்சா்களுக்கு நிதி அதிகாரம் எதுவுமில்லை. ஆனால் அவா்களது பொறுப்பிலிருந்து துறைகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கவனிக்கப்பட்டன. இந்திய விவகாரம் செயலரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்ட அகில இந்திய பொதுப்பணி அதிகாரி (I.C.S) அமைச்சா்களுக்கு அடங்கி நடக்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

நாடு பஞ்சாப் படுகொலையைக் கண்டித்தும், இங்கிலாந்து துருக்கிக்குச் செய்த துரோகத்திற்கும் எதிராகப் போராடிக் கொண்டிருந்த வேளையில் இரட்டை ஆட்சிமுறை கொண்டு வரப்பட்டது. மக்களுக்கு அது பெரிய எமா ற்றத்தையே அளித்தது. சுயராஜ்யக் கட்சியினா் இரட்டை ஆட்சிமுறையை தோற்கடிப்பதெனச் சூளுரைத்துச் செயல்பட்டனா். மாண்டேகு செம்ஸ்போா்டு சீா்திருத்தங்களைக் காங்கிரஸ் துவக்கத்திலிருந்தே எதிா்த்து வந்தது. சட்டமன்றத் தோ்தல்களிலும் அது கலந்து கொள்ளவில்லை. இங்கிலாந்தில் ஆட்சிக்கு வந்த கன்சா்வேடிவ் கட்சியினா் இரட்டை ஆட்சி சலுகையைக்கூட நீடிக்க விரும்பவில்லை! அதன் செயல் வேகத்தைக் குறைத்துவிட்டனா். தொடா்ந்து மேற்கொள்ளப்பட்ட கிலாபத், ஒத்துழையாமை, சட்ட மறுப்பு இயக்கங்கள் இரட்டை ஆட்சி முறையை செயலிழக்கச் செய்துவிட்டன. 1937ல் மாநில சுயாட்சியை ஏற்படுத்தியதுதான் இரட்டை ஆட்சியின் சவப் பெட்டியின் அடிக்கப்பட்ட ஆணியாகும். இரட்டை ஆட்சி பரிசோதனை படுதோல்வி அடைந்தது. இந்திய விடுதலைப் போராட்ட வீரா்கள் புதுப்பலத்துடன் தங்களது கிளா்ச்சியைத் தொடா்ந்தனா்.

1) இரட்டை ஆட்சிமுறையைப் பற்றி விவரி?

## ரௌலட் சட்டம்

முதல் உலகப்போர் முடிந்தவுடனேயே இந்தியத் தீவிரவாதிகளையும், பங்கரப் புரட்சிக்காரர்களையும் அடக்கும் நோக்கத்துடன் முடியவிருந்த இந்தியப் பாதுகாப்புச் சட்ட (Defence of India Act) த்துக்கு பதில் புதிய சட்டத்தை கொண்டுவர இந்திய அரசு முயன்றது. சிட்னி ரௌலட் (Sydney Rawltt) என்ற ஆங்கிலேய நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்தியாவில் அரசவிரோத நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமா்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்குழு சமா்பித்த அறிக்கை (1918 ஏப்.15) யில் கூறப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் இரு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன. அவை ரௌலட் மசோதாக்கள; (Rowlatt) என்றழைக்கப்பட்டன. அம்மசோதாக்களின்படி,

1. அரசாங்கம் சோதனை ஆணை (றுயசசயவெ) ஏவுமன்றி எவரையும் கைது செய்யலாம்.
2. ‘அபாயகரமான ஆட்கள்’ என்ற காரணத்தைக் கூறி எவ்வித விசாரணையுமின்றிக் காலவரையின்றி காவலில் வைக்கலாம்.
3. அரசு விரோதக் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என கருதப்படுவோரைக் குறிப்பிட்ட இடங்களில் காவலில் இருக்குமாறு கட்டாயப் படுத்தப்படலாம்.
4. நடுவர்களின் (துரசநைள) துணையின்றியே மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் அரசுத் துரோக வழக்குகளை விசாரிக்கலாம் அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது.

இந்த ‘கருப்பு மசோதாக்களை’ (Black Bills) இந்தியத் தலைவா்கள் கடுமையாகக் கண்டித்தனர். அம்சோதாக்கள் மத்தியச் சட்டமன்றத்தில் விவாதிககப்பட்டபோது அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்களான எஸ்என.பானர்ஜி, வி.எஸ்.சீனிவாசந சாஸ்திரி, டெஜ் பகதூர் சாப்ரூ, வி.ஜே.பட்டேல், ராமசுவாமி அய்யங்கார் ஆகியோர் ரௌலட் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் வேண்டாத விளைவுகள் ஏறபவ்டும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார்கள். பல ஊர்களில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்த மசோதாக்களுக் கெதிராகப் பலரும் சீற்றங் கொண்டனர். புதிதாக உருவான அச்சீற்றம் புதிய தலைவரைத் தந்தது என்கிறார் பெர்சிவெல் ஸ்பியர் (Percival Spear) என்ற வரலாற்று அறிஞர். அப்பதிய தலைவரான காந்தி ரௌலட் மசோதாக்கள் விலக்கிக் கொள்ளப்படாவிடில் சத்தியாக்கிரத்தைத் துவக்குவதைத் தவிர தன்கக வேறு வழியில்லையென்று அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். அந்த எச்சரிக்கையையும் மீறி அரசாங்கம் குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தை (Anarchical and Revolutionary Crime Act) நிறைவேற்றியது அதுவே ரௌலட் சட்டம் என்று பெயர் பெற்றது.

### சாத்விகப் போராட்டம்

ரௌலட் சட்டம் மனித உரிமைக்கும் நீதிக்கும் உலைவைக்கும் சட்டம் எனக்கருதினார். காந்தி, அச்சட்டம் சவுக்கைக் கொண்டு அரசாங்கத்துக்கு ஆகாத எவரையும் எப்படியும் அடிக்கலாம் என்பதை நன்குணர்ந்த காந்தி அந்தச் சாத்தான் சட்ட (Satanic Act) த்தை முழுமுச்சுடன் எதிர்க்கத் தீர்மானித்தார். 1919 மார்ச் மாதம் பம்பாயில் சந்தியாக்கிரக சபை (Sathyagraha Sabha) தோற்றுவிக்கப்பட்டது. சத்தியாகிரகச் சபதம் (Satyagraha Pledge) எடுத்துக் கொள்ளப்பட்டது. சத்தியாக்கிரகச் சபையின் கிளைகள் நாட்டின் பல பகுதிகளிலும் துவக்கப்பட்டன. 1919 மார்ச் 30ஆம் தேதியை சத்தியாக்கிரக

நாளாக (Satyagraha Day) நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று காந்தி மக்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர்க சென்னை சென்றபோது (மார்ச் 17) சி.ராசகோபாலாச்சாரியார், எஸ்.கஸ்தூரிரங்க அய்யங்கார், சி.விஜயராகவாச்சாரியர் ஆகியோரது ஆலாசனையின்படி சத்தியாக்கிரக நாளை ஏப்ரல் 6க்குத் தள்ளிவைத்து விட்டார் காந்தி!

சத்தியாக்கிரக தினம் தள்ளி வைக்கப்பட்ட செய்தி அறியாத டில்லி மக்கள் 1919 மார்ச் 30 அன்று பூரண அர்த்தால் அனுசரித்தனர். டெல்லி பொதுவாழ்க்கை அன்று நின்று போயிற்று. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பலர் இறந்தனர். மேலும் பலர் காயமுற்றனர். 1919 ஏப்ரல் 6 ஆண்டு தேதி காந்தியின் குரலுக்கு செவிமடுத்த நாடு அமைதியாக அகிமிச்சை வழிநின்று சத்தியாகிரக நாளைப் பக்தி சிரத்தையோடு கொண்டாடியது. ஊரிவலங்கள், ஆர்ப்பாட்.டங்கள் கடையடைப்பு, உண்ணாவிரதம் பொதுக்கூட்டங்கள் பிரார்த்தனைகள் ஆகிய அனைத்தும் எவ்வித அசம்பாவிதமின்றி நடைபெற்றன.

ஆனால் அரசாங்கத்தின் விவேகமற்ற போர்க்கால் வன்முறைந வெடித்தது. சுவாமி சிரத்தானந்தரின் அவசர அழைப்பின்பேரில் காந்தி டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார் (1919 ஏப்ரல் 7) அவர் மதுரா (Mathuura) வை அடைந்தபோது மேற்கொண்டு செல்லக்கூடாதெனத் தடுக்கப்பட்டார். தடையை மீறிப் பயணம் செய்த காந்தியைப் பஞ்சாபின் எல்லையிலிருந்த பால்வால் (Palwal) எந்ற சிற்றூரின் புகை வண்டி நிலையத்தில் கைதுசெய்து பம்பாய்க்குக் கொண்டு சென்றுவிட்டனர். அகமதாபாத், பம்பாய், டில்லி, அமிர்தசரஸ் ஆகிய இடங்கள் வன்முறைக் கேந்திரங்களாயின. ஆகிலேயர்களும் அரசாங்க அதிகாரிகளும் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. போலீஸ் உத்தரவுகளும் தடைகளும் மீறப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள் நடத்தன. இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அகிமிச்சை ஆயுதத்தைகச் சரியாகப் பயன்படுத்தக்கூடிய பயிற்சியையும் பக்குவத்தையும் மக்கள் இன்னும் சரியாகப் பெறவில்லை என்பதை அறிந்தார் காந்தி, இமாலயத் தவறு (Himalayan Miscalculation) செய்துவிட்டதாகக் கருதினார் காந்தி, ரௌலட் சத்தியாக்கிரகத்தை துவக்கியவர் காந்தி, காங்கிரஸ் அல்ல, அவரே நிறுத்தினார்.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை**

காந்தி ரௌலட் சத்தியாக்கிரகத்தை நிறுத்தினார். ஆனால் அரசாங்கம் தன் அடக்குமுறையை நிறுத்தவில்லை. டாக்டர் சத்யபாலும் (னுச.ளுயவலயியட) அமிர்தரசின் மக்கள் செல்வாக்குமிக்க காங்கிரஸ் தலைவர்கள். முனைவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற முஸலீமட் வழக்கறிஞர், பின்னவர் இந்து மருத்துவர் கழகத்தில் பட்டம் பெற்ற முஸ்லீம் வழக்கறிஞர், பின்னவர் இந்து மருத்துவர் இவ்விருவரையும் துணைக்கமிஷனர் தனது பங்களாவுக்க வரச்சொல்லி கைது செய்து தரம்சாலா என்ற மலைநகருக்குக் கொண்டு சென்றுவிட்டார்! பஞ்சாபின் லெப்டினண்ட் கர்னலாயிருந்த மைக்கேல் ஒட்வியர் (Micheal O dwyer) அவ்விருவரையும் நாடுகடத்த உத்தரவிட்டார்! முன்னரேயே ரௌலட் சட்டத்தாலும், காந்தி கைது செய்யப்பட்டதாலும் சினங்கொண்டிருந்த பஞ்சாபியர் தங்களது அபிமானத் தலைவர்கள் இருக்கமிடம்கூடத் தெரியாது மறைத்து வைக்கப்பட்டதால் சீற்றம் கொண்டனர். சீறி எழுந்தனர். துணைக்கமிஷனர் பங்களாவை நொக்கிப் புறப்பட்டனர். அவர்களை ஒரு புகைவண்டிப் பாலத்தருகே தடுத்து நிறுத்தப்பட்டபோது

வன்முறை நிகழச்சிகள் ஏற்பட்டன். இருபத்தைந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பதிலுக்க ராபின்சன் என்ற சரக்குகிடங்கு காவலர் அடித்து க் கொல்லப்பட்டார். மின்சாரக் கம்பிகளும் தந்திக் கம்பிகளும் அறுத்தெறியப்பட்டன. புகைவண்டிப் பாலம் பெயர்க்கப்பட்டது. வங்கிகளும், வங்கி அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். செல்வி மெர்செல்ரா ஷெர்வுட் என்ற சமயப் பரப்பு ஊழியர் மோசமாகத் தாக்கப்பட்டார். பல பொதுக் கட்டிடங்கள் கொளுத்தப்பட்டன. அல்லது கரைமட்டமாக்கப்பட்டன. அமிர்தசரஸ் வன்முறை ஆர்ப்பாட்ட மையமாயிற்று.

அரசாங்க அடக்குமுறைக்குப் பலியானோருக்கு இரங்கல் கூட்டம் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1919 ஏப்ரல் 13 அன்று ஜாலியன் வாலாபாக் (Jallian Wallah Begh) கில் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அன்றுதான் சிக்கியர்களுக்குப் புனிதமான பைசாகி தினம் (Baisaki Day) தங்கள் கோவிலில் வழிபடப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்திருந்தார்கள். 'பாக்' என்றால் தோட்டம் என்று பொருள் அங்கு தோட்டம் எதுவும இல்லை. ஜாலியன் வாலாபாக் என்பது நெடிய கவர்களால் சூழப்பட்டு, ஒரே குறுகிய நுழைவாயிலையுடைய நீண்ட சதுர மைதானம். அதில் சுமார் 20,000 பேர் கூடி இரந்தனர். அறிவித்தப்படி இரங்கல் கூட்டம் சரியாக மாலை 4.30 மணிக்குத் துவங்கிற்று. அங்கு கூடியிருந்தோருக்குப் பிரிசேஷயர் ஜெனரல் ரெஜினால்டு டயர் Reginal Dyer) அன்று காலை பிறப்பித்த கூட்டம் தடை உத்தரவு பற்றி எதுவும் தெரியாது. தனது ஆணையை மீறி கூடிவிட்டனரே என்று கோபமுற்று டயர் படைவீரர்களுடன் ஜாலியன் வாலாபாக் சென்று முன்னறிவிப்பு ஏதுமின்றி, தோட்டாக்கள் தீரும் வரைக் கூட்டத்தினரைப் பார்த்துச் சுடுமாறு உத்தரவிட்டார். அவ்வாறே பத்து நிமிடங்கள் நிறுத்தாமல் கூட்டனர் 1650 சுற்றுச் சுட்டதால் 1500 அப்பாவி மக்கள் மாண்டனர். கவனிக்கப்படாமையால் காயம்பட்ட மேலும் பலரும் மடிந்தனர். இரங்கல் கூட்டத்துக்குச் சென்றோர் இறந்துபட்ட கோரக்காட்சி அது.

**இராணுவச் சட்ட நடவடிக்கைகள்**

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் ஜாலியன்வாலாபாக் படுகொலை போதாதென்று, அமிர்தசரசிலும், லாகூரிலும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. (ஏப்ரல் 15). அமிர்தரசல் மக்கள் ஆங்கிலேய அதிகாரிகளைப் பார்க்கும் போதெல்லாம், கைதூக்கி வணக்கம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். மறுப்போர் கசையடிக்கு உள்ளாயினர். பகை வண்டியில் பயணம் செய்ய மக்கள் அனுமதிக்கப்படவில்லை, மாணவர்கள் யூனியன் ஜாக் கொடிக்க வணக்கம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர். இந்துக்களும் முஸ்லீம்களுடன் ஜோடியாக சேர்நது விலங்கிடப்பட்டனர். டயரின் ஊர்ந்து செல்லும் உத்தரவு (ஊசயறடபைெ ழுசனநச) கொடுமையின் சிகரமாக இருந்தது. செல்வி ஷெர்வுட் தாக்கப்பட்ட வீதியல் செல்வோர் அனைவரும் தரையில் படுத்த மார்பால் ஊர்ந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டனர் அவ்வீதியில் சவுக்கடிச் சதுக்கம் (Wipping Square) ஒன்று கட்டப்பட்டு அதில் குற்றவாளிகள் நிறுத்தி வைக்கப்பட்டுக் கசையடி கொடுக்கப்பட்டார்கள். செல்வி ஷெர்வுட்டைத் தாக்கியதாச் சந்தேகப்பட்ட ஆறு இளைஞர்கள் அச்சதுக்கத்துக்கு கொண்டுவரப்பட்டு ஆளுக்கு 30 கசையடிகள் கொடுக்கப்பட்டன. லாகூர் கசூர், குஜ்ரன்வாலா, ஷேகுபூரா ஆகிய இடங்களில் இராணுவச் சட்ட நடவடிக்கைகள் அரக்கத்தனமாக அமல் செய்யப்பட்டன. எடுத்துக்காட்டாக. லாகூரில் இராணுவச் சட்டம் பற்றிய சுவரொட்டிகளை வீட்டுச் சுவர்களில் ஒட்டுவதோடு மட்டுமன்றி அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பையும் வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் ஏற்குமாறு

கட்டாயப்பட்டுத்தப்பட்டனர்! கசூரில் மக்கள் குனிந்து நெற்றியால் தரையைத் தொடுமாறு தண்டிக்கப்பட்டனர்! குஜ்ரன் வாலாவில் பள்ளிகள் ஆகாய விமானததிலிருந்து தாக்கப்பட்டனர். கருங்கக்கூறின் இராணுவச் சட்டத்தின் துணைகொண்டு பஞ்சாப் மக்கள் மாக்டகளாக நடத்தப்பட்டன.

**ஹண்டர் விசாரணைக்குழு**

பஞ்சாப் படுகொலை நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியது கண்டனக் குரல்கள் கிளம்பின. பஞ்சாபில் நடைபெற்ற பயங்கரத்தைப் பற்றி முழுவிபரங்கள் தெரியவில்லை. மாளவியா போன்றோர் மத்தியச் சட்டமன்றத்தில் இதுபற்றிய கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். படுகொலை நடைபெற்ற சூழ்நிலையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பஞ்சாப் படுகொலைபற்றி உடனடியாக விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரியது. அதுமட்டுமல்ல , மோதிலால் நேர, சி.ஆர்.தாஸ் பஸ்லுல் ஹக், அப்பாஸ் தியாப்ஜி, காந்தி, கே.சந்தானம் ஆகியோர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவையும் நியமித்தது அந்த காங்கசிரஸ் விசாரணைக்குழு பஞ்சாப் படுகொலை பற்றிய பல திடுக்கிடக்கூடிய தகவல்களைத் தந்தது. அதோடு ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். வைசிராய் மைக்கேல் ஓட்வியர், தளபதி டயர் போன்றோர் பதவி விலக வேண்டும் சம்பந்தப்பட்ட தள அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும் போன்ற யோசனைகளையும் அக்குழு தெரிவித்தது.

எதிர்ப்ப உருவாவதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு ஓழுங்கின்மை விசாணைக் குழுவை (Disorders Enquiry Committee) நியமித்தது நீதிபதி ஹண்டர் பிரபு (Lord Hunter) அதன் தலைவர், இராணுவச் சட்டத்தினகீழ் பஞ்சாப் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்பற்றி விசாரிப்பதே அக்குழுவின் நோக்கம். 1919 நவம்பர் மாதம் பஞ்சாபுக்கு வந்த அவ்விசாரணைக்குழு, லாகூரில் விசாரணையைத்துவக்கி 1920 மே மாத இறுதியில் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. குழுவிலிருந்த ஆங்கலேயர்களுக்கும், இந்தியர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தமையால் அறிக்கை பெரும்பான்மையினர் அறிக்கை (Majority Report) சிறுபான்மையினர் அறிக்கை (Minority Report) என்று இரு பகுதிகளாக எழுதப்பட்டது.

பெரும்பான்மையினர் அறிக்கை எச்சரிக்கையின்றி சுட்டதற்காகவும் தோட்டாக்கள் தீருமட்டும் சுட்டதற்காகவும, தளபதி ரெஜினால்டு டயரைக் கண்டித்தது. டயரின் சமயோசிதச் செயல் பங்சாபைக் காப்பாற்றியது, மற்றொரு 1857 கிளர்ச்சியைப் போன்ற கொந்தளிப்ப ஏற்படாதவாறு தடுத்தது என்ற வாதத்தை நிராகரித்தது. அதே போன்று மற்றப் பகுதிகளுக்கும் பாடமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பஞ்சாப் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்தையும் அந்த அறிக்கை ஏற்க மறுத்தது. சிறுபான்மையினர் அறிக்கை பஞ்சாப் படுகொலையை 1914ல் பிரான்சிலும், பெல்ஜியத்திலும் நடைபெற்ற கொடுமைகளோடு ஒப்பிட்டுக் காட்டியது. ஜாலியன்வாலா பாக்குக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்து இரு இராணுவ வாகனங்களும் உள்ளே கொண்டு வரப்பட்டிருந்தால் தானியங்கித் துப்பாக்கிகளும் உபயோகப்பட்டிருக்கும் எனக் கூறியாமைக்காவும், காயமுற்றேரைக் கவனியாதுவிட்டமைக்காகவும் தளபதி டயரை இரக்கமற்ற அரக்கன் என்று அந்த அறிக்கை வர்ணித்தது. இரு அறிக்கைகளுமே முகாந்திரமின்றிச் சுட்டதையும், இராணுவச் சட்டநடவடிக்கைகளையும், பிற தண்டனைகளையும் கண்டித்தன. ஹண்டர் அறிக்கை எட்வின் மாண்டேகுவின் பஞ்சாப் நிகழச்சியைப் பற்றிய நீண்ட குறிப்பையும் கொண்டிருந்தது. அக்குறிப்பின் ஊர்ந்துசெல்லும் உத்தரவு நாகரிக

அரசாங்கத்தின் நெறிமுறையை மீறிய செயல் என்று இந்திய விவகாரச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

ஹண்டர் விசாரணைக்குழு அறிக்கையைப் பரிசிலித்து இந்திய அரசாங்கம் பஞ்சாபில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதியது. குறிப்பாக பஞ்சாபில் சிவில் நிர்வாகம் கைவிடப்பட்டது. சரியல்ல என்றும், டயர் ஏப்ரல் 13 அன்று பிறப்பித்து பொதுக்கூடத் தடை உத்தரவை மக்களை எச்சரித்திருக்க வேண்டுமென்று அரசாங்கம் நினைத்தது அதே சமயம் நல்ல நோக்கத்தோடுதான் டயர் செயல்பட்டார். என்ற கருத்தையும் தெரிவித்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் அவை பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் பாதுகாத்தமைக்காக டயரைப் பாராட்டியது! இந்திய விவகாரச் செயலரின் கண்டனத்துக்காளான தளபதி டயர் பதவி விலகினார் (1920 மார்ச் 27) அவருக்க வீரனுக்குரிய மரியாதையுடன் ஆகிலேயர் வழியனுப்பு விழா நடத்தினர். இந்தியாவிலிருந்து ஐரோப்பிய மாதர்கள் டயருக்கு ரூ.20,000 கொண்ட பண முடிப்பையும் வீரவாளையும் பரிசாக் கொடுத்தனர்.

**ரௌலட் சட்டம்**

டாக்டர் கிட்சுலு சத்யபாலைச் சிறையலிட்டது, ஜாலியன் வாலாபாக் படுகொலை, இராணுவச்சட்ட நடவடிக்கைகள், அமிர்தசரஸ் தலைவர்களைத் தண்டித்தது, ஹண்டர் குழுவின் ஒரு சார்பான விசாரணை, காங்கிரஸ் விசாணைக்கு சோதனைகளை உதாசீனப்படுத்தியது. பிரிட்டிஷ் பாராளுமன்றம் டயரைப் பாராட்டியது ஆகியவை காந்தியிடம் மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தின விளைவு? ஒத்துழையாமை இயக்கம்.

1) ரௌலட் சட்டம் ஏன் இருட்டுச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது?

## கிலாபத் இயக்கம், 1919-1922

இந்திய இராணுவம் என்பது மகாத்மா காந்தியின் இராணுவம்தான், இந்தியப் போலீஸ் என்பது மகாத்மா காந்தியின் போலீஸ்தான்.ஒவ்வொரு மனிதனும் காந்தி, மதம், நாடு ஆகியனவற்றின் பக்கம் இருக்கிறான் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

-முகமது அலி.

**கிலாபத் பிரச்சனை**

**‘கலீபா’** என்ற சொல்லின் அடிப்படையில் வந்ததே **‘கிலாபத்’.**கலீபா என்பவர் தீர்க்கதரிசி முகமதுவின் (Prophet Mohammad) வழித்தோன்றல் ஆவார். அவர் முஸ்லீம் உலகத் தலைவராகக் கருதப்பட்டார். இந்திய முஸ்லீம்களும் கலீபாவைத் தங்களது சமயத் தலைவராகவே ஏற்றுக்கொண்டனர். ஆனால் முதல் உலகப்போரில் துருக்கி சுல்தானான கலீபா ஜெர்மனிக்கு ஆதரவாக முஸ்லீம்களுக்குத் துருக்கி சுல்தானை ஆதரிப்பதா அல்லது பிரிட்டனுக்கு அதாவது கிலாபத்தை ஆதரிப்பதென முடிவு செய்தனர். போர் முயற்சிகளில் ஜார்ஜ் (Lloyd George) துருக்கி அனுதாபத்துடன் கவனிக்கப்படுமென்றும், சிறிய ஆசியா (Asia Minor) வில் துருக்கிக்குச் சொந்தமாக உள்ள

புனிதத்தலங்களுக்கு எதிராக எதுவும் செய்யப்பட மாட்டாதெனவும், துருக்கியப் பேரரசு பாதுகாக்கப்படுமென்றும் உறுதி கூறினார் (1916 ஜனவரி 5).அந்த உறுதியை நம்பி இந்திய முஸ்லீம்கள் போர் முயற்சிகளில் இங்கிலாந்துக்கு முழு ஆதரவையும் நல்கினர். ஆனால் போரின் முடிவில் நேசநாடுகளுக்கெதிராகப் போரிட்ட மைய நாடுகளோடு துருக்கியும் தோல்வியுற்றதால் அதன் தலைவரான சுல்தானின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டதோடு துருக்கிப் பேரரசும் துண்டாடப்பட்டது! இதை நம்பிக்கைத் துரோகமாக, செய்நன்றி கொன்ற இங்கிலாந்துக்கெதிராகப் போராடத் தீர்மானித்தனர்.

**கிலாபத் கிளர்ச்சி**

**நோக்கம்**

கிலாபத் கிளர்ச்சியின் நோக்கங்கள் இரண்டு:

1. முதல் உலகப்போர் துவக்கப்பட்டபோது இருந்த நிலையில் துருக்கியப் பேரரசின் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும்;
2. துருக்கி சுல்தானின் ஆட்சி அதிகாரமும் சமயத் தலைமையும் முன்பிருந்தவாறே உறுதி செய்யப்பட வேண்டும். இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்றும் பொருட்டு இந்திய முஸ்லீம்கள் கிலாபத் இயக்கத்தைத் துவக்கினர்.

**அமைப்பு**

அப்வியக்கத்தை வழி நடத்துவதற்கென அகில இந்திய கிலாபத்து குழு (All India khilafat Committee), ஜமாத் அல்உலாமா இ ஹிந்த் (Jamat, al-ulama-e-Hind) ஆகிய இரு அமைப்புகளையும் ஏற்படுத்தினர். முகமது சொட்டாளி (Mahammad Chottani)யைத் தலைவராகக் கொண்ட கிலாபத் குழு பம்பாயில் அமைக்கப்பட்டது (1919 மார்ச் 20).அதன் கிளைகள் இந்தியா முழுவதும் துவக்கப்பட்டன. கிலபாத் பிரச்சனை பற்றி முஸ்லீம்களிடையே பிரச்சாரம் செய்வதும் முஸ்லீம்களின் உணர்ச்சிகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதும் கிலாபத் குழுவின் பொறுப்பாகும். முஸ்லீம் உலாமாக்களிடையே இணைப்பை ஏற்படுத்துவது, இஸ்லாமிய சட்டப்படி தலைமையை உருவாக்குவது முஸ்லீம்களல்லாதாரோடு தொடர்பு கொள்வது, இந்தியாவிலுள்ள முஸ்லீம்களல்லாதாரோடு தொடர்பு கொள்வது, இந்தியாவிலுள்ள முஸ்லீம்களல்லாதாரோடு நட்புறவை வளர்த்தல் ஆகியவை ஜமாத்தின் கடமைகளாகும். சுருங்கக்கூறின் கிலாபத் குழுவும், ஜமாத்தும் கிலாபத் இயக்கத்தின் அரசியல், சமயக் கரங்களாக பயன்பட்டன.

**கிலாபத் மாநாடு**

முதல் கிலாபத் மாநாடு 1919 செப்டம்பர் 21 ஆம் நாள் லக்னோவில் நடைபெற்றது. அதில் இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்தும் வந்த 400 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அலி சகோதரர்களும் - முகமது அலி, ஷவுக்கத் அலி – மௌலானா அபுல்கலாம் ஆசாத்தும் அம்மாட்டில் முக்கியப் பங்கேற்றனர். கிலாபத் இயக்த்தைக் காந்தி முழுமனதுடன் ஆதரித்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அடிப்பையில்தான் இந்திய சுயராஜ்யத்தை அடைய முடியும், அடைய வேண்டும் என்று உறுதியாக நம்பிய அவர் அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அரிய வாய்ப்பாக கிலாபத் இயக்கத்தைக்க

கருதினார். அக்டோபர் 17ஆம் நாளைக் கிலாபத் தினமாக (khilafat Day) நாடு முழுவதும் கொண்டாடப்பட வேண்டுடிமன்று கிலாபத் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின் அலி சகோதரர்களும் காந்தியும் பிரச்சார பிரயாணத்தை மேற்கொண்டு கிலாபத் தினத்தை அனுசரிப்பதற்கு ஆதரவு திரட்டினர்.

## கிலாபத் தினம்

கிலாபத் மாநாட்டில் முடிவு செய்தவாறு அக்டோபர் 17ஆம் நாளன்று நாடு முழுவதிலும் கிலாபத் தினம் அமைதியாக யார்மீதும் எவ்விதக் காட்டாயமுமின்றி உண்ணாநோன்பிருந்து பிரார்த்தனைக் கூட்டத்தோடு தக்க முன்னேற்பாட்டுடன் அர்த்தால் செய்து கொண்டாடப்படல் வேண்டுமென டாக்டர் அன்சாரி (னுச.யுளெயசை) இநதிய முஸ்லீம்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதேபோன்று வேண்டுகொள்ளை இந்துகளுக்கு காந்தி விடுத்தார். குிலாபத் தினத்தன்று பூரண அரித்தால் அனுசரிக்கப்பட வேண்டுமென ஹஸ்ரத் மொஹானி (Hasrat Hohani) கேட்டுக் கொண்டார்.

தலைவர்கள் விடுத்த வேண்டுகோளின்படி கிலாபத் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பம்பாய் முஸ்லீம்கள் நடத்திய சிறப்பு வழிபாட்டில் காடந்தி கலந்து கொண்டார். கிலாபத் தலைவர்களோடு சேர்ந்து பொதுக்கூட்டத்தில் பேசினார். லக்னோ உடன்பாட்டின் (1916) முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு நினைவூட்டப் பெற்றது. சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் 20,000க்கும் மேற்பட்ட இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து கொண்டனர். கல்கத்தாவிலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக இருந்த பிற பகுதிகளிலும் கிலாபத் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. டில்லியில் 50,000க்கு மேற்பட்டோர் கலந்துகொண்ட கூட்டத்தில் டாக்டர் அன்சாரி, மப்டி சுபாயத்துல்லா, ஆசப்அலி, சுவாமி சிரத்தானந்தா ஆகியோர் உரையாற்றினார். சிந்துவில் தலத்தலைவர்கள் கிராமங்களில் இங்கிலாந்திற்கெதிரான கண்டனக் கூட்டங்களை நடத்தினர். எல்லா இடங்களிலும் முஸ்லீம்களே பெரும்பான்மையாகக் கலந்துகொண்டாலும் கூட கிலாபத் தினம் முழுவெற்றி பெற்றது என்றே கூற வேண்டும்.

## கிலாபத் தூதுக்குழு

டில்லியில் கூடிய இரண்டாவது கிலாபத் மாநாடு (நவ.23,24) கிலாபத் இயக்கத்திற்கனா செயல்த்திட்டத்தைத் தீர்மானித்தது. அதன்படி டிசம்பர் மாதம அரசாங்கம் நடத்தவிருந்த வெற்றி விழாக் கொண்டாட்டத்தைப் புறக்கணிப்பதென்றும், அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில்லையென்றும் விதேசிப் பொருள்களைப் புறக்கணிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டின் இரண்டாம் நாள் கூட்டத் தலைவராகக் காந்தி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுவாமி சிரத்தானந்தா, மாளவியா, நேரு போன்றோரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டானர். கிலாபத் இயக்கத்துக்கு இந்துக்களின் முழுஆதரவுண்டு எனக் காந்தி பேசினார். டிசம்பர் மாதம் காங்கிரஸ், முஸ்லீம் லீக், கிலாபத் குழு ஆகிய மூன்று அமைப்புகளும் கிலாபத் இயக்கத்துக்குத் தங்களது ஒருமித்த ஆதரவைத் தெரிவிப்பதற்காக கூடின இங்கிலாந்து, அமெரிக்கா, கான்ஸ்டான்டிநோபிள் ஆகிய நாடுகளுக்குக் கிலாபத் தூதுக் குழுக்களை அனுப்புவதென்றும் பத்து இலட்சம் ரூபாய் கிலாபத் நிதி திரட்டுவதென்றும், கிலாபத் அமைப்பை விரிவுப்படுத்துவதென்றும் கிலாபத் குழு முடிவு செய்தது.

கிலாபத் குழு மேற்கொண்ட முடிவின்படி அலி சகோதரர்களும் பிறரும் இங்கிலாந்து சென்றனர் (1920 பிப்) அங்கு மாண்டேகுவின் துணைச் செயலாரான எச்.எல்.பிஷருடன் அத்தூதுக் குழு கிலாபத் பிரச்சனை பற்றி விவாதித்தது (மார்ச் 2) தூதுக்குழுவினர் பிரதமர் லாயிட் ஜார்னஜயும் சந்தித்துப் பேசினர் (மார்ச் 17) பின்னர் தூதுக்குழு பாரீஸ் சென்றது. அங்க அமைதி மாநாட்டுக்கு (Peace Conference)வந்திருந்த பிரதிநிதிகளிடம் கிலாபத் பற்றித் தூதுக்குழுவினர் எடுத்துக் கூறினர். அதிகாரிகளுடன் விவாதித்தனர். பொதுக் கூட்டங்களில் பேசினர். பிறகு ரோமாபுரிக்க(Rome)ச் சென்று போப் பாண்டவரைச் சந்தித்து உரையாடினார். இவ்வளவுக்கும் பிறகு வெளியான செவ்ரஸ் உடன்படிக்கை (Treaty of Sevres) யும் (1920 மே) அதைத் துருக்கி ஏற்றுக் கொண்டது (ஆகஸ்டு 20) கிலாபத் தூத்துக்குழுவுக்குப் பேரிடியாக இருந்தது. அவர்கள் வெறுங்கையோடு ஊர் திரும்பினர்.

**கிலாபத் இயக்கம்**

கிலாபத் தூதுக்குழு இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சமயத்தில் இந்தியாவில் கிலாபத் இயக்கம் திக்குத் தெரியாது சென்று கொண்டிருந்து. சமயத்தில் இந்தியாவில் கிலாபத் இயக்கம் திக்குத் தெரியாது சென்று கொண்டிருந்தது. கிலாபத் மாநாடு பம்பாயில் கூடி (1920 பிப்ரவர்)கிலாபத் அறிக்கை (Khilafat Manifesto) யையும் கிலாபத் குழுக்கான அரசியல் அமைப்பை (Constitutionfor the Khilafat Committee) யும் வெளியிட்டது. வங்காள மாநில கிலாபத் குழு கல்கத்தாவில் கூடி (பிப்.28,29) மார்ச் 19ஆம் நாளைக் கிலாபத் தினமாகக் கொண்டாடுவதென அறிவித்தது. காந்தி தனது அகிம்சைத் தத்துவத்தையும் ஒத்துழையாமைத் திட்டத்தையும் உள்ளடக்கிய அறிக்கையை (புயனொாதைெ'ள ஆயமைகைநளவழ) வெளியிட்டார் (மார்ச 10), (மார்ச் 10), மார்ச் 19 அன்று இந்தியாவின் பெரிய நகரங்களியெல்லாம் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்டது. பொதுக்கூட்டங்கள், சிறப்பு வழிபாடுகள், வேலைநிறுத்தங்கள் ஆகியவை அன்று நடத்தப்பட்டன. மீரட்டில் நடைபெற்ற ஐக்கிய மாகாண கிலாபத் குழுக்கூட்டத்தில் காந்தி ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அதாவது இந்துக்களும் முஸ்லீம்களும் டில்லியில்சுடி ஒரு நான்கு அம்ச ஒத்துழையாமைத் திட்டத்தை முடிவு செய்திருப்பதாக அறிவித்தார். கவுரவப் பட்டங்களைத் துறத்தல், அரசாங்கப் பணியிலிருந்து விலகல், போலீஸ் இராணுவப் பணியிருந்து விலகல், வரிகொடாமை ஆகியவையே அந்த நான்கம்ச ஒத்துழையாமைத் திட்டமாகும்.

பஞ்சாப் படுகொலை பற்றிய ஹாண்டர் குழு அறிக்கை வெளியானதும் காந்தி அதை உடும்புப்பிரியாகப் பிடித்துக் கொண்டு அதோடு கிலாபத் பிரச்சனையும் சேர்த்துக்கொண்டு தனது ஒத்துழையாமை இயக்கத்தை (Non-Cooperation Movement) வலுப்படுத்தத் துவங்கினார். முஸ்லீம்களின் கிலாபத் கோரிக்கைகளுக்கு காந்தி காட்டிய அனுதாபத்திற்கு இந்துக்களிடையே போதிய ஆதரவின்மையால்தான் அவர் ஆங்கிலேய அரசாங்கத்துக் கெதிரான ஒத்துழையாமை இயக்கத்தைத் தனியே துவக்கினார் என்று ஜெயில் மீனால்ட் (Gail Minault) என்ற கிலாபத் இயக்க ஆராய்ச்சியாளர் கருகிறார். கிலாபத் குழு ஏற்பாடு செய்த பம்பாய்க் கூட்டத்தில் கலந்து கொணடுபேசிய காந்தி அகிம்சை வழியல் ஒத்துழையாமைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமை பற்றி உணர்ச்சியோடு பேசினார். அகில இந்திய கிலாபத் குழு நியமித்த “ஒத்துழையாமைக் குழு” ஒரு அறிக்கையை வெளியிட்டது.

(ஜீன்2). அதில் ஆகஸ்டு முதல் தேதியன்று ஒத்துழையாமை இயக்கத்தைக் துவக்குவதற்கான செயல்திட்டத்தை அறிவித்தது. கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் சிறப்புக்கூட்டம் (செப் 4-6) காந்தி கொண்டு வந்த ஒத்துழையாமைத் தீர்மானத்தை அங்கீகரித்தது. அதன்பின் முஸ்லீம் துவக்கிய கிலாபத் இயக்கமும், காந்தி துவக்கிய ஒத்துழையாமை இயக்கமும் ஒன்றாக இணைந்து ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான பொதுப் போராட்டமாயிற்று. அப்பொதுப் போராட்டம் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. கிலாபத் குழுவுமட்ட, காங்கிரஸ் காந்தி காட்டிய வழியில் செயல்பட்டன.

**கிலாபத் இயக்கத்தின் தோல்வி**

காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தோடு கிலாபத் இயக்கமும் வேகமாக வளர்ந்தது. ஆனால் சௌரிசௌரா சம்பத்தையடுத்து காந்தி தனது ஒத்துழையாமை இயக்கத்தைத் திடீரென நிறுத்தியவுடன் (1922 பிப்ரவரி 12) கிலாபத் இயக்கம் வலுவிழந்தது. வலுவழந்த நிலையிலும் அவ்வியக்கம் தொடர்நதது. ஆயினும் துருக்கிய ஆட்சியை முஸ்தபா கமால் பாட்சா கைபற்றியவுடன் துருக்கிய சுல்தானின் முடியாட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. துருக்கி குடியரசாயிற்று. கிலாபத் பதவி நீக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் கிலாபத் இயக்கத்தின் அடிப்படையையே தகர்த்தெறிந்துவிட்டன. கிலாபத் இயக்கம் தோல்வியுற்றது. கிலாபத் தலைவர்கள் சேசிய முஸ்லீம்கள் என்றும், கிலாபத் முஸ்லீம்கள் என்றும் இரு பகுதியினராகப் பிரிந்தனர். டாக்டர் அன்சாரி, அபுல்கலாம் ஆசாத், ஹகிம் அஜ்மல்கான் யாகூப்ஹாசன் போன்ற தேசிய முஸ்லீம்கள் காங்கிரசுடன் இணைந்தனர். அலி சகோதர்களும் பிறரும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கி மறைந்தனர்.

1) கிலாபத் இயக்கம் ஏன் தொடங்கப்பட்டது?

# அலகு - IV

## ஒத்துழையாமை இயக்கம், 1920-22

ஒத்துழையாமை இயக்கம் மக்களை புதிய நம்பிக்கையோடு புதிய எதிர்பார்ப்போடு சுதந்திரத்துக்ககாகப் போராடும் ஆற்றலைப் பெறுவதற்கான புனித துவக்கமாகும்.

**-ஆர்.சி. மசூம்தார்**

### ஒத்துழையாமைத் தீர்மானம்

1918 மார்ச் மாதத்திலேயே பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிரான இந்திய முஸ்லீம்களின் மனக்கசப்பில் இந்திய சுராஜ்யத்துக்கான திறவுகோலைக் கண்டார் காந்தி என்று ஜெயில் மினால்ட் (Gail Minault) குறிப்பிட்டுள்ளார். இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உறுதி செய்து கொண்டு ஆங்கிலேயே ஆட்சியோடு மோத வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் காந்தி கிலாபத் இயக்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார். அதற்கு பிரதிபலனாக முஸ்லீம்கள் காந்தி இயக்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார். அதற்கு பிரதிபலனாக முஸ்லீம்கள் காந்தி துவக்கிய ரௌட் சத்தியாககிரகத்துக்கு ஆதரவளித்தனர். 1920 மார்ச் 10ஆம் நாள் கிலாபத் மாநாடு பிப்னப்றறுவதற்கான செயல்திட்டம் பற்றிய அறிக்கையை (Gandhiji's Manigfesto) வெளியிட்டார் காந்தி. அந்த அறிகையில்தான் காந்தி முதன்முதலாகத் தனது ஒத்துழையாமை இயக்கம் பற்றிய திட்டத்தை விரிவாகக் கூறியதாக பி.பட்டாபி சீத்தாராமையா கருதுகிறார். காந்தியின் அறிக்கையின் அடிப்படையில்தான் கிலாபத் மாநாட நியமித்த குழு ஒத்துழையாமைத் திட்டத்தைப் பற்றிய தனத அறிக்கையைச் சமர்ப்பித்தது (1920 ஜீன் 2).அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி ஒத்துழையாமைத் திட்டம் ஆகஸ்டு முதல் தேதியன்று செயல்படுத்தப்பட்டது. அந்த முக்கியத் திட்டத்தைப்பற்றி முடிவெடுக்க லாலா லஜபதிராய் தலைமையில் சிறப்பு காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது (செப்.4-9). அக்கூட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்ததைப் பற்றிய தீர்மானத்தைத் காந்தி முன்மொழிய டாக்டர் கிட்சுலு வழிமொழிய மோதிலால் நேருவும், அலி சகோதரர்களும் ஆதரித்தனர். சி.ஆர்.தாஸ், பி.சி.பால், எம்.எம்.மாளவியா போன்றோர் அத்தீர்மானத்தைத் கடுமையாக எதிர்த்தனர். எனினும் ஒத்துழையாமைத் தீர்மானம் 1855க்கு 873 என்ற வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. சிறப்பு காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தை நாகபுரி காங்கரஸ் (1920 டிசம்பர்) அங்கீகரித்தது. நாகபுரியில் கூடிய காங்கிரசில் தான் காங்கரிரஸ்ன் அரசியலமைப்பு திருத்தப்பட்டு அதன் குறிக்கோள் தெளிவாக்கப்பட்டு மக்கள் அமைப்பாக மாற்றப்பட்டது. நாகபுரி காங்கிரசில்தான் அரசியல் விடுதலைக்கான அகில இந்திய ஒத்துழையாமை இயக்கதின் தன்னிகரற்ற தலைவராக காந்தி அங்கீகரிக்கப்பட்டார்.

### இயக்கத் திட்டம்

1920 மார்ச் 10ஆம் நாள் வெளியிடப்பட்ட காந்தியின் அறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் நாகபுரி காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒத்துழையாமைத் தீர்மானம்.அத்தீர்மானம் இரண்டு அம்ச ஒத்துழையாமைத் திட்டத்தை அங்கீகரித்தது; ஒன்று எதிர்மறை (Negative)த் திட்டம்; மற்றது உடன்பாட்டு (Positive)த் திட்டம். சட்டமன்ற, நீதிமன்ற கல்வி நிலைய, போலீஸ், இராணுவப் புறக்கணிப்பு, விதேசிப் பொருள் விலக்கம், வரி

கொடாமை ஆகியவை எதிர்மறைத் திட்டத்தில் அடங்கும். சுதேசி, கதர் நூற்றல், நெய்தலை ஊக்குவித்தல், தீண்டாமை நீக்கம் மூலம் சமுதாயச் சமத்துவம், இந்து-முஸ்லீம் ஒற்றுமை ஆகியவை உடன்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.

**சட்டமன்றப் புறக்கணிப்பு**

இந்தியச் சட்டமன்றங்களை களங்கப்பட்ட அமைப்புகளாகக் கருதினார் காந்தி. அவை அரசியல் தூய்மையைக் கெடுப்பதாகக் கருதினார் அவர். எனவே சட்டமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1920 நவம்பரில் நடக்கவிருந்த சட்டமன்றத் தேர்தலையொட்டி ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டதால் அமேட்சகர்கள் போட்டியிட வேண்டாம் என்றும், போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் போட்டி பிரச்சாரம் செய்யப்பட்டது. காங்கிரஸ் கிலாபத் தலைவர்கள் சட்டமன்ற
பிரச்சாரம் செய்யப்பட்டது. காங்கிரஸ் கிலாபத் தலைவர்கள் சட்டமன்ற
புறக்கணிப்புக்கு ஆதரவாக சூறாவளிச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டனர். பஞ்சாப், பம்பாய், பீகார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றில் சட்டமன்றப் புறக்கணிப்பு நல்ல பயனைத் தந்தது. சில இடங்களில் வாக்குப்பெட்டிகள் காலியாகவே இருந்தன. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்டுபாட்டை மீறி மிதவாதிகளும், லிபரல் கட்சியினரும் போட்டியிட்டனர். ஒரு சில இடங்களைத் தவிர சட்டமன்றப் புறக்கணிப்பு முழு வெற்றியைத் தந்ததாகக் கூறியுள்ளளார். ஜே.பி.கிருபளானி.

**நீதிமன்றப புறக்கணிப்பு**

நீதிமன்றங்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எச்சங்களாகவும், சீர்கேட்டின் சதுப்பு நிலங்களாகவும் கருதினார் காந்தி. நீதிமன்றங்களை புறக்கணித்து, மக்களின் வழக்குகளைப் பஞ்சாயத்து மன்றங்களின்மூலம் தீர்த்துக் கொண்டால் ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்களில் ஒன்று வீழ்ந்துவிடும் என்று எண்ணினார் அவர். அதன்படி நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் தங்களது தொழிலைத் துறந்தனர். தமிழ்நாட்டில் வக்கீல் தொழிலை விட்டவர்கள் தான் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். எஸ்.கோபாலகிஷ்ணன். புகழ்பெற்ற பிரபல வழக்கறிஞர்களாகத் திகழ்ந்த லாலா லஜபதிராய், சி.ராஜகோபாலாச்சாரி, டி.பிரகாசம் போன்றோர் அதிக வருவாய் தரக்கூடிய வக்கீல் தொழிலைவிட்டு நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். வக்கீல் வேலையை விட்டதால் துன்புறுவோருக்கு உதவ சேத் ஜம்னாலால் பஜாத் நிதி சேர்த்துக் கொடுத்தார். பல வழக்குகள் பஞ்சாயத்து நீதிமன்றங்களில் தீர்த்துக் கொள்ளப்பட்டன. ஆரசாங்கத்தின் முத்திரை வருவாய் (Income from Stamps) கணிசமாகக் குறைந்தது.

**கல்விக்கூடப் புறக்கணிப்பு**

அரசாங்கக் கல்விக் கூடங்களில் கல்வி கற்பது பாவம் எனக் கருதினார் காந்தி. ஆங்கிலக் கல்வி நஞ்சு கலந்த பால் போன்றது என்று வர்ணித்தார் அவர். காந்தியின் கட்டளைக்கிணங்க அலிகார் எம்.எ.ஒ.கல்லூரி விட்டு வெளியேறினர். புல அரசாங்கப பள்ளிகள் மூடிக்கிடந்தன. காசி இந்து பல்கலைக் கழகம் மாணவர்களின் வேலை நிறுத்தத்தால் செயலிழந்தது. வங்காளத்தில் அனைத்து அரசாங்கக் கல்விக் கூடங்களும் மூடப்படுவதற்கு சி.ஆர்.தாஸ், அபுல் கலாம் ஆசாத் போன்றோர்களின் பிரச்சாரம் காரணமாயிருந்தது. நான்கு மாதங்களுக்குள் அலிகார் தேசிய முஸ்லீம் பல்கலைக் கழகம், குஜராத் வித்யாபீத், பீஹார் வித்யாபீத், காசி வித்யாபீத்,

வங்காள தேசியப் பல்கலைக் கழகம், திலகர் மகாராஷ்டிரா வித்யாபீத் மற்றும் நூற்றுக்கணக்கான தேசியப்பள்ளிகளும் நாடெங்கும் துவங்ககப்பட்டன.

### விதேசித் துணிப் புறக்கணிப்பு

வெளிநாட்டுத் துணியைத் தொட்டாலே தீட்டுப்பட்டு விடும் எனக் கருதியவர் காந்தி. இந்தியத் துணித் தொழில் நசிந்து போனதற்குத் காரணமே மேலைநாட்டுத் துணி இறக்குமதியேயாகும். எனவே விதேசித் துணியைக் கொளுத்துவதன் மூலம் எதிர்ப்பபைக் கூறுவதற்கான நாளும் குறிப்பிடப்பட்டது. பம்பாயில் நடைபெற்ற சொக்கப் பனையில் (Bonfie) காந்தியும் கலந்து கொண்டார். அலகாபாத்தில் ஜவகர்லால் நேருவின் தூண்டுதலால் அந்நியத் துணியை வாங்குவதில்லையெனத் துணி வியாபாரிகள் சபதமெடுத்தனர். விதேதி துணிப் புறக்கணிப்பை வெற்றிகரமாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கென 'வியாபாரி மண்டல' எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. வங்காளத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் விதேசித் துணி விற்பனை செய்யும் கடைகளைக் காங்கிரஸ்காரர்களும், கிலாபத் தொண்டர்களும் மறியல் செய்தனர். தமிழ்நாட்டில் பல இடங்களில் துணி வியாபாரிகளே அந்நியத் துணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தனர்.

### போலீஸ் இராணுவப் புறக்கணிப்பு

புறக்கணிப்புப் போராட்டத்திலேலே மிகவும் தீவிரமானதெனக் கருதப்பட்டது. போலீஸ், இராணுவப் பணிப் புறக்கணிப்பேயாகும். ஒத்துழையாமைத் திட்டத்தில் இதுபற்றிக் தெளிவாகக் கூறப்படவில்லையாயினும் காந்தி உரிய நேரத்தில் விளக்கமும் செயல் திட்டமும் தருவார் என எதிர்பார்க்கபபட்டது. காந்தியும் காங்கிரசும் இதுபற்றித் தயங்கிக் கொண்டிருந்த போது கிலாபத் முஸ்லீம்கள் தீவிரமாகச் செயல்பட்டனர். அவர்கள் போலீஸ், இராணுவப் பணித் துறப்பில் குறியாக இருந்தனர். இராணுவத்தில் பணிபுரிவதோ அல்லது பட்டாளத்துக்கு ஆளச் சேர்க்க உதவி செய்வதோ இஸ்லாமிய நம்பிக்கைக்கும், சட்டத்திற்கும் விரோதமானதென்று 1921 ஜுலை மாதம் அகில இந்திய கிலாபத் குழு அறிவித்தது. இராணுவத்தில் பணிபுரியும் முஸ்லீம்கள் இஸ்ஸாமிய சட்டங்களை மீறியவர்களாவர் என சமயக் கட்டளையும் (Fatwa) பிறப்பிக்கப்பட்டது. இதுபற்றிய முஸ்லீம் இராணுவ வீரர்களிடையே பிரச்சாரம் செய்யும்பொருட்டு அலிகார் பல்கலைக் கழக மாணவர்கள் பஞ்சாபுக்கும் எல்லைப்புறப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இது சம்மந்தமாக அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களை ஆதரித்த காந்தி 'எந்த இந்தியனும் இராணுவத்திலும் அரசுத் துறையிலும் பணியாற்றுவது பாவம்' என்று கூறினார். போலீஸ் படையிலிருந்து குறிப்பாக ஐக்கிய மகாணம், வங்காளம், பம்மபாயில் நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் படையிலிருந்து பல முஸ்லீம்கள் பதவி விலகினர்.

### சுதேசி நிர்மாணத் திட்டம்

இதைச் செய்யக்கூடாதெனக் கட்டளையிட்ட காந்தி இவற்றைச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தத் தவறவில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின்போது சுதேசி நிர்மாணத் திட்டம் தேசம் முழுவதும் பின்பற்றப்பட்டது. வங்கப் பிரிவினையை எதிர்த்து துவக்கப்பட்ட சுதேசி இயக்கத்ததைப் பின்பற்றி காந்தி இந்நிர்மாணத் திட்டத்தைப் பொருளாதார நல நடவடிக்கையாக மட்டும் கொள்ளாமல் சமயக் கடமையாகவும் கருதினார். ராட்டையில் கதர் நூல் நூற்றலும், கதர் நெசவும் மக்களிடையே பரப்பப்பட்டன. கதர்நூல் நூற்பதும், கதராடை அணிவதும் நாட்டுப் பற்றுமிக்க தேசியப்

போராட்ட வீரரின் சின்னமாயிற்று. அரசியல் தொண்டர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் கதர் நூல் நூற்கவும்,கதராடை அணியவும் முற்பட்டனர். கிராமக் குடிசைக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சேர்ந்த திலகர் நிதி, கதர் அபிவிருத்திக்கும், ராட்டை விநியோகத்துக்கும் பயன்படுத்தப்பட்டது. கதரியக்கத்தில் நாற்பது இலட்சம் தொண்டர்களுக்குமேல் சேர்ந்தனர். இலட்சக்கணக்கான ராட்டைகள் விநியோகிக்கப்பட்டன. சுதேசிப் பொருள்களைவிற்பனை செய்வதற்காக 'சுதேசிக் கடைகள்' திறக்கப்பட்டன.

**காந்தியின் இறுதி எச்சரிக்கை**

வேல்ஸ் இளவரசரின் சுற்றுப்பயன் வெற்றியில் நாட்டம் கொண்ட வைசிராய் ரீடிங் பிரபு (Lord Reading) சமாதான முயற்சியை மேற்கொண்டார். கே.என.குன்ஸ்ரு, ஜம்னாதாஸ், துவாரக தாஸ், டெஜ் பகதூர், அன்னிபெசன்ட், மாளவியா போன்றோர் அம்முயற்சியில் ஈடுபட்டனர் அலி சகோதரர்களை விடுவிக்காத வரை எந்த சமரசப்பேச்சிலும் கலந்துகொள்ள காந்தி தயாராயில்லை. சி.சங்கரன் நாயரின் முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டமும் வெற்றி பெறவில்லை. வரிகொடா இயக்கத்தை துவக்குவது பற்றி காந்தி தீவிரமாகத் திட்டமிட்டு வந்தார். அப்போது ஆந்திராவில் கொண்ட வெங்கடப்பையா வரிகொடா இயக்கத்தைத் துவங்கிவிட்டார். அதனால் வன்முறை நிகழ்ச்சிகளும் அதை தொடர்ந்து அடக்கு முறையும் நிகழ்ந்தன. காந்தி கூறிய ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தைப் பெற்றுவிடலாம் என்ற ஆர்வத்தில் மக்கள் கிளர்ச்சி செய்ய மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்ட காந்தி வைசிராய் ரீடிங் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில் இறுதி எச்சரிக்கை விடுத்தார் (1922 பிப்ரவரி1) வைசிராய்க்கு அக்கடிதம் கிடைத்த ஏழு நாட்களுக்குள் ஓத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். கிலாபத் பஞ்சாப் அநீதிகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக் கூடாதென்றும் அரசாங்கம் இவற்றுக்குச் சம்மதிக்காவிடில் பர்தோலியில் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவங்கப் போவதாகவும் எச்சரித்திருந்தார். காந்தியின் எச்சரிக்கைக்கு வைசிராய் செவி சாய்க்கவில்லை. எனவே காந்தி சட்டமறுப்ப இயக்கத்தைத் தொடங்கத் தயாரானார். ஆனால் சௌரி சௌராவில் நடந்த நிகழ்ச்சி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

**சௌரி சௌரா நிகழ்ச்சி**

ஐக்கி மாகாணத்தில் கோரக்பூரிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தூத்திலுள்ள கிராமமே சௌரிசௌரா. அங்கு விதேசிப் பொருள் புறக்கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஒரு போலீஸ்காரர் தொண்டர்கள் சிலரைத் தாக்கிவிட்டார். அதையடுத்து 500 தொண்டர்களும் கிராமத்தார் புடைசூழு காவல் நிலையத்துக்குச் சென்று அதிகாரியை சந்தித்து முறையீட்டனர். சமரசமேற்பட்டு அக்கூட்டத்தினர் திரும்பி வந்து கொண்டிருக்கையில் பின்னால் பெருங்கூக்குரல் எழுந்தது. அமைதியாகத் திரும்பிக் கொண்டிருந்த மக்களைப் போலீசார் மோசமாகத் தாக்கிக் காயப்படுத்தியதாகக் கூறப்பட்டது. கோபமுற்ற கூட்டத்தினர் கல்வீச்சில் ஈடுபட்டனர் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறங்கியது. தோட்டாக்கள் தீர்ந்ததும் போலீஸாரைப் பிடித்துக் காவல் நிலையத்துக்குள் தள்ளித் தீ வைத்து விட்டனர். 12 போலீசாரோடு காவல்நிலையம் தீககிரையாயிற்று! வேல்ஸ் இளவரசரின் பம்பாய் வருகையின்போது வன்முறைக் கலகங்கள் ஏற்பட்ட நான்கு

மாதங்களுக்குள் சௌரிசௌராவில் வெடித்த வன்முறை நிகழ்ச்சி காந்தியைக் கலக்கமுறச் செய்தது.

**போராட்டம் நிறுத்தப்பட்டது**

ஒத்துழையாமை இயக்கம் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்தது அகிம்சைப் போராட்டம் வன்முறை நிகழ்ச்சிகளுக்கு காரணமாய் இருக்கக்கூடாது எனக் கருதினார் காந்தி அகிம்சைப் போராட்டத்துக்குரிய முழுப்பயிற்சியையும் மக்கள் பெறவில்லை. போராட்டத் தலைவர்கள் பலரும் சிறைக்குள் இருந்தனர். வன்முறை நிகழ்ச்சிகளைக் காரணமாகக் கொண்டு அரசாங்கம் அடக்கு முறையைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது மக்களின் உடலுக்கும் உயிருக்கும் ஏற்படக்கூடிய இழப்பை எண்ணிப்பார்த்த காந்தி சிறகைக்கு வெளறியேயிருந்த காங்கிரஸ் தெசய்ற்குழு உறு;ப்பினர்களோடு கலந்துபேசி ஒத்துழையாமைப் போராட்டத்தை நிறுத்தி விட்டார் (1922 பிப்12) மக்களிடையே செல்வாக்கு பெறுவதைப் பெரிதாகக் கருதாது, சமய சந்தர்ப்பத்துக்கேற்ப நடந்துகொண்டு புகழ் பெறுவதைத் தவிர்த்து, கொள்கையே பெரிதெனத் துணிவுடன் செயல்பட்ட காந்தியைப் போன்ற மனிதரை வரலாற்றில் காண்பது மிகவும் அரிது எனக் குறிப்பிட்டுள்ளார் வில் டூரண்ட் (Will Durant) ஒத்துழையாமைப் போராட்டத்தைக் கைவிட்டு சுதேசி நிர்மானத் திட்டத்தை மேற்கொள்ளச் சொன்ன காந்தியை அரசாங்கம் கைது செய்தத (மார்ச் 10). விசாரணையின் போது பம்பாய், சென்னை, சௌரிசௌரா மற்றும் பிற இடங்களில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார் காந்தி. காந்தியின் விரோதிகூட அவரது உயர்ந்த இலட்சியங்களையும், நெறிதவறாத ஒழுக்க நடவடிக்கையையும் பாராட்டுவர் எனக் கூறிய நீதிபதி புளம்பீல்டு (Broomfield) காந்திக்கு ஆறாண்டுகள் சிறை தண்டனை விதித்தார். எனினும் உடல் நலக்குறை வேற்பட்டதால் காந்தி 1924 பிப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

1) ஒத்துழையாமை இயக்கத்தின் போக்கை விவரி?
2) ஒத்துழையாமை இயக்கம் ஏன் தோல்வி அடைந்தது?

## சுயராஜ்யக் கட்சி 1923-1926

**சட்டமன்ற நுழைவு**

வன்முறை நிகழ்ச்சிகளை அடுத்து ஒத்துழையாமை இயக்கம் காந்தியால் நிறுத்தப்பட்டது காந்தியும் பிற தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கபட்டனர். தேசிய இயக்கம் திடீரென நிறுத்தப்பட்டதால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். இறுதியில் சட்டமன்றப் புறக்கணிப்பு பற்றிய காந்தியவாதிகளின் முடியே நிலைத்தது. ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு சிறப்பு அம்சமான சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர்வதென முடிவு செய்யப்பட்டது. எனவே சட்டமன்ற நுழைவுக்காக வாதாடிய சித்தரஞ்சன்தாஸ் தனது காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகிப் புதுக்கட்சியைத் துவக்கினார். சூரத் பிளவுக்குப் பிறகு காங்கிரஸ் இரண்டாவது தடைவ யாக இருகூறாகப் பிரிந்தது. பதிதாக அமைக்கப்பட்ட அமைப்பே சுயராஜ்க் கட்சியாகும்.

## மாற்றம் விரும்பியோரி

காங்கிரசின் கொள்கையான சட்டமன்றப் புறக்கணிப்பில் மாற்றம் வேண்டும் என்று கோரியவர்கள் மாற்றம் விரும்பியோர் (Pro-Changer) என்றழைக்கப்பட்டனர். சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, ஹகிம் அஸ்மல்கான், வித்தல்பாய் ஜே.படேல் ஆகியோர் மாற்றம் விரும்பிய முன்னணித் தலைவர்களாவர். சட்டமன்றங்களைக் கைப்பற்றி அவற்றை இயங்கவிட்டால் செய்து, அரசாங்கத்தைச் செயல்படாது முடக்குவதே மாற்றம் விரும்பியோரின் விழைவாகும்.

## மாற்றம் விரும்பாதோர்

சட்டமன்றப் புறக்கணிப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் மாற்றம் விரும்பாதோர் (No Changers) என்றழைக்கப்பட்டனர். எம்.ஏ.அன்சாரி, இ.கே.ரெங்கசுவாமி அய்யங்கார், சி.ராஜகோபாலாச்சாரி ஆகியோர் மாற்றம் விரும்பாத முன்னணித் தலைவர்களாவர்.

## சுயராஜ்யக் கட்சி

### தோற்றம்

ஒத்துழையாமை இயக்கம் திடீரென விலக்கிக் கொள்ளப்பட்டதன் விளைவே சுயராஜ்யக் கட்சியாகும் அவ்வியக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபோது அலிப்பூர் சிறையிலிருந்து சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு போன்றோர் ஒத்துழையாமை நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட சூனியத்தை நிரப்புவதற்காகச் சட்டமன்ற நுழைவு பற்றி சந்திக்கலாயினர். ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்திற்குள்ளிருந்து கொண்டே நடத்தினாலேன்ன என்று அவர்கள் எண்ணினர். 1922 ஜீலை மாதம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சி.ஆர்.தாஸ் சட்டமன்றங்களைக் கைப்பற்றுவது பற்றிய தனது எண்ணத்தை வெளியிட்டார். அவ்விரண்டு டிசம்பர் மாதம் கயாலில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் தனது தலைமை உரையில் தாஸ் அதுபற்றி தனது தீர்மானமான முடிவை வெளியிட்டார்.

## நோக்கம்

1. எல்லாவித சட்டபூர்வமான சாத்வீக வழிகள் மூலமாகவும் இந்திய மக்கள் சுயராஜ்யத்தைப் பெறல்
2. மத்திய, மாநில சட்டமன்றங்களில் அரசாங்கத்தின் சார்பில் கொண்டு வரப்பட்டும் அனைத்து சட்டமுயற்சிகளையும் முறியடித்தல்.
3. உள்ளாட்சி சுயாட்சி பரவல்முறை: நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் கட்டுப்பாட்டிருந்தல் ஆகியவற்றுக்காகப் பாடுபடுதல்.
4. பொதுமக்களின் நலனுக்காகப் பாடுபடுவதன் மூலம் அரசாங்க அதிகாரம் பாதிக்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்
5. சமதர்மக் கொள்கைக்கும் சுதந்திரத் தனிமனித உணர்ச்சிக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்.
6. இந்தியாவின் இயல்பான சுயமரியதையை வலியுறுத்தி நாட்டின் பெருமையை நிலைநாட்டல்.

**சுயராஜ்யக் கட்சியினரின் சாதனைகள்**

**தேர்தல் அறிக்கை**

1923 அக்டோபர் 14 ஆம் நாள் சுயராஜ்யக் கட்சி தனது தேர்தல் அறிக்கை (Election Manifesto) யை வெளியிட்டது. அவ்வறிக்கையில் சுயராஜ்யக் கட்சி காங்கிரஸ் அங்கமாகவே செயல்படும் என்பது தெளிவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கையும் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்ற பெயரால் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. போலித்தனமானது என்பதையும் அவ்வறிக்கை அம்பலப்படுத்தியது.

**சுயராஜ்யக் கட்சியின் சரிவு**

மூன்றாவது கால சட்டமன்ற நுழைவு முயற்சிக்குப்பின் சுயராஜ்யம் கட்சியின்ர் ஒய்ந்து போய்விட்டனர். அவசரமும், ஆத்திரமும், அனுபவமின்மையும் அவர்களை சட்டமன்ற நுழைவு முயற்சியில் தீவிரமாக ஈடுபடச் செய்தன ஆனால் அனுபவம் அவர்களை அடங்கச் செய்தது சட்டமன்றங்களில் அடிக்கடி அவர்கள் வெளிநடப்புச் செய்ததை அக்கட்சிக்காரர்களே பலர் குறை கூறினர்.

மத்திய மாகாண சட்டமன்ற சுயராஜ்யக் கட்சித் தலைவரான எஸ்.பி.தம்பே கவர்னரின் ஆட்சிக் குழு உறுப்பினரானார். வி.ஜே.படேல் மத்திய சட்ட மன்றத்தின் சபாநாயகராக இருக்க ஒப்புக்கொண்டார். இராணுவத்தை இந்திய மயமாக்குவது பற்றிய பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஸ்கீன் குழு (Skeen Committee) வின் உறுப்பினராக இருக்க மோதிலால் நேரு சம்மதித்தார். சுயராஜ்யக் கட்சியினரிடையே இருந்த கருத்துவேறுபாடு நாகபுரியில் கூடிய அக்கட்சியின் செயற்குழு கூட்டத்தில் (1925 நவ) கருத்துமோதலில் முடிந்தது.

1) சுயராஜ் கட்சியைப் பற்றி விவரி?
2) சுயராஜ்ய கட்சி ஏன் தோல்வி அடைந்தது?

## சைமன் குழு 1927-1929

காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டடிருந்த எஸ்.சீனிவாச ஐய்யங்காரைச் (1926) சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்குமாறு எஸ்.சத்தியாமூர்த்தி கேட்டுக் கொண்டார். திருப்திகரமான தீர்வு காணாதவரை அரசாங்கப் பதவி எதையும் ஏற்பதில்லை என்று கௌகாத்தி காங்கிரஸ் (1926) தன் முடிவை மீண்டும் வலியுறுத்தியது சுயராஜ்யக் கட்சினர் இரட்டை ஆட்சிக்கெதிராகச் சட்ட மன்றத்துக்குள் ஓத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்தக் சூழ்நிலையில் சைமன்குழு (Simon Commission) அமைக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது.

**சைமன்குழு அமைக்கப்படல்**

இந்தியாவில் உருவாகி வந்த அரசியல் சூழ்நிலையைக் கவனித்த பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியர்களது விருப்பத்தை ஓரளவாவது பூர்த்தி செய்ய வேண்டும் என்று விரும்பியது. இங்கிலாந்தில் விரைவாகப் பரவி வந்த

திவிரமாக தொழிலாளர் இயக்கத்தினர் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்க வெண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தனர்.

இத்தகைய சூழ்நிலைகளின் கட்டாயத்தால் 1919 இந்திய அரசாங்கச் சட்டப்படி பத்தாண்டு முடிவில் அமைக்கப்பட வேண்டிய இந்த ராயல் கமிஷன் 1927 நவம்பர் 26 ஆம் தேதியே அமைக்கப்பட்டுவிட்டது.

இக்குழுவின் தலைவராக பிரிட்டிஷ் விபரல் கட்சியைச் சேர்ந்த சர் ஜான் சைமன் (Sir John Simon) நியமிக்கப்பட்டார். அக்குழுவில் மேலும் ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றனர். அவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களே! 1919 சட்டப்படி உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு எவ்வாறு செயல்படுகின்ற தென்பதையும், இரட்டை ஆட்சியின் நிறைகுறைகளைப்பற்றி அறிவதும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் பற்றி தெரிவிப்பதும், அந்நிறுவனங்களுக்கு மேலும் பொறுப்பாட்சியை வழங்குவது விரும்பத்தக்கதா என்பதைப் பற்றிப் பரிந்துரை செய்வதும் இக்குழுவின் நோக்கங்களாகும்.

**சைமன் குழு புறக்கணிப்பு**

சைமன் குழுவில் இந்தியர் எவருக்கும் இடம் கொடுக்காதது இந்தியத் தலைவர்களுக்கு வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் கோபத்தையும் உண்டாக்கிற்று. பிரிட்டிஷ் பிரபுக்கள் அவையின் உறுப்பினரான இந்தியர் கின்ஙா பிரபு (Lord Sinha) கூட இக்குழுவில் இடம் பெறவில்லை.

1927 டிசம்பர் மாதம் சென்னையில் கூடிய காங்கிரஸ் முழுவதும் ஆங்கிலேயர்களைக் கொண்டே அமைக்கப்பட்ட சைமன் குழுவைக் கடுமையாகக் கண்டித்தது.

சென்னை காங்கிரஸ் தான் சைமன் கமிஷன் புறக்கணிப்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சைமன் கமிஷனின் வருகையின்போது மக்கள் அதைப் புறக்கனிக்க வேண்டுமென்றும் அப்புறக்கணிப்புக்குச் சாதகமாக மக்களின் ஆதரவைப் திரட்ட வேண்டுமென்றும், அக்குழுவோடு யாரும் ஒத்துழைக்கலாகாது என்றும் அத்தீர்மானம் கேட்டுக் கொண்டது.

லாகூரில் லாலா லஜபதிராயின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தபோத எவ்வித முகாந்திரமும் இன்றி லாலா போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் (Saundars) என்பவரால் கொடூரமாகத் தாக்கப்பட்டார். அதுவே அவரது மரணத்துக்குக் காரணமாயிற்று (1928 நவ.17) லக்னோவின் ஜவஹர்லால் நேருவும் பிற தொண்டர்களும் போலீஸ்சாரால் தாக்கப்பட்டனர். பாட்னாவில் பலத்த ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது.. சென்னை, டில்லி, லாகூர் லக்னோ, பாட்னா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் தவிரப் பிற இடங்களில் சைமன் குழு அமைதியாகவே சென்று வந்தது. 1929 மார்ச் 31 ஆம் நாள் பம்பாயை விட்டு புறப்பட்டுச் சென்றது சைமன்குழு.

**சைமன் குழு அறிக்கை**

1. இரட்டை ஆட்சிக்கு பதில் (Dyarchy) மாநில சுயாட்சி (Provincial Autonomy) கொண்டுவரப்பட வேண்டும்.
2. மாநில நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர்களுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

3. மாநிலச் சட்ட மன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
4. மாநிலச் சட்ட மன்றத்தில் அரசாங்க சார்புடைய நியமன உறுப்பினர்கள் இருக்கக்கூடாது.
5. முஸ்லீம்களுக்குச் சிறப்பான போதிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
6. உயர்நீதி மன்றங்கள் மத்தி அரசின் கட்டுபாட்டின்கீழ் இருக்க வேண்டும்.
7. மத்தியில் பிரிட்டிஷ் இந்திய பகுதிகளும் மன்னர் மாநிலப் பகுதிகளும் ஒன்றாக இணைந்த கூட்டாட்சி (Federation) ஏற்பட வேண்டும்.
8. புத்தாண்டுகளுக்கொரு முறை அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பர்சீலனை செய்யும் சட்டக் கட்டுப்பாட்டுக்குப் பதில் தேவையானபோது பரிசீலனை செய்வதற்குரிய வகையில் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.
9. இந்தியாவிலிருந்து பர்மாவைத் தனிநாடாகப் பிரித்துவிட வேண்டும்.
10. வடமேற்கு எல்லை மாநிலத்தில் சட்டமன்றம் அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

1) சைமன் குழு ஏன் புறக்கணிக்கப்பட்டது?
2) சைமன் குழுவின் அறிக்கையை விவரி?

## நேரு அறிக்கை

சைமன் குழு நியமிக்கப்பட்டதைப்பற்றி பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் பேசிய இநதிய விவகாரச் செயலாளரான பீரகன் ஹெட்பிரபு இந்தியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு அரசியல் சட்டத்தை உருவாக்கித் தருமாறு கடந்த மூன்றாண்டுகளில் இருமுறை இந்தியத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டதாகவும் அவர்களை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்வதாகவும் அறிவித்தார். அதை இந்தியத் தலைவர்களுக்க விடப்பட்ட சவாலாக ஏற்றுக்கொண்டதன் விளைவேச நேரு அறிக்கையாகும். 1928 மே 19 ஆம் நான் பம்பாயில் கூடிய மூன்றாவது அனைத்துக் கட்சி மாநாட்டில் இந்திய அரசியல் சட்டத்தை எழுதும் பொறுப்பை மோதிலால் நேருவின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைத்தது. இந்த அறிக்கையே நேரு அறிக்கை (Nehru Report) என்றழைக்கப்படுகிறது.

**சிறப்பு அம்சங்கள் :**

**நேருஅறிக்கையில் காணப்பட்ட சிறப்பு அம்சங்களானவன**

1. டொமினியன் அந்தஸ்து உடனடியான குறிக்கோளாகவும், பூரண சுயராஜ்ய இறுதி இலட்சியமாகவும் இருக்க வேண்டும்.
2. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளும் இணைந்த கூட்டாட்சி அரசாங்க முறை (Federation) அமைக்கப்பட வேண்டும்.
3. தனியான வகுப்புவாரித் தேர்தல் தொகுதி முறை நிராகரிக்கப்பட்டது. அதற்குப்பதில் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட கூட்டத் தொகுதி முறை (Joint Electorate) பரிந்துரைக்கப்பட்டது.
4. சிந்து தனி மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும். வடமேற்கு எல்லை மாகாணம், பிற மாநிலங்களுக்குச் சமமாகக் கருதப்படல் வேண்டும்.

5. பத்தொன்பது அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) அங்கீகரிக்கப்பட வேண்டும்.
6. மத்திய சட்டமன்றம் இரு அவைகளை (Bicameral) கொண்டதாயிருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கும் மாநிலகட்கும் போதிய அளவில் பிரதிநித்துவம் கிடைக்கும்.
7. பிரிட்டிஷ் அரசர் வைசிராய், பிரதம மந்திரி மற்றும் ஆறு அமைச்சர்கள் மூலமாக தனது அதிகாரங்களைச் செலுத்துவார். அவர்கள் அனைவரும் அரசியல், சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டங்களுக்கு கட்டுப்பாட்டே செயல்பட வேண்டும்.
8. இந்திய உச்ச நீதிமன்றமே (Supreme Court) இறுதி மேல் முறையீட்டு மன்றமாக இருக்க வேண்டும்.
9. மன்னர் மாநிலங்கள் அனைத்தும் பாராளுமன்ற அதிகார எல்லைக்குட்பட்டே இயங்க வேண்டும். ஒரு மன்னர் மாநிலத்துக்கும் பாராளுமன்ற முடிவுக்குமிடையே சிக்கல் ஏற்பாடுமாயின் அதை உச்ச நீதிமன்றமே தீர்த்து வைக்க வேண்டும்.
10. இந்தியாவின் பாதுகாப்பை ஒரு பாதுகாப்புக் குழு (Defence Committee) கவனித்துக் கொள்ளும்.

1) நேரு அறிக்கையின் சிறப்பு அம்சங்கள் யாவை?

## ஜின்னாவின் 14 அம்சத் திட்டங்கள்

நேரு அறிக்கைப்பற்றி முஸ்லீம்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்க்கும் பொருட்டு ஜின்னா ஒரு முஸ்லீம் அனைத்துக் கட்சிகள் மாநாட்டை டெல்லியில் கூட்டினார் (1928 டிச.31) முஸ்லீம்களின் பல பிரிவினரின் கருத்துக்களை அறிந்து அதன் அடிப்படையில் ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுக்கமாறு அம்மாநாட்டில் ஜின்னா கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி உருவானதுதான் ஜின்னாவின் 14 அம்சத் திட்டமாகும். அத்திட்டத்தில் காணப்பட்ட 14 அம்சங்களாவன.

1. இந்தியாவுக்கு கூடடாட்சி வேண்டும்: எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
2. மாநில சுயாட்சி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். எவ்வித வேறுபாடும் 4டாது.
3. ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையினர்! சட்டமன்றத்திலும் உள்ளாட்சி மன்றங்களிலும் போதிய அளவில் பிரதிநித்துவம் பெற வேண்டும்.
4. மத்தியச் சட்ட மன்றத்தில் மூன்றில் ஒரு பகுதி இடங்கள் முஸ்லீம்களுக்க ஒதுக்கப்பட வேண்டும்.
5. எல்லா வகுப்பாருக்கும் தனித்தொகுதிகளின் அடிப்படையில் பிரதிநித்துவம் வழங்கப்பட வேண்டும்.
6. எல்லைகள் பிரிக்கப்படும்பொழுது பஞ்சாப், வங்காளம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகியவற்றில் முஸ்லீம்களின் பெரும்பான்மை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.
7. அடிப்படை உரிமைகள் அனைத்துச் சமுதாயங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.
8. ஒரு மசோதாவோ அல்லது தீர்மானமோ நிறைவேற்றப்பட வேண்டுமானால் சம்பந்தப்பட்ட சமுதாய உறுப்பினர்களின் நான்கில் மூன்று பகுதியினரின் சம்மதத்தைப் பெற வேண்டும்.

9. சிந்து, பம்பாய் ராஜதானியிலிருந்து பிரிக்கப்படவேண்டும்.
10. சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்போது பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகியவற்றுக்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது எல்லை மாகாணம் ஆகியவற்றுக்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது.
11. அரசுப் பணிகள் அனைத்திலும் முஸ்லீம்களுக்குப் போதிய இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.
12. முஸ்லீம் பண்பாடு, சமயம், கல்வி போன்றவற்றுக்கு அரசாங்க உதவியளித்து, போதிய பாதுகாப்பு கொடுத்து அவற்றைப் போற்றி வளர்க்க வேண்டும்.
13. மத்திய மாநில அமைச்சரவைகளில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதி இடங்களாவது முஸ்லீம்களுக்குக் கிடைக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
14. இந்தியக் கூட்டாட்சியின் உறுப்புக்களின் சம்மதமின்றி எந்த அவசியம் சட்ட மாற்றத்தையும் மேற்கொள்ளக் கூடாது.

1) ஜின்னாவின் 14 அம்சம் திட்டத்தைப் பற்றி விவரி?

## சட்டமறுப்பு இயக்கம்

ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பின்னர் சட்டமறுப்பு இயக்கத்தை (Civil Disobedience Movement) துவக்குவதற்கான சூழ்நிலை உருவாயிற்று. லாகூர் காங்கிரசில் தீர்மானித்தபடி 1930 ஜனவரி 26ஆம் நாள் நாடெங்கிலும் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. அதனால் ஊக்கம்பெற்ற காந்திதனது 11 அம்சக் கோரிக்கையை வெளியிட்டார். அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் மாற்றத்தை வேண்டிய காந்தியின் அக்கோரிக்கைக்க வைசிராய் இர்வின் பிரபு செவிமடுக்காமையால் இறுதிவரை போராட (fight to the finish) முடிவு செய்தார்.

### உப்புச் சத்தியாக்கிரகம்

காங்கிரஸ் செயற்குழு சபர்மதி ஆசிரமத்தில் கூடியது (1930 பிப்ரவரி 14-16)ெ அக்கூட்டத்தில் சட்டமறுப்பு இயக்கத்தைத் தலைமையேற்று நடத்துவதற்கான முழு அதிகாரமும் காந்திக்கு கொடுக்கப்பட்டது. காந்தி ஒப்புச் சட்டத்தை (Salt Tax) மீறிச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தப் போவதாக அறிவித்தார்.

### தண்டி யாத்திரை

1930 மார்ச் 12 ஆம் நாள் 78 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரமச் சீடர்களுடன் சபர்மதியிலிருந்து 385 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து தண்டிக்குப் பாதயாத்திரையாகப் புறப்பட்டார் காந்தி.

காந்தி கடந்து சென்ற கிராமங்களியெல்லாம் அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. நாளுக்குநாள் காந்தியின் பின்னால் சென்ற கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது. கிராம அதிகாரிகள் வேலையைவிட்டு விலகிப் போராட்டத்தில் ஈடுபடலாயினர். 24 நாட்கள் நடைப் பயணத்துக்குப் பின்னர் ஏப்ரல் 5 ஆம் நாள் காலை காந்தி தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் காலை பிரார்த்தனைக்குப் பிறகு உப்பை அள்ளி உப்புச் சட்டத்தைமீறி சத்தியாகிரகத்தைத் துவக்கினார்.

வங்காளத்திலும், குஜராத்திலும் வரிகொடா இயக்கம் துவக்கப்பட்டது. மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும் வீதிகளில் உப்ப விற்றுச் சட்டத்தை மீறினர்.

தமிழ்நாட்டில் சி.ராஜகோபாலாச்சாரியும் நூறு தொண்டர்களும் திருச்சியிலிருந்து வேதாரண்யத்துக்குப் பாதயாத்திரையாகச் சென்று இரண்டு நாள் முகாமிட்டு உப்பு வரிச் சட்டத்தை மீறினர் (1930 ஏப்ரல் 13-28) இவர்கள் வேதாரணயம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் டி.பிரகாசமும் கே.நாகேஸ்வரராவும் மெரீனா கடற்கரையில் உப்புக் காய்ச்சினர் சி.ராஜகோபாலாச்சாரி கைது செய்யப்பட்டார்.

**அர்த்தால்**

உப்புச் சத்தியாக்கரகம் உப்புசப்பற்ற கிளர்ச்சியாகி விடும் என்ற எதிர்பார்த்த அரசாங்கம் போராட்டம் தீவிரமடைந்ததைக் கண்டு கலவரமடைந்தது அடக்குமுறையில் போராட்டத்தை ஒடுக்க முற்பட்டது. 1930 மே 4ஆம் நாள் நள்ளிரவில் காந்தி கைது செய்யப்பட்டு புனாவிலுள்ள ஏரவாடா சிறையிலடைக்கப்பட்டார். காந்தி கைது செய்யப்பட்டதை அறிந்த மக்கள் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடலாயினர். பம்பாயில் முழு அர்த்தால் அனுசரிக்கப்பட்டது.

1) சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றி விவரி?
2) தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தைப் பற்றி விவரி?

## வட்டமேஜை மாநாடுகள்

**காந்தி இர்வின் ஒப்பந்தம்**

நிலைமையின் தீரத்தை உணர்ந்த வைசிராய் இர்வின் பிரவு காந்தியும் பிற காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்படுவர் என்று அறிவித்தார். 1931 ஜீன் 25, அவ்வறிப்பின்படி காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர். காங்கிரஸ் மீது விதிகப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

**காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் காணப்பட்ட முக்கிய விதிளாவன:**

1. அரசியல் சட்ட சீதிருத்தங்கள் பற்றி எல்லைகள் தெளவிகா வரையறுக்கப்படும்.
2. வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
3. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்படும்
4. சுதேசித் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதால் விதேசிப் பொருள் புறக்கணிப்ப கைவிடப்படும்.
5. கள்ளுக்கடை மறியல் அமைதியாக நடைபெறும்
6. போலீஸ் அத்துமீறல் பற்றிய விசாரணை வலியுறுத்தப்பட மாட்டாது.
7. சட்டமறுப்பு இயக்கம்பற்றி அரசாங்கம் பிறப்பித்து ஆணைகள் அனைத்தம் விலக்கிக் கொள்ளப்படும்.
8. குற்றச்சட்டத் திருத்தம் சட்டம் கைவிடப்படும்
9. அரசியல் வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படும்

10. சட்டமறுப்பு இயக்கம் சம்பந்மாகக் கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுதலை செய்யப்படுவர்.
11. அபராதத் தொகை வசூலிக்கப்பட மாட்டாது.
12. ஆர்ப்பாட்டக்காரர்களை தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்ட போலீசார் விலக்கிக் கொள்ளப்படுவர்.
13. கைப்பற்றப்பட்ட நகரும் சொத்துக்களும் திருப்பியளிக்கப்படும்.
14. பிற நகராட்சி சொத்துக்களும் திரும்ப வழங்கப்படும்.
15. பதவியைத் துறந்தோர் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படும்.
16. உப்பு வரிச்சட்டம் விளக்கிக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் கடலோரப்பகுதி மக்கள் வீட்டுத் தேவைக்கான உப்பை உற்பத்தி செய்து கொள்ளலாம்.
17. இந்த ஒப்பந்தத்தைத் காங்கிரஸ் கடைபிடிக்கத் தவறினால் பொது மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கலாம்.

காந்தி இர்வின் ஒப்பந்தம் பரஸ்பர நம்பிக்கையின் மீது செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்பாடாகும். முதன்முறையாக ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசைத் தன்ககு சமமாக மதித்த, அதன் பிரதிநிதியான காந்தியுடன் செய்து கொண்ட சமரச உடன்படிக்கையாகும்.

இந்திய அரசியல் சட்ட வளர்ச்சி வரலாற்றில் இவ்வொப்பந்தம் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக அரசாங்க அடக்குமுறை தற்காலிகமாக நின்றது. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் போராடுவதற்கான புதுப்பலம் பெற்றது. காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

காந்தி இர்வின் ஒப்பந்தத்துக்குப் பரவலான வரவேற்பு இருந்தபோதிலும் ஜவஹர்லால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்கள் இவ்வுடன்பாட்டால் இந்தியாவின் மீது இங்கிலாந்துக்கிருந்த கட்டுப்பாடு எவ்வகையிலும் குறையவில்லை என்று குறை கூறினர்.

கராச்சியில் கூடிய காங்கிரஸ் 1931 மார்ச்ச காந்தி இர்வி ஒப்பந்தத்தை அங்கீகரித்தது, அதுமட்டுமல்ல காந்தியைத் தனது ஏகப்பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பி வைத்தது காங்கிரஸ்

**இரண்டாவது வட்டமேஜை மாநாடு 1931**

இரண்டாவது வட்ட மேஜை மாநாடு 1931 செப்டம்பர் 7 லிருந்து டிசம்பர் 7 வரை நடைபெற்றது. மாநாடு துவங்கி ஐந்து நாட்களுக்குப் பிறகு செப் 12 காந்தி கலந்து கொண்டார். மொத்தம் 107 பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பங்கேற்றனர். பிரிட்டிஷ் பிரமர் தலைமையேற்றார் இந்தியாவில் வருங்கால அரசியல் சட்ட அமைப்பும் சிறுபான்மையினரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பிரதானமாக விவாதிக்கப்பட்டது.

அம்பேத்காரும், ஜீன்னாவும் தனித்தொகுதித் திட்டத்தை ஆதரித்தனர். இந்தியத் தலைவர்களுக்கிடையே இதுபற்றிய கரத்துடன்பாடு இன்மையால் சிறுவான்மையனரக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்புகள் பற்றி பிரிட்டிஷ் அரசாங்மே முடிவு செய்யும் என்று அறிவித்தார் பிரதமர் ராம்சே மர்டொனால்டு அதன் விளைவே வகுப்பு தீர்வு (Communal Award) ஆகும் தனது மகத்தான

முயற்சியில் தோல்விகண்ட காந்தி தோல்வியை ஏற்றுக்கொண்டு வெறுங்கையோடு இந்தியா திரும்பினார்.

## மீண்டும் போராட்டம்

இர்வின் பிரபுவுக்குப் பின் வைசிராயாக வந்த விலிங்டன் பிரபு (Lord Willington 1931-36) காந்தி - இர்வின் ஒப்பந்தத்தைக் கைவிட்டார் அடக்குமுறையைக் கையாண்டார். ஐக்கி மாகாணத்தில் வரிகொடாக கிளர்ச்சியில் ஈடுபட்ட நேரு. ஷெர்வானி, புருஷோத்தம்தாஸ், தாண்டன் போன்றோர் கைது செய்யப்பட்டனர். வங்காளத்தில் சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் கடுமையாக அடக்கப்பட்டன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான்அப்துல் கபார்கான் கமிஷனர் நடத்திய தர்பாரில் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக கைது செய்யப்பட்டார்! அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த அவரது தொண்டர்கள் மிருகத்தனமாகத் தர்க்கப்பட்டனர். ஈவிரக்கமின்றிச் சுடப்பட்டனர். இவையாவும் காந்தி லண்டனில் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டிருந்தபோது நிகழந்தவையாகும்.

காந்தி இந்தியா திரும்பியவுடன் (1931 டிசம்பர் 28) இந்தியாவில் நடந்த அத்துமீறல்கள் பற்றி அறிந்தார்.

காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் துவக்கத் தீர்மானித்தார். 1932 ஜனவரி 3ஆம் நாள் போராட்டம் திரும்பவும் துவக்கப்பட்டது. அரசாங்கம் நான்கு நெருக்கடிச் சட்டங்களைப் பிறப்பித்துப் போராட்டத்தை அடக்கத் துணிந்தது. போராட்டம் புதுப்பிக்கப்பட்ட மறுநாளே (ஜன 4) காந்தி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையிலடைக்கப்பட்டார்.

## வகுப்புவாரித் தீர்வு

இந்தியாவில் சட்டமறுப்ப இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு தனது வகுப்புவாரித் தீர்வை (Communal Award) 1932 ஆகஸ்டு 17 ஆம் நாள் அறிவித்தார். இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றி இந்தியத் தலைவர்கள் ஒருமுடிவுக்கு வரமுடியாமையால் பிரிட்டிஷ் பிரதமர் தன்னிசையாக இத்தீர்வை வழங்கினார். அவ்வகுப்புவாரித் தீர்வின்படி.

1. முஸ்லீமகள், இந்தியாவிலுள்ள ஐரோப்பியர், சீக்கியர்கள் ஆகியோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்.
2. தனித்தொகுதிகள் இடம்பெறாத பிற தகுதியுடைய வாக்காளர்கள் பொதுத் தொகுதியில் வாக்களிப்பர்.
3. பம்பாயில் பலவகை உறுப்பினர் தொகுதிகள் (Plural Member Constituencies) சிலவற்றில் மராத்தியர்களுக்கென ஏழு இடங்கள் ஒதுக்கப்படும்.
4. தாழத்தப்பட்டோருக்கான (னுநிசநளளநன ஊடயளளநள) தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்.
5. ஆங்கிலோ - இந்தியர்கள் தங்களது வகுப்புவாரியாகவே வாக்களிப்பர்.
6. வர்த்தகம், தொழில், தோட்டத்தொழில் ஆகியவற்றுக்குப் பிரதியேகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு வழங்கிய வகுப்புத் தீர்வு இந்திய சமுதாயங்களுக்கிடையே புகுத்தப்பட்ட வெறுப்புத் தீர்வாகும்.

## பூனா உடன்பாடு

மெக்டொனால்டின் வகுப்புத் தீர்வு இந்தியர்களை அதிர்ச்சிக்குள்ளாகியது எரவாடா சிறையிலிருந்த காந்தி தனது உயிரைப் பணயம் வைத்தாவது வகுப்புத் தீர்வை எதிர்ப்பதென்று முடிவு செய்தார்.

இந்துக்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கும் நோக்கத்தோடு தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இது தவிர்க்கப்பட வேண்டிய திணிப்பு எனக் கருதிய காந்தி அதற்கெதிராகச் சாகும்வரை உண்ணாவிரத்தை (fast Unto Death) த் துவக்கினார்.

மாளவியாவின் முயற்சிகள் பிரதான இந்துத் தலைவர்கள் பூனாவில் கூடினர். மாளவியா, சாப்ரூ, ராஜேந்திர பிரசாத், அம்ரித்லாஸ் தக்கார், ராஜகோபாலாச்சாரி, பிர்லா, வல்லபாய் பட்டேல், சரோஜினி நாயுடு, குன்ஸ்ரூ அம்பேத்கார், எம்.சி.ராஜா போன்றோர். விரிவாக விவாதித்த பின்னர் ஒரு உடன்பாடுக்கு வந்தனர். அந்த உடன்பாடே பூனா உடன்பாடு (Poona Pact) என்றழைக்கப்படுகிறது.

பூனா உடன்பாட்டின் படி

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனித்தொகுதியல் இருக்காது.
2. பிற இந்துக்களைப் போலவே பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பர்!
3. பொது தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கென குறிப்பிட்ட இடங்களில் ஒதுக்கப்படும்.
4. ஒவ்வொரு ஒதுக்கப்பட்ட இடத்துக்கும் தாழ்த்தப்பட்டோர் நான்கு வேட்பாளர்களை தங்களுக்குள்ளிருந்து தேர்ந்தெடுப்பர்.
5. தாழ்த்தப்பட்டோருக்க அளிக்கப்படும் வேட்பாளர் தேர்வு பற்றிய தொடக்கத் தேர்தல்கள் (ீசைஅயசல நுடநஉவழைெ) ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கும்.
6. தாழ்த்தப்பட்டோருக்கு உள்ளாட்சி மன்றங்களிலும், பொதுப்பணிகளிலும் போதிய இடங்கள் அளிக்கப்படும்.

### மூன்றாவது வட்டமேஜை மாநாடு 1992

இந்திய தலைவர்கள் வகுப்புவாதச் சிக்கலைத் தீர்ப்பதிலும் பலவீனப் பட்டுப்போன சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துவதிலும் ஈடுபட்டிருந்தபோது மூன்றாவது வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. அது 1932 நவம்பர் 12 லிருந்து டிசம்பர் 24 வரை நடைபெற்றது. அம்மாநாட்டிற்க 46 தெரிந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் மட்டுமே பிரநிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் இதில் கலந்து கொள்ளவில்லை. இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் போது அமைக்கப்பட்ட துணைக்குழுக்களின் அறிக்கைகள் பற்றியே விவாதம் நடைபெற்றது. குறிப்பாக பாதுகாப்பு விதிகள் கூட்டாட்சியில் மன்னர் மாநிலங்கள் இணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள் எஞ்சியுள்ள அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்தளிப்பது ஆகிய பிரச்சனைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன. மூன்று வட்ட மேஜை மாநாடுகளும் வீண் முயற்சிகள் என கூற முடியாது இந்தியக் கூட்டாட்சி கூட்டாட்சிச் சட்டமன்றம் நீதிமன்றம், மன்னர் மாநிலங்கள் இணைவது போன்ற பல அரசியல் சட்டப் பிரச்சனைகள் பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன இம்முடிவுகளையெல்லாம் உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை (White Paper) தயாரிக்கப்பட்டு 1933 மார்ச் மாதம் பிரிட்டிஷ்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது தான் 1935 இந்திய அரசாங்கச் சட்டமாகும்.

1) வட்ட மேஜை மாநாடுகளைப் பற்றி ஒரு கட்டுரை வரைக?
2) காந்தி இர்வின் ஒப்பந்தம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக?

## அலகு - V

## இரண்டாவது உலகப்போரும் இந்தியாவும்

1939 செப்படம்பர் முதல் தேதி இட்லர் போலநிதின்மீது படையெடுத்தபோது இரண்டாவது உலகப்போர் துவங்கியது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் இங்கிலாந்து ஜெர்மனியின்மீது போர் தொடுத்தது. வைசிராய் லின்லித்கோ பிரபு இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமலேயே இந்தியாவும் போரில் ஈடுபட்டுள்ளதாக ஒரு சார்பாக அறிவித்தார். காங்கிரஸ் செயற்குழு வைசிராயின் ஒருதலைப்பட்ச அறிவிப்பை வன்மையாகக் கண்டித்து (செப்.14) அதோடு பிரிட்டன் போரில் ஈடுபட்டதற்கான நோக்கங்களையும் தெளிவுபடுத்த வேண்டுமெனக் கோரியது. இல்லையெனில் இந்தியர் பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள் என்று செயற்குழு அறிவித்தது. செயற்குழுவின் தீர்மானத்தை வர்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (அக்.9-10) உறுதி செய்தது.

வைசிராய் பல்வேறு அரசியல் அமைப்புகளைச் சேர்ந்த 52 பிரநிதிகளைக் கலந்தாலோசித்த பின்னர் ஒரு வெள்ளை அறிக்கையை (White Paper) வெளியிட்டார் (அக்.17) அதன்படி,

1. இந்தியா பிற டொமினியன்களுக்கிடையே உரிய இடத்தைப் பெறுவதற்கேற்ப பிரிட்டிஷ் பேரரசுக்குள் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையேயான பிணைப்பைப் பலப்படுத்துவதே அரசுக் கொள்கையாகும்;
2. போர் முடிந்த பின்னர் இந்தியாவின் அரசியல் அமைப்பு முறையை முழுமையாக பிரிட்டிஷ் அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும்;
3. உடனடியாக இந்தியாவுக்கு அதிக அளவுக்கு அதிகார மாற்றம் செய்வதென்பது இயலாது;
4. அனைத்து அரசியல் அமைப்புகள் வழங்கும் ஆலோசனைகளுக்கும் உதவிகளுக்கும் உரிய மதிப்பளிக்கப்படும்;
5. போர்க் காலத்தில் வைசிராய்க்கு உதவியாக இருக்க ஒரு ‘ஆலோசனைக்குழு” நியமிக்கப்படும்.

### காங்கிரஸ் பதவி விலகல்

வைசிராய் வெள்ளை அறிக்கை அறிவிப்பு காங்கிரசுக்குத் திருப்தியளிக்கவில்லை.

உடனே காங்கிரஸ் ஆட்சி செய்த மாநிலங்களிலெல்லாம் கவர்னரின் ஆலோசகர் அரசு (Advisers Regime) ஏற்படுத்தப்பட்டது. அங்கெல்லாம் கவர்னரின் அடக்குமுறை ஆட்சி தங்கு தடையின்றி செயல்படத் துவங்கியது.

காங்கிரசின் இழப்பு முஸ்லிம் லீக்குக்கு இலாபம்! பிரிட்டனின் போர் முயற்ச்சிக்கு அது முழுஆதரவை அளிக்க முன்வந்தது. காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி விலகியதைக் கொண்டாடப்படும் பொருட்டு 1939 டிசம்பர் 22ஆம் நாளை ‘இரட்சிப்பு தின’ (Day of Deliverance) மாகக் கொண்டாட வேண்டுமென முஸ்லீம்களைக் கேட்டுக் கொண்டார் முகமது அலி ஜின்னா!

**'ஆகஸ்டு அறிவிப்பு'**

1940 மத்தியில் இங்கிலாந்து மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது. போரில் பிரிட்டன் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தவாறு இருந்தது.

இந்தியர்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு 1940 ஆகஸ்டு 8 ஆம் நாள் அரசாங்கத்தின் கொள்கை பற்றி அறிவித்தார் வைசிராய் லின்லித்கோ. அதுவே ஆகஸ்டு அறிவிப்பு (August offer) என்றழைக்கப்படுகிறது. அவ்வறிப்பின்படி,

1. இந்தியாவுக்கு டொமினியன் தகுதியை வழங்குவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்;
2. இந்தியர்களே அவர்கள் அரசியல் அமைப்பு முறையை வகுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர்;
3. போர் முடிந்த உடனேயே அத்தகைய அரசியல் அமைப்பு முறையை வகுத்துக் கொள்வதற்கேன ஏற்பாடு செய்யப்படும்;
4. புதிய அரசியல் அமைப்பு பிரிட்டிஷ் காமன் வெல்த்தின் பகுதியைகச் செயல்படும்;
5. அரசியல் அமைப்பு மாற்றம் செய்யும்போது சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு முழுகவனம் செலுத்தப்படும்;
6. இந்தியப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கும் வகையில் வைசிராயின் ஆட்சிக்குழு விரிவு படுத்தப்படும்;
7. இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு 'ஆலோசனைக்குழு' அமைக்கப்படும்;

1) ஆகஸ்டு அறிவிப்பு என்றால் என்ன?

## தனிநபர் சத்தியாகிரகம்

வைசிராய் லின்லித்கோ பிரபுவின் ஆகஸ்டு அறிவிப்பும் காங்கிரஸ் தலைவர்களுக்கு நம்பிக்கையைத் தரவில்லை. மற்றொரு போராட்டத்தைக் துவக்குமாறு காங்கிரஸ் காந்தியைக் கெட்டுக் கொண்டது. போர்க்கால நெருக்கடியை மனதில் கொண்டு இயக்கத்துக்கு பதிலாகத் தனிநபர் சத்தியாக்கிரகத்தை (Individual Satyagraha) த் துவக்குவதெனத் தீர்மானித்தார் காந்தி.

1940 அக்டோபர் 17ஆம் நாள் வினோபாவே வார்த்தாவுக்கு அருகேயுள்ள பௌனார் (Paunar) கிராமத்தில் போர் எதிர்ப்பு பிரச்சாரம் செய்து சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார்.

அடுத்த தனிநபர் சத்தியாக்கிரகி ஜவஹர்லால் நேரு. அவர் கைது செய்யப்பட்டு (அக்.31) நான்காண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டது.

1941ஆம் ஆண்டு இறுதிவரை நடைபெற்ற இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட 30,000 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியரின் சம்மதம் பெறாமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதைக் கண்டிப்பதற்காகக் காந்தி துவக்கிய அடையாளப் போராட்டமே அது.

போர் முயற்சியில் காங்கிரஸ் பங்கேற்க முன்வந்ததால் ஆங்கிலேய அரசு இந்தியர்களுக்கு உடனடியாக சில அரசியல் சலுகைகள் வழங்க தீர்மானித்தது. அதன் விளைவே கிரிப்ஸ் தூதுக்குழு அமைக்கப்பட்டதாகும்.

## கிரிப்சின் தூது குழுவின் அறிக்கை

### சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps)

கிரிப்ஸ் தூதுக்குழு 1942 மார்ச் 23 ஆம் தேதி இந்தியாவுக்கு வந்தது

இங்கிலாந்திலிருந்து கிரிப்ஸ் கொண்டு வந்த அமைச்சரவையின் கொள்கை விளக்கங்கள் ஆகும்.

கிரிப்ஸ் கொண்டுவந்த பிரிட்டிஷ் அமைச்சரவையில் இந்திய அரசியல் அமைப்பு பற்றிய ஏற்பாடுகளாவன.

புதிய அரசியல் அமைப்புச்சட்டம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படும்.

இடைக்காலத்தில் பாதுகாப்புத்துறை பிரிட்டிஷ் அரசர்கத்திடமே இருக்கும். எனவே அவர்கள் கொண்டுவந்த பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தையும் நிராகரித்தனர். 1942 ஏப்ரல் 12 ஆம் ஆண்டும் கிரிப்ஸ் ஏமாற்றத்துடன் இந்தியாவை வீட்டுச் சென்றார்.

### கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி

கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைவதற்குப் பல காரணங்கள் இருந்தன. கிரிப்ஸ் திட்டத்தை ‘விரைந்து மூழ்கி கொண்டிருக்கும் வங்கியின் பெயரில் பின்தேதியிட்டு வழங்கப்பட காசோலை’ என்று வர்ணித்தார் காந்தி.

1. பிரிட்டிஸ் பிரதமர் சர்ச்சில் கிரிப்ஸ் தூதுக்குழுவை இந்தியாவுக்கு அனுப்பியதற்குக் காரணம் இந்திய அரசியல் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமெம்பதல்ல, மாறாக, சர்வ தேச கருத்துக்கு மதிப்பிப்பதற்காகவும், போர்க்கால நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவுமே கிரிப்சை அனுப்பினார்.
2. கிரிப்ஸ் தனது வெற்றியிலும் திறமையிலும் அளவுக்கு மீறிய நம்பிக்கை வைத்திருந்தார். இந்தியத் தலைவர்களை எளிதில் சம்மதிக்க வைத்துவிடல ாம் என்று நம்பினார்.
3. கிரிப்ஸ் தூதுக்குழு அனுப்பப்பட்டதன் உண்மையான நோக்கம் கடைசிவரைத் தெளிவு படுத்தப்படவில்லை.
4. கிரிப்ஸ் ஏற்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தன. அவை கலப்ப அமைச்சரவையின் கொள்கை மாறுபாடுகளைப் பிரதிபலித்தன.
5. இநதிய அரசியல் அமைப்பு பற்றி மாற்றங்கள் போர் முடிந்த பிறகுதான் செய்யப்படும் என்ற முடிவு ஊக்கமளிக்கக் கூடியதாக இலல ை லை.
6. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இந்தியாவை ஆதரித்தது ஒப்புக்காக் கொடுக்கப்பட்டதேயன்றி உண்மையானதன்று
7. கிரிப்ஸ் இந்தியத் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசினாரேயன்றி அவர்களனைவரோடும் பொதுப் பிரச்சனைகளை அவர் விவாதிக்கவில்லை.

8. சர்ச்சில், ஏமெரி, லின்லித்கோ ஆகிய மூவரும் துவக்கத்திலிருந்தே இந்திய அரசில் பிரச்சனை தீர்வதிலோ அல்லது கிரிப்ஸ் தூதுக்குழு வெற்றியடைவதிலோ ஆர்வம் காட்டவில்லை.
9. கிரிப்ஸ் வந்தார், பார்த்தார், ஆனால் ஆக்கிரமிக்கவில்லை என்று எழுதியுள்ளார். டி.வி.தமங்கர் (D.V.Tahmankar).

## 1942ல் மக்களின் எழுச்சி

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பம்பாயில் 1942 ஆக்ஸ்டு 8 இரவு 10 மணிக்கு முடிவுற்றுது. மறுநாள் அதிகாலையில் காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்! ஒரு வாரத்துக்குள் நாடு முழுவதுமுள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவர்களையும் அரசாங்கம் கைது செய்துவிட்டது.

காங்கிரசிடமிருந்து நிதியனைத்தும் கைப்பற்றப்பட்டது காங்கிரஸ் வெளியீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. கடைகள், ஓட்டல்கள் ஆகியவை மூடப்படுவது. தடைசெய்யப்பட்டது. காங்கிரஸ் துவக்கிய இயக்கத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாதென பத்திரிக்கைகள் தடைசெய்யப்பட்டன.

தலைவர்களின் தக்க திட்டமின்றி போதிய முன்னேற்பாடு செய்யாமல் மக்கள் தன்னிசையாகக் கிளர்ச்சியில் ஈடுபடலாயினர். காங்கிரஸ் ஊழியர்கள் பொதுக்கூட்டங்களைக் கூட்டி அரசாங்கத்தின் செயலைக் கண்டித்தார்கள். வியாபாரிகள் கடையடைப்புச் செய்தார்கள். தொழிலாளர்கள் வேலைநிறுத்த்தில் ஈடுபட்டனர். மாணாவ்கள் கல்விககூடங்களைப் புறக்கணித்தனர். விவசாயிகள் வரிகொடா கிளர்ச்சியைத் துவக்கினார்கள் பல அரசாங்க ஊழியர்கள் பதவிகளைத் துறந்தார்கள். ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள். அர்த்தால்கள் நடத்தப்பட்டன.

அரசாங்கம் அடக்குமுறையும் ஈவிரக்கமின்றி அதிகரித்தபோது மக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர். இந்தியா முழுவதும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது கள் பானைகள், பீப்பாய்கள் உடைக்கப்பட்டன. தென்னை, பனைமரங்களை வெட்டி சாய்த்தனர். புகைவண்டிப் பாதைகள் பெயர்க்கப்பட்டன. தந்தி டெலிபோன் கம்பிகள் வெட்டப்பட்டன. பாலங்கள் பெயர்க்கப்பட்டன. குளங்களும் கம்மாய்களும் உடைக்கப்பட்டன. தபால் பெட்டிகளுக்குள் கந்தகம் போடப்பட்டது. பிரிட்டிஸ் பேரரசின் சிலைகள், வளைவுகள், நினைவு சின்னங்கள் கம்மாய்களும் உடைக்கப்பட்டன. கிராம அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் வேலையை விடும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள். போலீசார் பயன்படுத்திய வாகனங்கள் கொளுத்தப்பட்டன.

தமிழநாட்டிலும் வன்முறை நிகழ்ச்சிகளுக்குப் பஞ்சமில்லை. இராணுவத்தினருக்குச் சீருடைத் துணியைத் தயாரித்துக் கொடுத்து பக்கிங்காம் கர்னாடிக் மில் வேலை நிறுத்தத்தால் மூடப்பட்டது. சென்னை போர்ட் டிரஸ்டு, சென்னை மாநகராட்சி, மின்சார டிராம்கள் செயலிழந்தன. பொதுக்கட்டிடங்கள் தாக்கப்பட்டன. வடஆற்காடு மாவட்டத்தில் ஆர்ப்பாடடக்காரர்கள் தொலைபேசி தந்திக்கம்பிகளை அறுத்துவிட்டனர். ஒரு சரக்கு ரயில் வண்டியை கவிழழ்த்துவிட்டனர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மாணவர்கள் வன்முறைச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டனர். கோயமுத்தூருக்கருகே உள்ள சூலூர் விமான நிலையம்

அழிக்கப்பட்டது. புகைவண்டிகள் கவிழ்க்கப்பட்டன. கள்ளுக்கடைகள் கொளுத்தப்பட்டன. தென் மாவட்டங்களில் வன்முறை விசுவரூபமெடுத்து. ராஜபாளையம், காரைக்குடி தேவகோட்டை திருவாடானை பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் மாண்டனர்.

**இயக்கத்தின் விழ்சசி**

1942 ஆகஸ்டு புரட்சியால் வெள்ளையன் வெளியேறவில்லை வெளியேற்றப்படவுமில்லை. ஆனால் அது வன்முறைக் கிளர்ச்சியாயிற்று. இரண்டு மாதங்கள் நடைபெற்ற அக்கிளர்ச்சியை அரசாங்கம் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்கிவிட்டது அதன் விழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

1. பம்பாய் காங்கிரஸ் கூட்டம் முடிந்த மாறுநாளே தலைவகர் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டனர்.
2. போராட்டக்காரர்களுக்க தெளிவான திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை. திட்டமில்லாத கிளர்ச்சி சுக்கான் இல்லாத படகு போலாயிற்று
3. மையக் கட்டுப்பாடு இல்லாததால் ஒவ்வொரு மாநிலமும் அதை தன்போக்கில் போராட்டத்தை நடத்தியது
4. போராட்டக்காரர்களிடையே செய்திப் போக்குவரத்து தொடர்பில்லாது போயிற்று கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இரகசியமாகச் செய்திகளை அனுப்ப முடியவில்லை.
5. வெள்ளையனே வெளியேறு இயக்கம் காங்கிரஸ் இயக்கமாகவே கருதப்பட்டது. தேசிய இயக்கமாகக் கருதப்படவில்லை. அவ்வியக்கம் பிரிட்டிஷ் இந்தியா, முஸ்லீம் இந்தியா, பாகிஸ்தான் திட்டம் ஆகியவற்றுக்கெதிராகத் துவக்கப்பட்டதாகவும், பிரிட்டிஷ் ராஜிடமிருந்து இந்து ராஜ்யத்துக்கு அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென்பதே காங்கிரசின் குறிக்கோள் என்றும் கருதிய ஜின்னா முஸ்லீம்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்.
6. அரசாங்க ஊழியர்களும் போலீசும் இராணுவத்தினரும் அரசாங்கத்துக்க விசுவாசமாகவே இருந்தனர்.
7. அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே தயார்நிலையில் இருந்தது. போராட்டத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்ற உறுதியோடு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தது. கிளர்ச்சியை ஒடுக்க நிர்வாக இயந்திரம், போலிஸ், இராணுவம் அனைத்தையும் முடுக்கிவிட்டது.

1) 1942-ல் நடைபெற்ற மக்களின் எழுச்சியை விவரி?
2) 1942-ல் நடைபெற்ற புரட்சி ஏன் வீழ்ச்சியடைந்தது?

## சுபாஸ் சந்திரபோஸ்

சுபாஷ் சந்திரபோஸ் 1897 ஜனவரி 28ம் நாள் ஒரிசாவிலுள்ள கட்டாக்கில் பிறந்தார். இவரது தந்தை ஜானகிநாத் போஸ் பிரபல வழக்குரைஞராக இருந்தவர்.

**போராட்டத்தில் பங்கேற்பு**

சுபாஷ் சந்திரபோஸ் காந்தியின் தலைமையின் கீழ் துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார் (1921). காந்தி ஒத்துழியாமை இயக்கத்தைத் தன்னிச்சையாக விலக்கிக் கொண்டபோது (1922 பிப்ரவரி 12) போஸ் அச்செயலைக் கடுமையாகக் கண்டித்தார். அப்போது அவருக்கு வயது 25!

**பார்வர்டு பிளாக் கட்சி**

**காங்கிரஸ் தலைவர்**

சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஷ் சோஷலிஸ்டு கட்சியின் குறிக்கோளை அடையும் முயற்சில் தீவிரமாக ஈடுபட்டார்.

போஸ் 1938ம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பதவி விலகல்**

மூத்த காங்கிரஸ் தலைவர்கள் போஸ் காங்கிரசின் கொள்கைக்கு எதிராகச் செயல்படுகிறார் என்று குற்றம் சாட்டினர். போஸ் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

**பார்வர்டு பிளாக் கட்சி**

அவரும் அவரது ஆதரவாளர்களும் காங்கிரசுக்குள்ளேயே 'பார்வர்டு பிளாக் (Forward Block) என்ற கட்சியைத் துவக்கினர் (1939 மே)

**கட்சியின் வளர்ச்சி**

காங்கிரசைவிட்டு விலகிய சுபாஷ்போஸ் பார்வர்டு பிளாக் கட்சியை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார்.

**அரசாங்க அடக்குமுறை**

1941 ஜனவரி 26ம் நாள் சுபாஷ் போஸ் மாறுவேடத்தில் வீட்டுக் காவலில் இருந்து வெளியேறி பெஷாவர் காபூல், மாஸ்கோ வழியாக ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் சென்றடைந்தார். (1941 மார்ச 28).

**ஜெர்மனியில் போஸ்**

அவர் "அசாத் ஹிந் வானொலி" (Azad Hind Radio) மூலம் நாள்தோறும் தன் திட்டங்களைத் தொடர்ந்து இந்தியாவுக்கு ஒலிபரப்பினார். 1941 மே 29ம் நாள் போஸ் ஜெர்மனியின் அதிபர் இட்லரை சந்தித்துப் பேசினார். சுபாஷ் போஸ் இந்தியப் போர்க்கைதிகளைக் கொண்ட "அசாத் ஹிந் பௌஸ்" (Azad Hind Fauz) அல்லது இந்தியப் படையணிப் பிரிவை (Indian Legion) ஏற்படுத்தினார்.

**ராஷ்பிகாரி போஸ்**

ராஷ்பிஹாரி போஸ் இந்திய தேசிய இராணுவம் (Indian National Army) தோன்றுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் இவர் டோக்கியோவில் வாழ்ந்த இந்தியர்களை ஒன்றுகூட்டி 'இந்திய சுதந்திர கழக'த்தை (Indian Independence League) த் துவக்கினார். இவரது தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திர கழகத்தின் ஹாங்காங் மாநாட்டில் மோகன் சிங்கைத் தளபதியாகக் கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை உருவாககுவதென்று தீர்மானிக்கப்பட்டது. காப்டன் மோகன் சிங் பிரிட்டிஷ் இராணுவத்தில் அதிகாரியாக இருந்து, ஜப்பானியரிடம் சரண்டைந்தவர். இவர் ஹாங்காங் மாநாட்டுத் தீர்மானித்தின்படி ஜப்பான் வசமிருந்த 40,000 இந்தியப் போர்க் கைதிகளைக் கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை சிங்கப்பூர், பரேர் பூங்காவில் (Farrer Park) அமைத்தார்.

## சி.ஆர்.பார்முலா

ஜீன்னா நடைமுறைச் சாத்தியமற்ற போக்கைப் பின்பற்றுவதாக ராஜகோபாலச்சாரி குறைகூறி வந்தார். ராஜாதி தனது திட்டத்தைக் காநதிக்கு எழுதிக் காட்டியதகாவும், அதைக் காந்தி ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். ராஜமோகன் காந்தி, இதுவே ராஜாஜி திட்டம் அல்லது சி.ஆர். சூத்திரம் (C.R.Formula) என்றழைக்கப்படுகிறது)

### ராஜாஜி திட்டத்தின்படி

1. போர்க் காலத்தில் காங்கிரஸ் இடைக்கால தேசிய அரசை அமைப்பதற்க பெரும்பான்மைக்கவும் ஒத்துழைக்க வேண்டும்.
2. போர் முடிந்தவுடன் இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்கில் முஸ்லீம் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளைப் பிரிக்கவும், அவற்றின் எல்லைகளை வரையறுக்கவும் ஒரு கமிஷன் நியமிக்கப்படும்.
3. அக்கமிஷனின் பரிந்துரைப்படி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் சம்மதத்தோடு தேசப்பிரிவினைக் கோரிக்கை பற்றி முடிவெடுக்கப்படும்.
4. வாக்கெடுப்புக்கு முன் சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களுடைய நிலையை எடுத்துச் சொல்ல உரிமை உண்டு.
5. பிரிவினை ஏற்பட்டால் பாதுகாப்பு, போக்குவரத்து, வர்த்தகம் போன்றவை பற்றி அரசுகள் உடன்பாடு செய்து கொள்ளலாம்.
6. பிரிட்டான் இந்தியருக்கு அதிகார மாற்றம செய்தால் மட்டுமே மேற்கூறிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும்.
7. இந்த நிபந்தனைகளுக்குப்பட்டு முஸ்லீம் லீக் இநதியாவின் பூரண விடுதலைக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம்.

1944 ஏப்ரல் மாதம் ஜின்னாவைச் சந்தித்து அவரிடம் அதுபற்றி விவாதித்தார். கேட்ட உடனேயே ஜின்னா ராஜாஜி திட்டத்தை நிராகரித்து விட்டார்.

1) ராஜாஜியின் திட்டத்தை விவரி?

## வேவல் திட்டம்

தேசாய் லியாகத் உடன்பாடும் தோல்வியுற்றதை அடுத்து வைசிராய் வேவல் பிரபு இலண்டன் சென்று இந்திய விவகாரச் செயலருடனும் இந்திய அரசியல் நிலைப்பற்றிப் பேச்சு வார்ததை நடத்தினார்.

பிரிட்டிஷ் அரசின் சார்பில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அவ்வறிவிப்பே வேவல் திட்டம் (Wavel Plan) என்றழைக்கப்படுகிறது. அத்திட்டத்தின்படி.

1. ஒருங்கமைந்த அரசியல் கருத்துப்படி புதிய ஆட்சிக் குழுவை (Executive Council) அமைக்க வைசிராய் இந்தியக் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பார்.
2. அமையலிருக்கும் ஆட்சிக் குழுவில் இந்தியாவின் முக்கிய வகுப்பினர் இடம் பெறுவர்.
3. அதில் சாதி இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு சம எண்ணிக்கையில் இடங்கள் ஒதுக்கப்படும்.
4. அக்குழுவில் வைசிராய், தலைமை தளபதி ஆகிய இருவரைத் தவிர பிற அனைத்து உறுப்பினர்களும் இநதியப் பிரதிநிதிகளேயாவர்.

5. வெளி விவகாரத் துறை இந்திய உறுப்பினர்கள் வசம் ஒப்படைக்கப்படும்.
6. இந்த ஆட்சிக்குழுவே இடைக்கால அரசாங்கமாக செயல்படும்.
7. வைசிராய் தனது வெட்டதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் இந்திய நலனைக் கருதியே அதைப் பிரயோகிப்பார்.
8. அனைத்து மாநிலங்களிலும் கலப்ப அமைச்சரவைகளே பதவி ஏற்கும்.
9. இந்தியர்கள் தனியே தங்களுக்கென ஒரு அரசியல் அமைப்புச் சட்ட மன்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

1) வேவல் திட்டம் என்றால் என்ன?

## சிம்லா மாநாடு

வைசிராய் வேவல் பிரபு தனது வானொலி அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி இந்திய அரசியல் தலைவர்களைக் கொண்ட ஒரு மாநாட்டை 1945 ஜீன் 25 ஆம் தேதி சிம்லாவில் உள்ள வைசிராய் மாளிகையில் கூட்டினார். அம்மாநாட்டிற்குக் காந்தி உள்ளிட்ட 21 முக்கிய அரசியல் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். வேவல் திட்டத்தை விவாதிப்பதே சிம்லா மாநாட்டின் நோக்கமாகும். சிறுபான்மையினர் பிரதிநித்துவம், போர் முயற்சிக்கு ஆதரவு, போர் முடியும் வரை புதிய ஆட்சிக் குழு நீடித்தல் போன்ற திட்டங்கள் பற்றி கருத்தொற்றுமை ஏற்பட்டது. ஆனால் புதிய ஆட்சிக்குழுவை அமைப்பது பற்றி அடிப்படையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. வேவல் திட்டத்தின் காணப்பட்ட 'சாதி இந்துக்கள்' என்ற சொற்றொடரைக் காந்தி பலமாக எரித்தார். அதேபோன்று காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்கும் இடையே உள்ள சமவிகிதம் (Parity) இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான சமவிகித ஆகாது என்று வாதிட்டார். அதை ஜின்னா ஏற்றுக் கொள்ளவில்லை. ஜின்னா சில நிபந்தனைகளை விதித்தார்.

1. புதிய ஆட்சிக்குழுவுக்கு காங்கிரஸ் இந்து உறுப்பினர்களை மட்டுமே நியமிக்க வேண்டும்.
2. முஸ்லீம் உறுப்பினர்களை முஸ்லீம் லீக் மட்டுமே நியமிக்கும்
3. லீக் நியமிகும் ஐந்து முஸ்லீம் உறுப்பினாகயையும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படும் என்ற உத்திரவாதம்மை முன்கூட்டியே கொடுக்க வேண்டும்.

ஆங்கிலேயே அதிகார வர்க்கத்தின் சுயநலப்பேர்கு வேவலுக்கு பிற உயர் அதிகாரிகளின் ஆதரவின்மை ஜீன்னாவின் பிடிவாதம் ஆகியவை சிம்லா மாநாடு தோல்வியுற்றதற்கான காரணங்களாகும்.

### அட்லியின் அறிவிப்பு

நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் முஸ்லீம் லீக்கின் பிடிவாதப் போக்கால் செயல்பட முடியவில்லை. லீக்கின் ஒத்துழைப்பில்லாமல் இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றம் அதன் பணியைக் செய்ய இயலவில்லை. இனக்கலவாரங்கள் நாடடில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் அதிகரிக்கச் செய்தன. வைசிராய் வேவலால் அரசியல் தேக்க நிலையைப் போக்க முடியவில்லை. அந்த நேரத்தில் பிரிட்ஸ் பிரதமர்

பாராளுமன்றத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பைச் செய்தார் (1947 பிப். 20) அவ்வறிவிப்பின்படி.

1. 1948 ஜீன் முதல் தேதிக்குள் பிரிட்டிஸ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்
2. யாருக்கும் அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பது என்பதை பிரிட்டிஸ் அரசாங்கம் முடிவு செய்யும்.
3. வேவல்பிரபுவுக்கு பதில் மௌன்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) இந்திய வைசிராயாக நியமிக்கப்படுவார். புதிய வைசிராய் இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பார். அட்லியின் இந்த உறுதியான அறிவிப்ப இந்தியாவின் நல்ல வரவேற்பைப் பெற்றது.

1) சிம்லா மாநாடு ஏன் நடைபெற்றது?
2) அட்லியின் அறிவிப்பை பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக?

## அமைச்சரவைத் தூதுக்குழு

1945 ஆக்ஸ்டு 15 ஆம் தேதி ஜப்பான் சரணடைந்ததோடு இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. பின்னர் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி (Labour Party) வெற்றி பெற்று கிளெமென்ட் ஆட்லி (Clament Attlee) பிரதமரானார். புதிய அரசாங்கம் 1946 துவக்கத்தில் இந்தியாவில் மத்திய மாநிலச் சட்ட மன்றங்களுக்கான பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவித்தது.

பிரிட்டிஷ் பாராளுமன்ற தூதுக்குழு (British Parliamentary Delegation) இந்தியாவுக்கு வந்து இந்திய அரசியல் நிலைமையை மதிப்பீடு செய்து சென்றது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அமைச்சரவைத் தூதுக்குழு (Cabinet Mission) வை இந்தியாவுக்கனுப்ப பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்தது.

### தூதுக்குழுவின் திட்டம் 1946 மே 16

### நாடாளுமன்றக் குழு

இங்கிலாந்தில் புதிதாக அட்லியின் தலைமையில் ஆட்சிக்க வந்த தொழிற்கட்சி (1945 ஜீலை 10) காங்கிரஸ் நண்பர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதில் உறுதியாக இருந்தது அந்த அடிப்படையில்தான் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அட்லி அரசாங்கம் அதே முடிவில் இருந்ததால் அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission) வை அனுப்ப முடிவு செய்தது.

இந்திய விவகாரத்துறைச் செயலர் பொதிக் லாரன்ஸ் பிரபு, வர்த்தக அமைச்சர் சன் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் கடற்படை அமைச்சர் ஏ.வி அலெக்சாண்டர் ஆகியோர் அடங்கிய அமைச்சரவைத் தூதுக்குழு 1946 மார்ச் 23ம் தேதி இந்தியாவுக்கு வந்தது. இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதைத் துரிதப்படுவதற்கான திட்டத்தைக் கொடுப்பதே இத்தூதுக்குழுவின் நோக்கமாகும். இந்தியத் தலைவர்களுடன் விரிவாக விவாதித்த பின் பிரிவினைவாதத்தை நிராகரித்தனர். ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் பாகிஸ்தான் கோரிக்கையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி யோசித்து அவர்களது திட்டத்தை

வெளியிட்டனர். (1946 மே 16). இந்த அரசியல் அமைப்புத் தீர்வே 'அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டம்' என்ற அழைக்கப்படுகிறது.

**இந்திய யூனியன்**

1. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும், மன்னர் மாநிலங்களையும் உள்ளாடக்கியதே இந்திய யூனியன் ஆகும். 2.மத்திய அரசாங்கம் வெளியுறவு விவகாரங்கள் நாட்டுப்பாதுகாப்பு, செய்தித் தொடர்பு ஆகிய மூன்று துறைகளைப் பற்றி அதிகாரத்தை மட்டுமே கொண்டிருக்கும். 3. மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Power) மாநிலங்களுக்கு வழங்கப்டும். 4. இந்திய யூனியனின் ஆட்சித்துறையும், சட்டமன்றமும் பிரிட்டிஷ் இந்தியா மற்றும் மன்னர் மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும், 5. மாநிலங்கள் 3 தொகுப்புகளாகப் பிரிக்கப்படும்.

**அரசியலைப்புச் சட்டமன்றம்**

1.அரசியலமைப்புச் சட்ட மன்றம் 389 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் 2.ஒவ்வொரு மாகாணத்துக்கும் 10 இலட்சம் பேருக்கு ஒரு பிரதிநிதி என்ற மக்கள் எண்ணிக்கைக்கேற்ற விகிதாச்சார அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும். 3. ஒவ்வொரு மாகாண சட்டமன்றத்துக்கும் ஒவ்வொரு வகுப்பாரும் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர் போன்றோர் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். 4.மத்திய மாகாணத் தேர்தல்கள் முடிந்தபின் அரசியலமைப்புச் சட்டமன்றம் டெல்லியில் ஒரே அமைப்பாகக்கூடி அதில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்.

**இடைக்கால அரசாங்கம்**

புதிய அரசியலைப்புச் சட்டம் வரையப்படும்வரை இடைக்கால அரசாங்கம் நாட்டு நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளும். யுத்த அமைச்சர் பொறுப்பு உட்பட அனைத்து அதிகாரங்களும் மக்கள் ஆதரவு பெற்ற இந்தியத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

**ஒப்பந்தம்**

அதிகாரப் பரிமாற்றுத்துக்குப்பின் இந்தியாவின் மீது இருந்த பிரிட்டிஷ் மேலாதிக்கம் முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படாமையால் இந்தியா காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகிக்கொள்ளாது என்று அமைச்சரவைத் தூதுக்குழு நம்பிக்கை தெரிவித்தது.

**திட்டத்தின் நன்மை தீமைகள்**

அமைச்சரவைத் தூதுக்குவின் திட்டம், கிரிப்ஸ் தூதுக்குழுத் திட்டத்தை விடச் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. இத்திட்டத்தில் குறைகள் இல்லாமல் இல்லை உதாரணமாக இத்திட்டத்தை ஏற்றுகக்கொண்டால் ஒட்டுமொத்மாக ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதை அப்படியே கைவி வேண்டும் என்று கூறப்பட்டது. கூட்டாட்சியில் சேருவதும் சேராததும் மன்னர் மாநிலஙகளின் விருப்பத்துக்கு விடப்பட்டது.

**மதிப்பீடு**

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தை முதலில் முஸ்லீம் லீக்கும் (1946 ஜீன் 6) பின்னர் காங்கிரசும் (ஜீன் 25) ஏற்றுக் கொண்டன. எனினும் இத்திட்டம் முரண்பாடுகளின் முடிச்சாகக் காட்சியளித்தது.

1) அமைச்சரவை தூதுக்குழுவின் திட்டத்தை விவரி?

## இடைக்கால அரசு

முதலில் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க மறுத்த காங்கிரஸ் பின்னர் அவ்விராசாங்கத்தில் சேரச் சம்மதித்தது! 1946 ஆகஸ்டு 12 ஆம் தேதி இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும்படி வைசிராய் வேவல்பிரபு ஜவஹர்லால் நேருவைக் கேட்டுக் கொண்டார். அவ்வழைப்பை நேரு ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜின்னா மறுத்துவிட்டார்.

**நேரடி நடவடிக்கை நாள்**

இடைக்கால அரசாங்கத்தில் சேர மறுத்டெ ஜின்னா 1946 ஆகஸ்டு 16 ஆம் தேதியை நேரடி நடவடிக்கை நாளாக (Direct Action Day) அனுசரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்நாளை துக்கதின (Black Day) மாகக் கருதப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக நேரடி நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. மாறாக இந்துக்கள் மீது புனிதப்போர் (Jehad) கொடுக்கப்பட்டது! கல்கத்தாவில் பிரம்மாண்டமான ஊர்வலத்தை நடத்தியது முஸ்லீம் லீக். ஏதுமறியா இந்து ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆரசாங்கம் பாதுகாப்புத் தராமையால் இந்துக்கள் திருப்பித் தாக்கினர். குல்கத்தா ரத்தக் களறியாயிற்று.

பிகாரிலிருந்து முஸ்லீம் சிறுபான்மையினரை இந்துக்கள் பழிக்கும்ப் பழி வாங்கினர். இனக் கலவரத்தின் எதிரொலி ஐக்கிய மாகாணத்திலும பம்பாயிலும் அகமதாபாத்திலும் கூட கேட்டது. நேரடி நடவடிக்கை நாள் மோசமான இனக்கலவர நாளாக முடிந்தது. பிகார் நிகழ்ச்சகளைக் காரணம்காட்டி ஜின்னா தனது பாகிஸ்தான் கோரிக்கையை உரக்க எழுப்பினார்.

**இடைக்கால அரசாங்கம்**

1946 செப்டம்பர் 2 ஆம் நாள் இடைக்கால அரசாங்கம் (ஐவெநசஅை புழளநசஅெநவெ) ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்டது. மூன்று முஸ்லீம்கள் உட்பட 12 பேர் இடைக்கா அரசில் இடம் பெற்றனர். முஸ்லீம் லீக் இடைக்கால அரசின் இடம்பெற ஜின்னா சம்மதம் தெரிவித்தார்.

இடைக்கால அரச அமைக்கப்பட்டது. ஆனால் அது ஒழுங்காக செயல்பட முடியவில்லை. இலாக்காக்களைப் பிரிப்பதிலேயே காங்கிரசுக்கும லீகுக்கும் உரசல்கள் தோன்றலாயின. அரசு முஸ்லீம் பிரிவு (Muslim Block) காங்கிரஸ் பிரிவு (Congress Block) என இருகூறுகளாகப் பிரிந்து தனித்தனித் தலைமையின்கீழ் செயல்ப்பட்டது.

**அட்லியின் அறிவிப்பு**

நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் முஸ்லீம் லீக்கின் பிடிவாதப் போக்கால் செயல்பட முடியவில்லை. லீக்கின் ஒத்துழைப்பில்லாமல் இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றம் அதன் பணியைக் செய்ய இயலவில்லை. இனக்கலவாரங்கள் நாடடில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் அதிகரிக்கச் செய்தன. வைசிராய் வேவலால் அரசியல் தேக்க நிலையைப் போக்க முடியவில்லை. அந்த நேரத்தில் பிரிட்ஸ் பிரதமா் பாராளுமன்றத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பைச் செய்தாா் (1947 பிப். 20) அவ்வறிவிப்பின்படி.

1. 1948 ஜீன் முதல் தேதிக்குள் பிரிட்டிஸ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்
2. யாருக்கும் அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பது என்பதை பிரிட்டிஸ் அரசாங்கம் முடிவு செய்யும்.
3. வேவல்பிரபுவுக்கு பதில் மௌன்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) இந்திய வைசிராயாக நியமிக்கப்படுவாா். புதிய வைசிராய் இந்தியா் கைக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பாா். அட்லியின் இந்த உறுதியான அறிவிப்ப இந்தியாவின் நல்ல வரவேற்பைப் பெற்றது.

## மௌன்ட்பேட்டன் திட்டம்

அட்லியின் அறிவிப்பைத் தொடா்ந்து மௌன்ட்பேட்டன் பிரவு 1947 மாா்ச் 22 ஆம் தேதி இந்தியாவுக்கு வந்தாா். வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவா் காந்தி, ஜின்னா, நேரு, ஆசாத், படேல் மற்றும் முக்கிய தலைவா்களை சந்தித்துப் பேசினாா்.

பாகிஸ்தான் கோரிக்கையிலிருந்து சிறிதும் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை என்றாா் ஜின்னா. நாட்டுப் பிரிவினை தேவையான தீமை என்பதை ஒத்துக் கொண்டாா் நேரு.

இந்தியத் தலைவா்களோடு பேசிய பின்னா் நாட்டைப் பிரிவினை செய்யாமல் இந்திய அரசியல் தேக்க நிலையைத் தீக்கக முடியாது என்ற தெளிவான முடிவுக்க வந்தாா் மௌன்ட்பேட்டன் அட்லியின் அறிக்கையை ஒட்டி ஒரு திட்டத்தை தயாரித்தாா். அத்திட்டத்தை பாா்த்த நேரு சீற்றம் கொண்டாா். அதை அங்கேயே நிராகரித்தாா். அதன் பின்னா் வைசிராய் தன்னுடன் சீா்திருத்தக் கமிஷனராய் (Reforms Commissioner) இருந்த வி.பி.மேனனின் துணையுடன் தனது திட்டத்தைத் தயாரித்தாா். அதுவே மௌன்ட்பேட்டன் திட்டம் (Mountbatten Plan) என்றழைக்கப்படுகிறது.

மௌட்பேட்டன் திட்டம் நாட்டுப் பிரிவினையை அடிப்படையாக கொண்டது. அத்திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன.

1. இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றத்தின் வேலை இடையூறின்றி பகுதிகளுக்குப் பொருந்தாது.
2. புதிதாக எழுதப்படும் அரசியல் சட்டம் அதை ஏற்றுக்கொள்ளாத பகுதிகளுக்குப் பொருந்தாது.
3. நடைமுறையில் இருக்கம் அரசியலி அமைப்பு சட்டமன்றத்தை ஏற்றுக்கொள்ளாத பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தனிமன்றத்தின் மூலம் அப்பகுதிகளின் விருப்பம் அறியப்படும்.

4. பஞ்சாப் வங்காள சட்ட மன்றங்கள் பெரும்பான்மை முஸ்லீம்களைக் கொண்ட மாவட்டங்களின் பிரதிநிதிகளுக்கும் பிறருக்குமென இரு பகுதிகளாப் பிரிக்கப்படும்.
5. சிந்து சட்டமன்றம் யார் பக்கம் இருக்கும் வேண்டுமென்பதை அதுவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.
6. வடமேற்கு எல்லை மாகாணத்தில் இப்பிரச்சனை மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
7. பலுசிஸ்தான் மக்களுடைய கருத்தை அறியதற்கான முறையை வைசிராய் முடிவு செய்வார்.
8. பஞ்சாப் வங்காளம், சில்ஹெட் ஆகிய பகுதிகளில் தேர்தல்கள் நடத்தி அரசியல் அமைப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
9. மன்னர் மாநிலங்களைப் பொறுத்த வரை அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத்தில் (1946 மே 12) கண்டுள்ள விதிகள் பின்பற்றப்படும்.
10. இந்தியாவை இரண்டாகப் பிரிவினை செய்வதால் ஏற்படக்கூடிய நிர்வாக விளைவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்துத் தீர்த்தக் கொள்ளலாம்.

**இந்திய விடுதலை**

இந்தியப் பிரிவினை பற்றி முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா (Indian Independence Bill) தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜீலை 4) இந்திய விடுதலை சட்டமாக (Indian Independence Act) நிறைவேற்றப்பட்டது. (ஜீலை 18) அச்சட்டத்தின்படி இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு டொமினியன்கள் 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளிலிருந்து ஏற்படுத்தப்பட்டன. ஆகஸ்டு 14-15 நள்ளிரவில் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் முடிவுக்கு வந்தது. புது டெல்லியில் கூடிய இந்திய அமைப்ப சட்டமன்றத்தில் தலைவர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது சபாநாயகர் தலைக்கு மேலிருந்த கடிகாரம் பன்னிரெண்டு முறை அடித்து ஓய்ந்தது நள்ளிரவின் நிசப்த்துக்கிடையே நேருவின் குரல் ஒலித்தது. இந்தியாவின் கடைசி வைசிராயும், முதல் கவர்னர் ஜெனரலுமான மௌன்ட் பேட்டன் பிரபு 'இந்தியா விடுதலை அடைகிறது' என்று அரசியல் அமைப்பு சட்டமன்றம் செய்த பிரகடனத்தில் கையொப்பமிட்டார். அவரே 'யூனியன் ஜாக் கொடி பறந்து வந்த கொடிமரத்தில் அசோகச் சக்கரம் பொறித்த சுதந்திர இந்திய மூவர்ண தேசியக் கொடியை ஏற்றிப் பறக்கவட்டார். அரசியல் அமைப்புச் சட்டமன்றம் சுதந்திர இந்தியாவின் பாரளுமன்றமாயிற்று. அந்த நள்ளிரவிலும் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியே மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர். இராணுவ அணிவகுப்புகளுக்கிடையே முதல் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் அவருடைய சக அமைச்சர்களும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே அணிவகுத்துச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாகும்.

**இந்திய விடுதலை**

இந்தியப் பிரிவினை பற்றி முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா (Indian Independence Bill) தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜீலை 4) இந்திய விடுதலை சட்டமாக (Indian Independence Act) நிறைவேற்றப்பட்டது. (ஜீலை 18) அச்சட்டத்தின்படி இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு டொமினியன்கள் 1947

ஆகஸ்டு 15 ஆம் நாளிலிருந்து ஏற்படுத்தப்பட்டன. ஆகஸ்டு 14-15 நள்ளிரவில் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் முடிவுக்கு வந்தது. புது டெல்லியில் கூடிய இந்திய அமைப்ப சட்டமன்றத்தில் தலைவர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது சபாநாயகர் தலைக்கு மேலிருந்த கடிகாரம் பன்னிரெண்டு முறை அடித்து ஒய்ந்தது நள்ளிரவின் நிசப்த்துக்கிடையே நேருவின் குரல் ஒலித்தது. இந்தியாவின் கடைசி வைசிராயும், முதல் கவர்னர் ஜெனரலுமான மௌன்ட் பேட்டன் பிரபு 'இந்தியா விடுதலை அடைகிறது' என்று அரசியல் அமைப்பு சட்டமன்றம் செய்த பிரகடனத்தில் கையொப்பமிட்டார். அவரே 'யூனியன் ஜாக் கொடி பறந்து வந்த கொடிமரத்தில் அசோகச் சக்கரம் பொறித்த சுதந்திர இந்திய மூவர்ண தேசியக் கொடியை ஏற்றிப் பறக்கவட்டார். அரசியல் அமைப்புச் சட்டமன்றம் சுதந்திர இந்தியாவின் பாராளுமன்றமாயிற்று. அந்த நள்ளிரவிலும் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியே மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர். இராணுவ அணிவகுப்புகளுக்கிடையே முதல் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் அவருடைய சக அமைச்சர்களும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே அணிவகுத்துச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## இந்திய விடுதலை பெற இருந்த காரணங்கள்

1. இந்திய சுதந்தரப் போராட்டத்தின் வேகமும் தாக்கமும் இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801), வேலூர்க் கிளர்ச்சஶெ(1806) கம்பனி ஆட்சிக்கெதிரான உட்புறக் கிளர்ச்சிகள் (1806-1857) ஆகியவை அந்நிய ஆதிக்கத்துக்கெதிராகத் துவக்கப்பட்ட ஆரம்ப எதிர்ப்புகளாகும். 1857 பெரும் புரட்சி கம்பெனி ஆட்சிக்க இறுதி எச்சரிக்கையாக அமைந்தது.
2. பிரிட்டன் தனது இராணுவ வலிமையால் இந்தியாவை அடக்கி ஆண்டு வந்தது. ஆனால் இரண்டாவது உலகப்போரின் போது அதன் இராணுவ வலிமைமாயை அகன்றது.
3. டெல்லி செங்கோடடையில் நடைபெற்ற நேதாஜியின் இந்திய தேசியப்டபடை தளபதிகள் பற்றிய வழக்க இந்திய மக்களிடையே அசாதாரணமான ஆர்வத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியது.
4. இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டன் பெரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாயிற்று.
5. பிரிட்டிஷ் பிரதமராவதற்கு முன்பிருந்தே அட்லி இந்தியாவின் நண்பராக இந்திய விடுதலைப் போராடத் தலைவர்களின் அனுதாபியாக இருந்து வந்தார்.
6. சர்வதேச சூழ்நிலைகளும் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்தன. உலகப்போரின் போது இங்கிலாந்துடன் இணைந்திருந்த ரஷியா போருக்குப்பின் ஏகாபத்தியம், முதலாளித்துவம், காலனி ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யத் துவங்கியது.

## கோபால கிருஷ்ண கோகலே

நமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய முன்னோடிகளில் முக்கியமானவர் கோபாலகிருஷ்ண கோகலே ஆவார். 1865-ல் மகாராஷ்டிர மாநிலத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். 1884-ல் தன்னுடைய பட்டப்படிப்பை முடித்த பிறகு தாய் நாட்டின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

1905-ம் ஆண்டு கோகலே காசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமைப் பொறுப்பேற்றார். விடுதலை இயக்கத்தில் இவரது கருத்துக்கள் மிதவாதக் கருத்துக்களாகும்.

1905-ல் 'இந்திய தொண்டர் சங்கத்தைத் (Servants of India Society) துவக்கினார். காந்தி இந்தியா வர கோகலேயே மூலக்காரணம் ஆவார். காந்தி கோகலேயை தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

கோகலே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிதவாதக் கருத்துடையவர். தன்னுடைய பேச்சாற்றல் மூலம் இந்திய இளைஞர்களிடையே சேவை உணர்வையும், தேசப்பற்றையும் ஊட்டினார். எனவே பலாத்கார நடவடிக்கையும்,தீவிரவாதப் போக்கையும் விலக்கினார்.

சிறந்த தேச பக்தரும், சிறந்த கல்வியாளரும், இந்திய தொண்டர் கழகத்தின் ஸ்தாபகரும், ஆக்கப்பூர்வமான அரசியல் தலைவரும், அண்ணல் காந்தியின் அரசியல் ஆசானுமான கோகலே 1915 பிப்ரவரி 15ம் தேதி மரணமடைந்தார்.

## பாலகங்காதர திலகர்

## Balagangadar Tilak, 1856-1920

“இந்திய தேசிய எழச்சியின் தந்தை” என்று போற்றப்படும் லோகமானிய பாலகங்காதார திலகர் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய பெருந்தலைவர்களுள் ஒருவர். மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ரத்னகிரி மாவட்டத்தில் கிசல் என்ற கிராமத்தில் 1856 ஜீலை 23-ம் நாள் அந்தணக் குடும்பத்தில் பிறந்தார்.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்விதேவை எனக் கருதினார். கணிதம்,விஞ்ஞானம், பொருளாதாரம் போன்ற துறைகளில் இந்தியர்கள் நல்ல புலமை பெற வேண்டுமென்று விரும்பினார். எனவே தனது நண்பர்களுடன் சேர்ந்து 'நியு இங்கிலிஸ் ஸ்கூல்' என்ற ஆங்கிலப் பள்ளியை 1880-ல் புனாவில் தொடங்கினார்.

நாடு முழுவதிலுமுள்ள மக்களுக்கு தமது தாய்நாடான இந்தியாவின் மீது பற்று வர வேண்டும் என்று திலகர் விரும்பினார். எனவே மக்கள் படிப்பதற்கு மராட்டிய மொழியில் “கேசரி” என்ற பத்திரிக்கையையும், ஆங்கிலத்தில் 'மராட்டா' என்ற பத்திரிக்கையும் 1881-ல் ஆரம்பித்தார். இவைகளின் வாயிலாக மக்களுக்கு எழுச்சியூட்டி வந்தார்.

திலகர் வைதீகத்தில் தீவிரமான நம்பிக்கையுடையவர். பாரத்தின் பண்பாட்டைப் போற்றிப் பாதுக்காக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர். அதற்காக அவர் பேசியும்,எழுதியும், பாடுபட்டும் வந்தார். துர்கா பூஜா, ராம் லீலா,கணபதி விழா, சிவாஜி விழா போன்ற விழாக்களை நடத்தினார். மகாராஷ்டிரா மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தியை அவரவர் வீடுகளில் கொண்டாடுவார்கள். திலகர் அதைப் பலரும் ஒற்றுமையுடன் கூடி அவரவர் தெருக்களில் கொண்டாட ஏற்பாடு செய்தார். சிவாஜி சிறந்த வீரர். பேரரசர் ஔரங்கசீப்பையே எதிர்த்து வெற்றி கண்டவர்.

ஆங்கில ஆட்சியின் எண்ணங்கள். செயல்பாடுகள் மீது திலகருக்கு நம்பிக்கை கிடையாது. 'வலிமையின் மூலம் இந்தியாவைப் பிடித்த

ஆங்கிலேயர்களை வலிமையின் மூலமே இந்தியாவிலிருந்து விரட்ட முடியும்' என்று நம்பினார்.

திலகரின் தலைமையிலான தீவிரவாதிகள் நாட்டு விடுதலையை, தன்னாட்சியைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். மறியல், சுதேசி இயக்கம்,சாத்வீக மறுப்பு ஆகிய முறைகளை ஆதரித்தனர். இதன் விளைவாக 1907-ல் இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று இரண்டு பிரிவாகப் பிரிந்து. திலகர் நாடு முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 'தன்னாட்சியைப் பெறுவதற்காகவும் நாட்டை விடுவிப்பதற்காகவும் எத்தகைய போராட்டத் திற்கும், தியாகத்திற்கும் மக்கள் தயாராக இருக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். 'சுதந்திரம் நமது பிறப்புரிமை; அதை நாம் அடைந்தே தீருவோம்.

விடுதலை தான் சொர்க்கம், அடிமை வாழ்வு நஞ்சு என்று முழங்கினார்.

திலகரின் தீவிரவாத நடவடிக்கைகளைக் கண்டு அஞ்சிய அரசு 1908-ல் திலகரைக் கைது செய்து ஆறு வருட சிறைத் தண்டனை அளித்தது. பர்மாவில் மாண்டலே சிறையில் தனி அறையில் சமைத்து தனியாக உண்டு அவதிப்பட்டார்.

1916-ல் தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பித்தார்.

அதன் பின் திலகர் 1920 செப்டம்பர் 30-ல் இறக்கும் வரை அவரே காங்கிரசின் தனிப்பெரும் தலைவராக விளங்கினார்.

## லாலா லஜபதிராய்

## Lala Lajpat Raj, 1865-1928

**'பஞ்சாபின் சிங்கம்'** என்று அழைக்கப்படும் லாலா லஜபதிராய் ரஞ்சித் சிங்கிற்குப் பிறகு பஞ்சாப் உருவாக்கிய மாபெரும் தலைவர் ஆவார். இவர் 1865-ல் பஞ்சாபிலுள்ள லூதியானா மாவட்டத்தில் ஜக்ரான் (Jagraon) என்னுமிடத்தில் பிறந்தார்.

தேசப்பற்றின் காரணமாக, வக்கீல் தொழிலை உதறிவிட சுதந்திரப் போரில் ஈடுபட்டார். அதற்காகப் பெரும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டார்.

திலகரைப் போலவே லஜபதிராயும், ஆங்கிலேய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்தார். அரசியலமைப்புக்குட்பட்ட போராட்டங்களும், விண்ணப்பங்களும், வேண்டுகோள்களும் பயனற்றவை என்றார். தீவிரமான நேரடி நடவடிக்கைகளால் மாத்திரமே ஆங்கிலேயரை விரட்ட முடியும் என்றார்.

1905-ல் வங்காளப் பிரிவினையை எதிர்த்துப் போராடினார்.

அரசியலில் லஜபதிராய் 'சுயராஜ்யம், சுதேசி இயக்கம்,தேசியக் கல்வி, அன்னியப்பொருட்கள் புறக்கணிப்பு ஆகிய கொள்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தார். அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று இந்தியா சுதந்திரம் அடைய வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இங்கிலாந்தில் இருந்த போது லஜபதிராய் "Young India" , "England's debt to India" என்ற இரண்டு புத்தகங்களை எழுதினார். 1919-ல் இந்தியா

திரும்பிய போது, ஜாலியன் வாலாபாகில் நடைபெற்றிருந்த படுகொலையைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தார்.

**லஜபதிராயின் இலக்கியப் பணிகள்**

லஜபதிராய் தனது கருத்துக்களை மக்களுக்கு தெரிவிப்பதற்காக ‘பஞ்சாபி’, வந்தே மாதரம்’ The People’ ஆகிய மூன்று பத்திரிக்கைகளை ஆரம்பித்தார்.

1928 அக்டோபர் 30-ம் தேதி சைமன் கமிஷனுக்கு எதிராக லாகூரில் ஒரு பெரிய எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தினார். அப்போது ஆங்கிலப் போலிஸ் அதிகாரி சாண்டர்ஸ் மேற்கொண்ட தடியடி பிரயயோகத்தில் லஜபதிராய் பலத்த காயமடைந்தார். 1928 டிசம்பர் 17-ல் லாலா லஜபதிராய் மரணமடைந்தார்

## அன்னிபெசன்ட்

# Annie Besant, 1847-1933

**இளமைப் பருவம்**

1847-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரத்தில் பிறந்தார். அன்னிபெசன்ட் இவரது இயற்பெயர் ஆனிவுட் என்பதாகும்.

1885-ல் அன்னிபெசன்ட் ‘பேபியன் சொசைட்டியில்’ சேர்ந்து ஒரு சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தார். 1887-ல் ‘எட்டு மணி நேரம் வேலை’ என்ற கிளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய ‘ரகசியக் கோட்பாடு’ என்ற புத்தகத்தைப் படித்ததும் பல காலமாகத் தான் அறிய விரும்பிய உண்மைகள் அவர் மனதில் பளிச்சென பிரகாசித்தன . பிளாவாட்ஸ்கி அம்மையாரைச் சந்தித்த பின் அவரது சீடரானார். 1883-ல் இந்தியாவுக்கு வந்த அன்னிபெசன்ட் இந்தியாவையே தன்னுடைய நாடாகக் கருதி வந்தார். இந்திய சமுதாய முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் தனது சக்தி முழுவதையும் செலவு செய்தார்.

பிரம்ம ஞான உலகில் பிரகாசித்து விளங்கினார். பிரம்மஞான சங்கத்தைத் தோற்றவித்த கர்னல் ஆல்காட் 1907-ல் இறந்த பின் அதன் தலைவராக அன்னிபெசன்ட் நியமிக்கப்பட்டார்.

1913-ல் இந்திய அரசியலில் குதித்தார். இந்தியாவின் அரசியல் நிலை உயராமல் சமுதாயத் துரையிலும், கல்வித்துறையிலும் அதிக முன்னேற்றம் அடைய முடியாது என்பதை உணர்ந்தார். 1914-ல் ‘காமன் வீல்’ என்ற வரா இதழையும், சில மாதங்களுக்குப் பிறகு ‘நியூ இந்தியா’ என்ற தினசரியையும் வெளியிட்டார். இந்திய அரசியல் சுதந்திரத்திற்கு சாதமாக தன் அரிய கருத்தக்களைக் கட்டுரைகளாக வெளியிட்டார். திலகரின் தலைமையில் செயல்பட்ட தீவிரவாத காங்கிரசையும்,கோகலே தலைமையில் செயல்பட்ட மிதவாத காங்கிரசையும் ஒன்றாக இணைத்த பெருமை இவருக்கே உண்டு. 1915, செப்டம்பர் 25-ல் தன்னாட்சி அடைவதற்காக ‘ஹோம்ரூல் இயக்கத்தை’ ஆரம்பித்தார். “பிரிட்டிஷ் பேரரசில் இணைந்த தன்னாட்சியை சட்டப்பூர்வமான